கம்பன் படைத்த
சிறு பாத்திரங்கள்

(ஆசிரியரின் 62-ஆம் அகவைநிறைவின் நினைவாக)

ஆசிரியர்
பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்
எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி.
தலைமைப் பதிப்பாசிரியர், கலைக்களஞ்சியம்
சென்னை - 600 005

20 MAR 1980

நாவலர் புத்தக நிலையம்
மதுரை-1

நாவலர் புத்தக நிலையம்
59, மேலாவணி மூலவீதி
மதுரை-625 001

முதற்பதிப்பு, அக்டோபர், 1979

உரிமைப்பதிவு

© திரு. எஸ். இராமலிங்கம் எம்.எஸ்சி.,
பாரத் ஓவர்சீஸ் வங்கி, சென்னை-6

விலை : ரூ. 9-50

61/80
2

Kamban Padaitha
Siru Pathirangal

by

Dr. N. Subbu Reddiar, *M.A., B.Se., L.T., Ph.D.,*

269405

O,31,1F50,R:9
L9

Published by

Navalar Puthaka Nilayam
59, West Avani Moola Street,
MADURAI-625 001.

அருட்பா மதுரை தொலைபேசி : 32029

நூல்முகம்

ஒன்றே யென்னின் ஒன்றேயாம்;
பலவென் றுரைக்கிற் பலவேயாம்;
அன்றே யென்னின் அன்றேயாம்;
ஆம்என் றுரைக்கின் ஆமேயாம்;
இன்றே என்னின் இன்றேயாம்;
உளதென் றுரைக்கின் உளதேயாம்;
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங் கென்னே பிழைப்பம்மா[1]

— கம்பநாடன்

கம்பனின் பாத்திரப் படைப்பில் கம்பனின் மேதையைக் காணலாம்; பாத்திரங்கள் மூலம் இராமபிரானை நன்கு அநுபவித்து உய்யலாம். காரைக்குடியில் பணியாற்றி பத்தாண்டுக் காலத்தில் கம்பனடிப் பொடி தமிழ்க்கடல் ராய. சொ., சீர்திருத்தச் செம்மல் சொ. முருகப்பா இவர்கள் கூட்டுறவால் கம்பனை ஊன்றிப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அப்பொழுது கம்பன் படைத்த சிறுபாத்திரங்களைப் பற்றி எழுதத் திட்டமிட்டு எழுதி வந்தேன். எழுதியவற்றைக் 'குமரிமலர்', "ஜனநாயகம்" என்ற திங்கள் இதழ்களில் வெளியிட்டேன். பல்வேறு குறுக்கீடுகளால் எல்லாவற்றையும் எழுதமுடியாது போயிற்று. இதழ்களில் வெளிவந்த பன்னிரண்டு கட்டுரைகள் மட்டிலும் இப்பொழுது நூல்வடிவம் பெறுகின்றன. இவற்றைப் படிப்போருக்கு இவை கம்பனைத் துய்க்கத் தூண்டு-

1. கம்ப. யுத்தகாண்டம் - காப்பு

கோலாக அமையின் என்சிறு பணியும் சிறப்புற்றது என்று மகிழ்வேன்.

பேராசிரியர் இராம. பெரிய கருப்பன் ('தமிழண்ணல்') எனது முப்பது ஆண்டு கால நண்பர். காரைக்குடியில் நான் பணியாற்றிய காலத்திலிருந்து நெருங்கிப் பழகியவர். இவர்தம் ஆழ்ந்த தமிழ்ப்பற்றே இவருக்குத் 'தமிழண்ணல்' என்ற பட்டத்தை ஈட்டித் தந்தது. இப்பெயரே இவருக்குப் பெருவழக்காக வழங்கும் பெயராயிற்று. இத்தகைய என் அரிய நண்பரின் 'அணிந்துரை' இந்த நூல் பெற்ற பெரும் பேருகக் கருதுகிறது. இந்த அரிய வாய்ப்பை நல்கிய என் நண்பருக்கு என் இதயங்கலந்த நன்றி என்றும் உரியது.

தொழில் துறை மேதை பொள்ளாச்சி வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள் பல கல்வி நிறுவனங்களை உண்டாக்கிக் கல்வித் தொண்டாற்றி வந்தாலும் அவருடைய நற்பணிகள் எல்லாம் இராமலிங்கர் பணிமன்றம் நிறுவி அதன் தெய்வப் பணிகளால் புனிதம் அடைந்தன. இராமகிருட்டிணருக்கு ஒரு விவேகாநந்தர் கிடைத்தது போல் இராமலிங்கருக்கு ஒரு பெரிய சீடர் அவர் காலத்தில்கிடைக்கவில்லை.விவேகானந்தர் போல் நின்று இராமலிங்க அடிகளின் கருத்துகளைப் பரப்பி வரும் பெருமை பெற்றவர் பொள்ளாச்சி வள்ளல். அப் பெரும்பணியின்-தெய்வப்பணியின் நினைவாக அதனை ஆற்றிவரும் பெருமகனுருக்கு இந் நூலை அன்புப்படையலாக்கி மகிழ்கின்றேன்.

என் அருமை நண்பர் திரு. ச. சாம்பசிவனுர் இக் கட்டுரைகள் யாவும் வழக்கற்றுப் போகாமல் நூல் வடிவமாக இளசைக் கிழார் நாவலர் டாக்டர் ச. சோம சுந்தர பாரதியாரின் நினைவாக அமைக்கப் பெற்ற நாவலர் புத்தக நிலைய வெளியீடாக - என் அறுபத்திரண்டு அகவை நிறைவின் நினைவாக- வெளிக் கொணர்ந்தமைக்கு என் உளங்கனிந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

என்னுளே எனக்குத் தோன்றாத் துணையாக இருந்து என்னை இத்தகைய இலக்கியப் பணியில் ஈடுபடுத்தும் எல்லாம் வல்ல இறைவனின் பேரருளை நினைந்து போற்றி அமைக்கின்றேன்.

சென்னை - 40
5 - 10 - 79

ந. சுப்புரெட்டியார்

20 MAR 1980

அன்புப் படையல்

திவ்வியம் நடிக்கும் வள்ளலார் மன்றைச்
சிறப்புறத் திருத்திய பெரியோன்;
அவ்விய மிலாத சிந்தையன்; காந்தி
யருள்நெறி மறந்திடாப் பண்பன்;
இவ்வுல குயரக் கலைமகட் கறிஞர்
ஏத்துபல் கோயில்கள் கண்டோன்;
செவ்விய புகல்சால் நன்மகா லிங்கச்
செம்மலுக் குரியதிந் நூலே.

அணிந்துரை

'தமிழண்ணல்'
டாக்டர் இராம. பெரியகருப்பன்,
தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

கம்பன் தன் காப்பிய மாளிகையில் வானுறவோங்கிய பண்பாட்டுக் கோபுரங்களை எழுப்பியுள்ளான்; நாகரிகச் சிற்பங்களையும் சொற் சித்திரங்களையும் வடித்துள்ளான். அம் மாளிகையின் ஒவ்வொரு சிறு பகுதியையும்கூட அவன் மிக்க கவனத்தோடும் திறனோடும் படைத்து நம்மை வியப்பிலாழ்த்துகிறான். கல்வியிற் பெரிய கம்பனின் முழுமையை உணர விரும்புவார், இச் சிறுதிறன்களையும் நுட்பமுறக் கண்டு தெளிந்தாற்றான், தம் விருப்பம் நிறைவேறப் பெறுவர்.

எடுத்துக் காட்டாக 'நீலமாலை' என்ற சிறு பாத்திரப் படைப்பை எடுத்துக்கொண்டால், கணப் பொழுது தோன்றிமறையும் மின்னல் போல், காப்பிய வானில் அந் நங்கை கவினுறத் தோன்றிமறைகின்றாள். ஆனால் நம் உள்ளத்திலோ அழியாச் சித்திரமாக நிறைகின்றாள். அவள் மெய்ப்பாடும், உளப்பாங்கும், அறிவும், பண்பும் ஒருசில பாடல்களில் நின்று நிலைபெற்றொளிர்கின்றன. சீதை என்ற தலைமைமாந்தரைப் படைத்த அதே உணர்வோடும் சிறப்போடும் கம்பன் நீலமாலையையும் படைத்துள்ளான். ஒரு சொல்லில், அடைமொழியிற்கூட மிக்க கருத்துச் செலுத்தும் கம்பன் இத் துணைமாந்தர்களைப் படைக்கும்போது எவ்வளவு ஆழமும் அழுத்தமும் பெறப் புனைவான் என்பதை இந் நூலின் ஒரு கட்டுரையைப் படிப்பார்தாமும் உய்த்துணர்தல் கூடும்.

டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் ஆராய்ச்சித்திறன் மிக்கவர்கள். அவர்களுடைய 'கவிதையனுபவம்' என்ற நூல்

பரந்து விரிந்த சிறந்த இலக்கியத் திறனாய்வுக் கருத்துக்களை-யெல்லாம் ஒருசேரத் தொகுத்தும் வகுத்தும் தருவதாகும். தமிழில் அறிவியற கருத்துக்களைத் தருவதில் அன்னார்க்குச் சிறந்ததோர் இடமுண்டு. தம் அயரா உழைப்பினால் நூல்கள் பலவற்றைப் படைத்துத் தந்துள்ளார்கள். காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் திருப்பதித் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்திலும் அவர்கள் தமிழ்த்துறைத் தலைமைபூண்டு ஆற்றிய பணிகள் பலவாகும்.

இந்நூலின்கண் 'கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்' பற்றிய, பல்வேறு கட்டுரைகள் உள்ளன. 'குமரிமலர்' என்ற சிறந்த தமிழ் மாத இதழில், அவர்கள் தொடர்ந்து எழுதிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந் நூலாக இப்போது வெளி வருகிறது. அவர்கள் குறிப்பிடுவதுபோல், ''இராம காதையில் வரும் தாடகை, விசுவாமித்திரர், வசிட்டர், நீலமாலை, சனகன், மந்தரை, சுமந்திரன், குகன், சத்துருக்கன், சுமித்திரை, சூர்ப்பனகை, மாரீசன், சடாயு, தாரை, சுக்கிரீவன், வாலி, அங்கதன், திரிசடை, மண்டோதரி, மாலியவான், மகோதரன், அதிகாயன், கரன் ஆகியவர்களைச் சிறுபாத்திரங்களாகக் கொள்ளலாம்.'' (ப 3)

இவர்களுள் சிலரைப் பற்றி விரிவாகவும் மற்றும் சிலரைப்-பற்றிக் குறிப்பாகவும் ஆய்வு நோக்கில் இந்நூல் எடுத்-துரைக்கிறது. ஒரு சிறுபாத்திரம் என்றால் அது இடம் பெறும் சூழல்கள்; கதைப் போக்கிற்குதவும் வகைமை; பண்பு நலன்; சிறப்பு என இவ்வாறு பகுத்துப் பகுத்து இந்நூல் ஆராய்-கிறது. தமிழ்மரபும் மேலைநாட்டு ஆய்வுநெறியும் இதிற் பின்னிப்பிணைந்து விளங்குகின்றன. கம்பனைக் கற்று இன்பம் துய்க்கவிரும்புவார்க்கு இந்நூல் சிறந்த வழிகாட்டியாக உதவும்.

கம்பனின் தனிச்சிறப்புள்ள பாத்திரப்படைப்புத்திறனை உணர்ந்து கொள்ள இவ் ஆய்வு பெரிதும் உதவுகிறது.

இவ்வகையில் பேராசிரியர் சுப்புரெட்டியார் பாராட்டுக்குரிய வராகிருர். அவர்தம் இலக்கியத் திறஞய்வு நோக்கும் முறை-யும் பிறர்க்கு வழிகாட்ட வல்லன. அவ்வகையில் இந்நூல் பொருட் செறிவும் புதுமையும் உடையதாய்ப் பொலிகின்றது.

'ஏரகம்',
சதாசிவநகர்,
மதுரை - 20.

தமிழண்ணல்

20 MAR 1980

உள்ளுறை

பக்கம்

1.	கம்பன் படைத்த சிறுபாத்திரங்கள்	... 1
2.	தாடகை	... 12
3.	விசுவாமித்திரர்	... 22
4.	மந்தரை	... 34
5.	சுமித்திரை	... 52
6.	குகன்	... 64
7.	சூர்ப்பணகை	... 86
8.	மாரீசன்	... 116
9.	சடாயு	... 136
10.	தாரை	... 155
11.	அங்கதன்	... 171
12.	சத்துருக்கன்	... 182

2 0 MAR 1980

1

கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள் *

சிராரைக்குடி கம்பன் திருநாளை அறியாத் தமிழர்களே இல்லை என்று சொல்லவேண்டும்; அலைகடலுக்கு அப்பாலுள்ள தமிழர்களும் திருநாள் நிகழ்ச்சிகளைக் கேட்டுத் துய்க்கின்றனர். திருநாளின் நான்காவது நாள் நிகழ்ச்சிகள் நாட்டரசன் கோட்டையில் கம்பன் கோவிலில் நடைபெறும். மேற்படி திருநாளைக் கண்டுகளிக்க என் நண்பர்களும் நானும் சென்றோம். ஒரு பேருந்தும் ஒரு சிற்றுந்தும் எங்களை ஏற்றிச் சென்றன. வழியில் பசியாற்றிக்கொள்வதற்கு எங்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் முதலிய பொருள்களை எடுத்துச் சென்றோம். ஒரு பெரிய பாத்திரத்தில் குடிநீர் நிரப்பி அதைப் பேருந்தில் வைத்திருந்தோம். சொம்பு, டம்ளர் போன்ற சிறு பாத்திரங்கள் சிற்றுந்தில் இருந்தன. வழியில் பேருந்தில் இருந்த நண்பர் ஒருவர் பருகும் நீர் கேட்டார். பாத்திரம் நிறையப் பருகும் நீர் இருக்கின்றது; அதிலிருந்து அதைஎடுப்-

---

* ஜனநாயகம் இதழில் (ஏப்ரல் - 1956) வெளிவந்தது.

பதற்குச் சொம்போ டம்ளரோ அருகில் இல்லை! என்ன செய்வது? அப்போதுதான் சிறுபாத்திரங்களின் பயனையும் இன்றியமையாமையையும் எல்லோரும் உணர்ந்தனர். 'இப்படித்தான் ஒரு காவியத்திற்கும் சிறு பாத்திரங்கள் இன்றியமையாதவர்கள்' என்று அவ்வமயம் யான் கூறியபோது எல்லோரும் கேட்டு மகிழ்ந்தனர். சிறு பாத்திரங்கள் இன்றேல் காவியத்தில் ஒன்பான் சுவையும் பத்தழகுகளும் பிறவும் பாங்குற அமைந்து விளங்கமுடியாது; காவியத்தலைவனின் குண நலன்களையும் பிறவற்றையும் நாம் அறிந்துகொள்ள வாய்ப்பும் இராது; காவியத்தை நடத்திச் செல்லும் கவிஞனும் நாடகப் பண்பைக் கையாண்டு அதைச் சுவையூட்ட முடியாது; கதைப் போக்கும் பரந்து செல்ல இயலாது.

சிறு பாத்திரப் படைப்பு : சிறு பாத்திரங்களைப் படைப்பதில்தான் ஒரு கவிஞனின் பேராற்றல் வெளிப்படுகின்றது. அவர்களைக் காவியத்தின் சிறந்த உறுப்புகளாக்கிப் பின்னி விடுகின்றான் கவிஞன். காவியத்தின் கட்டுக்கோப்பிலிருந்து அவர்களை நீக்கமுடியாது; அப்படி நீக்கினாலும் அதில் ஒரு குறை தோன்றும்; காவியமும் முற்றுப் பெறாது. காவியத்தை ஒரு வனப்புடைய மாளிகைக்கு ஒப்பிட்டால், சிறு பாத்திரங்களை அம்மாளிகையிலுள்ள பலகணிகளுக்கு ஒப்பிடலாம். இச்சிறு பாத்திரங்களின் மூலந்தான் காவியத்தில் நிகழும் பல காட்சிகளையும் காணமுடிகின்றது. நாம் இவர்கள் வசப்பட்டிருக்கும் போதுதான் காவியத் தலைவனைப்பற்றி அதிகம் அறிந்து கொள்கின்றோம். இவர்கள்தாம் காவியத்தலைவனின் குண நலன்களைத் திறனாய்கின்றனர். மற்று, காவியத்தை மங்கையர் தீட்டும் கோலத்திற்கு ஒப்பிட்டால் சிறு பாத்திரங்களை அக் கோலம் போடுவதற்கு இடப்படும் புள்ளிகளுக்கு ஒப்பிடலாம். புள்ளிகளால் கோலம் சிறப்பது போலச் சிறு பாத்திரங்களால் காவியம் வனப்புடையதாகச் சிறக்கின்றது. சிறு பாத்திரங்களை நீக்கிவிட்டால் காவியம் தேர்வின் நிமித்தம் மாணக்கர்களுக்காக வெளியிடப்பெறும் சுருக்கம் போல் (Examination summary) அமைந்துவிடும். காவியமும் அழகுகளையெல்லாம் இழந்து கிளைகளும் கொப்புகளுமின்றி நிற்கும் ஒரு அடிமரம்

போல் காட்சியளிக்கும். இந்த எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு கம்பன் காவியத்தில் வரும் சிறு பாத்திரங்களை ஆராய வேண்டும்.

சிறுபாத்திரப் படைப்பின் நோக்கம் : பெரும்பாலும் கவிஞன் சிறு பாத்திரங்களைப்படைக்கும்போது மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டுதான் அவர்களைப் படைக்கின்றன் என்று கருதலாம். **முதலாவது :** அவர்கள் கதைவளர்ச்சிக்கு யாதானும் ஒருமுறையில் துணைசெய்வர்; காவியத்தின் திருப்புமையங்களாக அமைந்து கதையை விரைவாக நடத்திச் செல்வர். **இரண்டாவது :** காவியத்தலைவனின் குண நலன்களைப் புலப்படுத்திக் காவியத்தின் ஒன்பான்சுவைகளையும் ஒளிரும்படி செய்வர். **மூன்ருவது :** இச்சிறு பாத்திரங்களின் துணை கொண்டுதான் கவிஞனும் காவியத்தில் வரும் சில நிகழ்ச்சிகளை நாடகப்பண்புடன்அமைத்துக் காட்டுவான். பெரும்பாத்திரங்கள் இதற்குத்துணைபுரியுமேனும், சிறு பாத்திரங்கள் ஒரு வித விறுவிறுப்பை உண்டாக்குவது போல் அவர்கள் உண்டாக்க முடியாது. உணவுவகைகளைத் தாளிதப்பொருள்கள் 'காரசாரமாகச்' செய்வதைப் போலவே, சிறுபாத்திரங்களும் காவியத்தை விறுவிறுப்பாக்குவர். இராமகாதையில் வரும் தாடகை விசுவாமித்திரர், வசிட்டர், நீலமாலை, சனகன், மந்தரை, சுமந்திரன், குகன், சத்துருக்கன், சுமித்திரை, சூர்ப்பனகை, மாரீசன், சடாயு, தாரை, சுக்கிரீவன், வாலி, அங்கதன், திரிசடை, மண்டோதரி, மாலியவான், மகோதரன், அதிகாயன், கரன் ஆகியவர்களைச் சிறுபாத்திரங்களாகக் கொள்ளலாம். இவர்களை வைத்துக்கொண்டு கவிஞன் காவியத்தை எவ்வாறு நடத்திச்செல்லுகின்ருன்என்பதைக் கவனிக்கவேண்டும். கம்பன் காவியத்தையும் வான்மீகி இராமாயணத்தையும் ஒப்பிட்டுப் படிப்பவர்கள் பாத்திரப்படைப்பில் இருவர் கைத்திறன்களையும் காணக்கூடும். வான்மீகிபடைத்த பாத்திரங்கள் கம்பன் கைத்திறனல் எவ்வாறு மிகச் சிறப்பாக மிளிர்கின்றனர் என்பதை அறியலாம். வான்மீகியைப் பயிலும்போது எந்தெந்தக் கூறுகளில் பாத்திரப்படைப்பை மாற்றியமைக்க

லாம், மாற்றியமைக்க வேண்டும் என்று எண்ணும் அன்பர்கள் கம்பனைப்பயிலும்போது அவன் கைவண்ணத்தை நன்கு அறியக்கூடும்; அறிந்து பாராட்டவும் செய்வர். தம்மையும் அறியாமல் இறும்பூதும் எய்துவர். மேலே குறிப்பிட்ட மூன்று நோக்கங்களைக்கொண்டு இராமகாதையின் சிறு பாத்திரப் படைப்பை ஆராய்வோம்.

கதை வளர்ச்சி: தாடகை—விசுவாமித்திரர்: சிறு பாத்திரங்கள் கதை வளர்ச்சிக்கு எவ்வாறு துணை செய்கின்றனர்? இயக்கர் குலத்தில் பிறந்த தாடகை அகத்தியன் சாபத்தால் அரக்கியாகி இராவணன் ஆட்சிக்குக் கீழ் அடங்கும்போது கதை நீளுகின்றது. இவள் பெற்றெடுத்த மாரீசனும் கதையை வளர்க்கத் துணை செய்கின்றான். தாடகை, இராமன் அம்பால் அடிபட்டு இறந்து தரையில் வீழ்ந்த காட்சியைக் கம்பன்,

முடியுடை அரக்கற்கு அந்நாள்
முந்திஉற் பாத மாகப்
படியிடை யற்று வீழ்ந்த
வெற்றியம் பதாகை ஒத்தாள்[1]

என்று காட்டுகின்றான். பின்னால் நடக்க விருக்கும் இராவண வதத்திற்குத் தீநிமித்தமாக அவனுடைய வெற்றிக்கொடி அறுந்து வீழ்ந்ததுபோல் தாடகை இறந்து வீழ்ந்தாள் என்று கவிஞன் கூறும்போது, உண்மையிலேயே நாம் இராமாயணம் முழுவதையும் மனக்கண்முன் காண்கின்றோம்; கொடியைப் பெண்ணுக்கு உவமைகூறி அவ்வுவமையாலேயே வெற்றிக் கொடியையும் நினைவுக்குக் கொணர்ந்த கவிஞனின் கற்பனை-யைக் கண்டு மகிழ்கின்றோம். அயோத்தியில் அருந்தவத்தால் தசரதனுக்குப் புதல்வனாகத்தோன்றி வளர்ந்து வரும் இராமனை உலகறியச் செய்வதற்குத் துணையாக நிற்கின்றார் விசுவா-மித்திரர். பள்ளிப்பிள்ளையாக இருந்த இராமனை வாழ்க்கையில் ஈடுபடச் செய்கின்றார். வசிட்டரிடம் ஏட்டுப்படிப்பாகப் பயின்ற வற்றை வாழ்க்கையனுபவத்தில் பயன்படுத்துவதற்கு விசுவா-

1. பாலகாண் - தாடகைவதை - 73.

மித்திரரால்தான் பல சந்தர்ப்பங்கள் இராமனுக்குக் கிடைக்கின்றன. அயோத்தியிலிருக்கும் இராமனை மிதிலைக்குக் கொண்டுவந்து இராமன் திருமணத்தை முடித்தலால் கதை வளர்கின்றது. இராவணவதத்திற்குத் துணையாக நிற்பவள் சீதைதானே.

மந்தரை-சூர்ப்பணகை : மந்தரையின் சூழ்ச்சி இராம காதையின் முதல் திருப்புமையமாகும். பட்டம் கட்டிக் கொண்டு பாராளவேண்டிய இராமனை மரவுரி உடுத்திக் கொண்டு கானகச் செல்ல வைத்தது இவளது சூழ்ச்சிதான். ''இன்னல்செய் இராவணன் இழைத்த தீமை'' தான் ''துன்னருங்கொடுமனக் கூனி'' வடிவங்கொண்டு தென்னிலங்கை வேந்தனுக்கு இராமனைக் காலனாக அனுப்பிவைக்கின்றது. மந்தரையின் சூழ்ச்சி ஒரு பெரு விசைபோல் நின்று கதையைப் பேரெடுப்புடன் இயக்குகின்றது. அந்தப்புரத்தில் பணியாற்றுபவள் ஒரு பேரரசையே கலக்கிவிடுகின்றாள். இவள் சூழ்ச்சிக்குப்பிறகு காவியத்தில் விரைவாக நடைபெறும் நிகழ்ச்சிகள் பல உணர்ச்சியின் கொடுமுடிகளைக் காட்டு கின்றன. நாட்டிலிருக்கும் இராமன் கானகம் வந்து விடுகின்றான். இராமனைக் கண்டதிலிருந்து அவன்மீது கொண்ட சூர்ப்பணகையின் காமஉணர்ச்சி இலங்கைத் தனியரசுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் துணைபுரிகின்றது. இலங்கையிலிருக்கும் இராவணன் பஞ்சவடிக்கு வரவும் பஞ்சவடியிலுள்ள சீதை இலங்கைக்குக் கவர்ந்து செல்லப்படவும் அவள் நிமித்தம் இராம இலக்குமணர் இலங்கை சென்று அரக்கர்களுடன் போர் புரியவும் இவள் துணையாக விருப்பதால் கதை வளருகின்றது. இவள் இராவணனிடம் வைத்த ''வர்த்தியால் தான்'' அரக்கர்கள் அழிகின்றனர். இதனை மனத்தில் கொண்டுதான் கம்பனும்,

நீலமா மணிநிற—

நிருதர் வேந்தனை

மூலநா சம்பெற
முடிக்கும் மொய்ம்பினள்[2]

என்றும், 'தன் கிளைக்கு இறுதிகாட்டுவாள்' என்றும் இவளைக் காட்டுகின்றான். சூர்ப்பணகையின் காதல் ஒரு தொத்து நோய்போல் வேலை செய்கின்றது. இந்நோய் இராவணனைப் பற்ற அவன் சீதையின்மேல் காதல் கொள்ளுகின்றான், சீதையைப்பற்றிய சூர்ப்பணகையின் வருணனை இராவணனைக் காம வெறியனாக்கி விடுகின்றது.

மயிலுடைச் சாய லாளை
வஞ்சியாம் முன்ன நீண்ட
எயிலுடை இலங்கை வேந்தன்
இதயமாம் சிறையில் வைத்தான்[3]

எவ்வளவோ ஆண்மைகளைப் பெற்றிருந்தும் 'பிறன்மனை நோக்காத பேராண்மை' இராவணனிடம் இல்லாததால் அவன் அழிந்து படுகின்றான்; அமரர்கூற்றாக இருந்தவன் அசுரர்களின் பிரளயமாகின்றான். சூர்ப்பணகையின் காமம் அவளுக்கு உறுப்புக்குறைவை விளைவிப்பதுடன் ஒரு பெரிய அரக்கப் பேரரசிற்கே அவமானத்தையும். [Nose-cut] ஏற்படுத்தி விடுகின்றது. இதைக் கவிஞன்,

கொலைது மித்துயர் கொடுங்கதிர்
வாளின்அக் கொடியாள்
முலைது மித்துயர் மூக்கினை
நீக்கிய முறைமை
மலைது மித்தென இராவணன்
மணியுடை மகுடத்
தலைது மித்தற்கு நாட்கொண்ட
தொத்ததோர் தன்மை[4]

---

2. ஆரண்ய-சூர்ப்பணகை -8
3. ஆரணிய-மாரீசன்வதை-85
4. ஆரணிய-சூர்ப்பணகை-96

என்று காட்டுவது எண்ணி எண்ணி மகிழ்வதற்குரியது. சூர்ப்பணகை மட்டிலும் இராமன்மீது காதல் கொண்டிரா விட்டால் இராமன் வாழ்க்கை பஞ்சவடியிலேயே கழிந்துவிடக் கூடும். 'இராமன் பரக்கும் தொல்புகழ் அமுதாகிய' இராம காதை தோன்ற வாய்ப்பே இராது போய்விடவும்கூடும்.

மாரீசன்—சடாயு பஞ்சவடியில் அமைதியாகத் தவ வாழ்வில் ஈடுபட்டிருந்த இராமனை இலங்கைக்கு அனுப்புவதற்குக் காரணமாக இருப்பவன் மாரீசன்; இவன் காவியத்தின் இரண்டாவது திருப்புமையமாக விளங்குபவன். மாரீசன் இராமன் கணையால் மாண்ட பிறகு கதை விரைவாகச் செல்லுகின்றது. சீதாப்பிராட்டி சிறைப்படுதல், சடாயு திரு நாடு அலங்கரித்தல், இராம—சுக்கிரீவ நட்பு, வாலி வானுக்கப்புறத் துலகணுதல், அநுமன் தூது, இலங்கை அழிதல், வீடணன் அடைக்கலம், கடலில் அணையிடல் முதலிய நிகழ்ச்சிகள் இராவண வதத்துக்கு ஆயத்தங்களாக நடைபெறுகின்றன. மாரீசன் காவியத்தில் ஒரு பெருவிசைபோல் நின்று கதையை முடுக்கிவிட்டுத் தானும் இறந்துபடுகின்றான். பிற பாத்திரங்களும் இவ்வாறே கதை வளர்ச்சிக்குத் துணைசெய்கின்றனர்.

காவியத் தலைவனின் குணநலன்கள் : குகன் : இராமனின் 'கை வண்ணத்தையும், கால் வண்ணத்தையும்' விசுவாமித்திரர் உலகறியச் செய்ததை மேலே கண்டோம். அவ்வாறே அவன் குணநலன்களை வெளிப்படுத்தச் சுமந்திரன் துணை செய்கின்றான். இராமன் அருங்குணங்களை முதன் முதலாக வெளிப்படுத்துபவன் குகன். இவன் சந்திப்பால்தான்,

ஏழை யேதலன் கீழ்மகன் என்னது
இரங்கி மற்றவர்க் கின்னருள் சுரந்து

மாழை மான்மட நோக்கியுன் தோழி
உம்பி எம்பி என்ருெழிந்திலே உகந்து
தோழ நீஎனக் கிங்கொழி என்ற
சொற்கள்[5]

என்பன போன்றவை இராமன் வாயினின்று உதிர்ந்து அவனே உண்மைத் தெய்வமாக மதிக்கும்படி செய்துவிடுகின்றன. ‘அன்புள்ள இனி நாமோர் ஐவர்கள் உளராளுேம்’ என்ற இராமனுடைய உயர்ந்த சகோதரத்துவம் வெளிப்பட இக்குகன் அரியதோர் வாய்ப்பினே நல்குகின்ருன். அயோத்தியிலிருந்து சித்திரகூடம் வருவதற்குள் இராமன் உலகம் பாராட்டும் உத்தமனுகத் திகழ்கின்ருன். கைகேயி வேண்டும் போது தருவதாகக் கூறிய வரங்களேத் தருமாறு தசரதனேக் கேட்கும்போது வீசத்தொடங்கிய இராமனது தியாக ஒளியைக் கங்கை வேடன் பின்னணியாக நின்று மிகுதிப்படுத்துகின்ருன்.

மாரீசன் : காவியத்தில் மாரீசன் செய்யும் செயல்களேக் காணும்போது இவன் இராவணனுக்கு அயல் நாட்டு அமைச்சன் போல் நின்று துணேசெய்கின்ருன் என்பதை அறிகின்ரேம். இவனும் சூர்ப்பணகையைப் போலவே இராமனேப் பற்றிய பல செய்திகளே இராவணனுக்குத் தருகின்ருன். இராமபக்தர்கள் இராமனுடைய வீரச்செயல்களேயும், அற்புதச் செயல்களேயும் நேரில் பார்த்தோ பிறர்சொல்லக்கேட்டோ அறிந்தவர்கள்; மாரீசனே அவற்றை நேரில் அநுபவித்து உணர்ந்தவன்; சூடுகண்டபூனே. சீதையைப் பெறுவதற்கு மாயமானுகச் செல்லவேண்டும் என்று இராவணன் இவனேக் கேட்க வந்தபோது,

எம்பிக் கும்மென் அன்னே தனக்கும் இறுதிக்கோர்
அம்புய்க் கும்போர் வில்லி தனக்கும் அயல்நிற்கும்
தம்பிக் கும்மென் ஆண்மை தவிர்ந்தேன்[6]

5. நாலாயிரம்-பெரிய திருமொழி-5.8;1
6. ஆரண்ய-மாரிசன்வதை-186

என்று தன் அநுபவத்தை எடுத்துக் காட்டுவதை நோக்குக. இவ்வாறு பல நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி இராமன் தன் வாளிகளால் அரக்கர் குலத்தையே அழித்து விடுவான் என்று எச்சரிக்கையும் தருகின்றான். சீதையைத் தூக்கிச் செல்வது பெருந்தீங்கு விளைவிக்கும் என்று தடுத்துக் கூறியவர்களில் வீடணனுக்கு முற்பட்டவன் மாரீசன். அவனே தேவகாரியம் நிறைவேறுவதற்குக் களப்பலியாக வும் திகழ்கின்றான். இராமாயண பாத்திரங்களில் புத்தியும் பேசுந்திறமும் தத்துவ உணர்வும் அரக்கர்களிடத்தில் காணப்படுவதைப்போல முனிவர்களிடம் பார்க்கமுடியாது. அங்ஙனம் சிறப்பு வாய்ந்தவர்களுள் ஒப்புயர்வற்றவன் மாரீசன். இராவண வதம் முடிவதற்கு ஆயத்தம் செய்தவர்களில் தலையாயவர்கள் சூர்ப்பணகையும் மாரீசனும் என்று கூறினும் பொருந்தும். இவ்வாறே பிற பாத்திரங்களும் இராமன் குணங்களை வெளிப்படுத்தத் துணைபுரிகின்றனர் என்று காட்டலாம்.

நாடகப் பண்பு: கவிஞன் காவியத்திலுள்ள நிகழ்ச்சிகளை நாடகத்திறனுடன் சித்திரித்துக் காட்டுவதற்குச் சிறு பாத்திரங்கள் துணைசெய்கின்றனர் என்று மேலே கூறினோம். இராம காதையில் அங்கதன் தூதுப்படலத்தில் இத்தகைய நிகழ்ச்சிகளைக்காணலாம். இராவணன் — அங்கதன் பேச்சுகள் கனிந்த நாடகப் பண்புடன் திகழ்கின்றன. வேறு இரண்டு நிகழ்ச்சிகளை ஈண்டு நோக்குவோம்; சீதையை நாடிச்சென்ற அநுமன் வரவை இராமன் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கின்றான்.

> எய்தினன் அனுமனும்; எய்தி ஏந்தல்தன்
> மொய்கழல் தொழுகிலன்; முளரி நீங்கிய
> தையலை நோக்கிய தலையன்; கையினன்;
> வையகம் தழீஇநெடி திறைஞ்சி வைகினான்[7]

7. சுந்தர - திருவடி தொழுத: 55

இங்ஙனம் அநுமனது பிரவேசம் நாடகபாணியில் காட்டப் பெறுகின்றது. அநுமனது இச்செய்கையால் இராமன், 'வண்டுறையோதியும் வலியன்; மற்றிவன் கண்டதும் உண்டு; அவள் கற்பு நன்றெனக்கொண்டனன்.' அனைத்தையும் இராமன் குறிப்பால் உணர்ந்துகொள்ளுகின்றான். இன்னொரு நிகழ்ச்சியைக் காண்போம். இராமன் வில்லை முறித்த செய்தி சீதைக்கு எட்டவில்லை; இராமனைப் பார்த்ததிலிருந்து அவனையே நினைந்துகொண்டு மலரணையில் வருந்திக்கிடக் கின்றாள். வில்லை முறித்த செய்தியை நீலமாலை என்ற சேடி யொருத்தி, கொண்டு வருகின்றாள். அவள் வருவதைக் கவிஞன்,

வடங்களும் குழைகளும் வான வில்லிடத்
தொடர்ந்தபூங் கலைகளும் குழலும் சோர்தர
நுடங்கிய மின்னென நொய்தின எய்தினாள்[8]

என்று காட்டுகின்றான். அங்ஙனம் எய்தியவள்,

வந்தடி வணங்கிலள்; வழங்கும் ஓதையள்;
அந்தமில் உவகையள்; ஆடிப் பாடினள்; [9]

அவளுடைய மகிழ்ச்சிக்குக் காரணத்தைக் கூறும்படி சீதை கேட்க அவளும் சொல்லுகின்றாள். நீலமாலை—சீதை சந்திப்பு நாடகபாணியுடன்தான் காட்டப்பெறுகின்றது. தான் சேடியென்பதையும் மறந்து நிலைவிழக்கும்படி செய்து விடுகின்றது அவள் அடைந்த மகிழ்ச்சி. பன்னெடு நாட்க-ளாகத் தடைப்பட்டிருந்த தன் தோழியின் திருமணம் நடக்கப்போகின்றதல்லவா? இவ்வாறு கவிஞன் நாடகபாணி யைக் கையாளச் சிறு பாத்திரங்கள் பயன்படுகின்றனர். பெரும் பாத்திரங்கள் சந்திப்பில் இப்பண்பு மிளிர்ந்தாலும்

8. பாலகாண்டம் - கார்முகம்: 56
9. ஷெ ,, : 57

அதில் இச்சிறு பாத்திரங்கள் சந்திப்பில் தோன்றும் 'விறு விறுப்பு' காணப்பெறுவதில்லை.

இறுவாய் : சிறு பாத்திரங்கள் கட்டிடத்தில் வைத்துக் கட்டப்பெறும் சல்லிக்கற்கள்போன்று பதிக்கப்பெற்று விடுகின்றனர். கட்டிடத்தின் வலிவுக்கு எவ்வாறு இக்கற்கள் துணை நிற்கின்றனவோ அவ்வாறே சிறு பாத்திரங்களும் காவியத்தின் கட்டுக்கோப்பிற்குப் பெருந் துணையாக இருக்கின்றனர். சிறு பாத்திரங்களைப் படைத்துக் காவியத்தில் அவர்களை நடமாட விடுதலில் கவிஞனின் கலைத்திறம் வெளிப்படுதல் போலவே அவர்களுக்குக் கதையிலிருந்து விடை கொடுத்தலிலும் அதிகத்திறமையைக் காணலாம். செகப்பிரியர் போன்ற பெருங் கவிஞர்கள் படைத்துக் காட்டும் சிறு பாத்திரங்களுக்கு விடை கொடுத்தல் (Disposal) கலைத் திறனுடன் மிளிர்வதை ஆங்கில இலக்கியங்களைப் பயின்ருர் அறிவார்கள். இராம காதையில் வரும் சிறு பாத்திரங்கள் விடை பெறுதலில் இக்கலைத்திறன் நன்கு விளங்கும். தாடகை இராமன் கணையால் இறத்தல், விசுவாமித்திரர் தவம்செய்யச் செல்லல், மந்தரை சூர்ப்பணகையைப்பற்றி ஒன்றும் சொல்லாது விடப்படல், மாரீசன் காகுத்தன் கணையால் மாளுதல் முதலியவற்றை எண்ணிப்பார்த்தால் இவ்வுண்மை ஓரளவு தெளிவாகும். சிறு பாத்திரங்கள் 'வருதலும் போதலும்' காவியத்தைக் கலைத் திறனுடன் மிளரச் செய்கின்றது.

2

தாடகை*

கம்பன் படைத்த சிறு பாத்திரங்களில் தாடகையும் ஒருத்தி; இராவணனுக்குப் பாட்டி முறையில் வைத் தெண்ணப்படுபவள். 'தாடகை என்பதற்கு மலையில் சஞ்சரிப்பவள் என்பது பொருள். கம்பன் படைத்த பெண் பாத்திரங்களிலேயே பெண்மை என்ற குணம் சிறிதும் இல்லாத பேய் என்றுதான் இவளைச் சொல்லவேண்டும். இவ்வுலகில் அறிஞர்கள் விலக்கிய 'தீ தென்று உள்ளவை யாவையும் செய்த' கொடியவள். பெண்ணுருவம் பெற்ற வளேயன்றிப் பெண்ணுக்குரிய பண்புகள் ஒரு சிறிதும் இல்லாதவள். ஆண்மையெல்லாம் திரண்டு இவளிடம் குடி புகுந்துவிட்டதோ என்று எண்ணும்படியான புயவலி படைத்தவள்.

> ஆண்மை யேபெற்ற வன்றிறல் ஆடவர்
> தோண்மை யேயிவள் பேர்சொலத் தோற்குமேல்[1]
>
> [வல்திறல்-வலியபலம்; தோண்மை-புயவலிமை]

---

* குமரி மலரில் (ஜூலை 1953) வெளி வந்தது.

1. பாலகாண். தாடகைவதை : 57

என்று[1] விசுவாமித்திரர் வாக்கில் வைத்துக் கம்பன் பேசுகின்ருன்.

இராமாயணக் கதையை நடத்திச் செல்வதில் கம்பன் வான்மீகியை ஒட்டிச் செல்லும்போதும் அவர் போக்கிலிருந்து மாறுபடும்போதும் கம்பனின் பேராற்றல் வெளிப்படுகின்றது. வான்மீகி காட்டும் தாடகைக்கும் கம்பன் காட்டும் தாடகைக்கும் அதிக வேற்றுமை இல்லே; ஒரு சில கூறுகளில்தான் கம்பன் மாற்றி இருக்கின்ருன். அவள் பிறப்பு வளர்ப்பைப் பற்றி இருவரும் ஒருவிதமாகத்தான் கூறுகின்றனர். சுகேது என்னும் நல்லொழுக்க முள்ள இயக்கன் ஒருவன் பன்னெடு நாட்களாக மகவிலாது அயருஞ் சிந்தையுடன் மலரவனே நோக்கிப் பலகாலம், தவம் செய்கின்ருன். அவனது அரிய தவத்தைக் கண்டு மகிழ்ந்த அருமறைக் கிழவன் அவன் முன் தோன்றி அவனுக்கு மைந்தர்கள் இல்லையென்றும் ஒரு மகள் மட்டிலும் பிறப்பாள் என்றும் கூறிச் செல்லுகின்ருன்.

பூமட மயிலீனப் பொருவும் பொற்பொடும்
ஏமுறும் மதமலே ஈரைஞ் ஞூறுடைத்
தாமிகு வலியொடு தனயை தோன்றும்[2]

[பூமடம் மயில்-இலக்குமி: பொருவும் ஒக்கின்ற; பொற்பு-அழகு; ஏம்உறும்-களிப்புமிக்க; மதமலே-மதயானேகள்; ஈரைஞ்ஞூறு- ஆயிரம்: தாமிகுவலி; தன்கைப்பட்டார் வருத்தமிகுந்தற்குக் காரணமான; தனயை-புத்திரி.]

என்ற கவிஞன் கூற்றில் இதனேக் காண்க: தக்க பருவம் வந்ததும் சுகேது அவளேச் சுந்தன் என்பவனுக்கு வாழ்க்கைப் படுத்துகின்ருன்.

---

2. தாடகைவதை: 29

பல நாட்கள் கழிந்த பிறகு தாடகைக்கு மாரீசன், சுபாகு என்ற இரு மைந்தர்கள் பிறக்கின்றனர். ஆனால் வான்மீகி மாரீசன் ஒருவன்தான் தாடகையின் புத்திரன் என்று கூறுகின்றார். சில நாட்கள் கழித்து சுகேது, மைந்தர்கள் பிறந்த களிப்பினால் 'தமிழெனும் அளப்பரும் சலதி தந்த' அகத்தியன் ஆசிரமத்தையடைந்து உயர்ந்த மரங்களை வீசியெறிய, மாமுனிவன் தழல்விழியால் சுகேது சாம்பராகின்றான். இவ்வாறு சுகேது இறந்த செய்தியை வான்மீகி குறிப்பிடவில்லை. கணவன் இறந்த செய்தி கேட்டுத் தாடகை தன் குமாரர் இருவருடனும் அகத்தியனை அழிக்கவர, முனிவன் அவர்களை 'அரக்கராகி இழிக!' என்று சாபம் தருகின்றான். வான்மீகி இதற்குமேல் ஒன்றுஞ் சொல்லவில்லை. ஆனால், கம்பன் இன்னும் கொஞ்சம் வரலாற்றை நீட்டித்து இவர்களை இராவணனுடன் உறவு படுத்திக் காட்டுகின்றான்.

அகத்தியன் சாபத்தை ஏற்ற சுபாகு மாரீசர் பாதலம் சென்று சுமாலியுடன் உறவு கொண்டு அவனுக்கு அபிமான புத்திரர்களாகின்றனர். இச் சுமாலி இராவணனுக்குத் தாயாகிய கேகசி என்பவளது தகப்பன்; சுகேசன் என்பவனது மகன். மாலியவான், மாலி என்பவர்கள் இவன் உடன் பிறந்தோர். மாலியவான், மாலி, சுமாலி ஆகிய மூவரும் பல அரக்கர்களுடன் இலங்கையில் குடி புகுந்து உலகெங்கு முள்ள முனிவர்களையும் தேவர்களையும் வருத்த, தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் அவர்களுடன் பொருது அவர்கள் வலியை யழித்து மாலியைக் கொல்லுகின்றார். சுமாலியும் மாலியவானும் அஞ்சி பாதலத்திற் குடி புகுகின்றனர். இக் காலத்தில்தான் சுபாகு மாரீசர் சுமாலியுடன் உறவுகொள்ளுகின்றனர். பிறகு இலங்கையைக் குபேரன் ஆண்டு வருகின்றான். இராவணன் பிறந்து வரத்தால் வரம்பிலா ஆற்றல் பெற்று குபேரனுடன் போர் தொடுக்கவர, குபேரன் இலங்கையை விட்டு ஓடிவிடுகின்றான். இப்போது

இராவணனுடன் சுமாலீ முதலியோர் மீண்டும் இலங்கைக்குக் குடியேறுகின்றனர். இராவணன் சுபாகு மாரீசர்களைத் தனக்கு மாமன்மார் என்று பாராட்ட, இவர்கள் பல அக்கிரமங்களைச் செய்து கொண்டு வாழ்ந்து வருகின்றனர். ஆகவே, தாடகையும் இராவணனுக்குப் பாட்டி முறையாகின்ருள். அங்கதன் தூது சென்ற போது,

பருந்துணப் பாட்டி யாக்கை படுத்தநாள்[3]

என்று கூறும் சொற்ருெடரில் இப் பாட்டி முறையையும், அவள் இறந்த வரலாற்றையும் நினைவு படுத்துகின்ருன்.

இராமன் மட்டிலுந்தான் தாடகையுடன் போர் புரிந்ததாகக் கம்பன் காட்டுகின்ருன். ஆனல் வான்மீகி இராமனும் இலக்குவனும் இவளுடன் போரிட்டதாகக் கூறுகின்ருர். இராமனுடைய வில்லின் நாணொலி கேட்டுத் தாடகை வருங்கால், இராமன் அவளைத் தம்பிக்குக் காட்டுகின்ருன். தாடகை தூளியெழுப்பி ஒரு சில நாளிகை நேரம் திக்குத் தெரியாதபடி மோகிக்கச் செய்து, அவர்கள் மீது கல் மாரி பொழியச் செய்யும் போது, இராமன் அவளுடைய இரண்டு கைகளையும் துணிக்கின்ருன். மீண்டும் பேரொலி யுடன் அவர்களை நோக்கி ஓடிவரும் தாடகையின் மூக்கை யும் காதையும் இலக்குவன் அறுத்தெறிகின்ருன். கம்பன் இச் செய்திகளைக் குறிப்பிடவில்லை. காவியத் தலைவனுடைய வீரத்தைக் காட்டு முன்பு அவன் தம்பியின் ஆற்றலை நமக்குக் காட்டக் கம்பன் விரும்பவில்லை போலும்!

கம்பன் முதன் முதலாக நமக்குத் தாடகையைக் காட்டும் போது,

மண்ணுருத் தெடுப்பினும் கடலை வாரினும்
விண்ணுருத் திடிப்பினும் வேண்டிற் செய்கிற்பாள்

3. யுத்த. அங்கதன் தூ: 32

எண்ணுருத் தெரிவரும் பாவம் ஈண்டியோர்
பெண்ணுருக் கொண்டெனத் தெரியும் பெற்றியாள்[4]

[மண்-பூமி ; உருத்து - கோபித்து ; விண் - மேல் உலகம்; செய்கிற்பாள் - செய்து முடிக்கும் வல்லமையுடையவள்; எண் உரு தெரிவு அருபாவம் - அளவும் உருவமும் அறிய முடியாத பல பாவங்கள் ; ஈண்டி - திரண்டு]

என்று கூறுகின்ருர். நிலவுலகைப் பெயர்த் தெடுக்க வேண்டுமாஞலும், கடல் நீரை வாரிப் பருக வேண்டுமாஞலும், மேலுலகை இடித்துத்தள்ள வேண்டுமாஞலும் செய்ய வல்ல ஆற்றல் மிக்கவள் இவள். இவ்வுலகிலுள்ள பாவங்களெல்லாம் திரண்டு ஒரு பெண் வடிவங் கொண்டனவோ என்று சொல்லும்படியான கொடிய செயல்களையுடையவள். 'மன்னும் பல்லுயிர் வாரித்தன் வாய்பெய்து தின்னும்' புன்மையை யுடையவள். இன்னும் சில நாட்களில் 'மன்னுயிர் அனைத்தையும் வயிற்றில் இட்டு விடுவாள்' என்று விசுவாமித்திரன் வாய்மொழியாகக் கவிஞன் நமக்குக் கூறுகின்ருன். விசுவாமித்திரரைக் கூட முன்னமே தின்றிருப்பாள். 'தீதென்று உள்ளவை யாவையும் செய்த இவள் அவரைக் கோதென்று உண்டிலள், இத்தனையே குறை'. விசுவாமித்திருடன் இராம இலட்சுமணர் இருக்கையில் அவர்கள் முன்பு,

ஓர், மைவரை நெருப்பெரிய
வந்ததென வந்தாள்[5]

[மைவரை – மையாலாகிய மலை]

என்று காட்டப் பெறுகின்ருள். அவளது உடலுக்கு மைவரை உவமை, செம்பட்ட மயிருக்கு நெருப்பு உவமை.

தன்னை எதிர்த்து வந்த தாடகையைப் பெண் என்றும் அவளைக்கொல்லலாகாது என்றும் இராமன் எண்ணுகின்-

4. தாடகைவதை : 22

5. தாடகைவதை : 47

ருன். இதையறிந்த விசுவாமித்திரர் அவள் செய்த கொடுமைகளையும் திருமாலும் இந்திரனும் பெண் கொலையால் புகழ் பெற்றமையையும் கூறி, 'ஆறி நின்றது அறன் அன்று; அரக்கியைக் கோறி' என்று தூண்டுகின்றார். 'புதிய கூற்றனையாள்' தன் மீது எறிந்த கதிர்கொள் மூவிலைச் சூலத்தைத் துணித்தும், அல்லின் மாரி அனையவள் கைவகுத்த கல்லின் மாரியை வில்லின் மாரியால் விலக்கியும் தாடகையுடன் போர் புரிகின்றான் இராமன். இறுதியில்,

சொல்ஒக்கும் கடியவேகச் சுடுசரம் கரியசெம்மல்
அல்ஒக்கும் நிறத்தி னாள்மேல்[6]

[சொல்-முனிவரின் சாபச் சொல்; சரம்-அம்பு; கரிய செம்மல்-இராமன்; அல்-இருட்டு; அல்ஒக்கும் நிறத்தினாள்-தாடகை.]

விடுகின்றான். அந்த அம்பு வயிரக் குன்றக் கல் ஒக்கும் நெஞ்சைத் துளைத்துக் கொண்டு சிறிதும் அங்குத் தங்காது அவள் உடல் நிலத்தின்மீது விழுகின்றது. தாடகை இறந்து வீழ்ந்ததைக் கம்பன்,

பொன்னெடுங் குன்றம் அன்னான்
புகர்முகப் பகழி என்னும்
மன்னெடுங் கால வன்காற்(று)
அடித்தலும் இடித்து வானில்
கல்நெடு மாரி பெய்யக்
கடையுகத்(து) எழுந்த மேகம்
மின்னொடும் இசனி யோடும்
வீழ்வதே போல வீழ்ந்தாள்[7]

[பொன் நெடுங் குன்றம்-மேருமலை; பொன்னெடுங் குன்றம் அன்னான் - இராமன்; புகர் முகம்-கூரிய முகத்தையுடைய;

6. தாடகை வதை-71
7. ஷை-72

பகழி-அம்பு; மன்நெடுங் காலம்-நிலைபெற்ற பெரிய ஊழிக்-காலம்; வன் காற்று-வலிய காற்று; கல் நெடுமாரி-பெரிய கல் மழை; கடையுகம்-யுகாந்த காலம்; மின்னொடும் அசனியோடும் மின்னலுடனும் இடியுடனும்.]

என்று காட்டுகின்றான். இராமனுடைய அம்பு இவ்வுலகம் அழியும் காலத்தில் வீசும் சூறுவளிபோல் கிளம்புகின்றது. சூறு-வளிக் காற்றின் விசையைத் தாங்க மாட்டாது, கல்மாரி பெய்வதற்கு வானத்து எழுந்த மேகம் மின்னலுடனும் இடி-யுடனும் பூமியில் விழுகின்றாள்.

காவியத்தின் சிறு பாத்திரங்களைக் கவிஞன் படைக்கும் போது, ஒரு சில நோக்கங்களை மனத்திற்கொண்டுதான் படைக்கின்றான். முதலாவது கதையின் வளர்ச்சிக்கு அவர்கள் திருப்பு மையங்களாக ((Fulcrum) நின்று துணை புரிய வேண்டும்; இரண்டாவது அவர்கள் காவியத் தலைவனின் குண நலன்களை வெளிப்படுத்த ஏதாவது சில கூறுகளில் துணை செய்ய வேண்-டும். இப் பண்பால் சிறு பாத்திரங்கள் காவியத்தின் பல-கணிகள் என்று சொல்லப்படுகின்றனர். இச்சிறு பாத்திரங்-களின் பேச்சிலும் செய்கையிலும் காவியத்திலுள்ள பல நிகழ்ச்சிகள் வெளிப்படுகின்றன.

முதலாவது: கதை வளர்ச்சிக்குத் தாடகை எவ்வாறு துணை செய்கின்றாள்? இயக்கர் குலத்தில் பிறந்த தாடகை அகத்தியன் சாபத்தால் அரக்கியானாள். சுபாகு மாரீசர்கள் இராவணனுடைய தாயைப் பெற்ற சுமாலிக்கு அபிமான புத்திரர்களாகவே தாடகை இராவணனுக்குப் பாட்டி முறை-யாகின்றாள். இத் தாடகை இராமன் அம்பால் இறந்து தரை-யில் வீழ்ந்த காட்சியைக் கம்பன்,

முடியுடை அரக்கற்கு அந்நாள்
முந்திஉற் பாத மாகப்

படியிடை யற்று வீழ்ந்த
வெற்றியம் பதாகை ஒத்தாள்[6]

[முடியுடை அரக்கற்கு-இராவணனுக்கு; முந்தி-நாசகாலத்துக்கு முற்பட்டு; உற்பாதமாக-தீ நிமித்தமாக; படிஇடை-பூமியின் மீது; அற்று வீழ்ந்த-அறுந்து விழ்ந்த; அம்வெற்றி பதாகை-அழகிய வெற்றிக் கொடி.]

என்று காட்டுகின்றான். பின்னால் நடக்க விருக்கும் இராவண வதத்துக்குத் தீ நிமித்தமாக அவனுடைய வெற்றிக்கொடி அறுந்து வீழ்ந்தது போல் தாடகை இறந்து வீழ்ந்தாள் என்று கவிஞன் கூறும்போது, உண்மையிலேயே நாம் இராமாயணம் முழுவதையும் மனக்கண்முன் காண்கின்றோம்; கொடியைப் பெண்ணுக்கு உவமை கூறி அவ்வுவமையாலேயே வெற்றிக் கொடியையும் நினைவுக்குக் கொணர்ந்த கவிஞனின் கற்பனையைக் கண்டு மகிழ்கின்றோம்.

தாடகை பயந்த சுபாகு மாரீசர்கள் அரக்கரோடு விசுவாமித்திரர் புரிந்த வேள்வியை அழிக்க வரும்போது 'கண்ணினைக் காக்கின்ற இமையிற்காத்த' இராமலட்சுமணர்களில், இராமன் சுபாகுவை யமபுரத்துக்கனுப்பி மாரீசனைக் கடலில் அழுத்துகின்றான். இந்த மாரீசன்தான் மாயமான் வடிவெடுத்து வந்து இராமலட்சுமணர்களைச் சீதையினின்றும்பிரிக்கின்றான். இராவணன் முனிவர் கோலத்தில் வந்து சீதையைத் தூக்கிச் செல்லுகின்றான். ஆகவே, இயக்கர் குலத்துப் பிறந்த தாடகை அரக்கியாகி இராவணன் ஆட்சிக்குக் கீழ் அடங்கும்போது கதை நீளுகின்றது. தாடகையின்மகன்ஒருதிருப்புமையம்போலிருந்து சீதையைப் பிரித்தல் கதையின் வளர்ச்சிக்கு நன்கு துணை புரிகின்றது. இவ்வாறு தாயும் மகனுமாகக் கதையை வளர்க்கத் துணை செய்கின்றனர்.

இரண்டாவது: காவியத் தலைவனாகிய இராமனுடைய சிறப்பியல்புகளைக் காட்டுவதற்குத் தாடகை எங்ஙனம் உதவு-

6. தாடகை வதை-73

கின்ருள் என்பதைப் பார்ப்போம். பேராற்றல் படைத்த தாடகை 'காகுத்தன் கன்னிப்போரில்' முதற் களபலியாக நின்று காவியத் தலைவன் இளைஞனாக இருக்கும்போதே அவனது புயவலியையும் வில்லாண்மையையும் பல்லோர் அறிய வெளிப்படுத்துகின்ருள்; 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற பழமொழியின் உண்மையை இராமன் வாழ்க்கையினின்றும் எடுத்துக் காட்டப் பெருந்துணை புரிகின்ருள். இராமன்மீது தாடகை ஏவிய சூலத்தை அவன் எங்ஙனம் தடுத்தான் என்பதைக் கவிஞன்,

மாலும் அக்கணம் வாளியைத் தொட்டதும்
கோல விற்கால் குனித்ததும் கண்டிலர்
காலனைப்பறித் தக்கடி யாள்விட்ட
சூலம் அற்றன துண்டங்கள் கண்டனர்[9]

[மால்-இராமன்; அக்கணம்-அந்த இமைப் பொழுதில்; வாளி-அம்பு; கோலம் வில் கால் குனித்ததும்-அழகிய வில்லின் குதையை வளைத்ததையும்; காலனைப் பறித்து-யமனிடத்தினின்றும் பிடுங்கி; அகடியாள்-அந்தத் தாடகை; அற்றன-அறுபட்டனவாகிய]

என்று காட்டுகின்ருன். 'கையால் எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டனர்' என்று பின்னல் பாராட்டப்படப் போகும் இராமனது வில்லாண்மை முன்னரே வெளிப்படச் சந்தர்ப்பம் தருகின்ருள் தாடகை. இராமன் அச்சூலத்தை அறுத்தெறிவதற்கு வில்லை வளைத்து நாணேற்றியதை ஒருவரும் பார்க்கவில்லை; ஆனல் அரக்கி விடுத்த சூலம் இரு துண்டங்களாக அற்று வீழ்ந்ததைத்தான் அனைவரும் பார்த்தனர்; அவ்வளவு விரைவாக இராமன் செயலாற்றினன். இவ்வாறு இராமனது வீரச் சிறப்புக்களைக் காட்டத் துணை செய்கின்ருள் தாடகை.

ஏனவே, இதுகாறும் கூறியவற்ருல் கம்பன் படைத்த தாடகை, கதையை வளர்ப்பதற்கும் காவியத் தலைவனாகிய

9. தாடகை வதை-69

இராமனிடமிருந்து அரும்பெருஞ் செயல்களை எதிர்பார்க்கும் நாம் அவனுடைய பேராற்றலை 'மச்சமாகப்' பார்ப்பதற்கும் துணை செய்கின்றாள் என்பதை ஒருவாறு அறிகின்றோம். இச் செயல்களை நிறைவேற்றுவதற்காகத்தான் கம்பன் இவளைப் படைத்துக் காவியத்தின் கட்டுக்கோப்பில் நன்கு பொருந்த வைத்திருக்கின்றான். காவியத்திலிருந்து இவளை நீக்கினால் கட்டாயம் ஒரு குறை தோன்றும் அளவுக்கு இவளைப் பின்னி இருக்கின்றான். சிறு பாத்திரமாக இருந்தாலும் தாடகை இராம காதைக்கு இன்றியமையாத ஒரு சிறந்த அங்கமாகத் திகழ்கின்றாள். இந்த நிலையைத்தான் கம்பன் தாடகைக்கு அளித்திருக்கின்றான்.

3

விசுவாமித்திரர் *

கம்பன் படைத்த விசுவாமித்திரருக்கும் வான்மீகி காட்டும் விசுவாமித்திரருக்கும் அதிக வேறுபாடு இல்லை. இருவரும் இவரைப்பற்றிக் கூறும் செய்திகள் யாவும் பெரும்பான்மையான கூறுகளில் ஒத்தே உள்ளன. என்றாலும், கூறும் போக்கில் சில மாறுபாடுகள் காணப்படுகின்றன. வான்மீகியின் போக்கில் சென்றாலும் கம்பன் கைத்திறன் சிறப்பாகவே அமைந்துள்ளது. ஆனால் வான்மீகியின் போக்கிலிருந்து மாறி நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும்போதுதான் கம்பனுடைய பேராற்றல் வெளிப்படுகின்றது. ஒரே கதையை எத்தனையோ விதமாகச் சொல்லலாமல்லவா? இம் முறைகளில் கம்பன் கையாண்ட முறை கற்போர் இதயத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. வான்மீகி வரிசையாக நிகழ்ச்சிகளைக் கூறிச் செல்லுகின்றார்; அந்நிகழ்ச்சிகளைக் கூறுவதற்கேற்ற வாய்ப்புக்களை உண்டாக்காமலேயே கூறுகின்றார். ஆனால் கம்பன் நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசும் பாத்திரங்களிடையே வாய்ப்புக்களை உண்டாக்கிய பிறகுதான் அவற்றைக் கூறுகின்றான்.

---

* மணிமலரில் (அக்டோபர் 1953) வெளிவந்தது.

விசுவாமித்திரர் என்ற பாத்திரப்படைப்பில் நிகழ்ச்சிகளைக் கூறுவதில் இத்தகைய சில மாறுபாடுகள் காணப்படுகின்றன. தருவனத்துள் தாம் இயற்றும் தவ வேள்விக்கு இடையூறு செய்ய வரும் நிருதருடன் போர் செய்வதற்குத் தசரதரிடம் இராமனை வேண்டிநிற்கும் விசுவாமித்திரர் இராவணனது வரலாறு கூறுகின்றார்; கம்பன் இவ்வாறு கூறவில்லை. வான்மீகத்தில் இவ்வேண்டுகோளைச் செவியிலேற்ற தசரதன் சில நாழிகை மூர்ச்சையடைகிறான்; கம்பனில் அப்படி இல்லை. தசரதன் இராமனைப் பிரிய மறுக்கவே விசுவாமித்திரர் முனிவுடன் எழுந்திருக்க, வசிட்டர் விசுவாமித்திரரது பெருமைகளை விரிவாகக் கூறுகின்றார்; கம்பனில் அவ்வாறு இல்லை. 'நின்மகற்கு அளவில் விஞ்சை வந்து எய்து காலம் இன்று எதிர்ந்தது' ஆகவே 'அவருடன் அனுப்புக!' என்று வசிட்டர் கூறுகின்றார். விசுவாமித்திரர் இராம லட்சுமணர்களை அழைத்துச் செல்லும்போது வழியில் இராமனுக்கு, பலை, அதிபலை என்ற மந்திரங்களை உபதேசித்ததாக வான்மீகி கூற, கம்பன் அவர்கள் பாலை வனத்தின் வழியாகச் செல்லும்போது வெப்பம் தோன்றாதிருக்க அவைகளை விசுவாமித்திரர் உபதேசித்ததாகக் கூறுகின்றார். மிதிலா நகருக்குப் போகும்போதே இராம லட்சுமணருக்கு ஜனகன் வைத்திருக்கும் வில்லைப்பற்றிக் கூறுகின்றார் விசுவாமித்திரர். கம்பன் இதைச் சதாநந்தர் மூலமாக இராம லட்சுமணர் அறியும்படி செய்கின்றான். வான்மீகி அகலிகையின் சாபம் நீங்குமுன் விசுவாமித்திரரால் இராம லட்சுமணருக்கு அகலிகைக்குச் சாபம் வந்த வரலாற்றைக் கூறச் செய்து அதை நிவர்த்தி செய்யுமாறும் விசுவாமித்திரரால் வேண்டச் செய்கின்றார். ஆனால் கம்பன், 'காகுத்தன் கழல் துகள் கதுவ' கல்லாய்க் கிடந்த அகலிகை சாபம் நீங்கி அவர்களை வணங்கி நின்றதாகவும், பிறகுதான் இராமன் வேண்டுகோளின்படி சாபவரலாற்றை உணர்த்தியதாகவும் கூறுகின்றான். இம்மாதிரி மாறுபாடுகளுடன் கூறப்படும் செய்திகள் சில.

வேள்விப் படலத்தில் (பாலகாண்டம்) இராமலட்சுமணர்-

களுக்கு கௌசிகி நதியின் வரலாறு கூறும் முகத்தான் தாமே தம் வரலாற்றைக் கூறுகின்றார் விசுவாமித்திரர். பிரம்மபுத்திரனாகிய குசன் என்னும் அரசனுக்கு அவன் மனைவி வைதர்ப்பியிடம் குசன், குசநாபன், ஆதூர்த்தன், வசு என்ற நான்கு குமாரர்கள் பிறக்கின்றனர். இவர்கள் நால்வரும் முறையே கௌசாம்பி, மகோதயம், மாரணியம், கிரிவிரசம் ஆகிய நகரங்களிலிருந்து கொண்டு அரசு புரிந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் குச நாபனுக்குக் கட்டழகு வாய்ந்த நூறு மகளிர் தோன்றுகின்றனர். பருவம் வந்த இவர்கள் ஒருநாள் தோழியருடன் சோலைக்குச் செல்லும் பொழுது வாயுதேவன் அவர்களைக் காதலித்துத் தன்னை மணக்குமாறு வேண்ட அவர்கள் தந்தையின் இசைவு பெறாது மணக்க மறுக்கின்றனர். இதனால் சினங்கொண்ட வாயுதேவன் அவர்கள் உடலில் புகுந்து முதுகை முறித்து அவர்களை கூனிகளாக்கிச் செல்லுகின்றான். தவழ்ந்து தன்னையடைந்த, தையலாரைத் தந்தைபிரமதத்தன் என்னும் முனிவனுக்கு மணம் செய்து தருகின்றான். அம்முனிவன் மலர்க்கரம் பட்டவுடன் மகளிர் கூன் ஒழிந்து அழகுடையவர்களாகின்றனர்.

குசநாபன் புத்திரனில்லாக் குறை தீரும் பொருட்டு புத்திர காம யாகம் ஒன்றைச் செய்ததன் பயனாக காதி என்னும் மகனைப் பெறுகின்றான். இந்தக் காதிக்குக் கௌசிகன் என்னும் மகனும் கௌசிகி என்ற மகளும் பிறக்கின்றனர். காதி கௌசிகியைப் பிருகு முனிவரின் புத்திரனான ரிசீகனுக்கு மணம் செய்விக்கின்றான். இல்லறத்தில் சிலநாட்கள் இருந்த பிறகு ரிசீகன் பிரம்மலோகம செல்லுகின்றான். கொழுநன் பிரிவாற்றாத கௌசிகி, நதி வடிவத்துடன் விண்ணிற் செல்லும் கணவனைத் தொடர்கின்றாள். ரிசீகன் உலகத்தார் துன்பம் நீங்கப் பூமியில் நதியாகச் செல்லும்படி பணித்துச் செல்லுகின்றான். ஆகவே கௌசிகி இமயமலையினருகில் நதியாகப் பெருகி உலகத்தாருக்கு இம்மைப் பயன்களை நல்கி வருகின்றாள். கௌசிக முனிவரும் (விசுவாமித்திரர்) அவளுடன்

பிறந்த பாசத்தால் அம்மலைச் சாரலில் இனிது வசித்து வருகின்றார். வேள்வியின் பொருட்டுச் சித்தாசிரமத்திற்கு வந்திருக்கின்றார்.

விசுவாமித்திரரைக் கம்பன் 'வினையற நோற்று நின்ற மேலவன்' என்று குறிப்பிடுகின்றார். இந்த முனிவரை முதன் முதலாகக் கையடைப் படலத்தில்தாம் நாம் சந்திக்கின்றோம். கம்பன் இவரை நமக்கு,

> **மடங்கல்போன் மொய்ம்பினான்; முன்னர் மன்னுயிர்**
> **அடங்கலும் உலகும்வே(று) அமைத்துத் தேவரோ(டு)**
> **இடங்கொள் நான்முகனையும் படைப்பென் ஈண்டெனத்**
> **தொடங்கிய துனியுறு முனிவன்** [1]

[மடங்கல்—சிங்கம்; மொய்ம்பு—வலிமை; மன்னுயிர் அடங்கலும்—நிலைபெற்ற உயிர்கள் எல்லாவற்றையும்; உலகு—உலகங்களையும்; வேறு அமைத்து—வேருகப் படைத்து; நான்முகன்—பிரம்மன்; படைப்பென்—சிருட்டிப்பேன்; துனியுறு—கோபமிக்க]

என்று இரத்தினச் சுருக்கமாக அறிமுகம் செய்கின்றான்; இதன் விளக்கத்தைத்தான் பின்னர் சதாநந்தர் இராமனுக்கு உணர்த்தும் வாயிலாக அறிகின்றோம்.

விசுவாமித்திரர் அரசராகஇருந்தபோதே பெரிய வலிமைவாய்ந்தவராக இருந்தார் என்பதை, சதாநந்த முனிவர் இராமனுக்கு உணர்த்துவதால் அறிகின்றோம். ஒரு சமயம் விசுவாமித்திரர் பெருஞ் சேனையுடன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றிருந்தபோது வசிட்டரிடம் இருந்த காமதேனுவைத் தாம் அடைய வேண்டும் என்பதற்காக விசுவாமித்திரர் நடத்திய

1. பாலகாண் - கையடை-31

போரில் அவர் காமதேனுவால் தோல்வியுற்ற போதிலும் அவரது பேராற்றல் வெளிப்படுகின்றது. இதனை உட்கொண்டுதான் கம்பன், 'மடங்கல் போல் மொய்ம்பினன்' என்று கூறினனோ என்று எண்ணத் தோன்றுகின்றது. தம் புயவலி வசிட்டர்முன் நில்லாது போகவே அவரைப் போலவே தாமும் தவ வலிமையடைய வேண்டுமென்று தவத்திற்குச் செல்லுதல் அவருடைய மனத் திட்பத்தைக் காட்டுகின்றது.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.[2]

என்ற வள்ளுவர் வாக்குக்கு விசுவாமித்திரர் இலக்காக விளங்குகின்றார். வசிட்டரது தவ வலிமைக்கு முன்னர் விசுவாமித்திரரது புயவலியும் ஏனைய வலிகளும் நில்லாது போகவே, தாமும் வசிட்டரைப் போலவே பிரம்ம தேஜஸைப் பெற வேண்டுமென்று தவத்திற்குச் செல்லுகின்றார்.

விசுவாமித்திரர் கடுமையாகத் தவம் செய்து கொண்டிருக்கும்போது அதனைச் சிதைப்பதற்காக அமரர்கோன் திலோத்தமையை அனுப்புகின்றான். விசுவாமித்திரர் காதற் சலதியில் மூழ்கி உண்மையை அறிந்த பிறகு அவளைச் சபித்திட்டு மீண்டும் தவம் புரியத் தென் திசையை நோக்கிச் செல்லுகின்றார். அது சமயம் அயோத்தி மன்னன் திரிசங்கு[32] (அரிச்சந்திரனது தந்தை: இராமனது வமிச பிதா)வுக்கும்

---

2. குறள் 666.

3. திரிசங்கு மூன்று குற்றங்களை உடையவன். பிராமண கன்னிகையைக் கவர்ந்து தந்தையின் சொல்லை மீறியது. குருவான வசிட்ட முனிவரது தேனுவை வதம் செய்தது. நீரால் புரோட்சித்துப் பரிசுத்தமாக்கப்படாத மாமிசத்தை உண்டது ஆக மூன்று குற்றங்கள். இவனது இயற்பெயர் சத்திய விரதன் என்பது.

அவனது குருவான வசிட்டருக்கும் இந்த பூத உடலுடன் துறக்கம் புகவேண்டும் என்பதுபற்றிப் பகை ஏற்படுகின்றது. வசிட்டரின் சாபத்தால் திரிசங்கு சண்டாளனாகி விசுவாமித்திரரிடம் வருகின்றான்; தன் குறையைத் தெரிவிக்கின்றான். கௌசிகரும் தம் தவ மகிமையால் அவனை வானத்தில் ஏற்றுகின்றார். தேவர்கள் அந்த நீசனாகிய திரிசங்குவைத் தள்ளிவிட அவன் விசுவாமித்திரர் கேட்குமாறு ''அபயம்!'' என்று ஓலமிடுகின்றான். தமது சொல்லை இகழ்ந்த தேவர்களுடைய பதவிமுதல் மற்றைய விண்ணுலக முழுவதையும் படைப்பேன் என்றும், தம்மால் படைக்கப்பெறும் சூரிய சந்திரர்களும் ஏனைய கோள்களும் ஒளி குன்றாது தெற்கு வடக்காய் இயங்கட்டும் என்றும், பூமியிலுள்ள நிலையியற் பொருள்களையும் இயங்கியற் பொருள்களையும் படைப்பேன் என்றும் விசுவாமித்திரர் கூறி, படைப்பு வேலையையும் தொடங்குகின்றார். இத்தகைய விசுவாமித்திரரதுவலியை எண்ணிதான் கம்பனும்,

...மன்னுயிர்
அடங்கலும் உலகும் வே(று) அமைத்துத் தேவரோ(டு)
இடங்கொள்நான் முகனையும் படைப்பென் எண்-
டெணத்
தொடங்கிய துனியுறு முனிவன்[4]

என்று இவரைப் பாராட்டுகின்றான். படைப்பு வேலையைத் தொடங்கின. விசுவாமித்திரரிடம் அமரர்கோன், நான்முகன் முதலிய கடவுளர்கள் வந்து அவரது சினத்தைத் தணிவிக்கின்றனர்.

தேவர்கள் சென்ற பிறகு விசுவாமித்திரர் மேற்குத் திசை அடைந்து தவம் புரிகின்றார். அப்போது அம்பரீடன் என்னும் அரசன் தான் செய்யவேண்டிய நரமேதத்திற்கு ஒரு சிறுவனை வாங்கும்பொருட்டு ஏராளமான பொன்னுடன் அங்கு வரு

4 கையடை-3

கின்ருன். யாகம் செய்து வருங்கால், யாகப்பசு காணப்படாமற் போய்விடுமாயின் அதற்கீடாக ஒரு மனிதனைக் கொன்று ஓமம் செய்து வேள்வியை நிறைவேற்ற வேண்டுமென்பது நூல் துணிபு. அதற்கேற்ப அம்பரீடனுடைய யாகப்பசுவை இந்திரன் கவர்ந்து சென்றதால், தன் ஆசிரியர் சொற்படி அம்பரீடன் நரமேதம் செய்ய வேண்டுவனுகின்ருன். ஆகவே அம்பரீடன் ரிசீக முனிவனை அணுகி, அவனுடைய பிள்ளையை விலைக்குத் தரும்படி கேட்கின்ருன். ரிசீகமுனிவன் தன் மக்கள் மூவரில் மூத்தவன் தனக்கே உரியவன் என்றும் அவன் மனைவி இளையவன் தனக்கே உரியவன் என்றும் கூற, நடுக்குமாரனுகிய சுனச்சேபன் தன் தந்தையின் வறுமைகெடப் பெருஞ்செல்வத்துக்கு விலையாகின்ருன். உடனே, அரசனுடைய தேரிலேறிக்கொண்டு செல்கின்ருன்.

வழியில் உச்சிப்பொழுது வருகின்றது. உச்சிக் கடனைச் செய்ய சுனச்சேபன் தேரினின்றும் இறங்கிச் செல்லும்பொழுது ஓரிடத்தில் தனது மாதுலனுகிய விசுவாமித்திரர் 'அவ்வியம் அவித்த சிந்தை'யுடன் தவம் புரிந்துகொண்டிருப்பதைக் காண்கின்ருன். கண்டவன் அவரை வணங்கி, தன் குறையைக் கூறுகின்ருன். கௌசிகர் சுனச்சேபனுக்கு அபயமளித்துத் தன் மக்களில் ஒருவனை அவனுக்குப்பதிலாக அம்பரீடனுடன் செல்லும்படி பணிக்கின்ருர். அவர்கள் எல்லோரும் மறுக்கவே, முனிவர் அவர்களைச் சபித்துவிட்டு, சுனச்சேபனுக்கு இரண்டு மந்திரங்களை அருளி, வேள்விக் கம்பத்தில் கட்டும்போது, இந்த மறைகளை ஓதினுல் தேவர்கள் மூவரும் அவிர்ப்பாகத்தைப் பெறுவதற்கு வந்து விடுவார்களென்று கூறுகின்ருர். அவ்வாறே சுனச்சேபனுக்கு யாதொரு தீங்குமின்றி வேள்வி முடிகின்றது; விசுவாமித்திரரும் தவம்புரிய வடதிசை நோக்கிச் செல்லுகின்ருர்.

வடக்கே சென்ற முனிவர் கைவிரல்களை மூக்கின் மீது வைத்து இடைகலை பிங்கலையோடு அடங்கும்படி பல்லாண்டு

பிராணுயாமம் செய்து தவம் செய்கின்ருர். அப்போது, மூலாக்கினியால் பெரிய கபாலம் வெடித்து இருளின் கூட்டத்தை யொத்த புகைத்திரள் எங்கும் பரந்து மறைக்கத் தொடங்கவே, எல்லா உலகமும் சலித்து நடுங்குகின்றன. தேவரும் மூவரும் அவரிடம் வந்து அவரை ''பிரம்ம விருடி யாவாய்'' என வாழ்த்திச் செல்கின்றனர், இந்த வரலாற்றை யெல்லாம் சதாநந்த முனிவர் சனகன் மாளிகையில் இராமனுக்கு எடுத்துரைக்கின்ருர். வான்மீகத்திலும் இவ்வரலாற்றைச் சதாநந்தர், எடுத்துரைப்பதாகவே காணப்படுகின்றது.

பொதுவாகச் சிறு பாத்திரங்கள் கதை வளர்வதற்கும் காவியத் தலைவன் அல்லது தலைவியின் குண நலன்களை வெளிப்படுத்துவதற்கும் துணையாக இருப்பார்கள். இந்த முறையில் விசுவாத்திரர் என்ற சிறு பாத்திரம் எவ்வாறு துணையாக உள்ளார் என்பதை ஈண்டு ஆராய்வோம்.

முதலாவது: அருந்தவத்தால் அயோத்தியில் தசரதனுக்குப் புதல்வனுகத் தோன்றி வளர்ந்து வரும் இராமனை உலகறியச் செய்வதற்கு விசுவாமித்திரர்தான் துணையாக இருக்கின்ருர். தருவனத்துள் தாம் இயற்றும் தவவேள்வியைக் காத்தற் பொருட்டு, இராமனையும், இலக்குவனையும் பெற்றுச் செல்கின்ருர் விசுவாமித்திரர்; பள்ளிப்பிள்ளையாக இருந்த இராமனை வாழ்க்கையில் ஈடுபட வாய்ப்பளிக்கின்ருர். வசிட்டரிடம் ஏட்டுப் படிப்பாகப் பயின்றவற்றை (Theory) வாழ்க்கையநுபவத்தில் (Practice) காட்ட இராமனுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. வசிட்டரிடமிருந்து பெருத ஒரு சில அரிய விஞ்சைகளையும் விசுவாமித்திரரிடமிருந்து பெறுகிருன் இராமன். இதை இராமனை விசுவாமித்திரருடன் அனுப்புவதற்குத் தயங்கிய தசரதனுக்கு அறிவுறுத்திய வசிட்டரே,

பெய்யு மாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய் கொள் வேலைவாய் முடுகும் ஆறுபோல்

ஐய ! நின் மகற் (கு) அளவில் விஞ்சைவந் (து)
எய்து காலம் இன் (று) எதிர்ந்த தாம்[5]

[பெருகு வெள்ளம்-அதிகரிக்கும் வெள்ளம் ; போய்ச் சென்று ; மொய் கொள்வேலே - பெருமையைக் கொண்ட கடலில்; முடுகும் ஆறு போல் - விரைந்து சேரும் விதம் போல ; அளவில் விஞ்சை - அளவு இல்லாத வித்தைகள் ; வந்து எய்து காலம் - வந்து சேரும்படியான நற்காலம் ; எதிர்ந்தது - நேர்ந்தது.]

என்று கூறுவதை நாம் காண்கின்றோம். வழியில் விசுவாமித்திரர் மூலம் பல அரிய செய்திகளையும் வரலாறுகளையும் அறிகிறான் இராமன். இராவணனுடைய ''வெற்றியம் பதாகையை'' யொத்த தாடகை வதம் நடை பெறுகின்றது ''முந்தி உற்பாதமாக.'' பிறகுபல அரிய படைக் கலங்களை யெல்லாம் விசுவாமித்திரர் இராமனுக்கு அருளுகின்றார். விசுவாமித்திரரிடம்தான் காவியத் தலைவனாகிய இராமன் வாழ்க்கை யநுபவத்தைப் [Apprenticeship] பெறுகின்றான் என்று சொல்ல வேண்டும்.

இரண்டாவது : விசுவாமித்திரருடைய வேள்வி இனிது முடிகின்றது. இடையூறுகள் விளைத்த அரக்கர்களைக் கொன்று தள்ளுகின்றான் இராமன், ''திருமகள் நாயகன் தெய்வ வாளி'' தாடகை மக்களில்,

இருவரில் ஒருவனைக் கடலில் இட்ட (து) ; அங் (கு)
ஒருவனை அந்தகன் புறத்தில் உய்த்தது.[6]

சுபாகு மாளுகின்றான். இராமனது ஆற்றலை இராவணனுக்கு நேரில் உணர்த்துவதற்கும், மாயமானாகி இராமன் கணையால் மாள்வதுடன், சீதையை இராமனிடமிருந்து பிரித்து இராவண வதத்துக்குத் துணை புரிவதற்கும், மாரீசன் கொல்லப்

5. கையடை - 15
6. வேள்வி - 52

படாது கடலில் தள்ளப்படுகின்ருன். இராமனது பேராற்றலே நேரில் கண்ட விசுவாமித்திரரே,

> **பாக்கி யம்மெனக் குளதென நினைவுறும் பான்மை**
> **போக்கி நிற்கிது பொருளென உணர்கிலென்[7]**

[பாக்கியம் நல் வினை; பொருள் பெருங்காரியம்]

என்று இராமனைப் பாராட்டுகின்ருர். பின்னுல் அகலிகை சாபம் நீங்கியவுடன்,

> **மைவண்ணத் (து) அரக்கி போரில்**
> **மழை வண்ணத்(து) அண்ணலே? யுன்**
> **கைவண்ணம் அங்குக் கண்டேன்;**
> **கால்வண்ணம் இங்குக் கண்டேன்![8]**

[மை வண்ணம் - கரிய நிறம்; அரக்கி - [இக்கு] தாடகை. மழைவண்ணம் - நீல நிறம்; கை வண்ணம் - கைத் திறம். கால் வண்ணம் - திருவடியின் திறம்.]

என்று கைத்திறத்தையும் திருவடித் திறத்தையும் ஒருங்கு பாராட்டுகின்ருர்.

> **அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டும்**
> **மிகைமக்களான் மதிக்கற் பால**

என்ற ஆன்ருேர் வாக்குக்கு இராமன் இலக்காகின்ருன். முற்றுந் துறந்த பற்றற்ற முனிவரது புகழ்ச்சி இராமனை வந்தடைகின்றது. இராமனது புகழ் பாரெங்கும் பரவுவதற்கு முனிவரது புகழ்ச்சி வித்தாக உள்ளது.

மூன்ருவது :காவியத் தலைவனுகிய இராமனது திருமணம் முடிவதற்கும் விசுவாமித்திரர்தான் துணையாக நிற்கின்ருர்.

---

7. வேள்வி - 56
8. அகலிகை - 82

வேள்வி முடிந்த பிறகு தனக்கு இனிமேல் செய்ய வேண்டிய பணி யாது என்று கேட்ட இராமனிடம் விசுவாமித்திரர்,

> அரிய யான் சொலின் ஐயநிற் கரியதொன் றில்லை
> பெரிய காரியம் உள அவை முடிப்பது பின்னர் [10]

என்று எதிர்காலத்தில் நடைபெற விருக்கும் செயல்களையும் குறிப்பாக உணர்த்துகின்றார். இந்தப் பெரிய காரியங்கள் யாவும் நடைபெறுவதற்கு இம் முனிவரே முதற் காரணம் என்று சொல்ல வேண்டும். பின்னர் மூவரும் மிதிலையர் கோமான் புரியும் வேள்வியைக் காண்பதற்குப் போகின்றனர். வேள்வி மண்டபத்தில் முனிவர் அருகில் அமர்ந்திருந்த அரச குமாரர்களின் முகத்தழகைச் சனகன் கண்கள் பருகி நிற்கின்றன. விசுவாமித்திரரைச் சனகன் 'அவர்கள் யாவர்?' என்று கேட்க,

> விருந்தினர்கள் ; நின்னுடைய வேள்விகா
> ணியவந்தார் ; வில்லுங் காண்பார் [11]

என்று அவர் பதில் கூறுகின்றார். பின்னர் கன்யா சுல்கமாக வைக்கப் பெற்றிருக்கும் சிவதனுசைக் கண்டு சீதையை மணம் முடித்துக் கொள்கின்றான் இராமன். அதற்கு முன்னதாக இராமனுடைய குலப் பெருமைகளை யெல்லாம் சனகனுக்கு உணர்த்துகின்றார் விசுவாமித்திரர்; முன்னோர் பெருமையைக் கூறுங்கால் இராமனுடைய ஆற்றல்களை நன்கு எடுத்தோதுகின்றார். காட்டிடை வதியும் முனிவரிடையே இராமனுடைய புகழைப் பரப்பிய முனிவர் இங்கு நாட்டிடையே அப்புகழைப் பரப்புகின்றார். ஆகவே காவியத் தலைவனுடைய புகழ் எங்கும் பரவுவதற்கு விசுவாமித்திரர் தான்

---

9. அகலிகை - 59

10. மிதிலைக் காட்சி - 57

முதற் காரணம் என்று சொல்ல வேண்டும். சீதையின் திருமணம் முடிந்த பிறகுதான் கதை அயோத்தியா காண்டத்தில் கருக்கொண்டு பேருருவம் கொள்ளுகின்றது. இந்தத் திருமணத்திற்குக் காரணம் விசுவாமித்திரரே.

எனவே, விசுவாமித்திரர் கம்பர் காவியத்தில் சிறு பாத்திரமாக இருப்பினும் இராமனுடைய பெருமையை, தாடகை வதம், வேள்வி காத்தல், அகலிகை சாப நீக்கம், சிவதனுசை ஒடித்தல் ஆகிய செயல்களால் உலகறியச் செய்வதற்கும் சீதையின் திருமணத்தால் கதை வளர்வதற்கும் துணையாக இருப்பதை நாம் அறிகின்றோம். இந்தச் சிறு பாத்திரத்தைக் காவியத்திலிருந்து நீக்க முடியாத படி நன்கு பின்னியிருக்கின்றான் கம்பன். கதையை நடத்திச் செல்லுவதற்கும் காவியத் தலைவனுடைய குண நலன்கள் இளமையிலேயே வெளிப்படுவதற்கும் இப்பாத்திரம் அரும் பொருந்துணையாக இருப்பதை இராமாயணத்தை ஆராய்ச்சிக் கண்கொண்டு பார்ப்பவர்கள் அறிவார்கள்.

4

மந்தரை*

மந்தரை ஒரு சிறுபாத்திரமாக இருந்தாலும் இராமாயணக் கதையையே இயக்கும் ஒரு பெரிய விசை என்று தான் சொல்ல வேண்டும். கூனி என்பது இவளது மற்றொரு பெயர்; முதுகு வளைந்து, கூனுக இருந்தபடியால் கூனி என்று காரணப் பெயராக வழங்கி வந்தது என்று எண்ண லாம். பெயராலும் உருவத்தாலும் மட்டிலும் கூனியல்ல, மனத்தாலும் கொடியவள் என்பதைக் கம்பன், ''உள்ளமுங் கோடிய கொடியவள்'' என்று நமக்கு அறிவிக்கின்ருன். செகப்பிரியரின் ஒத்தெல்லோ (Othello) என்ற நாடகத்தில் ஐயாகோ (Iago) என்ற பணியாள், கதையை இயக்கி வைப் பதுபோல இராமாயணத்தில் கைகேயியின் அந்தப்புரத்துப் பணிப்பெண் கூனி, கதையை இயக்கும் கருவியாகத் திகழ்கின்ருள். இவளை முதன் முதலாக இராமனுக்கு முடி சூட்ட நிச்சயித்த காலத்தில் தான் நாம் காண்கின்ருேம். நாடகத் தில் ஒரு பாத்திரம் திடீரென அரங்குக்கு வருவதுபோல் நமக்கும் கம்பன் இவளைக் காட்டுகின்ருன். இராமனுக்கு முடி புனையும் விழாவைக் கொண்டாடுவதற்கு அயோத்தி மக்கள்

---

* குமரி மலரில் (நவம்பர் - 1953) வெளிவந்தது.

நகரத்தைப் பலவிதமாக அணி செய்கின்றனர். ஒரு நல்ல காரியத்துக்குத் தடையாக, ஓர் அபசகுனம் போல்;

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள் [1]

[இன்னல் - துன்பம் ; இழைத்த - செய்த ; துன்னரும் - பெறுதற்கரிய]

என்று கம்பன் இவளை முதன்முதலாக நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறான், நாம் முதுகு வளைவை மட்டுமல்ல-மனவளைவையும் காண்கின்றோம். 'இன்னல் செய் இராவணன் இழந்த தீமைபால்' என்ற உவமை இராமாயணக் கதை முழுவதையும் ஒரு நூலின் பாயிரம் போல் நமக்குக் காட்டுகிறது. இத்தகைய பொருங்காப்பிய உவமைகளைக் (Epic similes) கம்பனில் ஏராளமாகக் காணலாம். இத்தகைய உவமைகளைக் கூறுவதில் ஆங்கில மகாகவிகளாகிய மில்டனையும் செகப்பிரியரையும் கம்பன் மிஞ்சி விட்டான் என்று சொல்வது எள்ளளவும் மிகையாகாது.

காவியத் தலைவனாகிய இராமனது சிறப்பிலும் அவனது வளர்ச்சியிலும் அன்பும் பரிவும் கொண்டுள்ள நமக்கு இவளது வருகைஉண்மையிலேயே சினத்தை மூட்டுகிறது;முழு மனத்துடன் இவளை நாம் வெறுக்கின்றோம்; மகாகவி கம்பனும் இவளை வெறுக்கின்றான்; அவன் காட்டும் வெறுப்பால் தான் நாமும் கூனியை வெறுக்கின்றோம். அயோத்தி மக்கள் நகரை அணிசெய்து வருவதைக் கண்ணுற்ற கூனி கைகேயியின் அரண்மனைக்குச் சென்று தூங்கிக்கொண்டிருந்த கைகேயியை எழுப்புவதற்கு அவள் காலைத் தொடுகின்றான். இதனைக் கம்பன்,

---

1. அயோத்தி. மந்தரை.39

செப்பொற் சீறடி கைகளில் திண்டினுள் காலக்கோளனுள்[2]

[சீறடி - சிறு - அடி : சிறிய பாதங்கள்]

என்று கூறி, 'காலக் கோளனுன்' என்ற தொடரால் தனது வெறுப்பைப் புலப்படுத்துகின்ருன். எங்கேயே கிடந்தவள் பெருந்துன்பத்தை விளக்கும் உற்பாதக் கோள் தோன்றியது போல் வந்து விட்டாளே என்ற குறிப்பு இத்தொடரால் வெளிப் படுகின்றதல்லவா? கவிஞன் வெறுப்பை இன்னேர் இடத்தி லும் (தைல மாட்டுப்படலத்தில்) காண்கின்ருேம். அயோத்தி யிலிருந்து இலக்குவனுடனும் சீதையுடனும் காட்டுக்குச் செல்லுகின்ருன் இராமன். அயோத்தி மக்கள் பிரிவாற்ருமையினுல் இராமனைப் பின் தொடர்கின்றனர். கதிரவன் மறைந்து இருள் சூழ்கின்றது. இருள் தோன்றுதலைக் கம்பன்,

அந்தியில் வெயில்ஒளி அழிய, வானகம்
நந்தலில் கேகயன் பயந்த நங்கைதன்
மந்தரை உரைஎனும் கடுவின் மட்கிய
சிந்தையின் இருண்டது செம்மை நீங்கியே. [3]

[அந்தி - மாலைப் பொழுது ; நந்தல் இல் - கெடுதல் இல்லாத; கடு - நஞ்சு ; மட்கிய - நன்னிலை கெட்டுப்போன]

என்று வருணிக்கின்ருன். நஞ்சுபோன்ற கூனியின் உரையை, 'மந்தரை உரை எனும் கடு, என்று கூறியிருப்பதை நோக்குக. மற்றும் மீட்சிப் படலத்தில் (யுத்த காண்டம்) அநுமன் இராமனது ஆணையால் சீதையை அசோக வனத்தில் சந்திக்கும்போது, இதுகாறும் சீதையைத் துன்புறுத்திய கொடிய அரக்கியரை வதைக்க இசைவு தருமாறு வேண்டுகின்ருன். அதற்குச் சீதை தனக்கு இடர் யாவும் தன் வினைப்பயனுல் வந்தன என்றும், இந்த அசோகவனத்து அரக்கியர்,

கூனியிற் கொடியாரலரே [4]

---

2. அயோத்தி. மந்தரை. 43
3. தைலமா - 5
4 மீட்சி - 35

என்றும் கூறுகின்ருள். இங்ஙனம் கூனியின் கொடுமையைச் சீதையின் பேச்சாலும் வெளிப்படுத்துகின்ருன் கம்பன்.

வால்மீகி காட்டும் மந்தரைக்கும் கம்பன் படைத்துக்காட்டும் மந்தரைக்கும் அதிகமான வேற்றுமை ஒன்றும் இல்லே. வால்மீகியின் மந்தரை இராமனுக்குத் திருமுடி சூட்டும் நாளன்று கைகேயியின் மேன் மாடத்தில் ஏறித் தற்செயலாய் நான்கு புரத்தையும் நோக்கும்போது நகரம் அலங்கரிக்கப்படுவதையும் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியுடனிருப்பதையும் காண்கின்ருள். அருகிலிருந்த இராமனது செவிலித்தாயை நோக்கி, கோசலே அளவுக்கு மீறிக் கொடைப் பொருள்களே வழங்குவதற்கும், மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியினுடனிருப்பதற்கும் நகர் அணி செய்யப்படுவதற்கும் காரணம் வினவி அவள் மூலம் இராமனது முடி புனேயும் திருநாளே அறிகின்ருள். கம்பன் படைத்துக் காட்டும் மந்தரை,

அந்நகர் அணிவுறும் அமலே வானவர்
பொன்னகர் இயல்பெனப் பொழியும் எல்வையில்[5]

[அமலே-பேராரவத்தால்; வானவர் பொன் நகர்-இந்திரன் தலேநகரமாகிய அமராவதி; இயல்பு என- தன்மை போல; பொலிவும் எல்வையில்-விளங்கும் தருணத்தில்.]

தாஞகவே இராமனுக்குப் பட்டம் சூட்டப்போவதை அறிந்து கொள்ளுகின்ருள். மந்தரையின் சூழ்ச்சியின் காரணமாக இராமன் கானுளச் சென்ற பிறகு மீண்டும் ஒரு முறை வால்மீகி மந்தரையைக் காட்டுகின்ருர். கேகய நாட்டிலிருந்து வந்தபிறகு பரதன் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களேச் செய்து முடித்து இராமனே அயோத்திக்கு எழுந்தருளப் பண்ணவேண்டுமென்று எண்ணுகின்ருன். அப்போது சத்துருக்கன் இரமனுக்கு வந்த தீங்கை வேரில் களேந்திருக்கலாமே, பேராற்றல் படைத்த இலக்குவன் ஏன் அதனேக் களேயவில்லேயோ என்று உரையாடிக் கொண்டிருக்கும்போது

5. அயோத்தி. மந்தரை - 39

அரண்மனையின் கீழ்வாயிலில் கூனி காணப்படுகின்ருள். பல கலன்களை அணிந்து, சிறந்த செஞ்சாந்தம் பூசி, அரச உடைகளை உடுத்து, ஒட்டியாணம் அரைஞாண் இவற்றைக் கட்டித் தன்னை அலங்கரித்துக்கொண்டு, கயிற்றினுல் கட்டப் பெற்ற ஒரு பெண் குரங்குபோல் வருகின்ருள். அவளைக் கண்ட வாயில் காப்போரில் சிலர் அவளைப் பிடித்துக் கொண்டு வந்து சத்துருக்கனிடம் காட்டி இராமனது இடரனைத்திற்கும் காரணம்என்று கூறுகின்றனர். சத்துருக்கன் சினங்கொண்டு அவளைப் பிடித்துத் தரையில் புரட்டி இழுத்துத் தனது திருத்தாள்களால் உதைத்து நிற்கையில், சூழ்ந்திருந்த ஏனைய தாதியர் வெருவியோடி கைகேயியிடம் நிகழ்ந்ததைக் கூறுகின்றனர். தன்னைத் தடுக்க வந்த கைகேயியையும் சத்துருக்கன் வன்மொழிகளால் வெருட்டி இகழ, அவள் பரதனைத் தஞ்சமடைகின்ருள்; பரதன் சமாதானம் செய்தவுடன் சத்துருக்கன் சினந்தீர்ந்து அவளை விட்டு விடுகின்ருன். கம்பனில் இராமன் காட்டுக்குப்போன பிறகு மந்தரையை நாம் காணவே இல்லை.

மந்தரையின் சூழ்ச்சியை இராமாயணக் கதையின் முதல் திருப்பு மையம் என்று சொல்லலாம். அயோத்தியிலிருந்து கொண்டு பட்டமாள வேண்டிய காவியத் தலைவனுகிய இராமனைக் காட்டுக்கு அனுப்புவதற்கு மந்தரையின் சூழ்ச்சி தான் முதற் காரணமாகும். 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்' என்ற பழமொழிக் கிணங்க பால் போன்ற தூய கைகேயியின் மனமும் திரிபு அடைகின்றது. இதனைக் கவிஞன்,

> **தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி**
> **தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின்** 6
>
> [தேவி-கைகேயி; சூழ்ச்சியின்-சூழ்ச்சியினுல்]

என்று குறிப்பிடுகின்ருன்.

---

6. அயோத்தி. மந்தரை-77

மந்தரை பணிப்பெண்ணுக இருந்தாலும் பொதுவாக மாந்தரின் மனே தத்துவத்தையும் சிறப்பாக மகளிரின் மனப் பான்மையையும் நன்கு அறிந்தவள், படிப்படியாகக் கைகேயி யின் 'தூய சிந்தை'யைத் திரிப்பதிலிருந்து இது தெளிவாக வெளிப்படுகின்றது. துயில் எழுந்த கைகேயியிடம் 'பேரிடர் வருவதைக் கண்டும் வருந்தாது துயில்கின்றனேயே' என்று கூறுகின்ருள். 'என் மக்கள் அனைவரும் அறம் திறம்பாதவரா யிருக்கையில் எனக்குத் துன்பம் ஏது?' என்ற பதில் அளிக்கின்ருள் கைகேயி. மற்றும்,

விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்த எற்(கு) இடருண்டோ?[7]

[விராவரும் -(பஞ்ச பூதங்களின் சேர்க்கையால்) தோன்று கின்ற; புவி-பூமி; எற்கு-எனக்கு; இடம்-துன்பம்]

என்று தான் இராமன்மீது வைத்துள்ள பேரன்பு வெளிப்படப் பேசுகின்ருள். இத்தகைய உள்ளம் படைத்த கைகேயியைத் தான் தலைகீழாக மாற்றி விடுகின்ருள் மந்தரை.

முதலில் கைகேயியின் நலம் வீழ்ந்தது என்றும் அவளது செல்வம் குறைந்து விட்டது என்றும் கூறி, மதி நலம் மிக்கவளாதலால் கோசலைக்கு நல்வாழ்வு வந்து விட்டது என்று குறிப்பால் புலப்படுத்துகிருள் கூனி. கூனியின் குறிப் பைக் கைகேயி உணரவில்லை. அவளது அருள் உள்ளம், 'சக்கரவர்த்தி கணவனுகவும், பரதன் மைந்தனுகவும் இருக்கை யில், அக்கோசலைக்குக் குறைவு தான் என்ன?' என்று கூறு கின்றது. உடனே இராமனுக்கு மறுநாள் மணிமுடி சூட்டப் போவதைப் பச்சையாக எடுத்துப் பகர்கின்ருள். என்ருலும், கோசலையின் மனத்தை யொத்த கைகேயியின் உள்ளம் திரிபு அடையவில்லை. அந்த நற்செய்தி கேட்ட கைகேயி மிக்க மகிழ்ச்சியடைந்து செய்தி தந்த கூனிக்கு ஒரு மணிமாலையைப்

7. அயோத்தி. மந்தரை-47

பரிசாக வழங்குகின்ருள். அவளது தூய உள்ளம் அவ்வாறு செய்யச் சொல்லுகின்றது. என்ன செய்வாள் மந்தரை? ஒரு யோசனை தோன்றுகிறது அவளுக்கு. சில மெய்ப்பாடுகள் தோன்றுமாறு தன்னை ஆக்கிக்கொள்ளுகின்ருள். மணிமாலையைப் பரிசளிக்கும்போது இரைகின்ருள்; அதட்டுகின்ருள். கண்களில் நெருப்புப்பொறி சிந்த விழித்துப் பார்க்கின்ருள்; வெப்பமான மூச்சு அவள் நாசியின் வழியாக வெளிப்படுத்துகின்றது. தன் கோலத்தைக் கெடுத்துக் கொண்டு புலம்புகின்ருள். அம்மணி மாலையை வாங்கித் தரையில் ஓங்கி அடிக்கின்ருள்.

மிக நுட்பமான சக கிழத்தி [சக்களத்தி] மனப்பான்மையை ஊட்டுகின்ருள். 'நீ அறிவற்றவள். நாம் வேறு கௌசலை வேறு; அவளுக்கு ஏற்றம் வந்தால் நமது வாழ்வுக்குக் குறைவே என்ற உண்மையை அறியமாட்டாமல் மகிழ்கின்ருய். நீ எப்படியானுலும் உன் மகனேடு துயர முறுவாயாக. நான் கோசலை தாதியருக்கு அடிமை செய்து பிழைக்க மனம் பொறேன்'' என்று கூறுகின்ருள். இதில் கோசலையின் தாதியருக்கும் கைகேயி ஆட்செய்யும்படி நேரும் எனக் குறிப்பிடுகிருள். மேலும் பேசுகின்ருள்:

சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும்
நிவந்தவா சனத்தினி(ந) இருப்ப நின்மகன்
அவந்தனய் வெறு நிலத்(து) இருக்க ஆனபோ(து)
உவந்தவா(று) என் இதற் (கு) றுதி உயாதென்ருள் [8]

[கரிய செம்மல்-இங்கு இராமன்; நிவந்த-உயர்ந்த; அவந்தன்-வீணனவனய்; உவந்த ஆறு-மகிழ்ந்த காரணம்;என்யாது; உறுதி-மன உறுதி]

இதில் கோசலையின் மருமகளுக்கு வரும் வாழ்வைக் குத்தலாக எடுத்துக்காட்டி, கைகேயியின் மனத்தைக் கெடுக்க முயல்கின்

---

8. அயோத்தி. மந்தரை-35

ருள். சககிழத்தியைவிட, சககிழத்தியின் மருமகளுக்கு வாழ்வு வருவதை எந்த மாமியாரும் பொறுக்க மாட்டாள் என்பதை நன்கு அறிந்தவளல்லவா கூனி? 'உன் மகன் இருந்தென்ன? இறந்தென்ன? தன் உறுதியை நாடும் கோசலை சக்கரவர்த்தியைக்கொண்டு தன் மகனுக்குப் பட்டம் கட்டுவித்துக்கொள்ளப்போகிருள். நீ பெற்றதால், பரதன் பிறந்தவனுக மாட்டான்' என்று பின்னும் கூறுகின்ருள்.

மறுமொழி கூருது தன் மாற்றங்களுக்குச் செவி சாய்த்துக் கொண்டிருக்கும் கைகேயியை எப்படியும் மாற்றி விடமுடியும் என்ற உறுதி கூனிக்கு ஏற்படுகின்றது. உடனே,

சரதம்இப் புவியெலாம் தம்பி யோடும் இவ்
வரதனே காக்குமேல் வரம்புஇல் காலமும்
பரதனும் இளவலும் பதியின் நீங்கிப்போய்
விரதமா தவஞ்செய விடுதல்நன் (று) என் ருள்[9]

[சரதம்-மெய்யாக; புவி-பூமி; தம்பி-இலக்குவன்; வரதன்-இராமன்; வரம்பு இல் காலம்-அளவு இல்லாத காலம்; இளவல்-சத்துருக்கன்; பதியின்-நாட்டினின்றும்; விரதம்-விரதங்களோடு கூடிய; விடுதல்-(காட்டுக்கு அனுப்புதல்.]

அரசர் வரிசையில் பிறக்காத பரதன் இருப்பதை விட இறத்தலே மேல் என்று அடுத்தபடியாகக் கூறுகின்ருள். 'பரதனை மாதுலன் வீட்டுக்கு அனுப்பிய காரணம் இன்று தான் எனக்குப் புலப்பட்டது!' என்கின்ருள். பின்னர் பரதனைக் குறித்து மிகவும் இரங்குபவளாய்,

அந்தரம் தீர்ந்துல(கு) அளிக்கும் நீரினல்
தந்தையும் கொடியன்: நற் ருயும் தீயளால்;
எந்தையே! பரதனே, என் செய் வாய்[10]

---

9. அயோத்தி. மந்தரை - 57
10. அயோத்தி. மந்தரை - 60

[அந்தரம் தீர்ந்து-வேற்றுமை கொண்டு; நீரினல்-தன்மையால்; நற்ருய்-தன்னைப்பயந்த தாய்; எந்தையே! என்று விளித்தது மரபு வழுவமைதி]

என்று கூறுகின்ருள்.

தன்னுடைய துர்ப் போதனைக்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பு வைத்த மாதிரியாக ஒரு கருத்தைக் கைகேயியின் மனத்தில் நுழைக்கின்ருள் கூனி. சாமானிய குலத்தில் பிறந்த பெண்ணுயிருந்தால், அவளுக்கு அரசியல் தெரியாது. மாற்ருள் மகன் மன்னனுவது பற்றி ஒரு கவலையுண்டாகாமலிருப்பதும் இயற்கை என்ற கருத்தை,

அரசரில் பிறந்துபின் அரச ரில்வளர்ந்(து)
அரசரில் புகுந்துபேர் அரசி யான நீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்ருய்;
உரைசெயக் கேட்கிலை; உணர்தி யோ [11]......

[அரசரில் பிறந்து - அரசபரம்பரையில் உற்பவித்து; அரசர் இல் வளர்ந்து - மன்னர் மனையில் வளர்ந்து; அரசர் இல் புகுந்து - வேந்தர் வீட்டில் வாழ்க்கைப்பட்டு; பேர் அரசியான நீ - சக்கரவர்த்தினியாக ஆன நீ; கரை செயற்கு அரு - கரை காணுதற்கு அரிய; உணர்தியோ - உனக்(கு) உணர்ச்சி உளதா?]

என்று உணர்த்துகின்ருள். 'குருடனுக்கு அரச விழி விழிக்கத் தெரியாது என்பது உண்மைதான்; உனக்கு அப்படியல்லவே' என்று அவள் மனத்தைப் பண்படுத்துகின்ருள் தனது கருத்தை விதைப்பதற்கு. பரதனுடைய,

கல்வியும் இளமையும் கணக்கில் ஆற்றலும்
வில்வினை உரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் [12]

---

11. அயோத்தி. மந்தரை - 61

12. அயோத்தி. மந்தரை - 62

பரதன் மன்னனாகாவிட்டால், அவையனைத்தும் புல்லில் சிந்திய அமுதம்போல் வீணாகப் போகும் என்றும் கூறு கின்றாள்.

இது காறும் வாய் கசக்கும்படியாக மந்தரை வழங்கிய வெஞ்செல் எரியும் நெருப்பில் நெய் சொரிந்தாற் போல் கைகேயியின் சினத்தை மிகுவிக்கிறது. கண்கள் சிவக்கின்றன. மந்தரையைக் கடிந்து நோக்கி, தான் புகுந்த குலத்தாரும் முறை திறம்பாதமன்னர்கள் என்று மொழிந்து,

எனக்கு நல்லையு மல்லை நீ, என்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லை, அத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையு மல்லை, வந்(து) ஊழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை, மதியிலா மனத்தோய்![13]

என்று கூறுகின்றாள். கோபம் உச்ச நிலைக்கு ஏறுகின்றது. தான் இராமன்மீது எவ்வளவு பிரியம் வைத்திருந்தாளோ அவ்வளவு வெறுப்பு கூனியின்மீது ஏற்படுகின்றது. தன் முன் அவள் நிற்பது கூடப் பொறுக்க முடியாதவளாகின்றாள். ஆகவே,

போதி என்எதிர் நின்று; நின் புன்பொறி நாவைச்
சேதியாது(இ)து பொறுத்தனன்; புறஞ்சிலர் அறியின்
நீதி யல்லவும் நெறிமுறை அல்லவும் நினைந்தாய்
ஆதி ; ஆதலின் அறிவிலி! அடங்குதி ; என்றாள்.[14]

[போதி - அப்புறம் போகக் கடவை ; புன்பொறி நாவை- அற்பப் பேச்சுக்களுக்கு இடமான நாக்கை; சேதியாது- அறுத் தெரியாமல் ; இது - இக்குற்றத்தை; புறஞ்சிலா - என்னையன்றி வேறுசிலர்; நினைந்தாய் ஆதி- நினைத்த குற்றத்திற்கு உள்ளாவாய்; அடங்குதி - வாயை மூடு]

---

13. அயோத்தி. மந்தரை - 65
14. அயோத்தி. மந்தரை - 67

அம்மொழிகளைக் கேட்டும் மந்தரை அவ்விடத்தை விட்டு அகலவில்லை.

கைகேயியின் காலில் விழுந்து வணங்குகின்றாள். தனக்கு ஒரு பற்றுக் கோடாக இருப்பவளல்லவா? ஆகவே, 'தஞ்சமே! உனக்கு உறுபொருள் உணர்த்துகை தவிரேன்' என்று தனது துர்ப்போதனையைத் தொடங்குகின்றாள், வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுகின்ற மாதிரி. இராமன் அரசினை அடைந்தால் வரும் தீமையை எடுத்துக் காட்ட முனைகின்றாள். முற்றத்துறந்த முனிவரும் செல்வத்தால் மனம் மாறுவர் என்ற உலக அநுபவத்தை எடுத்துக் கூறத் தொடங்குகின்றாள்.

அறம்நி ரம்பிய அருளுடை அருந்தவர்க் கேனும்
பெறல்அ ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம் ;
மறம்நி னைந்துமை வலிகிலர் ஆயினும் மனத்தால்
இறல்உ றும்படி இயற்றுவர் இடையரு இன்னல்[15]

[அறம் நிரம்பிய - துறவறம் நிறைவதற்குக் காரணமாகிய; அருள் உடை- கருணையைஉடைய; அருந்தவர்-முனிவர்; பெறல் அரும்-பெறுதற்கு அரிய ; திரு – செல்வம்; சிந்தனை- எண்ணம்; பிறிதாம் - வேறாகும் ; மறம் - கொடுமை; உமை- உங்களை; வலிகிலர் ஆயினும் - துன்பப்படுத்தா விட்டாலும்; மனத்தால் - நெஞ்சினால் ; இறல் உறும்படி – துன்பம்அடையும்படி; இடை அரு இன்னல்- நீங்காத தீங்கை; இயற்றுவர்- செய்வர்;]

என்று பொதுவான கருத்தைக் கூறுகின்றாள். இராமன் அரசாளுங்கால் கோசலையின் செல்வாக்குதான் ஓங்கி நிற்கும்; அவள் பார்த்துக் கொடுத்த சிறு பொருளைக் கொண்டுதான் பரதனும் அவன் தாயும் வாழ வேண்டிவரும் என்று உணர்த்துகின்றாள். கைகேயியின் உற்றார் உறவினர் குறையுற்று வர நேரிடின், அங்ஙனம் வந்தவர் அவளது இளிவரவைத்தான்

15. அயோத்தி. மந்தரை - 70

காண்பார் என்பதை எடுத்துக் காட்டுகின்ருள். இதுகாறும் கைகேயியின் கணவன் தசரதன் இருந்ததரல்தான் இராமன் மாமஞகிய சனகன் அவள் தந்தையாகிய கேகயமன் னனுடன் போர் தொடுத்தானில்லே. இனி, அவள் தந்தைக்கு மாற்ருராகவுள்ளார் போர் தொடுத்தால் அவர்களே எதிர்த்து நிற்க ஆள்தான் இல்லே என்பதையும் கூறுகின்ருள். 'தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி, தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின்.'

அந்தப்புரத்தில் பணிப் பெண்ணுக இருக்கும் மந்தரை சிறந்த அரசியல் வாதியாகவும் இருக்கின்ருள். தன் எண் ணத்திற் கேற்றவாறு கைகேயியை மாற்றி விடுகின்ருள் பால்போன்ற அவள் மனத்தில் பிரை குற்றப்பட்டு விடுகின்றது அக்கூனியை இன்முகத்துடன் நோக்கி,

எனேஉ வந்தனே; இனியை என் மகனுக்கும் அனே யான்
புனேயும் நீள்முடி பெறும்படி புகலுதி என்ருள். [16]

[எனே உவந்தனே -என்னிடத்து விருப்பம் வைத் துள்ளனே; இனியை - நல்லவள்; அனேயான் - அவன்; புனேயும் - அணியும்; பெறும்படி - அடையும் விதத்தை; புகலுதி-சொல்லுவாய்]

உடலால் அன்றி உளத்தாலும் கோணியிருக்கும் கொடி-யவளாகிய மந்தரை,

தோடு இவர்ந்ததார்ச் சம்பரன் தொலேவுற்ற வேலே
ஆடல் வென்றியான் அருளிய வரம்அவை இரண்டும்
கோடி [17]

[தோடு -பூவிதழ்கள்; இவர்ந்த - நெருங்கிய; தொலே-வுற்ற -மடிந்த; ஆடல் வென் றியான்-தசரதன்; அருளிய-கொடுத்த; கோடி- கொள்ளுவாய்]

16. அயோத்தி. மந்தரை -79
17. அயோத்தி. மந்தரை - 81

என்று உரைக்கின்றாள். ஒருக்கால், எப்படி அவற்றைக் கணவனிடமிருந்து பெறுவது என்பது தெரியாது விழித்தலும் கூடும் என்று முன்னெச்சரிக்கையாகவே, விளக்கத்தையும் தந்து விடுகின்றாள்.

இருவரத்தினும் ஒன்றினால் அரசு கொண்(டு) இராமன்
பெருவ வனத்திடை ஏழிரு பருவங்கள் பெயர்ந்து
திரித ரச்செய்வ(து) ஒன்றினால் [18]

[பருவங்கள் - ஆண்டுகள்; திரிதர - அலையும்படி]

என்பது அவள் கொடுக்கும் விளக்கம். இதனைக் கேட்ட கைகேயி மனம் உவந்து கூனியை மார்புறத் தழுவிக் கொள்ளுகின்றாள். 'நீ' சொன்ன அவையிரண்டினையும்,

இன்(று)எய் தாவெனில் அரசன்முன் என் உயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென்யான்; போதி நீ, என்றாள் [19]

[பொன்றி - இறந்து; நீங்குதல் புரிவென்—ஒழிவேன்; நீ போதி— நீ போ.]

கூனியின் தீயவுரையைக் கேட்ட கைகேயி கத்தி கட்டிவிட்ட சேவல் போலாகின்றாள். தன் கருத்தையும் அரசனிடம் நிறைவேற்றிக் கொள்ளுகின்றாள்.

காவியத்தில் வரும் சிறுபாத்திரங்களைக் காவிய மாளிகைக் குரிய பலகணிகள் என்று சொல்லலாம். இத்தச் சிறு பாத்திரங்கள் மூலந்தான் காவியத்தில் நடைபெறும் பல காட்சிகளை நாம் காண்கின்றோம். கட்டிடத்தில் வைத்துக் கட்டும் சல்லிக் கற்கள் போன்று இச்சிறு பாத்திரங்கள் நன்றாக வைத்துப் பதிக்கப் பெற்று விடுகின்றனர். கட்டிடத்தின்

---

18. அயோத்தி. மந்தரை - 82
19. அயோத்தி, மந்தரை - 84

வலிவுக்கு எவ்வாறு சிறு சல்லிக் கற்கள் துணையாக நிற்கின்றனவோ அவ்வாறே இச் சிறுபாத்திரங்களும் காவியத்தின் பிணைப்புக்குப் பெருந்துணையாக இருக்கின்றனர். சில சமயம் அவர்கள் கதையே இயக்கும் பெருவிசையாக [Main Spring] நின்று துணை செய்கின்றனர். சில சமயம் காவியத் தலைவரின் குண நலன்களை எடுத்துக் காட்டும் உரைகற்கள் போல் முழுப் பணியாற்றுகின்றனர்; சில சமயம் துப்பாக்கிக் குண்டைப் பெருந் தொலைவுக்குச் செலுத்தும் விசைபோல் நின்று கதையைப் பேரெடுப்பாக நீளும்படி செய்வார்கள். இந்த இயல்புகளில் இராமாயணத்தில் வரும் மந்தரை எவ்வாறு துணை செய்கின்ருள் என்பதை ஆராய்வோம்.

முதலாவது : மந்தரையின் சூழ்ச்சி இராமாயணக் கதையின் முதற் திருப்புமையம் என்று சொல்ல வேண்டும். பட்டம் கட்டிக் கொண்டு பாராள வேண்டிய இராமனை மரவுரி உடுத்து கானுளச் செல்லும்படி செய்தது இவளது சூழ்ச்சி தான். காவியத்தின் புணர்ப்புக்குக் [Plot] கருப் போல்இருந்து காவியத்தை வளர்ப்பதுவும் இவளது சூழ்ச்சியே. 'இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை' தான் இவளது வடிவங்கொண்டு தென்னிலங்கை வேந்தனுக்கு இராமன் வடிவில் காலனை அனுப்பிவைக்கின்றது. மந்தரையின் சூழ்ச்சிக்குப் பிறகு தான் கதை விரைவாகச் செல்லுகின்றது. அரண்மனையில் பலரிடம் நடை பெறும் உரையாடல்கள், இராமன் மீது தான் வைத்துள்ள காதலுக்கும் உண்மை வழி நிற்றல் வேண்டும் என்ற மனவுறுதிக்கும் இடையே போராடும் தசரதன் மனம், அவன் கைகேயிமீது கொண்ட சீற்றம், முடிதுறந்த இராமனது பெருங்குணம், இலக்குவன் சீற்றம், தசரதன் மரணம், இராமன் குகன் நட்பு, 'தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை, தீவினையென்ன நீத்துச்சிந்தனை முகத்தில் தேக்கிய' பரதன் நிலை ஆகியசெயல்கள் யாவும் ஒன்றன்பின் ஒன்ருக விரைவாக நடை பெறுகின்றன. காவி-

யத்தை ஆயிரம் தடவை படித்தாலும் நாம் உணர்ச்சி வயப் பட்டுக் காவியத்தில் ஆழ்ந்துவிடத் தவறுவதில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியும் நம்மை உணர்ச்சியின் கொடுமுடியை அடையச் செய்கின்றது. அயோத்தியா காண்டம் முழுவதும் இத் தகைய உணர்ச்சிச் சிகரங்கள் நிறைந்துள்ளன. இச்சிகரங் களிளெல்லாம் நாம் ஏறிப்பார்ப்பதற்கு மந்தரைதான் காரணம் என்று சொல்லவேண்டும்.

இரண்டாவது: கூனியின் சூழ்ச்சியால்தான் காவியத் தலைவனாகிய இராமனுடைய அருங்குணங்கள் வெளிப்படுகின்றன. இவள் காரணமாகத்தான் காவியமாந்தர்கள் வேறு சிலரின் குணங்களையும் நாம் தெரிந்து கொள்ளுகின்றோம்.

ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண்(டு) ஆண்டில் வாவென்று இயம்பினன் அரசன் [20]

என்று கைகேயி 'மன்னனின் ஆணை இது' என்று இராமனிடம் சொன்னபோது திருமணி மகுடஞ் சூட வேண்டிய சேவகனின் முகம், 'அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்ற' பெருஞ் சிறப்பினைக் காண்கின்றோம். உடனே ஆணைக்குக் கீழ்ப்பட்டு,

மன்னவன் பணியன் றாகின் நும்பணி மறுப்பனோ [21]

என்று கூறி, அன்றே 'மின்னொளிர் கானம்' செல்லும் இராமனது சிறந்த குணத்தைக் காண்கின்றோம்.

---

20. கைகேயி சூழ்வினை- 107
21. கைகேயி சூழ்வினை 110

மந்தரை போட்டவிதையால்தான் இலக்குவனின் சீற்றத்தைக் காண முடிகின்றது; 'மூட்டாத காலக் கடைத்தீ என மூண்டெழும்' இலக்குவனைப் பார்க்கின்றோம். 'யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னப் பிரியாது' இராமனுடன் காட்டுக்குச் செல்லும் இலக்குவனைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? போர்க் கோலங் கொண்டு,

எனக்கொரு கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானும் நின்றேன், இதுகாக்குநர் காக்க [22]

என்று சூளுரைத்து நிற்கும் இலக்குவன் எத்தகையவன் என்பதை அறிகின்றோம். 'கால் தாக்க நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும் ஆவிக்கனல்' போன்ற இலக்குவன் சீற்றத்தை 'அஞ்சன மேகம் போன்ற இராமன்' தணிவிக்கும் முறையில், இராமனது நுண்ணறிவைக் காண்கின்றோம்.

நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை, அற்றே
பதியின் பிழையன்று, பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழையன்று, மகன்பிழை அன்று, மைந்த,
விதியின் பிழை, நீ இதற்(கு)என்கொல்
வெகுண்டது?... [23]

என்று ஊழின் வலியை உணர்த்தும் இராமனுடைய உண்மைப் பொருள் விளக்கம் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது.

இது மட்டுமா? அறமே வடிவெடுத்தாற் போன்ற சுமித்திரை, 'ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ?' என்று குகன் பாராட்டும் பரதன், 'குகனொடும் ஐவர் ஆனோம்' என்று இராம

22. நகர் நீங்கு - 131
23. நகர் நீங்கு - 134

ஞல் உடன் பிறந்தவஞகக் கருதப்பட்ட குகன், இடரிலாமுகத் தாளாகிய கைகேயி தசரதன் முதலிய காவிய மாந்தர்களின் குண நலன்களை யெல்லாம் அறிவதற்கும் இக் கூனியின் சூழ்ச்சிதான் முதற் காரணமாகும். மந்தரைமட்டிலும் இல்லா விட்டால் கதை வேறு விதமாகத் திரும்பியிருக்கும்; இந்தக் காவிய மாந்தர்களின் குண நலன்கள் வெளிப்படுவதற்கே வாய்ப்புகள் இரா. இவள் தான் காவியத்தின் முதல் விசை (Main Spring);இவள்தான் காவியத்தையே கொண்டு செலுத்தும் முதல் கருவி. கைகேயியின்,

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்
இரக்க மின்மையும் [24]

மலர்ந்து 'இராமன் தொல்புகழ் அமுதினைப் பருகு' வதற்கு இராமாயணம் என்னும் தெவிட்டாத கனியாகப் பழுக்க இவள் தான் காரணம் என்று சொல்லவேண்டும்.

இத்தகைய முக்கியத்துவம் பெற்றிருப்பதால்தான் மகாகவி கம்பன் இவளை நமக்கு முதன் முதலாக அறிமுகம் செய்து வைக்கும்போது,

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினுள் [25]

என்று கூறுகின்ருன். 'இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்' என்ற உவமையால் இராமாயணக் கதையையே சுருக்கமாக மனக் கண்ணுல் பார்க்க முடிகின்றது. தாடகை தசரதராமன் கணையால் தரையில் வீழ்ந்ததைக் கம்பன் காட்டும் போது,

முடியுடை அரக்கற்கு அந்நாள்
முந்திஉற் பாத மாக

---

24. மந்தரை 78
25. மந்தரை 59

படியிடை யற்று வீழ்ந்த
வெற்றியம் பதாகை ஒத்தாள். [26]

என்று கூறிய உவமை போலவே, இதுவும் கதை முழுவதையும் மனத்திரையில் பார்ப்பதற்குத் துணையாக உள்ளது. மற்றும் 'மந்தரை' என்ற சொல்லே மகத்துவம் மிக்கதாக இருக்கின்றது என்றும் கருதலாம். திருப்பாற் கடலை, 'மந்தரை என்ற பெயர் கொண்டமலையை மத்தாகக் கொண்டு கடைந்த போது அமுதமும் கிடைத்தது; நஞ்சும் வெளிப்பட்டன. அதுபோலவே பால் போன்ற தூய்மையான கைகேயியின் மனத்தை 'மந்தரை' என்ற பெயர் கொண்ட பணிப் பெண் கடைந்து கரைக்கும் போது நல்லனவும் வந்தன; தீயனவும் வெளிப்பட்டன. ஆனால் அவையெல்லாம் ஒன்றுசேர்ந்து 'இராமன் பரக்கும் தொல் புகழ் அமுதினை'ப் பருக உதவும் 'இராம காதை' யாக, இலக்கிய நலன்கள் பலவும் திகழும் காவியக் கோயிலாக வடிவெடுக்கத் துணை செய்தன. இதற்கு முதற்காரணமான மந்தரை நமது வெறுப்புக்குப் பாத்திரமாக இருந்தாலும் அவளைப் பாராட்டுவோம்; அவளுக்கு நன்றியும் செலுத்துவோம்.

269405 0,3L,1F50,R;g L9

26. பால காண்டம்-தாடகை வதை 71

5

சுமித்திரை*

இராம காதையில் வரும் சுமித்திரையையும் ஒரு சிறு பாத்திரமாகத்தான் கொள்ள வேண்டும். இவள் தசரதனின் மூன்ருவது மனைவி; இலக்குவனையும் சத்துருக்கனையும் ஈன்றெடுத்த பெரியாள். இவளைப்பற்றிக் காவியத்தில் அதிகமான செய்திகள் காணப்படவில்லை. எனினும், காணும் ஒன்றிரண்டு செய்திகளே இவளை ஒரு தியாகத்தின் சிகரமாக நம்மை எண்ணும்படி செய்து விடுகின்றன. அறமே வடிவெடுத்தாற் போன்ற ஓர் உத்தமியாகக் காட்சி யளிக்கின்ருள் இவள்.

வான்மீகி இராமாயணத்தையும் கம்பன் காவியத்தையும் கருத்துடன் பயிலும்போது சுமித்திரையைப் பற்றிய பல ஒற்றுமைகளை அறிந்து கொள்ளுகின்றோம். இராமன், இலக்குவன், சீதை இவர்கள் பிரிவை எண்ணி, கோசலை தசரதனிடம் புலம்புவதாக வான்மீகி கூறுகின்ருர். இந் நிலையில் சுமித்திரை அவளைப் பலவாறு சொல்லித் தேற்றுகின்ருள். இராமன் செய்கை உத்தமமானது என்றும் நல்லோர் பலர் நடந்துத் தேய்ந்த நல்வழியில்தான் அவன் செல்லுகின்ருன் என்றும்,

* குமரிமலரில் [ஜூன் 1954] வெளி வந்தது.

அவனுக்குத் துணையாகவும் எல்லாவித குற்றேவல்களைச் செய்யவும் பாதுகாவலாகவும் இலக்குவன் உடன் செல்வதால் கோசலை இராமனைக் குறித்துச் சிறிதும் வருந்த வேண்டிய தில்லை யென்றும் எடுத்துக் காட்டுகின்றாள். தவிர, விசுவா மித்திரர் இராமனுக்குக் கொடுத்தருளிய கடவுட் படைகள் அவனுக்குப் பொன்றாத் துணையாக விருக்கும் என்றும் குறிப் பிடுகின்றாள். கோசலையும் அவளுடைய உரைகளால் ஒருவாறு சோகந் தீரப் பெறுகின்றாள். கம்பனில் இக் கட்டத்தில் இவ்வளவு செய்திகள் இல்லை. எப்படியும் இராமன் காட்-டிற்குச் செல்வான் என்று எண்ணிய கோசலை அவனை அவ் வாறு செல்லாதபடி தசரதனை வேண்டற் பொருட்டு அவ-னுடைய இருப்பிடத்துக்குச் செல்லுகின்றாள். அவளுடன் நீண்ட நேரம் காடு செல்வது குறித்து வாதாடிய இராமனும், அவளை வணங்கி, தசரதனையும் தம் தாயையும் தேற்றி, சோகந் தீர்க்கக் கூடியவள் சுமித்திரை என்று எண்ணிக் கொண்டே அவள் இருக்கையை யடைகின்றான். இந்தக் கட்டத்தில் சுமித்திரையைக் குறித்து இதற்கு மேல் ஒன்றும் கூறவில்லை.

இராமன் காட்டிற்குச் செல்வதற்கு முன்னர் தன் தம்பி இலக்குவனுடன் சுமித்திரையின் மாளிகைக்குச்சென்று அவளி-டம் விடைபெற்றதாக வான்மீகி குறிப்பிடவில்லை; ஆனால் தசரத னிடம் விடைபெறுங்கால் தசரதனுடைய முன்னூற்றைம்பது தேவிமார்களும் கோசலை சுமித்திரை ஆகியோரும் தசரத னுடன் இருந்தனர் என்று கூறுகின்றார். இச் சமயத்தில்தான் கைகேயி இராமலக்குவர்க்கும் சீதாப் பிராட்டிக்கும் மரவுரி யைக் கொண்டு வந்து தருகின்றாள். ஒவ்வொருவரிடமும் தனித் தனியாக விடைபெறுங் கட்டங்களை வான்மீகி சித்திரிக்கவில்லை.

கம்பனில் விடைபெறுங் கட்டங்கள் கலைத்திறனுடனும் நாகரிகத்துடனும் படைக்கப் பெற்றுள்ளன. இராமன் வனம் போகும் செய்தியைக் கேட்ட இலக்குவன் மூட்டாத காலக் கடைத் தீ யென மூண்டெழுந்து நிற்க, அவனை இராமன்

பலவாறு சொல்லித் தேற்றி, அவனைக் கூட்டிக்கொண்டு சுமித்திரையின் கோயிலை அடைகின்றான். சுமித்திரையின் வீட்டிலிருக்கும் போதுதான் கைகேயியின் தோழியர் இராமனுக்கும் இலக்குவனுக்கும் மரவுரி கொண்டுவந்து தருகின்றனர். இராமலக்குவர் சுமித்திரையிடம் விடைபெறுங் கட்டம் உருக்கமாகவும் கலைத்திறனுடனும் அமைந்துள்ளது. இந்நிலையில் சுமித்திரை தியாக உருவமாகத் திகழ்கின்றாள். அவளுடைய தியாக உணர்ச்சி நம்மை மயிர்க் கூச்செரியும்படி செய்கின்றது.

கம்பனில் கானுள நிலமகளைக் கைவிட்டுச் செல்லும் இராமலக்குவர்க்கு விடை தரும்போதும் அப்படிப் போனவர்களைத்திரும்பி அழைத்து வரவேண்டும் என்று அயோத்தி மக்கள் சூழச் செல்லும் பரதன் நாவாயில் தன் தாயாரைக் குகனுக்கு அறிமுகம் செய்யும்போதும் நாம் சுமித்திரையைச் சந்திக்கின்றோம். இந்த இரண்டு இடங்களைத் தவிர இவளை நாம் காவியத்தில் சந்திப்பதே இல்லை. என்றாலும், இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலேயே அவளுடைய அருங் குணங்களை யெல்லாம் நம்மால் காண முடிகின்றது; ஒப்பற்ற தாயாகக் காட்சியளிக்கும் அவள் நம் உள்ளத்தை யெல்லாம் கொள்ளை கொள்ளும் தியாக உருவாக விளங்குகின்றாள்.

இலக்குவன் சீற்றத்தை ஒருவாறு தணித்து அவனைக் கூட்டிக் கொண்டு இராமன் சுமித்திரையின் மாளிகையை அடைகின்றான். தான் வனத்திற்குச் செல்ல வேண்டிய நிமித்தத்தைக் கூறி அவளிடம் விடை பெறுவதற்காக வந்திருக்கிறான் இராமன். தாண்டக வனத்திற்குச் செல்லச் சித்தமாகவிருக்கும் தன் இரு கண்களையொத்த குமாரர்களைக் கண்டவுடன் சுமித்திரை,

புண்தாங்கு நெஞ்சத் தினளாய்ப்
படிமேல் புரண்டாள்

உண்டாய துன்பக் கடற்(கு) எல்லை
உணர்ந்தி லாதாள்.[1]

துன்பக்கடலில் புரளும் சுமித்திரைக்கு இராமன் சமாதானம் கூறுகிறுன்.

'கான்புக் கிடினும் கடல்புக் கிடினும் கலிப்போர்
வான்புக் கிடினுந்மெனக் கன்னவை மாண்
அயோத்தி
யான்புக்க தொக்கும்; எனையார் நலிகிற்கும் ஈட்டார்?
ஊன்புக்(கு) உயிர்புக்(கு) உணர்புக்(கு) உலையற்க'
என்ருன்.[2]

[கலிப் போர் - பெருமையையுடைய; வான் - தேவர் உலகம்; புக்கிடினும் - அடைந்தாலும்; மாண் - மாட்சிமை யுடைய; கலிகிற்கும் - வருந்தும்; ஈட்டார் -வலிமையுடையவர்; ஊன்புக்கு-உடல் வற்றி; உயிர்புக்கு - உடல் தளர்ந்து; உணர்-புக்கு - அறிவு அழிந்து; உலையற்க - வருந் தொழிக.]

என்று இராமன் பேசுகின்ருன். இந் நிலையில் கைகேயியின் சேடியர் மரவுரி கொண்டு வருகின்றனர். அவர்கள் இராம-னைக் கண்ணுறும் போதெல்லாம் கண்ணீர் பெருக்கி நெஞ்சுரு-குகின்றனர். இக் காட்சியைக் காணும் சுமித்திரை எவ்வாறு இருக்கக் கூடும் என்று நம் ஊகிப்புக்கே விட்டுவிடுகின்ருன் கம்பன் ; அவளைப்பற்றி அதிகம் ஒன்றுமே கூறவில்லை.

இக் காட்சியை இலக்குவன் காணச் சகிக்கவில்லை. சீற்றம் ஒரு வகையில் தணிந்திருந்தாலும், அவன் உள்ளக் குமுறல் இன்னும் தணியவில்லை. அந்த நிலையில் மரவுரியைக் கொண்டு வரும் கைகேயியின் சேடியைப் பார்த்து,

'யாணர்த் திருநாடு இழப்பித்தவர்
ஈந்த எல்லாம்

1. அயோத்தி, நகர் நீங்கு - 144
2. அயோத்தி, நகர் நீங்கு - 146

பூணப் பிறந்தானும் நின்ருன்;
அவை, போர்வி லோடும்
காணப் பிறந்தேனும் நின்றேன்;
அவை காட்டும்' [3]

[யாணர்-புதுமையை யுடைய; திருநாடு இழப்பித்தவர்-கைகேயி; ஈந்த எல்லாம் - கொடுத்த எல்லாவற்றையும்; போர் வில் - பொருதலைச் செய்யும் வில்.]

என்று பொங்கிக் கூறுகின்ருன். அம் மரவுரியை அன்புடன் வாங்கிக்கொண்டு வந்து தன் தாயை வணங்கி,

'இன்ன இடர்தீர்ந்து உடன்ஏகு
என எம்பி ராட்டி
சொன்னல் அதுவே துணையாம்' [4]

[இன்ன-இனியதல்லாத; இடர்-துன்பம்.]

என்று வேண்டுகின்ருன். மானசீகமாக இக் காட்சியைக் காணும் நாம் உள்ளம் உருகுகின்ருேம்.

விதியின் பிழையால் காடேக வேண்டியவன் இராமன் கைகேயியின் ஒரு வரத்தின்படி காட்டிற்குச் செல்ல வேண்டியவன் அவன் மட்டிலுமேதான். இலக்குவனை எந்த விதத்திலும் வரம் கட்டுப்படுத்தாது. அவன் காட்டிற்குச் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. அப்படித்தான் இராமனை விட்டுப் பிரியாத அவன் காட்டிற்குச் செல்வதாக விரும்பினுலும் அவனைப் பயந்ததாய் அவனைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம்; அவனைப் பெற்ற அன்புள்ளம் அவ்வாறு செய்திருக்கத்தான் வேண்டும் என்று நாம் எதிர்பார்த்தல் இயற்கை. இயல்பாக இராமனிடம் பரிவு காட்டினுலும், அதனுல் தன் மகனைக் காட்டிற்கு அனுப்ப வேண்டும் என்ற நியதி சுமித்திரைக்கு

3. அயோத்தி நகர் நீங்கு 149
4. அயோத்தி நகர் நீங்கு 150

இல்லை. அவ்வாறு அனுப்பாவிட்டாலும், எவரும் அவளைக் குறை கூறார். தன் மகன் பட்டம் கட்டிக்கொண்டு பாராள வேண்டியவனாக இராவிடினும், அரண்மனையி லிருந்துகொண் டாவது சுகமாக இருக்கலாம். இதைத்தான் இந்த உலகி-லுள்ள எந்தத் தாய்மார்களும் செய்வார்கள். ஆனால் கம்பன் காட்டும் தாய்— சுமித்திரை வடிவில் அவன் சித்திரிக்கும் தாய் —என்ன செய்கின்றாள்? இராமனுடன் கானேக விடை தர வேண்டும் என்று பணிவுடன் வேண்டி நிற்கும் தனயனிடம் இவ்வாறு கூறுகிறாள்:

" ஆகாத தன்றால்உனக்(கு) அவ்வனம்
இவ்வ யோத்தி;
மாகாதல் இராமன் நம்மன்னவன்;
வையம் ஈந்தும்
போகா உயிர்த்தாயர்நம் பூங்குழல்
சீதை என்றே
ஏகாய்; இனி இவ்வயின் நிற்றலும்
ஏதம் " என்றாள்.[5]

[ஆகாதது அன்று - தகாது அல்ல: இரண்டு எதிர்மறைகள் ஓர் உடன்பாட்டை வற்புறுத்தின; மாகாதல் - மிக்க அன்பை யுடைய; மன்னவன் - இங்கு தசரதன்; இவ்வயின் - இவ்விடத் தில்; ஏதம் - குற்றம்.]

இராமன் இருக்கும் இடந்தான் அயோத்தி என்று அவள் அறவுள்ளம் எண்ணுகின்றது. இராமன் பிரிந்து செல்வதனால் அயோத்திமா நகரம் பாழ்பட்டுத் தண்டகாரண்யம் போலாய் விடும் என்றும், இராமன் சென்று சேர்வதனால் இதுவரையில் பாழ்பட்டிருந்த அவ்வனம் பல வளங்களும் நிரம்பிச் செழித் துக் குளிர்ந்து வாழ்வதற்கு இனிய இடம் ஆகும் என்றும் அவள் எண்ணுகின்றாள். எனவே தன் மகனுக்கு விடையும்

5. அயோத்தி நகர் நீங்கு 151

தருகின்றாள். அவன் செல்லும் காடுதான் அயோத்தி என்றும், இராமனும் சீதையும் அவன் பெற்றோராவர் என்றும் சொல்லி யனுப்புகின்றாள். இனி சிறிது அங்கு தங்குதல் கூட குற்றம் என்று அவள் அற உணர்வு எண்ணும்படி தூண்டுகின்றது.

அதுமட்டுமா? மேலுங் கூறுகின்றாள்: ''இராமன் காட்டிற்குச் சென்றபோது அவன் தம்பி இலக்குவனும் கூடச் சென்றான் என்ற முறையில் அல்ல நீ செல்வது. அவன் பின் செல்லும்போது ஓர் அரச குமாரன் என்று கண்டவர் நினைக்கும் படி பெருமிதத்துடன் செல்லாது, அவனது ஏவலாளனாகச் செல்வாயாக'' என்று கூறி அனுப்புகின்றாள்.

'மகனே இவன் பின்செல்; தம்பி
என்னும் படியன்று, அடியாரினில் ஏவல் செய்தி'[6]

என்பது அவள் தன் மகனுக்கு இடும் ஆணை. இதைக்கூட இவ்வுலகத்திலுள்ள தாய்மார்களில் ஒரிருவர் செய்யக் கூடும். அதற்கு மேலும் கூறுவதுதான் சுமித்திரையின் தியாகத்தின் உச்ச நிலையைக் காட்டுகின்றது. ''இராமன் பதினான்கு ஆண்டுகள் கழித்து அயோத்திக்குத் திரும்பும் போது நீயும் திரும்பி வருக. அப்படியின்றி, வனத்தில் ஏதாவது இடர் ஏற்பட்டு இராமன் இறக்க நேரிடில், நீ உன் உயிரை முன்னதாகத் தருவாயாக!'' என்று கூறுகின்றாள்.

'மன்னும் நகர்க்கே இவன் வந்திடில்
வா; அஃது அன்றேல்
முன்னம் முடி' என்றனள், வார்விழி
சோர நின்றாள்'[6]

என்பது அந்தத் தியாக உரு பிறப்பித்த கடுமையான ஆணை. இதைக் கூறும்போதே அவள் கண்களில் நீர்ப் பெருக்கு வழிகின்றது. 'இராமனுக்கு ஆபத்து நேருமாயின்' என்று கூறு

6. அயோத்தி நகர் நீங்கு - 152

வதற்குக் கூசி 'அஃது அன்றேல்' என்று கூறுகின்றாள். இத் தியாக உணர்வுதான் 'தள்ளரியே பெருநீதி தனியாறு புகமண்டும், பள்ளமெனும் தகையானைப் பரதனெனும் பெயரானுடைய' உள்ளத்தைக் கவர்கின்றது. அறவுள்ளத்தை அறவுள்ளந்தானே கவரும்?

இராமனைக் கூட்டிக்கொண்டு வந்துவிடலாம் என்று கருதி பரதன் காட்டிற்குச் செல்லுகின்றான். பரதனையும் அவனுடன் வந்தவர்களையும் குகன் ஓடங்களில் ஏற்றி அக்கரை சேர்க்கின்றான். பரதன் ஏறிய ஓடத்தில் சத்துருக்கன், தாய்மார் மூவர், சுமந்திரன், குகன் ஆகிய ஆறு பேர் ஏறிச் செல்லுகின்றனர். ஆற்றின் நடுவில் செல்லுகையில் தன் தாயாரை யாவர் என்று கேட்ட குகனுக்கு அவர்களை அறிமுகம் செய்து வைக்கின்றான் பரதன். தன் தாயர் மூவரைப் பற்றிப் பரதன் கூறுவதாக அமைந்துள்ள பாடல்கள் இலக்கிய நயம் சிறந்தவை; படிக்கும் வாய் தேனூறும் பான்மை வாய்ந்தவை. சுமித்திரையின் உருவம் அறமகள் உருவம்போல் தோற்றமளிக்கின்றது குகன் கண்களுக்கு; அன்புக் கடல்போன்ற அவளைக் காண்கின்றான். அத்தகைய சுமித்திரையைக் குகன் யார் என்று வினவுகிறான்.

அறந்தானே என்கின்ற அயல்நின்றாள்
தனைநோக்கி 'ஐய! அன்பின்
நிறைந்தாளை உரை' என்ன[7]

என்பது குகனுடைய வேண்டுகோள். அறத்தில் வழுவாத அன்புடைக் குகனுக்கு, சுமித்திரை அறவடிவமாகவும் அன்பின் உருவமாகவும் காட்சியளிக்கின்றாள். அவன் அறிய வேண்டியவை அவள் பெயரும் அவள் பரதனுக்குரிய உறவு முறையும் தாம்.

பரதன் அவளை எவ்வாறு அறிமுகம் செய்கின்றான்? ''தசரதனுடைய மூன்றாவது துணைவி; இராமனுக்குப் பின்பு

7. குகப். 68.

பிறந்த தம்பியும் உளன் என்று உலகோருக்கு அறிவிப்பான் வேண்டி, இராமனுடன் சென்ற இலக்குவனை ஈன்றெடுத்த பெரியாள்'' என்று அறிமுகம் செய்கின்றான்.

'நெறிதிறம்பாத்
தன்மெய்யை நிற்ப தாக்கி
இறந்தான்றன் இளந்தேவி; யாவர்க்கும்
தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன்என்னப் பிரியாதான்
தனைப் பயந்த பெரியாள்'[8]

என்பது பரதன் வாய்மொழியாக சுமித்திரையை அறிமுகம் செய்விக்கிறான் கம்பன். 'வாய்மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளலின்' செய்கை அறத்தில் நம்பிக்கை கொண்டுள்ள பரதன் உள்ளத்தைக் கவர்கின்றது. எனவே, தசரதனை 'நெறி திறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி, இறந்தான்' என்று குறிப்பிட்டு, அவனுடைய மூன்றாவது மனைவி என்று கூறுகின்றான்.

இராமனைக் காட்டிற்கு அனுப்பியது மிகவும் அநியாயம் என்பது பரதனுடைய எண்ணம். அப்படி இராமன் காட்டிற்குச் செல்லும்போது மூன்று தம்பியரையுடைய இராமன் பின்பு சென்ற இலக்குவனே தியாகசீலன் என்பதும் பரதனுடைய நம்பிக்கை. அவனே உத்தமமான பணி செய்து தன் மரபின் பெருமையை நிலைநிறுத்தினவன் என்று துணிகின்றான் பரதன். அத்தகைய உத்தமனை ஈன்றவள் அயலிலுள்ள பெரியாள் என்று கூறுகின்றான். சுமித்திரை பரதன் உள்ளத்தைக் கவர்வது இரண்டு காரணங்களால். **ஒன்று:** அறவழி நின்ற தசரதனின் வாழ்க்கைத் துணைவியாக இருப்பது. **இரண்டு:** தியாகத்தின் சின்னமாக விளங்கும் இலக்குவனைப் பெற்றெடுத்தது. எனவே, குகனுக்கு அவளை அறிமுகம் செய்யுங்கால்

8. குகப் - 68

இந்த இரண்டும்தாம் அவன் வாயின் மூலம் வெளிப்படுகின்றன.

காவியத்தில் சுமித்திரையின் பணி : சிறு பாத்திரங்களைப் படைக்கும் கவிஞன் அவர்களைக் கதை வளர்ச்சிக்குத் துணைபுரிவதும் காவியத் தலைவனின் குண நலன்களைப் புலப்படுத்துவதும் ஆகிய இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டுதான் படைக்கிருன் என்று கருதலாம். கம்பனில் எல்லாச் சிறு பாத்திரங்களும் இந்த இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டே படைக்கப் பெற்றுள்ளன என்று அறுதியிட்டுச் சொல்ல இயலாது. ஒரு சில பாத்திரங்கள் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ கதையை வளர்க்கத் துணை புரியலாம்; வேறு சில பாத்திரங்கள் இம்மாதிரியே காவியத் தலைவனுடைய குண நலன்களையும் வேறு காவிய மாந்தர்களின் சிறப்பியல்புகளையும் வெளியிடத் துணை செய்யக் கூடும். இந்தக் கூறுகளில் சுமித்திரை என்ற சிறு பாத்திரம் எவ்வாறு பணியாற்றுகின்றது என்பதை ஆராய்வோம்.

முதலாவது : கதையின் வளர்ச்சியில் சுமித்திரையின் பங்கு என்ன? 'ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு, பூழி வெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகளாடி, ஏழிரண்டு ஆண்டில் வருதல்' இராமனது கடமை; ஏனெனில் அது மன்னரது ஆணை. ஆனால் இலக்குவன் அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டவனல்லன்; அவ்வாறு செய்வது கைகேயியின் விருப்பமுமன்று; அரசனும் அங்ஙனம் ஆணை இடவில்லை. இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னப்பிரியாத இலக்குவன் அண்ணனுடன் காட்டிற்குச் செல்லத் தயாராகின்ருன். இப்படித் தயாராகும் இலக்குவனை அவனுடைய அருமைத் தாய் சுமித்திரை தடுத்து நிறுத்தியிருக்கலாம். ஆனால் அவள் அங்ஙனம் செய்யவில்லை. இராமன் அடவிக்குச் செல்ல ஆயத்தம் ஆனவுடனே சுமித்திரை, 'இனி இவ்வயின் நிற்றல் ஏதம்' என்று இலக்குவனிடம் கூறி அவனை இராமனுடன் போகும்படி

ஏவுகின்றாள். இலக்குவன் காட்டிற்குச் செல்வதற்கு இவளும் ஒரு பெருங் காரணம் என்று கூடச் சொல்லலாம். இலக்குவன் காட்டிற்குச் சென்றதால் கதை பல இடங்களில் நல்ல முறையில் செல்லுகிறதைக் காவியத்தில் புகுந்து பார்ப்பவர்கள் நன்கு அறிவார்கள்.

இரண்டாவது : இராமனது அருங் குணங்கள் வெளிப்படுவதற்கு, சுமித்திரையும் ஓரளவு துணைபுரிகின்றாள். இராமலக்குமணர் காட்டிற்குச் செல்லச் சித்தமாயிருக்கும் நிலையைக் காண்கின்றாள் சுமித்திரை. எல்லையற்ற இடர்க்கடலில் ஆழ்கின்றாள். அங்ஙனம் சோர்வுறுந் தன் சிற்றன்னையின் காலில் விழுந்து அவளைத் தேற்றுகின்றான் இராமன்.

'போர்வாள் அரசர்க்கிறைப் பொய்த்தனன்
ஆக்க கில்லேன்
கார்வான் நெருங்கான் இறை கண்[டு] இவண்
மீள்வேன்' என்றான்.[9]

[இறைகண்டு - சற்று பார்த்திட்டு; இவண் - இங்கே.]

வாய்மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்து தசரதன் வள்ளல் ஆவதற்கு இராமனும் துணைபுரிகின்றான். தந்தை உரை தவறாது இருக்கத் தனயன் துணைபுரியும் செயலை நாம் இராம காதையில்தான் பார்க்க முடிகின்றது. சுமித்திரை நேர்முகமாக இராமன் குணங்களை வெளிப்படுத்தக் காரணமாக இராவிடினும் தன் தனயன் இலக்குவன் மூலம் அவற்றை வெளிப்படுத்துகின்றாள். அவனை இராமனுடன் காட்டிற்கு அனுப்பி அவன் அண்ணன் குணங்களைப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்துகின்றாள்.

இராம காதையில் தசரதன் மனைவிமார்களாகத் திகழும் கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய மூவர்களில் கைகேயி வாய்க்கொழுப்பும் அரசியல் தந்திரமும் கொண்ட ஒரு பாத்தி-

9. நகர் நீங்கு - 145

ரம். கோசலை அடக்கமான குணமுள்ளவள்; மூன்றுலகம் ஈன்றானை முதலாவதாகப் பெறுவதற்குப் பெருந் தவம் செய்தவள். சுமித்திரையோ ஓர் 'அப்பாவி' என்று சொல்லக்கூடிய நிலையிலுள்ளவள்; அதிகம் பேசாதவள். தரும தேவதை என்று இவளைக் கண்டோர் எண்ணக்கூடிய தன்மை வாய்ந்தவள். இவள் பெற்றெடுத்த இரண்டு மணிகளும் சேவையின் சிகரங்களாகத் திகழ்பவர்கள். ஒரு மணி வாய்த்துடுக்கும் உலகியலறிவும் மிக்க இலக்குவன்; இவன் இராமனைத் தொடர்ந்து காடு சென்று, பல வீரச் செயல்கள் புரிந்து, பெரும் பாத்திர நிலையில் காவியத்தில் உறுப்பாக அமைந்திருப்பவன். மற்றொரு மணி அதிகம் வாய் பேசாத, பேசினால் ஆணித்தரமாகப் பேசும் சத்துருக்கன். இவன் காவியத்தில் இருப்பது தெரியாமல் இருந்து, தியாகச் சுடர் வீசும் சிறு பாத்திரம். இந்த இரண்டு தியாகச் சீலர்களையும் தந்து தியாக உருவாக விளங்கும் சுமித்திரை நம் உளக் கோயிலில் வீற்றிருக்கும் தெய்வமாகத் திகழ்கின்றாள். காவியத்தைப் படிக்கும் நாம் இவளை மறக்கவே முடியாது.

6

குகன்*

இராம காதையில் வரும் குகன் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அற்புதமான ஒரு சிறு பாத்திரம். வேடர் குலத்தில் உதித்த கண்ணப்பனைச் சைவர்கள் பக்தி, அன்பு இவற்றின் கொடுமுடியாக எங்ஙனம் கொள்ளுகின்றனரோ அங்ஙனமே வைணவர்கள் வேடர் குலத்தில் பிறந்த குகனை எல்லையற்ற பக்திக்கும் அன்பிற்கும் எடுத்துக் காட்டாகக் கொள்ளுவார்கள். 'மனங் கரைத்து மலங் கெடுக்கும் வாசகத்தை' அருளிய பக்தியின் சிகரமாக விளங்கிய மணிவாசகப் பெருமான் கண்ணப்பனின் அன்பை, ''கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்ட பின்'' என்று பாரட்டிப் பாடியுள்ளதைப் போலவே பக்தியின் சிகரமாக இலங்கிய குலசேகராழ்வார் குகனைப் ''பக்தியுடைக் குகன்'' என்று குறிப்பிட்டுள்ளார். கண்ணப்பனின் இதயங்கலந்த அன்பைக் கண்ட சிவ பெருமான் அவனை ஆட்கொண்டு ''என் வலத்தில், மாறிலாய், நிற்க'' என்று நிரந்தரமான சிவப்பேற்றை அளிக்கின்றார். அங்ஙனமே இராமனும் குகனுடைய கனிந்த அன்பைக் கண்டு,

* குமரி மலரில் (மே - 1954) வெளிவந்தது.

'முன்புளெம் ஒருநால்வேர்; முடிவுள தெனஉன்னு
அன்புள இனிநாமோர் ஐவர்கள் உளராளேம்'[1]

என்று கூறி அவனைத் தன் உடன் பிறந்தவனுகவே கொள்ளு-கிருன். கங்கை வேடனும் காளத்தி வேடனும் வள்ளுவப் பெருந்தகையின் "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள்?" என்ற உண்மைக்கு இலக்காக நம் உள்ளத்தில் என்றும் நிலைத்த இடங்களைப் பெற்றுள்ளனர்.

குகன் கங்கையின் தென் கரையிலுள்ள சிருங்கிபேரம் என்ற ஊரிலுள்ள ஒரு வேடர் தலைவன். கங்கைக்கரையிலிருந்து-கொண்டு கங்கையில் பரம்பரையாக ஓடம் விடும் தொழிலை-யுடையவன். கங்கையின் இரு கரையும் அவனுக்குச் சொந்தம். ஆயிரம் அம்பிகளின் நாயகன். இராமனிடத்தில் அளவுகடந்த அன்பையுடையவன். இராமன் பிராட்டியோடும் தம்பி இலக்குவனேடும் 'காளை நில மகளைக் கைவிட்டுச்' சென்றபோது இக்குகன் பெருந்திரளான சுற்றமும் தானுமாக இராமனைக் காணும் பொருட்டுக் காணிக்கைகளுடன் வந்து வணங்குகின்ருன். இராமனும் அவனைச் சிறந்த நண்பனுக ஏற்றுக் கொள்ளுகின்ருன். அவனுடைய அன்புள்ளமும் சேவை உணர்வும் இராமன் உள்-ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. குகனது இராம பக்தியை நன்கு உணர்ந்த திருமங்கையாழ்வார் இவ்வரலாற்றை,

'ஏழை யேதலன் கீழ்மகன் என்னு(து)
இரங்கி மற்றவர்க்(கு) இன்னருள் சுரந்து
மாழை மான்மட நோக்கி 'உன்தோழி;
உம்பி எம்பியென்(று) ஒழிந்திலை, உகந்து
தோழன் நீஎனக்(கு) இங்கொழி' என்ற
சொறகள் வந்தடி யேன்மனத்(து) இருந்திட,
ஆழி வண்ணை! நின் அடியிணை அடைந்தேன்
....................................'[2]

என்று குறிப்பிட்டிருப்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

---

1. அயோத் கங்கைப் 74
2. பெரிய திருமொழி 5 8:1

இராம காதையில் குகனை நாம் நான்கு இடங்களில் சந்திக்கின்றோம்.

முதலாவது: இராமன் 'தாழிருஞ்சடைகள் தாங்கி, தாங்கருந் தவமேற் கொண்டு, பூழிவெங்கானத்தை'[3] நண்ணும் போது கங்கைக் கரையில் இராமனைச் சந்தித்து வணங்கி பலவாறு பணிவிடைகள் செய்யும் குகனைக் காண்கின்றோம்.

இரண்டாவது: 'தாயுரைகொண்டு தாதை உதவிய தரணி தன்னைத் தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கி'[4] இராமனை மீண்டும் அயோத்திக்குக் கூட்டி வருவதாகச் செல்லும் பரதனைச் சந்தித்து, அவன் அருங் குணங்களையெல்லாம் பாராட்டி விமர்சனம் செய்யும் கிராதர் வேந்தன் குகன் நமக்குக் காட்சியளிக்கின்றான்.

மூன்றாவது: இராவண வேட்டம் முடிந்த பிறகு எம்பிரான் அயோத்தி யெய்தியபோது குகன் தன் சேனையுடன் வழியில் இராமனைச் சந்திக்கும் கட்டத்தில் குகனை நாம் காண்கின்றோம்.

நான்காவது: முடிசூட்டிக் கொண்ட இராமனிடம் அனைவரும் விடை பெறும்போது குகனை மீண்டும் காண முடிகின்றது.

வான்மீகி காட்டும் குகனும் கம்பன் படைப்பும்: கம்பனையும் வான்மீகியையும் ஒப்பிட்டுப் பயிலும்போது பல உண்மைகள் தெரியவருகின்றன. பாத்திரப் படைப்பிலும் சரி, கதைப் போக்கிலும் சரி, கம்பன் வான்மீகியின் போக்கிலிருந்து பல இடங்களில் விலகியிருக்கின்றான். கம்பன் வான்மீகியை ஒட்டிச் செல்லும்போதும் மாறிச் செல்லும்போதும் அவன் பேராற்றல் வெளிப்படத்தான் செய்கின்றது. கானளச் செல்லும் இராமனை இலக்குவன் சீதை இவர்களுடன் சுமந்திரன் கங்கைக் கரைவரை தேரில் கொண்டுவந்து விட்டதாகவும், இந்

3 கைகேயி சூழ்வினை - 107
4 குகன் - 35

நால்வரையும் குகன் சந்தித்ததாகவும் வான்மீகி கூறுகின்ருர். இராமன் முதலியோரைத் தேரில் ஏற்றி, அதனைச் சுமந்திரன் செலுத்திக்கொண்டு வரும்போது, அயோத்தி மக்கள் எல்லோரும் தேரைத் தொடர்ந்து வந்ததாகவும், வழியில் இரவில் ஓரிடத்தில் அனைவரும் துயின்றபோது, இராமன் தேருடன் சுமந்திரனை அயோத்திக்கனுப்பிவிட்டு, தாம்மூவரும் சென்றதாகவும் கம்பன் கூறுகின்ருன். இம்மூவர் மட்டிலுமே கங்கைக் கரையில் குகனைச் சந்திக்கின்றனர்.

இராமன் முதலியோர் சிருங்கிபேரம் என்னும் நகருக்கருகில் தேரிலிருந்து இறங்கி ஒரு மரத்தடியில் வீற்றிருக்கும்போது தன் மந்திரிகளுடனும் சுற்றத்தார்களுடனும்குகன் இராமன் முதலியோரை வந்து வணங்கி நிற்கும்போது, இராமனுக்குற்ற குறையை அறிந்ததாகவும், அதை அறிந்த குகன் தன் நகரில் முடி சூட்டிக்கொண்டு ஆளவேண்டும் என்று வேண்டியதாகவும் வான்மீகத்தில் காணப்படுகின்றது. ஆனல், இராமபிரானது வருகையறிந்து இலக்குவன் அநுமதிபெற்றுக் காணிக்கைப் பொருள்களுடன் குகன் இராமனைத் தனிமையில் சந்தித்தாகவும், பின்னர் இராமன் இசைவுபெற்று அன்றிரவு இராமனுடன் இருந்ததாகவும், இரவில் தானும் தன் சேனையும் இராமனைக் காவல் புரிந்ததாகவும் கம்பன் கூறுகின்ருன். தானும் இராமனுடன் கானள வருவதாகக் குகன் கூறியபோது, பரதனைப்போல் குகனும் நாட்டைக் காக்கக் கடமைப்பட்டிருப்பதாகவும், தான் பதினான்கு ஆண்டுகள் கழிந்தவுடன் திரும்பி விடுவதாகவும் இராமன் குகனுக்குச் சமாதானம் கூறி அவனிடம் விடை பெறுகின்ருன்.

குகன் பலவித உணவு வகைகளையும், பான வகைகளையும், தேர்க் குதிரைகளுக்கு வேண்டிய தீனி வகைகளையும்கொண்டுவந்து அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி இராமனை வேண்டுகின்ருன். இராமன் அவனது உபசரிப்புகளுக்கு மகிழ்ந்து, அவற்றை அவனுக்கே திருப்பிக் கொடுத்து, தான் தானம் ஏற்றுக் கொள்ளும் நிலையிலில்லாததாகவும், கந்த மூலங்களை

மட்டிலும் உட்கொண்டு தவ வாழ்க்கை வாழ வேண்டியவனாக இருப்பதாகவும், ஆனால் தசரதனுக்குப் பிரியமான குதிரைகளுக்காக குகன் கொடுக்கும் உணவுகளை மட்டிலும் ஏற்றுக் கொள்வதாகவும் கூறுகின்றான். இவ்வாறு வான்மீகி கூற, கம்பன் இதனைச் சற்று மாற்றிக் கூறுகின்றான். இராமனுக்கு உணவாகத் தேனையும் மீனையும் கொண்டுவந்து அவனுடைய திருவுளக் குறிப்பை நோக்கி நின்ற குகனைப் பாராட்டி இராமன் அண்மையிலிருந்த விருத்த மாதவரை நோக்கி,

'அரியதாம்; உவப்ப உள்ளத்(து)
அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்
அமிழ்தினும் சீர்த்த அன்றே;
பரிவினில் தழீஇய என்னில்
பவித்திரம் எம்மனோர்க்கும்
உரியன; இனிதின் நாமும்
உண்டனெம் அன்றோ?......'[5]

[அரியவாம்-அரியவையாம்; காதல்-பக்தி; சீர்த்த-சிறந்தவை; பிரிவினில்-அன்போடு; தழீஇய என்னில்-பொருந்தியவை யாயின்; பவித்திரம்-பரிசுத்தமான பொருள்கள்.] என்று கூறுவதாக அறிகின்றோம்.

மரத்தடியில் திருக்கண்வளரும் இராமனை இலக்குவன் வில்லுங் கையுமாக நின்று பாதுகாத்து வருகின்றான். குகனும் இலக்குவனுடன் அவ்வாறே நின்று இராமனின் அருங் குணங்களைப் புகழ்ந்துகொண்டு பாதுகாக்கின்றான். குகன் இலக்குவனுக்காகத் தளிர்களாலும் மலர்களாலும் ஒரு படுக்கையைத் தயார் செய்து அதில் கண்வளர வேண்டுகின்றான். தாங்கள் காட்டில் வசிக்கும் வேடர்களாதலால் தங்களால் தூக்கமின்றி யிருக்கும் சிரமங்களைப் பொறுத்து இரா-

5. கங்கைப் - 43

மனைக் காத்திருக்க முடியும் என்றும் கூறுகின்றான். இலக்குவன் இராமன் பலவிதமான சௌகரியக் குறைவுகளுடன் தரையில் படுத்திருக்கும் போது தனக்குச் சிறிதும் தூக்கம் வராதென்றும், வேறு பலவிதத் துன்பங்களைக் கூறியும் புலம்புகின்றான், இதைக் கேட்கும் குகனும் கண்ணீர் பெருக்கி வருந்தி வாடுகின்றான் இது வான்மீகி கூறும் செய்தி. கம்பனில் இவ்வாறு கூறப்படவில்லை. இராமனும் பிராட்டியும் நாணல் படுக்கையில் கண்வளர்ந்தபோது, 'வரிவில் ஏந்திக் காலைவாயளவும் இமைப்பின்றிக் காத்து நிற்கும்' தம்பியைக் காண்கின்றோம். துயில் கொண்ட இராமனையும் பிராட்டியையும் துயில் கொள்ளாத தம்பியையும் தன் பரிவாரங்களுடன் காத்து நிற்கும் குகனை,

'தும்பியின் குழாத்திற் சுற்றும்
சுற்றத்தன் தொடுத்த வில்லன்
வெம்பிவந் தழியா நின்ற
நெஞ்சினன் விழித்த கண்ணன்
தம்பிநின் றானை நோக்கித்
தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர்
அருவிசோர் குன்றின் நின்றான்'[6]

[தும்பி-யானை; வெம்பி-வருந்தி; தம்பி நின்றானை-நிற்கின்ற தம்பியை; சோர்குன்று-(நீரருவி) பெருகப்பெற்ற மலை போல்.]

என்று கம்பன் காட்டுகின்றான்.

கங்கையைக் கடப்பதற்கு முன் சீதையின் ஆபரணங்களையும் தம் ஆயுதங்களையும் ஓர் ஓடத்தில் ஏற்றும்படிக் குகனுக்கு இராமன் கட்டளை யிட்டதாகவும், தாங்கள் மட்டிலும் குகனால் செலுத்தப்படும் ஓடத்திலேறிக் கொள்ளுவதாகக் குகனிடம் கூறியதாகவும் வான்மீகத்தில் கூறப்பட்டுள்ளது.

---

6. கங்கைப் - 54

கம்பன் இச்செய்தியைக் கூறவில்லை. மூவரும் குகன் செலுத்திய ஓடத்தில் கங்கையைக் கடந்ததாக மட்டிலும்தான் கூறப்படுகின்றது. ஓடம் சென்ற காட்சியைக் கம்பன்,

'பாலுடை மொழியாளும் பகலவன் அனையானும்
சேலுடை நெடுநன்னீர் சிந்தினர் விளையாடத்
தோலுடை நிமிர்கோலில் துழவிய நெடுநாவாய்
காலுடை நெடுஞெண்டிற் சென்றது கடிதம்மா!'[7]

[சேல்-ஒருவகை மீன்; நாவாய்-மரக்கலம்; ஞெண்டின்-நண்டுபோல.]

என்று சித்திரித்துக் காட்டுகின்றான்.

கங்கையிலுள்ள ஓடத்திலேறுவதற்கு முன் சுமந்திரனைப் பலவாறு தேற்றி விடை கொடுத்த பிறகு குகனிடம் தான் கைகேயியின் கட்டளைப்படி தவசிபோல் காட்டிலுறைய வேண்டுமென்றும், ஆகவே மாதவத்தோர்க்கு அணியாகிய சடைதிரித்துக் கொள்ளுவதற்கு ஆலம்பால் கொணரும்படி கட்டளையிட்டதாகவும், அங்ஙனமே குகன் கொண்டுவந்து கொடுக்க, தான் சடைதிரித்துக் கொண்டு மரவுரி தரித்துக் கொண்டதாகவும் வான்மீகி கூறுகின்றார். கம்பனில் இவ்வாறு இல்லை. அரோத்தியை விட்டு இராமலக்குமணர் செல்வதற்கு முன்னதாகவே தவக்கோலம் கொண்டுவிட்டனர் என்று கம்பன் கூறுகின்றான். அம்மாதிரியே பிராட்டியும் தவக்கோலம் கொண்டாள் என்பதையும் 'சீரைச் சுற்றித் திருமகள் முன் செல'[8] என்று குறிப்பிடுகின்றான். இவ்வாறு மாற்றிக் கூறுவதால் கைகேயின் கொடுமையையும் இராமனைப் பிரிவதால் அயோத்தி மக்கள் கொள்ளும் துக்கத்தையும் பன்மடங்கு பெருக்கிக் காட்டத் துணைபுரிகின்றது.

---

7. கங்கைப்- 66
8. நகர்-நீங்கு - 236

வனவாசம் முடிந்து இராமன் அயோத்திக்குத் திரும்பு-கின்ருன். ஏற்கெனவே வாக்களித்தபடி இராமன் பரத்து வாசரது விருந்தினுக இருக்கின்ருன். அவ்வமயம் சிறிய திருவடியை அயோத்திக்கு அனுப்ப நினைக்கின்ருன். அவனிடம் முதலில் குகனைக் கண்டு தன் நலன்களைத் தெரிவிக்குமாறும், அவன் வழிகாட்ட அயோத்திக்கு ஏகுமாறும் கூறுகின்ருன். ஆனல் இராமன் அயோத்திக்குத் திரும்பும்போது குகனைச் சந்தித்துப் பேசியதாக வான்மீகத்தில் காணப்பெறவில்லை. கம்பன் இந் நிகழ்ச்சிகளை யெல்லாம் மாற்றிக் கூறுகின்ருன். குகன் தன் பெருந்தடந்தானையோடும் பெயர்ந்து வருகின்ருன் இராமனைக் காண. இராமனைக் கண்டவுடன்,

'தொழுதெனன்; மனமும் கண்ணும்
துளங்கினன்; சூழ ஓடி
அழுதனன்; கமலம் அன்ன
அடித்தலம் அதனில் வீழ்ந்தான்'[9]

இருவரும் ஒருவரை யொருவர் தழுவிக் கொள்கின்றனர். இலக்குவனைப்போல் தான் தொண்டு செய்யவில்லையே என்று ஏங்குகின்ருன் குகன். பிறகு இராமன் சுக்கிரீவன் முதலியோ-ருக்குக் குகனை அறிமுகம் செய்கிருன்.

கம்பன் காட்டும் ஓவியம்:

சிறந்த பெரியார் ஒருவரைக் குறித்து, பல நிலையிலுள்ள மக்கள் பேசிக்கொள்ளும் பேச்சுக்களிலிருந்துதான் அப்பெரி-யாருடைய அருங் குணங்கள் எவ்வாறு விமர்சனம் செய்யப்-படுகின்றன என்பதை நன்கு அறிய முடியும். ஒவ்வொரு-வரும் தத்தம் மனப்பான்மைக்கும் உளப்பாங்கிற்கும் ஏற்ப அவரைப் பலகோணங்களில் பார்க்கும்போதுதான் அவருடைய அருங் குணங்களை நம்மால் நன்கு அறிய முடிகின்றது. உலகப் பெரியார் காந்தியடிகளைக் குறித்து உலகிலுள்ள பல பெரி-

9. யுத்த. மீட்சி. 313

யார்கள் கூறுவதிலிருந்து தெரிந்து கொள்வதுடன் அவரை நேரில்பார்த்தோ அல்லது பத்திரிகைகளில் படித்தோ அவரை அறியாத குக்கிராமத்தில் உள்ள ஓர் உழவன் அல்லதுஒரு சிறு தொழிலாளி அவரைப் பற்றிப் பேசும் பேச்சுக்களிலிருந்தும் நுட்பமான பல செய்திகளைத் தெரிந்துகொள்ள முடிகின்றது. சாதாரண மக்கள் உள்ளங்களை யெல்லாம் கொள்ளைகொண்டு அவர்கள் அன்பு இதயத்தில் நிலையான இருப்பிடத்தைக் கொண்டுள்ள அண்ணல் காந்தியடிகளின் சிறப்பை நாம் வியக்கின்றோம். அதுபோலவே, இராமன், இலக்குவன், சுக்கிரீவன், சுமந்திரன் முதலியவர்கள் குகனைப்பற்றிக் கூறும்போது குகச் சித்திரத்தின் பெருமையை நன்கு அறிய முடிகின்றது.

இராமனை முதன் முதலாகச் சந்திக்க வரும்போது இலக்குவன் குகனை யார் என்று வினவுகின்றான். அப்போது அவன்,

'நாவம் வேட்டுவன்; நாய் அடியேன்'[10]

என்று கூறும் சொற்கள்தாம் சுமித்திரையின் 'அடியாரினில் ஏவல் செய்தி!' என்ற வாக்கியத்தைச் சிரமேற்கொண்டு 'இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்னப் பிரியாது' வந்துள்ள சேவையின் உருவான இலக்குவன் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. அச்செய்தியை இராமனிடம் சொல்லும்போது குகனை,

'தூயவன் தாயின் நல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்(கு)
இறைகுகன்'[11]

என்று குறிப்பிடுகின்றான் இலக்குவன். இயல்பாக ஆராய்ச்சி உள்ளம் படைத்த இலக்குவன் பார்வையினாலேயே குகனை

---

10. கங்கைப் - 39
11. ஷை 40

உத்தமன் என்று தீர்மானித்துவிடுகின்ருன். பின்னர் இராமனிடம் குகன் நடந்துகொண்ட முறை இராமன் உள்ளத்தைக் கவர்ந்துவிடுகின்றது. இராமன் அருள் உள்ளம் அவனை ஆட்கொள்ளத் தயாராகின்றது. தான் இராமனுக்கு அடிமைத் தொழில் செய்யத் தயாராக இருப்பதை,

'பார்குலாம் செல்வ! நின்னை
இங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யான்
இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன் ஆனது ஐய!
செய்குவென் அடிமை'[12]

[பார்குலாம் செல்வ-பூமி முழுவதற்கும் தலைவனே; இங்ஙனம் என்றது முனிவர் கோலத்துடன் என்றபடி; ஈர்கிலா- பிடுங்கி எறிய மாட்டாத; இன்னலின்-பெருந் துன்பத்தினுல்; இருக்கை-இருப்பிடம்; தீர்கிலேன்-செல்லத்துணிந்திலேன்.] என்று உள்ளம் உருகக் கூறுகின்ருன. 'நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை, ஈர்கிலாக் கள்வனேன்' என்ற தொடரில் மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்து தன் கண்ணைச் சரத்தால் வாங்கி முக்கணுர் கண்ணில் அப்பிய காளத்தி வேடனின் செயலை, இக் கங்கை வேடன் எண்ணினுன் போலும் என்று நாம் கருதுகின்ரேம். வனமே புகலிடமாகக் கொண்ட தம்பிடம் பொய்முறை ஒன்றும் இல்லை யென்று கூறுகின்ருன் குகன்.

'தேன்உள ; தினைஉண்டால்; தேவரும் நுகர்தற்காம்
ஊன்உள(து); துணைநாயேம் உயிர்உள;
விளையாடக்
கான்உள; புனல்ஆடக் கங்கையும் உளதன்ரே?
நான்உள தனையும்நீ இனி(து)இரு; நடஎம்பால்[13]

12. கங்கைப் - 45
13. ,, - 60

என்று வேண்டுகின்றான். இங்ஙனமே உடுப்பதற்கேற்ற மெல்லிய தோலாடையும் தூங்குவதற்கேற்ற பரண்களும் தங்குவதற்கேற்ற சிறு குடிசைகளும் இருப்பதாகக் கூறுகின்றான்.

இந்தத் தூய்மையான உள்ளத்தைக் கண்ட இராமன் குகனைத் தன் உடன் பிறந்தவனாகக் கொள்ளுகின்றான்.

'முன்பு(உ)ளெம் ஒருநால்வேம்; முடிவுள(து)என உன்னா
அன்புஉள இனிநாம்ஓர் ஐவர்கள் உளராளேம்'[14]

என்பது இராமன் கூற்று. அத்துடன் விட்டானா? மேலும் கூறுகின்றான் :

'என் உயிர் அனையாய்நீ; இளவல்உன் இளையான்;இந்
நன்னுதலவள் நின்கேள்; நளிர்கடல் நில
மெல்லாம்
உன்னுடையது நான்உன் தொழில் உரிமையில்
உள்ளேன்'[15]

[இளவல்-தம்பி; நுதல்-நெற்றி; கேள்-தோழி.]

என்று தன் தம்பி தன் துணைவி இவர்கள் உறவையும் வலியுறுத்துகின்றான்; மற்றும் இராமன் குகனைத் தன் தம்பியாக ஏற்றதை. வீடணனை அடைக்கலம் கொண்டபோது,

'குகனொடும் ஐவரானேம்; முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானேம்; எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவரானேம்;
புகல்அரும் கானம்தந்து புதல்வரால் பொலிந்-
தான் உந்தை'[16]

14 கங்கைப் - 74
15. கங்கைப் - 73

என்று மீண்டும் கூறியது நாம் சிந்தித்து மகிழவேண்டிய தொன்றாகும், பதினான்கு ஆண்டு கழிந்து இராமன் அயோத்திக்கு மீளும்போது தன்னை வந்து தொழுத குகனைச் சுக்கிரீவன் முதலியோருக்கு அறிமுகம் செய்யும்போது,

'... முழுநீர்க் கங்கை
துழுவிரு கரைக்கு நாதன்
தாயினும் உயிர்க்கு நல்லான்
வழுவிலா எயினர் வேந்தன்
குகன்எனும் வள்ளல் என்பான்'[17]

என்று கூறுவதிலிருந்தும் குகனைப்பற்றி இராமன் கருதியிருந்தவை வெளிப்படுகின்றது.

இராமன் குடும்பத்திலுள்ள அனைவருமே பேரன்பு படைத்தவர்கள் என்பதை மெய்ப்பிக்க இக் குகன் துணை செய்கின்றான். இராமன் குகனைத் தம்பியாக ஏற்றுக் கொண்டதை யறிந்த பரதன் கோசலைக்கு அவனை அறிமுகம் செய்கின்றபோது,

'இன் துணைவன் இராகவனுக்(கு); இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோள் குகன்என்பான்
இந்நின்ற குரிசில்'[18]

என்று கூறுகின்றான். இதில் பரதனும் குகனை அண்ணனாகக் கொண்டதைப்போலவே, கோசலையும் 'நைவீர் அலீர் மைந்தீர்!' என்று பரதனையும் சத்துருக்கனையும் தேற்றி,

'கைவிரக் களிறனைய காளை இவன்
தன்னோடும் கலந்து நீவிர்

16. யுத்த விடணன்அடை. 146
17. மீட்சிப்: 316
18. குகப். 66.

ஐவிரும் ஒருவிராய் அகலிடத்தை
நெடுங்காலம் அளித்திர்'[19]

[அளித்திர்-பாதுகாப்பீர்.]

என்று ஆசிகூறும் இக் குகனைத் தன் மைந்தனாகப் பாவித்தமை வெளிப்படுகின்றது. பாராளும் வேந்தன் மனைவி காடாளும் வேடனையும் தன் மகனாக ஏற்றுக் கொண்டு விடுகிறாள் என்பதை அறிகிறோம்.

தன் கணவன் இராமன் காட்டில் உறையும் வேடனைத் தம்பியாக ஏற்றசெயல் சீதையின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. அசோக வனத்தில் சிறையிருந்தபோது தன் கணவனின் அருங் குணங்களை யெல்லாம் எண்ணுகின்றாள் அவற்றுள் இராமன் குகனைத் தம்பியாக ஏற்றதும் ஒன்று. இதனை,

'ஆழ்நீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்(கு) 'எம்பிநின் தம்பி;நீ
தோழன் மங்கை கொழுந்தி; எனச்சொன்ன
நண்பினை எண்ணினாள்'[20]

என்று கவிஞன் கூறுவதை நோக்குக. மேலே கூறிய 'ஏழை-யேதலன் கீழ்மகன் என்னாது' (பெரி.திரு 5:8:1) என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரத்தைக் கருத்தில் வைத்துத்தான் கம்பன் இக்கவிதையை அமைத்தானோ என்றும் எண்ணுகின்றோம்.

வேடர் வேந்தன் இராமனுக்கு ஓடம் செலுத்திக் கங்கையைக் கடக்க உதவியதையும் பிறகு இராமனை நாடி வந்த பரதனுக்கும் அங்ஙனமே தொண்டாற்றியதையும் சுக்கிரீவன் எண்ணுகின்றான். வடதிசை வாயிலின் கோபுரத்தின்மீது ஏறிக் குரங்குச் சேனைகளைப் பார்த்து நின்ற இராவணன்

19. கங்கைப் - 67
20. சுந்தர - காட்சிப் - 23

மீது சுக்கிரீவன் பாய்ந்து அவனுடைய கிரீடங்களிலுள்ள மணிகளைப் பறித்து வந்து இராமனுடைய திருவடித் தலத்தில் வைத்து வணங்கிய போது,

'காட்டிலே கழுகின் வேந்தன்
செய்தது காட்ட மாட்டேன்
நாட்டிலே குகனார் செய்த
நன்மையை நயக்க மாட்டேன்'[21]

என்று வேடர் வேந்தனின் செயலையும் கழுகின் வேந்தனின் செயலையும் எண்ணி, தான் சீதையைச் சிறை மீட்கவோ அல்லது அவளைக் கவர்ந்து சென்ற இராவணனின் தலைகளைப் பறிக்கவோ செய்யவில்லை என்று ஏங்குகின்றான். நேரில் அறிமுகம் ஆகாத வேடர் வேந்தனின் தொண்டு குரங்கரசனின் உள்ளத்தைப் பிணித்து விடுகின்றது.

வேறு பாத்திரங்களின் வாயிலாகக் குகனைப்பற்றி அறிந்த நாம் அவனைப்பற்றிக் கவிஞன் தன் கூற்றாக என்ன சொல்லுகின்றான் என்பதையும் பார்ப்போம். கவிஞன் குகனை ஒரு சிறந்த வீரனாகக் காட்டுகின்றான்.

'காயும் வில்லினன் கல்திரள் தோளினான்'[22]

'கச்சொ(டு) ஆர்த்த கறைக்கதிர் வாளினன்
நச்ச ராவு நடுக்குறு நோக்கினன்
பிச்சரா மன்ன பேச்சினன் இந்திரன்
வச்சி ராயுதம் போலும் மருங்கினான்'[23]

'சீறடும் இன்றியும் தீயெழ நோக்குவான்
கூற்றும் அஞ்சக் குமிறும் குரலினான்'[24]

---

21 யுத்த. மகுடபங்-40
22. கங்கைப்-28
23. கங்கைப்-34
24. ,, -35

என்பவை குகனுடைய வீரத்தைக் காட்டும் கவிஞன் கூற்றுகள். இவனிடம் வில்லைப்பிடித்த வீரர்கள் ஏராளமாக இருக்கின்றனர். 'வெங்கரியின் ஏறு அனையான் விற்பிடித்த வேலையினான்'[25] என்ற சுமந்திரன் கூற்றால் இதனை அறிகின்றோம்.

காவியத்தில் சிறு பாத்திரங்கள் : சிறு பாத்திரங்களைப் படைப்படைப்பதில்தான் ஒரு கவிஞனின் கலைத் திறன் நன்கு புலனாகின்றது. அவர்களைக் காவியத்தின் கட்டுக் கோப்பில் நன்கு பொருந்த வைத்துக் காவியத்தை நடத்திச் செல்லும்போதுதான் காவியம் ஒன்பான் சுவைகளுடனும் பத்துவகை வனப்புகளுடனும் செல்ல முடிகின்றது. சிறு பாத்திரங்களைச் சுற்றிக்கதை இயக்கும் போதுதான் கதைபலவகைகளில் சிறப்பாக அமைகின்றது. சிறுபாத்திரங்கள் கதையின் வளர்ச்சியில் பங்கு கொள்வதும் காவியத் தலைவனின் குண நலன்களையும் பிற காவிய மாந்தர்களின் அருங் குணங்களையும் புலப்படுத்துவதுமான இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டு படைக்கப் பெறுகின்றனர் என்று சொல்லலாம் இந்தக் கூறுகளில் குகன் என்ற சிறு பாத்திரம் எவ்வாறு துணை செய்கின்றான் என்பதை ஆராய்வோம்.

முதலாவது : கதையின் வளர்ச்சிக்குக் குகன் எவ்வாறு துணை புரிகின்றான்? தந்தை ஏவல் செய்ய தாய் உரைசெய்ததனால் 'தாழிருஞ்சடைகள் தாங்கி தாங்கருந் தவமேற்கொண்டு, பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி, ஏழிரண்டு ஆண்டுகள்' கழித்து வருவதாகச் சென்ற இராமன் முதலியோர் கங்கையாற்றைக் கடந்து செல்வதற்குக் கானளைச் சென்ற காகுத்தனைத் திருப்பி அழைத்து வருதவற்காகக் காட்டிற்கு வந்த பரதனும் அவனைச் சேர்ந்தோரும் அதனைக் கடப்பதற்கும் 'கங்கை இரு கரையுடையான், கணக்கிறந்த நாவாயான்' ஆகிய குகன் துணை செய்கின்றான். குகன் கதையை முடுக்கிச்செலுத்தத் துணை புரியாவிட்டாலும் குகன்-இராமன் சந்திப்பு, குகன்-பரதன் சந்திப்பு ஆகிய இயல்பான

25. குகன்-25

நிகழ்ச்சிகளைக் கொண்டு கவிஞன் இலக்கிய நலங்கனிந்த பல பாடல்களை யாத்தற்குத் துணை செய்கின்றான் என்று சொல்லலாம்.

இரண்டாவது: குகனைச் சந்திக்கும்போதும் பிறகும் காவியத் தலைவனாகிய இராமனது அருங் குணங்கள் நன்கு வெளிப்படுகின்றன. சாதாரண மக்களும் இராமன்மீது அன்பு கொண்டிருந்தனர் என்பதற்கு இக் குகன் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றான். குகன் இராமனை முதன் முதலாகக் காணச் சென்றபோது 'தேனும் மீனும் அமுதினுக் கமைவதாகத் திருத்தினன் கொணர்ந்தேன்; என்கொல் திருவுள்ளம்?'[26] என்று கேட்கின்றான். ஏழை பங்காளனாகிய இராமன் அவன் அன்புடன் கொண்டு வந்துள்ள பொருள்கள் எவையாயினும் அவை ஏற்றுக் கொள்ளத் தக்கவையே என்று கூறுகின்றான். சில காரணங்களால் அவற்றை உண்ணாவிட்டாலும் அவை உண்டன போலாகு மென்று அக் குகன் மனம் உவக்குமாறு பேசுகின்றான் இராமன்.

அன்று இரவு கங்கைக் கரையில் தங்கி மறுநாள் ஆற்றைக் கடக்க வேண்டும் என்றும்,

'யாணர்ப்
பொங்குநின் சுற்றத் தோடும்
போய்உவந்து இனிதுஉன் ஊரில்
தங்கிநீ நாவா யோடும்
சாருதி விடியல்'[27]

என்று கூறும்போது இராமனைத் தனியேவிட்டுத் தன் இருக்கை நோக்கிப் போக மனம்வரவில்லை என்று உளம் விட்டுக் கூறுகின்றான் குகன். அதைக் கேட்ட இராமன்,

---

26. கங்கைப். 43
27. கங்கைப் - 44

'யாதினும் இனிய நண்ப!
இருத்தியீண்(டு) எம்மோ(டு) என்றான்'[28]

தன் சேனைகளை இராமனுடைய தவப்பள்ளியைச் சுற்றி-யிருக்குமாறு ஏவி, தான்,

'வடிசிலை பிடித்து வாளும்
வீக்கிவாய் அம்பு பற்றி
இடியுடை மேகம் என்ன
இணையடி ஏத்தி'[29]

நிற்கின்றான். அன்றிரவு குகன், இராமன் 'திருநகர் தீர்ந்த வண்ணம் தெரிவிப்பாய்' என்று இலக்குவனை வினவ, அவன் முழு விவரங்களையும் தருகின்றான். குகனும் இரு கண்ணீர் அருவி சோர அவற்றைக் கேட்கிறான். இரவு முழுவதும் தூக்கமின்றி வில்லேந்திய கையுடன் அண்ணனைக் காத்து நிற்கும் தம்பி இலக்குவனையும், அரண்மனையில் பஞ்சணையில் படுத்து உறங்க வேண்டிய அண்ணன் தரையில் படுத்திருப்-பதையும் கண்ட குகன் கண்களில் நீரருவி தாரை தாரை-யாகப் பொழிகின்றது.

குகன் சந்திப்பால்தான் இராமன் ஏழை வேடனையும் உடன்பிறந்தவனாகக் கொள்ளும் பரந்த நோக்கமுள்ளவன் என்பதை இவ்வுலகம் அறிய முடிகின்றது. 'அன்புள்ள இனி நாமோர் ஐவர்கள் உளரானோம்' என்ற இராமனுடைய உயர்ந்த சகோதரத்துவம் வெளிப்பட இக் குகன் அரிய தோர் வாய்ப்பினை நல்குகின்றான். அதுமட்டுமா? இலக்கு-வனையும் குகன் தம்பியாக்கி, சீதையையும் கொழுந்தியாக்கிய இராமனது உயர்ந்த மன நிலையையும் அறிய முடிகின்றது.

---

28. கங்கைப்-46
29. கங்கைப்- 47

'அங்குள கிளைகாவற்கு அமைதியின் உளன் உம்பி
இங்குள கிளைகாவற்கு யாருளர்? இசையாய்நீ'[30]

என்று கூறி, பரதனையும் குகனுக்குத் தம்பியாக்கிவிடுகிறான். 'உன்கிளை எனதன்றோ? உறுதுயர் உறலாமோ?' என்று குகனுடைய மரபினரையும் தன் உறவினராகக் கொண்டு-விடுகின்றான். இங்ஙனம் 'காட்சிக் கெளியனாக' வுள்ள இராமனது அருங் குணத்தை வெளிப்படுத்த குகன் வாய்ப்பு அளிக்கின்றான்.

சேனையுடன் வரும் பரதனைக் கண்டபோது குகனுக்கு வந்த சீற்றம் அவன் இராமன்பால் வைத்துள்ள பேரன்பைக் காட்டும் அளவுகோலாக உதவுகின்றது. இந் நிலையை வர்ணிக்கும் பல பாடல்கள் படித்துப் படித்து இன்புறத்தக்கவை. இலக்குவன் மூலம் இராமன் கானுள நிலமகளைக் கைவிட்டு வந்த செய்தியைக் கேட்டவனாதலால் பரதனைப்-பற்றித் தவறாக அறிந்திருக்கின்றான் குகன். பரதன் தன் தாயின் மூலம் தந்திரமாக இராச்சியத்தைக் கவர்ந்து கொண்டு இராமனைக் காட்டிற்கு ஓட்டியவன், அவ்வளவுடன் மன நிறைவு அடையாமல் இங்குக் காட்டிற்கும் சேனையுடன் தீங்கு புரிய வந்துள்ளான் என்று அவன் அன்புள்ளம் எண்ணு-கின்றது. ஆகவே, தன் இனத்தாரை நோக்கி,

'அஞ்சன வண்ணன் என்
ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனை யால்அர(சு) எய்திய
மன்னரும் வந்தாரே'[31]

என்று கூறுகின்றான். அப்பரதனைத் தன் வெஞ்சரத்தால் வீழ்த்தாவிட்டால் உலகம் தன்னை உண்மையான இராம பக்தன் என்று எண்ணாது என்பது அவன் அச்சமயம் கொண்-

30. கங்கைப் - 76
31. குகப் - 14

டுள்ள கொள்கை. தன் உதவியின்றி எவ்வாறு பரதன் கங்கையைக் கடக்க முடியும் என்று வீராப்புக் கொள்ளுகின்ருன். 'தோழமை என்றவர் சொல்லிய சொல்லுக்கு' 'ஏழமை வேடன்' பரதனை எதிர்த்து இறப்பதே சமம் என்று அவனது உண்மை உள்ளம் எண்ணுகின்றது.

அண்ணன் என்பதையும் எண்ணுது மொய்ம்புலியையொத்த தம்பி ஒருவன் அந்த அண்ணனைக் காத்து நிற்கின்ருன் என்பதையும் சிந்திக்காது வந்துள்ள பரதன் தன்னை ஏன் இகழ்ச்சியாக நினைத்தான் என்று எண்ணிப் பார்க்கும் குகன் இந்த எல்லையைப் பரதன் எவ்வாறு கடப்பான் என்றும் எண்ணுகின்ருன். தன் இனத்தவரை நோக்கி,

'ஆடு கொடிப்படை சாடி அறத்தவ ரேயாள
வேடுகொடுத்தது பாரெனும் இப்புகழ் மேவீரோ?
நாடுகொடுத்தஎன் நாயக னுக்குஇவர் நாம்ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகிஎடுத்தது காணீரோ?[32]

என்று பேசுகின்ருன். குகனுடைய இவ்வுரைகள் இராமன் எவ்வாறு அவன் உள்ளத்தைக் கவர்ந்துள்ளன என்பதை அறியத் துணை செய்கின்றன.

மூன்ருவது: தள்ளரிய பெருநீதித் தனியாறு புக மண்டும், பள்ளமெனும் தகையானுடைய'[33] குணங்களை நாம் அறிவதற்கும் இக் குகன் வாய்ப்புக்களை அளிக்கின்ருன். சுமந்திரன் பரதனிடம் 'உங்கள்குலத் தனி நாதற்கு உயிர்த் துணைவன்' என்று குகனைக் குறிப்பிட்டவுடனே கரை காணுக் காதலுடன்,

---

32. குகப்-22
33. பாலகா. குலமுறை - 21

'மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவ-
னேல்
என்முன்னே அவற்காண்பேன் யானேசென்று'[34]

என்று எழுந்து குகனைச் சந்திக்கச் செல்லுகின்றான், பரதனின் திருமேனியைக் காணும் குகன் திடுக்கிடுகின்றான்.

'வற்கலையின் உடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகைஇழந்த முகத்-
தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக்'[35]

கண்ணுற்றதும் அவன் கையில் பிடித்திருந்த வில் கீழே நழுவி விழுகின்றது; தானும் விம்மி நிற்கின்றான். நம்பி தன் நாயகனை ஒத்திருத்தலும், அயல் நிற்கும் தம்பி இலக்குவனை ஒத்திருத்தலும், அவன் தவ வேடம் தாங்கி நிற்றலும், அவன் இராமன் சென்ற திசை நோக்கித் தொழுதலும் குகன் மனத்தைத் திறந்துவிடுகின்றன.

'எம்பெருமான் பின் பிறந்தார்
இழைப்பரோ பிழைப்பு?'[36]

என்று வாய்விட்டும் கூறிவிடுகின்றான். உடனே குகன் தென் கரையிலிருந்து வட கரையிலிருக்கும் பரதனைக் காணுவதற்கு ஒரு நாவாயில் தனியே வருகின்றான்.

காட்டரசனும் நாட்டரசனும் ஒருவரை யொருவர் தழுவு-கின்றனர். குகன் பரதனை வந்த காரணம் என்ன என்று வினவ அவன்,

'முழுதுலக களித்த தந்தை
முந்தையோர் முறையி னின்றும்

34. குகப் - 27
35. குகப் - 29
36. குகப் - 30

வழுவினன்; அதனை நீக்கி
மன்னனைக் கொணர்வான் வந்தேன்'[37]

என்று கூறுகின்றான். அதனைக் கேட்ட குகன் உவகை பொங்க விம்முகின்றான்; உடனே பரதனுடைய கால்களில் விழுந்து பின்வருமாறு பேசுகின்றான் :

'தாயுரை கொண்டு தாதை
உதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச்
சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து
புகழினோய்! தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ்
ஆவரோ தெரியின் அம்மா!'[38]

[தரணி-பூமி; கேழ்-ஒப்பு]

இராமன் எங்கு படுத்திருந்தான், இலக்குவன் இரவை எவ்வாறு கழித்தான் என்று வினவிய பரதனிடம் குகன் அவ் விஷயங்களைக் கூறியதும் பரதன்,

'...யானென்றும் முடிவி லாத
துன்பத்துக்கு ஏது வானேன்;
அவன் அது துடைக்க நின்றான்'[39]

என்று இலக்குவனுடைய தியாகத்தைப் பாராட்டுகின்றான். பின்னர் பரதன் முதலியோர் ஓடத்தில் செல்லும்போது குகன் வேண்ட பரதன் தன் தாயரை அவனுக்கு அறிமுகம் செய்யும் போது பரதனுடைய அருங்குணங்களும் கோசலையின் தாயன்பும் வெளிப்படுகின்றன.

37. குகப்-33
38. ,, - 35
39. ,, - 43

இராமனுடைய அருங்குணங்கள் மலர்வதற்குக் கைகேயி-யினுல் போடப்பட்ட இருவரங்களாகிய விதைகள் முளைத்து வளர்கையில் சுமந்திரன், குகன் ஆகிய இருவரும் புதிய குணங்களாகிய தளிர்கள் வெளிவருவதற்குத் துணை புரிகின்-றனர். அயோத்தியிலிருந்து சித்திரகூடம் வருவதற்குள் இராமன் உலகம் பாராட்டும் உத்தமனுகத் திகழ்கின்முன். தந்தை யோசிக்காது கைகேயிக்குக் கொடுத்த இரு வரங்-களையும் அவள் திட்டமாகக் கேட்கும்போது இராமனுடைய தியாக ஒளி வீசத் தொடங்குகின்றது. அந்த ஒளியை மிகுதிப்படுத்த கங்கை வேடன் பின்னணியாக இருந்து துணை புரிகின்முன்.

5

சூர்ப்பணகை *

இராமாயணத்தில் வரும் பாத்திரங்களில் சூர்ப்பணகையையும் ஒரு சிறு பாத்திரமாகக் கொள்ளலாம்; காவியப் பரப்பில் இவள் வரும் இடங்கள் ஒன்றிரண்டே. செய்யும் செயல்களும் மிகச் சிலவே. என்றாலும் இவள் காரணமாகத்தான் இராமன் சீதையை இழக்க நேரிடுகின்றது; பஞ்சவடியில் பர்ணசாலையில் இருந்த சீதைஅச்சாலையுடன் தூக்கிச் செல்லப்பட்டு, இலங்கையில் அசோக வனத்தில் சிறை வைக்கப்படுகின்றாள். இவள் வைத்த 'வர்த்தியால்'தான் அரக்கர் குலமே அடியோடு அழிகின்றது. வறுமை, பசி, காமம் முதலியவற்றைக் கவிஞர்கள் நோயாக உருவகித்துக் கூறுவது இலக்கிய மரபு. இவள் காமத்தை ஒரு தொத்து நோயாகச் (Infectious disease) செய்த கொடியவள். தான் இராமன்மீது கொண்ட காமத்தைத் தன் அண்ணனைச் சீதைமீது கொள்ளும்படி செய்விக்கின்றாள். ஒரு பெண்ணைப் பார்க்காமலேயே அவள்மீது ஓர் ஆண் மகன் காமவெறி கொள்ளும் அதிசயத்தை நாம் இராவணனிடம் தான் காண்கின்றோம். இந்தக் கருத்தைத்தான் கம்பன் வேறுவிதமாக நமக்குக் காட்டுகின்றான். இராவணன் இறந்த பிறகு அவனைக் குறித்துப் புலம்பும் வீடணன்,

---

* குமரிமலரில் (பிப்ரவரி - 1954) வெளிவந்தது.

'உண்ணுநே உயிர்உண்ணு(து) ஒருநஞ்சு
சனகியெனும் பெருநஞ் சுண்ணைக்
கண்ணுலே நோக்கவே போக்கியதே
உயிர்நீயும் களப்பட் டாயே'

என்று கதறுகின்ருன். 'நஞ்சை உண்டால்தான் அஃது உண்பவர்களைக் கொல்லும்; சீதையாகிய நஞ்சை நீ கண்ணுலே பார்த்தவுடனேயே அது உனது உயிரைப்போக்கிவிட்டதே!' என்று கூறிப் புலம்புகின்ருன். அது நிற்க.

சூர்ப்பணகை என்ற சொல்லுக்கு முறம்போன்ற வடிவமுடைய நகமுள்ளவள் என்பது பொருள். இவள் இராவணனுடைய தங்கை. புலஸ்திய முனிவனுடைய குமாரனுன விசிரவசினது இரண்டாம் மனைவியாகிய கேகசியின் வயிற்றில் இராவணன் கும்பகர்ணர்களுக்குப் பின் பிறந்தவள். இவளுக்குப்பின் பிறந்தவன் வீடணன். இதைக் கும்பகர்ணன் வாய்மொழியாகவும், பெய் தவத்திஞேர் பெண்கொடி யெம்முடன் பிறந்தாள்' என்று அறிகின்ரேம். ஒரே தங்கையான இவள் மீது இராவணன் மிக அன்பு காட்டிஞன். 'மருந்தனைய தங்கை'யாகப் பாவித்து வந்தான். இவளை அவன் காலகை என்பவளுடைய மக்களாகிய காலக்கேயருள் ஒருவனுன வித்யுத் சிகுவன் என்பானுக்கு மணம்செய்து கொடுத்தான். பின்னுல் இராவணன் 'திக்குவிசயம்' செய்த காலத்தில் அசும நகரில் புகுந்து காலக்கேயருடன் அமர் விளைவித்த போது வித்யுத் சிகுவனும் கொல்லப்பட்டான். கணவனை இழந்த சூர்ப்பணகை இராவணன் காலில் விழுந்து பலவாறு முறையிட, இராவணன் அவளுக்கு மிகவும் சமாதானம் கூறி அவளது சீற்றத்தைத் தணித்தான். பிறகு தண்டகாரண்யத்தில் ஜனஸ்தான மென்ற இடத்தில் ஓர் இராச்சியமுண்டாக்கி அதில் அவளை மேன்மையோடிருக்க வைத்தான். கரதூடணர்களை அறுபதினுயிரம் இராக்கதர்களைக்

1. யுத்த. இராவணன்வதை 220

கொண்ட ஒரு சேனையுடன் அவளுக்குக் காவலாகவும் வைத்-தான். 'அந்த இராச்சியத்தில் அவள் விருப்பப்படி திரியலாம்; கருதும் இன்பங்களை யெல்லாம் நுகரலாம். கரன் அவள் இடும் கட்டளைகளை யெல்லாம் நிறைவேற்றி வைத்தான்.

இராவணனது குடும்பத்தில் இவளைத்தான் முதன் முத-லாகச் சந்திக்கின்றோம். காவியத்தின் தலைவனான இராமனுக்கு நிகராக வைத்தெண்ணக்கூடிய இராவணனுடைய குடும்பத்-திற்கே ஒரு 'கோடறிக் காம்புபோல்' முளைத்தவள். உடன் பிறந்தே கொல்லும் வியாதி போன்றவள். இவளை முதன் முதலாகக் கம்பன் நமக்கு,

'நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கு மொய்ம்பினள்
மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்விளை
காலமோர்ந்(து) உடன்உறை கடிய நோயனாள்'[2]

[நிருதர் வேந்தன் - இராவணன்; மூலநாசம் பெற - வேரோடு அழியும்படி; மொய்ம்பினள் - வலிமையையுடையவள்; மேலைநாள்-பிறந்தபொழுதே; தான்விளை காலம் ஓர்ந்து-தான் பயன் விளைவிக்கும் காலத்தை எதிர்பார்த்து; உடன் உறை-உந்த உயிருடன் தங்கும்.]

என்று அறிமுகம் செய்து வைக்கின்றான். பின்னால் நடக்க விருக்கும் நிகழ்ச்சிகளினால் தன் கிளைக்கே, இறுதி காட்டக் கூடிய குறிப்பெல்லாம் இக் கவியில் உணர்த்தப்பட்டிருப்பது நமக்கு இலக்கிய இன்பத்தை அளிக்கின்றது.

வான்மீகி காட்டும் சூர்ப்பணகைக்கும் கம்பன் மாற்றி யமைத்துப்படைத்துக் காட்டும் சூர்ப்பநணகைக்கும் வேறுபாடு இல்லாமல் இல்லை. இயல்பான நிகழ்ச்சிகளை நாடகப் பண்பு-களுடன் மாற்றியமைத்துக் காட்டுந்திறன், சாதாரண நிகழ்ச்சி-

2. ஆரணி. சூர்ப்பணகை-8

களுக் கெல்லாம் இலக்கியச் சுவையூட்டும் சிறப்பு, படிப்போர் மனத்தைக் களிப்பிப்பதற்காகவும் நாகரிகமாக இருப்பதற்கும் சிலவற்றைக் கூட்டியும் குறைந்தும் செய்துள்ள மாற்றங்கள் கம்பனில் மிக நன்ருக அமைந்திருக்கின்றன என்பதை இரு நூல்களையும் ஒப்பிட்டுப் படிப்பார் அறிவார். வால்மீகி கூறுகிறபடி தற்செயலாக இராமனிடம் சூர்ப்பணகை வருகின்ருள்; தன் காதலை எடுத்துரைக்கின்ருள். அதைக் கேட்ட இராமன் மனைவியின்றி வந்திருக்கும் தம்பியிடம் சென்று தெரிவிக்கும்படியாகக் கூறுகின்ருன். அவளும் அங்ஙனமே சென்று உரைக்க, இலக்குவன் தான் அடிமை என்றும் தன் அண்ணனையே சென்றடையும்படியும் ஏவுகின்ருன். மீண்டும் இராமனிடம் வந்த சூர்ப்பணகை சீதையைத் தின்றுவிட்டால் இராமன் தன்னைக் காதலிக்கக்கூடு மென்று கருதி சீதையைத் தூக்க முயல்கின்ருள். உடனே இராமன் கட்டளைப்படி இலக்குவன் சூர்ப்பணகையின் செவி நாசிகளை அரிந்து அவளை வெருட்டி விடுகின்ருன். கம்பன் இவற்றைச் சிறிது மாற்றியிருக்கின்ருன். இராமன் அருகிலுள்ள தடாகத்தில் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருக்கும் போது சீதையைத் தூக்க முயல்கின்ருள்; அவளைத் தின்ன எண்ணவில்லை; மறைத்து வைக்கத்தான் கருதுகின்ருள். 'கனியிரும்பொழில் 'காத்தயலிருந்த' இலக்குவனை அவள் காணவில்லை; உடனே இலக்குவன் அவளுடைய கூந்தலைப் பிடித்துக்கொண்டு 'மூக்கும் காதும் வெம்முரண் முலைக் கண்களும் முறையால்' போக்கி அவளை விட்டுவிடுகின்ருன். இலக்குவனை நாடித் தன் காதலை அவனிடம் எடுத்துரைத்ததாகவே கம்பனில் இல்லை.

வான்மீகத்தில் முதன்முதலாக இராமனைச் சந்திக்கும் சூர்ப்பணகை அவனை யார் என்று வினவுகின்ருள். இராமனும் தன்னைத் தசரதன் முதல் மகன் என்றும் தன்னுடன் வந்துள்ள சீதையை மிதிலையரசன் மகள் என்றும் கூறுகின்ருன். இராமனும் இவளை யார் என்று கேட்கின்ருன். அவளும் தன்னைப்பற்றிக் கூறும்போது தான் ஓர் அரக்கியென்றும்

தன்னுடன் பிறந்தவர்கள் இராவணன், கும்பகர்ணன், வீடணன் என்றும், வீடணன் மிகவும் நல்லவன் என்றும் கூறுகின்றாள். தனக்குப் பாதுகாவலாகக் கர தூடணர்கள் இருக்கின்றனர் என்றும், தானும் பலமுள்ளவள், வேண்டுமிடத்திற்கு எளிதில் செல்லவல்லவள் என்றும் குறிப்பிடுகின்றாள். இத்தகைய திறமையற்ற சீதையால் அவனுக்கு ஒருவித பயனும் இல்லை என்றும் அவள் விகார முற்றவள் என்றும் தெரிவித்து, தன்னை மணந்துகொண்டால் இராமனுக்கு எல்லா நலன்களும் உண்டாகும் என்றும் கூறுகின்றாள். வேண்டுமானால், சீதையையும் இலக்குவனையும் உண்டு இராமனுக்குப் பகையற்ற நிலையை உண்டுபண்ணுவதாகவும் அறிவிக்கின்றாள். கம்பனில் இக்கட்டம் நாடகப் பண்புடனும் கலைத் திறனுடனும் அமைந்திருக்கின்றது. இங்குச் சூர்ப்பணகைதான் தன் வரலாற்றைக் கூறுகின்றாள். கும்பகர்ணன், வீடணன், ஆகியவர்களைப் பற்றிய பேச்சே இச் சந்தர்ப்பத்தில் இல்லை. இராவணன் பெயரும் அவன் முன்னோர் வரலாறும் கூறப்படுகின்றன; குபேரன் பெயர் வருகின்றது. இலக்குவன் சூர்ப்பணகையை உறுப்புக் குறைத்தல் செய்த பிறகு அவளைச் சந்திக்கும் இராமன் தங்கள் வரலாற்றை ஓரளவு குறிப்பாகக் காட்டி அரக்கர் குலத்தை அழிப்பதற்காகவே தாங்கள் வந்துள்ளதையும் கூறுகின்றான். இங்கு இலக்குவன் இராமன் ஆணையின்றியே சூர்ப்பணகைக்குத் தண்டனை தருகின்றான். இரண்டிலும் உறுப்புக் குறைத்தல் தண்டனை செய்யும் சந்தர்ப்பங்கள் மாறி இருக்கின்றன.

இலக்குவன் கொடுத்த 'சத்திர சிகிச்சை' யைப் பெற்ற பிறகு சூர்ப்பணகை இராமனைச் சந்தித்து மீண்டும் தன் விருப்பத்தை உரைத்ததாக வான்மீகி கூறவில்லை. கம்பனில் இப் பகுதி மிகச் சுவையாக அமைந்திருக்கின்றது. இலக்குவன் தன்னை அங்கபங்கம் செய்ததற்கு, சூர்ப்பணகை கற்பித்துக் கூறும் காரணங்கள் அவள் இராமன்மீது கொண்டுள்ள

காதலின் உச்சநிலையைக் காட்டுகின்றன. உறுப்புகளை இழந்த சூர்ப்பணகை புலம்பியதாக வான்மீகத்தில் இல்லை. கம்பன் அவள் புலம்பியதைப் பல பாடல்களால் தெரிவிக்கின்றான். கரன் முதலியோரின் வதத்திற்குப் பிறகு இராவணன் சீதை-யைப்பற்றி அகம்பனன் என்ற ஒற்றன் மூலம் முதலிலும், சூர்ப்பணகை மூலம் இரண்டாவதாகவும் அறிந்து கொண்ட-தாக வான்மீகி கூற, கம்பன் சூர்ப்பணகை மூலந்தான் சீதையைப் பற்றி இராவணன் தெரிந்து கொண்டதாகக் கூறுகின்றான். அகம்பனனைப் பற்றிய செய்தியே கம்பன் கூறவில்லை சீதையை நினைந்து நினைந்து ஏங்கியதாக வான்-மீகத்தில் இல்லை. ஆனால் கம்பன் இப் பகுதியை நன்கு வருணித்துள்ளான். உருவெளித் தோற்றத்தைச் சீதை என்று நினைத்து அதன்மீது கொள்ளும் காதல் கம்பனில் மிக நன்றாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

சூர்ப்பணகையின் படைப்பு கம்பனில் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது என்றுதான் சொல்லவேண்டும். ஒரு நாடக அரங்கில் நடிகனைகத் தோன்றுவதற்கு முன்னர் அலங்கார அறையில் (green room) தயார் செய்து கொள்ள வேண்டும். திடீரென்று அரங்கினுள் பாத்திரம் நுழைவது, காண்போர் கண்ணுக்கு அழகாக இருப்பதுடன் அவருடைய மனத்திற்கும் எதிர்பாராத வண்ணம் இருக்கும். இத்தகைய முறையில்தான் சூர்ப்பணகையைக் கம்பன் படைத்திருக்கின்றான். பஞ்சவடியி-லுள்ள இராமன் முதலியோருக்கு. சூர்ப்பணகையைப்பற்றி ஒரு தகவலும் தெரியாது. "நீலமா மணிநிற நிருதர் வேந்தனை" என்று தொடங்கும் பாடலிலிருந்து சூர்ப்பணகையின் தன்மை-யைப் பற்றி நமக்குக் கம்பன் அறிவிக்கின்றான். இவள் இராமன் இருந்த காட்டில் நாள்தோறும் அலைந்து திரிதல் வழக்கம்; ஒருநாள் இராமன் இருந்த சூழலிடம் வந்து சேர்கின்றாள். இவள்தான் இராமனைக் காண்கின்றாள்; இராமன் இவளைப் பார்க்கவில்லை. சூர்ப்பணகை இராமனைக் கண்டதைக் கம்பன்,

'எண்தகும் இமையவர் அரக்கர் எங்கண்மேல்
விண்டனர் விலக்குதி என்ன மேலைநாள்

அண்டசத்(து) அருந்துயில் துறந்த ஐயனைக்
கண்டனள்; தன்கிளைக்(கு) இறுதி காட்டுவாள்'[3]

[எண்தகு-யாவராலும் நன்கு மதிக்கத் தக்க; இமையவர்-தேவர்; விண்டனர்-பகைத்தனர்; விலக்குதி-அத்துன்பங்களைத் தீர்ப்பாய்; அண்டசம்-அண்டஜம். வடசொல், முட்டையிலிருந்து தோன்றின தென்று உறுப்புப் பொருளாய்ப் பாம்பை உணர்த்திற்று; அண்டசத்து-ஆதிசேடனிடத்து; அருந்துயில் துறந்த ஐயன்-இராமன்.]

என்று கூறுகின்றான். இதில் இராமன் பூவுலகில் வந்து பிறந்த காரணத்தைக் கூறுவதுடன் அந்நோக்கம் நிறைவேறுவதற்குக் கருவியாக வந்துள்ளாள் சூர்ப்பணகை என்பதையும் 'தன்கிளைக்கு இறுதி காட்டுவாள்' என்ற தொடரால் குறிப்பாகப் பெற வைக்கின்றான் கவிஞன்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் 'யாழோர் கூட்டத்தில்' கூறப்படும் காட்சி, ஐயம் போன்ற துறைகளை அமைத்துதான் இக் கட்டத்தைப் படைத்தானோ கம்பன் என்றுகூட எண்ண வேண்டியிருக்கின்றது. அகப் பொருளில் தலைமகனுக்குத் தலைமகளைக் குறித்து ஐயம் நிகழ்தல் சிறப்பு; தலைமகளிடம் ஐயம் நிகழின் அது இழிமரபினைச் சுட்டாநிற்கும். இக்கருத்து,

சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப
இழிந்தது இழிவே சுட்டலான'[4]

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாலும் அதற்கு இளம்பூரணர் கூறும் உரையாலும் அறியப்படும். இங்கு சூர்ப்பணகை இராமனைக் கண்டு அவனைப்பற்றிப் பலவாறாக ஐயப்படுகின்றாள். மன்மதனோ, இந்திரனோ, சிவனோ, திருமாலோ

3. சூர்ப்பணகை - 11
4. களவியல்-94

என்றெல்லாம் இராமனைப்பற்றி எண்ணுகின்றான். இராமன் மீது வேட்கை கொண்டு கலங்கும் சூர்ப்பணகையைக் கம்பன்,

'வான்றனில் வரைந்தோர் மாதர் ஓவியம்
போன்றனள்; புலர்ந்தனள்; புழுங்கு நெஞ்சினள்:
தோன்றல்தன் சுடர்மணித் தோளில் நாட்டங்கள்
ஊன்றினள்; பறிக்கவோர் ஊற்றம் பெற்றிலள்'[5]

வான்றனில் - ஆகாயத்தில்; மாதர் ஓவியம் - பெண்வடிவ மான சித்திரம்; புலர்ந்தனள் – மனம் வாடினாள்; புழுங்கு - மனம் வெதுப்பும்; தோன்றல்தன் – இராமனுடைய; நாட்டங்கள்-கண்கள்; ஊற்றம்-வலிமை.]

என்று நமக்குக் காட்டுகின்றான். இதில் நாம் சூர்ப்பணகையின் மனநிலையைக் காண்கின்றோம். இந்நிலையில் நாடகத்திற்கு அணி செய்யும் அறையில் காணும் பாத்திரத்தைப்போல் நாம் சூர்ப்பணகையைக் காண்கின்றோம். 'எயிறுடை அரக்கி எவ்வுயிரும் இட்டதோர், வயிறுடையாள் என'[6] இராமன் தன்னை மறுக்கக் கூடுமென்று எண்ணிப் பூமகளைச் சிந்தித்து வணங்கி அவள் அருளால் ஓர் அழகிய மங்கையாகக் காட்சி அளிக்கின்றாள்.

'பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா
அங்கையின் ஆயமந் திரத்தை ஆய்ந்தனள்
திங்களிற் சிறந்தொளிர் முகத்தள்; செவ்வியள்;
பொய்கொளி விசும்பினிற் பொலியத் தோன்றினள்'[7]

[பங்கயம்-தாமரை; பங்கயச் செல்வி - இலக்குமி; திங்கள்-சந்திரன்; விசும்பு-ஆகாயம்.]

---

5. சூர்ப்பணகை-27
6. சூர்ப்பணகை-29
7. சூர்ப்பணகை-30

அரங்கினுள் நுழைவதற்கு அணிசெய்து கொண்டு தயாராக இருக்கும் ஒரு நாடக பாத்திரத்தைக் காண்பதுபோல் இவளை நாம் பார்க்கின்றோம்.

இவள் இராமனுக்கு முன்னால் வருதலை நாடக அரங்கினுள் நுழையும் பாத்திரம்போல் காட்டுகின்றான் கம்பன். தேவலோகத்தில் கற்பக மரத்தைச் சார்ந்து அதன்மேற் படரும் காமவல்லி என்ற பூங்கொடி பெண் வடிவுகொண்டு வந்துள்ளதோ என்று ஐயப்படும்படியான தோற்றத்துடனும், நிறைந்த இன்பந்தரும் தன்மையுடனும் நறுமணம் நிறைந்த தேன் போன்ற இனிய சொற்களையும் மிக்க அழகையும் கொண்டு மானின் விழிபெற்று ஒரு மயில் வருவதுபோல் வருகின்றாள். இக்காமவல்லி,

> 'கானின் உயர் கற்பகம் உயிர்த்த கதிர்வல்லி
> மேனிநனி பெற்றுவிளை காமநிறை வாசத்
> தேனின்மொழி உற்(று)இனிய செவ்விநனி கொண்(டு)ஓர்
> மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்.[8]

[கானின்உயர் - நறுமணத்தினால் சிறந்த; உயிர்த்த - பெறப்பட்ட; கதிர்வல்லி-ஒளியுள்ள ஒரு பூங்கொடி; மேனி - உடல்; நனிபெற்று - நன்றாக அவையப்பெற்று; விளைகாமம் நிறை-மேன்மேல் வளரும் காம ஒழுக்கம் நிறைந்து; மொழி- சொற்கள்; உற்று-அடைந்து; செவ்வி - அழகு; ஒரு மானின் விழி-ஒப்பற்ற மான் போன்ற பார்வை.]

என்பது கம்பன் காட்டும் காட்சி. மானசீகமாக நாம் ஒரு நாடக பாத்திரத்தைப் பார்க்கின்றோம்.

இளமையிலேயே கணவனைத் துறந்தவளாதலாலும், ஜனஸ்தானமென்னும் இடத்திலிருந்து கொண்டு விருப்பப்படி திரிந்து இன்பம் அநுபவித்து வந்தவளாதலாலும், இராமனைக் கண்டவுடன் அவன்மீது மோகங்கொள்ளுகின்றாள்.

---

8. சூர்ப்பணகை-33

வயதில் மூத்துக் கிழத்தன்மை தட்டும் நிலையிலிருந்தாலும், இளமை துளிர்க்கும் இராமனை அடைந்து இன்பந்துய்க்க நினைக்கின்றாள். இவளுடைய காமவெறியை நான்கு இடங்களில் பார்க்கின்றோம்.

முதலாவது : சூர்ப்பணகை இராமனைச் சந்தித்துப் பேசிய போது அவனை, 'ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு?' என்று வினவ, அவள் தன் குலப்பெருமையைக் கூறிக் குறிப்பாகத் தான் 'கன்னி' என்றும் பொய்யாகப் புலப்படுத்துகின்றாள். அவள் தனியாக வருவதற்குக் காரணம் என்ன என்று மீண்டும் வினவிய போது, 'இறைவ! ஈண்டு ஓர், காரியம் உண்மைக் காணிய வந்தேன்' என்று கூறுகின்றாள். பின்னர்க் காரியத்தைக் கூறும்படி கேட்டபோது, சிறிதும் நாணமின்றி,

'காமன் என்(று) ஒருவன் செய்யும்
வன்மையைக் காத்தி'[9]

என்று வேண்டுகின்றாள். குலமகளிர் தமது காமத்தின் தன்மையை உரையார் என்ற பீடிகையுடன் இதைக் கூறியவள் தான் எவ்வகையிலும் குலமகளிரைச் சேர்ந்தவள் அல்லள் என்பதைப் புலப்படுத்தி விடுகின்றாள். இராமனும் அவள் 'நாணிலள்; நொய்யள்; நல்லளும் அல்லள்' என்று துணிகின்றான்.

இரண்டாவது : சூர்ப்பணகையுடன் அதிகமாகச் சொல்லாடுதல் தவறு என்று கருதி இராமன் 'மின்னொடு நடந்து செல்லும் மேகம்போல் மிதிலை வேந்தன் பொன்னொடு' பூம் பொழில் சாலைக்குள் போய்விடுகின்றான். சூர்ப்பணகை இராமனை நினைந்து நினைந்து விரகதாபத்தால் பலவாறு வருந்துகின்றாள். இதனைக் கவிஞன்.

'தாடகைக்கொடி யாள்தட மார்பிடை
ஆடவர்க்கரசன்னயில் அம்புபோல்

9. சூர்ப்பணகை-45

'பாட வத்தொழின் மன்மதன் பாய்கணை
ஓட வுட்கி உயிர்உளைந் தாளரோ'[10]

[தடமார்பு பெரிய மார்பு; ஆடவர்க்கு அரசன்-இராமன்; அயில் அம்புபோல்-கூர்மையான அம்புபோல்; பாடவம்-தொழில்; சாமர்த்தியமாகச் செய்யும் தொழில். உட்கி-அஞ்சி; உளைந்தாள்-வருந்தினள் (அரோ-அசை).]

என்று காட்டுகின்றான். இந்த இடத்திலுள்ள பல பாக்கள் அவள் கொண்ட காம நோயைப் பலவாறு வருணிக்கின்றன. அவளுடைய பல செயல்களைக் கண்ட கவிஞனும் அவள்-மேல் இரக்கப்படுபவன்போல்,

'மோகத்துக்கோர் முடிவும் உண்டாங்கொலோ'[11] என்று கூறுகின்றான்.

மூன்றாவது : இலக்குவனால் 'மூக்கும் காதும் வெம்முரண் முலைக் கண்களும்' முறையாகப் போக்கப்பட்ட பின்னர்க் கூட அவளுக்கு இராமன்மீது கொண்ட காமவெறி தணியவில்லை. இலக்குவன் கொடுத்த 'சத்திர சிகிச்சை'யைத் தாங்க மாட்டாது பலவாறு புலம்பிக் கொண்டிருக்கும் சூர்ப்பணகையின் முன் "நிறைதவத்தின் குறை முடித்து" மரகதமலை போல் வருகின்றான் இராமன். அப்போதும் இராமன் தன்னை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற குறிப்பினால் பேசுகின்றாள். 'நில்லாமல் ஓடிப்போ' என்று இராமன் அவளை வெருட்டிய பிறகும் அவள் போகாது பலவாறாகப் பிதற்றுகின்றாள். தவிர, கரனிடம் முறையிட்டபோது,

'இருவர் மானிடர் தாபதர் ஏந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன் மேனியர்[12]'

என்று இராமலட்சுமணரை வருணிப்பதிலிருந்தும், இரா-வணனிடம் அவர்களைக் குறிப்பிடும் போது,

---

10. சூர்ப்பணகை - 73
11. சூர்ப்பணகை-84
12. கான்வதை - 4

'மாரருள ரேயிருவ ரோகுலகின் வாழ்வார்
வீரருள ரேயவரின் வில்லதனின் வல்லார்
ஆரொருவ ரன்னவரை யொப்பவர்க ளையா
ஓரொருவ ரேயிறைவர் மூவரையும் ஒப்பார்'[13]

என்று கூறுவதிலிருந்தும், சூர்ப்பணகை அங்கபங்கம் அடைந்த பிறகும் அவர்கள் மேல் வைராக்கியம் கொள்ளாமல் வேட்கை மிகுந்திருந்தாள் என்பது பெறப்படுகின்றது.

நான்காவது: சீதையைப் பற்றித் தன் தங்கை மூலம் கேள்விப்பட்டவுடனே அச்சீதைமீது காமவெறிகொண்ட இராவணன் மிகவும் வேதனையடைந்து தன் மாளிகையை விட்டு ஒரு சோலையை அடைகின்றான். அங்கும் காமவசிதை யால் அவதிப்படுகின்றான். ஒரு நிலையில் தன் தங்கையை வரவழைத்து தான் உருவெளித் தோற்றத்தில் காணும் பெண்ணைக்காட்டி

...நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயில் நின்றென
வந்தென் முன்னர்
இந்நின்றவள் ஆங்கொல் இயம்பிய
சீதை?[14]

என்று கேட்கும்போது அவள் கூறும் விடையிலிருந்து அவளுடைய காமவெறி வெளியாகின்றது; இராவணனைப் போலவே அவளும் இராமனை உருவெளித் தோற்றத்தில் காண்பதால் அவள் விடை,

'செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயினோடும்
சந்தார்தடந் தோளொடும் தாள்தடக் கைகளோடும்
அந்தார் அகலத் தோடும் அஞ்சனக் குன்று மென்ன
வந்தான் இவன் ஆகும்அவ் வல்வில் இராமன்.. ...'[15]

13. மாரீசன் வதை-56
14. மாரீசன் வதை-148
15. மாரீசன் வதை-149

[சந்து ஆர்-அழகு நிறைந்த; அம்தார்-அழகியமாலை; அகலம்-மார்பு; அஞ்சனம்-மை.]

என்று வெளிப்படுகின்றது.

சூர்ப்பணகை இராமனை முதன்முதலாகச் சந்தித்து உரையாடிக் கொண்டிருக்கும்போது கடிகமழ் சாலையினின்று,

'பெண்ணிடை அரசி தேவர்
பெற்றநல் வரத்தால் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த
வஞ்சியே போவாள்'[16]

வருகின்றாள். அவளைக் கண்ட சூர்ப்பணகைக்கு ஐயம் தோன்றுகின்றது. இராமன் மனைவியைக் காட்டிற்குக் கொண்டு வந்திரான் என்று துணிகின்றாள். சீதையின் அழகு அவளைத் திகைக்கும்படி செய்கின்றது; அப்படியே சொக்கிப் போகின்றாள். அவளை நெடுநேரம் பார்த்தபடியே இருந்தவள்,

'கண்பிற பொருளில் செல்லா; கருத்தெனின் அஃதே; கண்ட
பெண்பிறந் தேனுக் கென்றால் என்படும் பிறருக்கு?'[17]

என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்ளுகிறாள். அவளை எப்படியாவது விரட்டி விட்டால்தான் தன் கருத்து நிறைவேறும் என்று அவள் நெஞ்சம் துணிகின்றது. உடனே இராமனைப் பார்த்து,

'வரும்இவள் மாயம் வல்லள்;
வஞ்சனை அரக்கி; நெஞ்சம்
தெரிவுஇலள்; தேறும் தன்மை
சீரியோய்! செயலிற் றன்றால்

16. சூர்ப்பணகை-57
17. சூர்ப்பணகை-60

உருவமும் மெய்ய தன்றால்;
ஊன்நுகர் வாழ்க்கை யாளை
வெருவினென் எய்தி டாமல்
விலக்குதி வீர'[18]

[தெரிவு இலள்; அறிதற்குக் கூடாதவள்; தேறும் தன்மை-நல்லவள் என்று தெளிதல்; செயலிற்று அன்று-செய்யத் தக்க தல்ல; மெய்யது-உண்மையானது; ஊன்நுகர் வாழ்க்கையாள்-தசையை உண்டு வாழ்பவள்; வெருவினென் - அஞ்சினேன்] என்று கூறுகின்றாள். அப்போது சீதை இராமன் அருகில் வந்து விடுகின்றாள். அவள் இராமனை நெருங்கும் போது, 'காயெரி யனைய கள்ள வுள்ளத்தாளாகிய சூர்ப்பணகை',

'நீயிடை வந்த தென்னை? நிருதர் தம் பாவை!'[19]

என்று அவளை அதட்டுகின்றாள்.

'வளையெயிற் றவர்க ளோடுவரும் விளை
யாட்டென்றாலும்
விளைவன தீமை யேயாம்'[20]

என்பதை உணர்கின்றான் இராமன். உடனே சூர்ப்பணகையை நோக்கி,

'உளைவன இயற்றேல்; ஒல்லை
உன்நிலை உணரு மாயின்
இளையவன் முனியும் நங்கை
ஏகுதி விரைவின்'[21]

[உளைவன-துன்பம் தரும் செயல்கள்; ஒல்லை-விரைவில் (உடனே) இளையவன்-தம்பி; முனியும்-கோபிப்பான்]

---

18 சூர்ப்பணகை-63
19 சூர்ப்பணகை - 65
20. சூர்ப்பணகை - 67
21. சூர்ப்பணகை - 67

என்று கூறி, அவள் மேலுங் கூறுவதைக் கேளாது சீதை யுடன் பர்ணசாலைக்குப் போய் விடுகின்ருன் இராமன்.

சககிழத்திப் (சக்களத்தி) போராட்டம் தொடங்குகின்றது; அண்டையிலிருப்பவளை அகற்றிஞல்தான் தன் கருத்து நிறை-வேறும் என்று எண்ணி, சீதையைத் தூக்கிச் சென்று மறைக்கத் திட்டமிடுகின்ருள் சூர்ப்பணகை. மறு நாள் காலையில் இராமன் அருகிலிருந்த ஒரு தடாகத்தில் சந்தியா வந்தனம் செய்து கொண்டிருக்கும் போது, சீதையைத் தூக்கத் தீர்மானிக்கின்ருள். 'கந்தம் நோக்கிய சோலையிலிருந்து கொண்டு இந்து நோக்கிய நுதலியைக்' காத்து நிற்கும் இலக்குவன் அவள் கண்ணில் படவில்லை. சீதையைத் தூக்க நெருங்கும்போது இலக்குவன் 'நில்லடீ!' என்று கூறிக் கொண்டு விரைந்து அங்கு வந்து விடுகின்ருன். அவளுடைய கூந்தலைத் திருகுறப் பற்றிக் கொண்டு அவளுடைய வயிற்றில் காலால் உதைக்கின்ருன். உடனே இலக்குவனைத் தூக்கிக் கொண்டு வான்வழியாகச் செல்ல எண்ணி அதைத் தொடங்கும் போது இலக்குவன் உடைவாளை உருவி, 'இத்தகைய கொடுந் தொழிலை இனி செய்யற்க' என்று கூறிக் கொண்டே,

> 'மூக்கும் காதும்வெம் முரண் முலைக் கண்களும் முறையால்
> போக்கிப் போக்கியசினத்தொடும்புரிகுழல் விட்டான்'[22]

[முறையால்-ஒன்றன் பின் ஒன்ருக; போக்கி—அறுத்து; போக்கிய சினத்தொடும்—தணிந்த கோபத்துடனே; புரி குழல்-சுற்றிப் பிடித்த தலைமயிர்.]

சூர்ப்பணகை சீதையைச் சககிழத்தியாகவே கொண்டாள் என்பது அவள் வாயிலிருந்தே வெளிப்படுகின்றது. பின்னல் இலக்குவன் சூர்ப்பணகையைத்தான் அங்கபங்கம் செய்த தற்குரிய காரணத்தை இராமனிடம் கூறும்போது சூர்ப்பணகை

22. சூர்ப்பணகை - 94

'மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம்?'[23]

என்று கூறுகின்றாள்.

அங்கபங்கம் செய்த பிறகும் இராமனிடம் வந்து தன்னை ஏற்கும்படி வேண்டுகின்றாள் சூர்ப்பணகை. இராமன் தான் அரக்கர் குலத்தைக் கருவறுக்கவே கான் புகுந்திருப்பதாகக் கூற, அதனைக் கேட்ட சூர்ப்பணகை 'பாம்பறியும் பாம்பின் கால்' என்ற பழமொழிப்படி தான் அரக்கர்களின் மாயங்களை அறியவல்லவள் என்றும், தன்னை மணந்து கொண்டால் இராமனுடைய குறிக்கோளை முற்றுவிக்க எளிதாகும் என்றும் கூறி, பின்னும் தன்னை ஏற்கவேண்டும் என்று வற்புறுத்துகின்றாள். இலக்குவன் இராமனிடம் இவளை உடனே கொல்லாவிடின் தமக்குப் பல விதமான துன்பங்கள் வரும் என்று குறிப்பிக்க, இராமன் அதற்கு ஒப்புதல் தருகின்றான். இவர்களுடைய உரையாடல்களைக் கேட்ட சூர்ப்பணகை உண்மையில் தான் அங்கபங்கப்பட்ட பிறகு அவர்களை அடைய விரும்பவில்லையென்றும் அவர்கள் இயல்பை அறிவதற்காகவே அங்ஙனம் வஞ்சனையாக வேண்டியதாகவும் கூறி,

'காற்றினும் கனலினும் கடியானைக்
கொடியானைக் கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்
என்றுசலங் கொண்டு'[24]

[கனல்-நெருப்பு; கூற்றுவன்-யமன்; சலங் கொண்டு-தணியாத முற்றின வைரங் கொண்டு.]

போகின்றாள். அங்குச்சென்று தான் இலங்கையர் கோனின் பொருட்டு அழகான நங்கையைக் கவர முயற்சி செய்த பொழுது இராமலட்சுமணரால் இங்ஙனம் நேர்ந்தது என்று

23. சூர்ப்பணகை - 122
24. " - 143

கூறுகின்ருள். கரன் அறுபது லட்சம் படைவீரர்களுடனும் சேனைத் தலைவர் பதினல்வரோடும் தூடணன் திரிசிரா என்னும் முக்கிய சேனாதிபதிகளோடும் இராம லட்சுமணர்களை எதிர்த்துக் கொண்டோடு மடிகின்ருன். இந் நிகழ்ச்சியையும் மேல் நடக்கப் போகும் நிகழ்ச்சிகளையும் எண்ணியே கவிஞன், 'தன் கிளைக்கு இறுதி காட்டுவாள்' என்று குறிப்பிடுகின்ருன்.

கரன் பட்டொழிந்தது கண்ட சூர்ப்பணகை தனது கைகளால் வயிற்றில் புடைத்துக் கொண்டு அவன்மீது வீழ்ந்து புரள்கின்ருள்.

'ஆக்கி னேன்மனத் தாசை;அவ் வாசையென்
ழூக்கி ஞேடு முடிய முடிந்திலேன;
வாக்கினல் உங்கள் வாழ்வையும் நாளையும்
போக்கி னேன்கொடி யேன்'[25]

[ஆக்கினேன்-விளைத்தேன்; ஆசை-காதல்; முடிந்திலேன்-இறந்து படவில்லை; வாக்கு-வாய்மொழி; வாழ்வு-வாழ்க்கை; நாளையும்-ஆயுளையும்; போக்கினேன்-ஒழித்தேன்.]

என்று சொல்லிக் கொண்டு இலங்கைமாநகர் எய்துகின்ருள். 'நீலமா மணிநிற நிருதர் வேந்தனை, மூலநாசம்பெற முடிக்கும் மொய்ம்பினுள்' என்று முன்னர்க் கூறிய கவிஞன் இங்கு,

'அலங்கல் வேற்கை அரக்கரை ஆசறக்
குலங்கள் வேரறுப் பான்குறித் தாள்'[26],

[அலங்கல்-வெற்றிமாலை; வேற்கை-வேற்படை ஏந்தியகை; ஆசுஅற-அடியோடு ஒழியுமாறு.]

என்று பின்னும் கூறுவது சூர்ப்பணகையின் 'உடன் பிறந்தே கொல்லும்வியாதி' போன்றதன்மையை மீண்டும் வற்புறுத்து.

25. கரன்வதை - 191
26. மாரிசன்வதை - 191

வதற்காகவே என்று கருதுதல் வேண்டும். என்ன சஞ்சலத்தை மனத்தில் வைத்துக் கொண்டு இவ்வாறு குலத்தை அழிக்க நினைத்தாளோ தெரியவில்லை. உள நூல் கருத்துப்படி ஏதாவது ஒன்றின் மேல் வைத்துள்ள விருப்புணர்ச்சி தடைபடுமானால் இவ்வித விபரீதங்கள் ஏற்படக் கூடும். அந்த விருப்பப் பொருள்தான் என்ன என்பதைப் பின்னர்க் காண்போம்.

இராவணனிடம் சென்று முறையிட்டபோது அவன்,

'நீயிடை இழைத்த குற்றம்
என்னைகொல் நின்னை இன்னே
வாயிடை இதழும் மூக்கும்
வலிந்(து)அவர் கொய்ய?'[27]

என்று கேட்கின்றான். அதற்கு அவள், தான் 'இழைத்த குற்றத்தைச்' சொல்லுவதிலேயே சீதையைப் பற்றி நன்கு வருணித்து இறுதியில்,

'அன்னவள் தன்னை உன்பால்
உய்ப்பலென்(று) அணுக லுற்ற
என்னையவ் இராமன் தம்பி
இடைபுகுந்(து) இலங்கு வாளால்
முன்னைமூக் கரிந்து விட்டான்'[28]

என்று சொல்லுகின்றாள். போர்க்காலத்தில் மரக்கரியால் இயங்கின மோட்டார் வண்டிகளை இயக்குவதற்கு விசிறியைச் சுற்றுவது போலும் எண்ணெய்ப் பொறிகளை (Oil-engines) ஸ்டவ் (Stove) வைத்துச் சூடாக்கி இயக்கவைப்பது போலும் சூர்ப்பணகை சீதையைப் பற்றி இராவணனிடம் கூறி அவனுக்குக் காமபோதையை ஏற்றி அவனைக் கிளப்பிவிடுகின்றாள். இராவணனும்,

'கரனையும் மறந்தான்; தங்கை
மூக்கினைக் கடிந்து நின்றான்

27. மாரீசன்வதை - 56
28. ,, - 81

உரனையும் மறந்தான்; உற்ற
பழியையும் மறந்தான்'[29]

எல்லாவற்றையும் மறந்த இராவணன் 'தான் கேட்ட மங்கையை' மட்டிலும் மறக்கவில்லை. அந்த மயிலுடைச் சாயலாளை தன் இதயமாகிய சிறையில் வைத்து விடுகின்றான்.

இதன் பிறகு சூர்ப்பணகையை நாம் ஒரு தடவைதான் காண்கின்றோம். சோலையிலிருந்து கொண்டு விரக தாபத்தால் வருந்தும் இராவணன் தன் தங்கையைக் கூட்டிவரும்படி ஏவலாளர்க்குக் கட்டளையிடுகின்றான். தன்னைப்போலவே விரக தாபத்தால் வருந்தி நிற்கும் அவன் தங்கை அவன் முன் வருகின்றாள். தான் உருவெளித் தோற்றத்தில் காணும் உருவைக் காட்டி 'இவள் தானோ நீ கூறும் சீதை?' என்று கேட்டபோது, சூர்ப்பணகை தான் அவ்வாறே காணும் உருவை எண்ணி, 'இவன்தான் இராமன்!' என்று கூறு-கின்றாள். உடனே இராவணன்,

'பெண்பால் உருநான் இது கண்டது;
பேதை! நீ கண்டு
எண்பாலும் இலாததோர் ஆணுரு
என்றி; என்னே
கண்பால் உறுமாயை கவற்றுதல்
கற்ற நன்மை
மண்பா லவரேகொல் விளைப்பவர்
மாயை? ....'[30]

[உரு-உருவம்; பேதை - பேதைமைக் குணமுடையவள் (விளி); எண்பாலும்-நினைவிலும்; என்றி-என்றாய்; என்னே-யாதோ; கவற்றுதல்-மயக்குதல்; கற்ற-பயின்ற; மண்பாலவர்-மண்ணுலக மனிதர்; விளைப்பவர்-செய்பவர்.]

---

29. மாரீசன்வதை-83
30. ,, -150

என்று கேட்கின்றான். அதற்குச் சூர்ப்பணகை அவன் கண்ட பெண் உருவம் உருவெளித் தோற்றமே என்று கூற, அதற்கு அவன், "அதுதான் அப்படி; உன் கண்ணுக்கு இராமன் உருவம் தோன்றக் காரணம் என்ன?" என்று வினவுகின்றான். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் பெண் அறிவு மிகக் கூர்மையாக வேலை செய்யுமாதலால்,

'எந்நாள் அவன் என்னை இத்தீர்வரு
இன்னல் செய்தான்
அந்நாள் முதல் யானும் அயர்த்திலன்'[31]

[எந்நாள்-எந்தநாளில்; இத்தீர்வரு இன்னல்—நீக்க முடியாத இத்தீமை; அயர்த்ததிலன்-மறந்திலேன்.)

என்று கூறித் தப்பித்துக் கொள்ளுகின்றாள். பிறகு சீதையைக் கவர்ந்து வருதலே இராவணன் நோய்க்குத் தக்க மருந்து என்றும் கூறி அவனைச் செயற்படுத்துகின்றாள். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சூர்ப்பணகையை இக்காவியத்தில் நாம் காண்பதேயில்லை.

காவியத்தில் வரும் சிறு பாத்திரங்கள் பெரும்பாலும் கதையின் வளர்ச்சிக்கும் காவியத் தலைவனுடைய குண நலன்கள் வெளிப்படுவதற்கும் காரணமாகஇருப்பர். கதையை மெள்ள நடத்துவதற்கும் விரைந்து செலுத்துவதற்கும் இவர்கள் துணை செய்வர். இந்த இயல்புகளில் சூர்ப்பணகை இராம காதையில் எவ்வாறு செயலாற்றுகின்றாள் என்பதை ஈண்டு ஆராய்வோம்.

முதலாவது : சூர்ப்பணகை இராமாயணக் கதையின் இரண்டாவது திருப்பு மையத்துக்கு ஆயத்தம் செய்கின்றாள்; மாயமான் வடிவமாக வரும் மாரீசன் மாயவும், சீதை அசோகவனத்தில் சிறையிருக்கவும் இவள்தான் முதற் கார-

31. சூர்ப்பணகை - 508

ணம் என்று சொல்ல வேண்டும். இலங்கையிலிருக்கும் இராவணன் பஞ்சவடிக்கு வரவும் பஞ்சவடியிலுள்ள சீதை இலங்கைக்குக் கவர்ந்து செல்லப்படவும் அவள் நிமித்தம் இராம இலக்குமணர் இலங்கை சென்று அரக்கர்களுடன் போர் புரியவும் இவள் துணைசெய்கின்றதால் கதை நீளு-கின்றது. இவள் இராவணனிடம் வைத்த 'வர்த்தி'யால் தான் அரக்கர்கள் அழிகின்றனர். இதனை மனத்தில் வைத்துத்-தான் கம்பனும்,

'நீலமா மணிநில நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கு மொய்ம்பினள்'[32]

என்றும், 'தன்கிளைக்கு இறுதி காட்டுவான்' என்றும் இவளைக் குறிப்பிடுகின்றான்.

இலங்கையை அழிக்கவல்ல நெருப்பு அநுமன் வாலில் மட்டிலும் இல்லை; அது தண்டகாரண்யத்தில் பஞ்சவடியி-லும் இருக்கின்றது. சூர்ப்பணகை இராமனுடன் தனிமையில் உரையாடிக் கொண்டிருக்கும்போது, அந் நெருப்பு அவள் கண்ணில் படுகின்றது. இந்த நெருப்புதான், இலங்கையை மட்டுமல்ல, அரக்கர் குலத்தையே அழித்து விடுகின்றது. இதனைக் கம்பன்,

'மீன்சுடர் விண்ணும் மண்ணும்
விரிந்தபோர் அரக்கர் என்னும்
கான்சுட முளைத்த கற்பின்
கனலியைக் கண்ணிற் கண்டாள்'[33]

[மீன்சுடர்–நட்சத்திரங்கள் விளங்கும்; போர் அரக்கர்-சண்டையில் வல்ல இராக்கதர்கள்; கான்-காடு; சுட-எரித்து அழித்தற்கு; முளைத்த-தோன்றிய; கற்பின் கனலி-கற்பாகிய நெருப்பு (சீதைக்கு உருவகம்.)]

32. சூர்ப்பணகை-8
33. .. -58

என்று குறிப்பிடுகின்முன். இதே கருத்தை வேருெரு விதமாக அநுமன் வாய் மொழியாகவும் அறிகின்ருேம். அசோக வனத்தில் பிராட்டியைக் கண்டு பேசியபோது அவளைத் தேற்றுவான் வேண்டி சில செய்திகளைக் கூறுகின்ருன் அநுமன். அவற்றில் ஒன்று,

> 'வினையுடை அரக்கராம் இருந்தை வெந்துகச்
> சனகியென் ருெருதழல் நடுவண் தங்கலால்
> அனகன்கை அம்பெனும் அளவில் ஊதையால்
> கனகநீ டிலங்கைநின் றுருகக் காண்டியால்'[34]

[வினையுடை-கொடுந் தொழிலையுடைய; இருந்தை-கரிகள்; வெந்து உக-வெந்து போகும்படி; தழல் நெருப்பு; நடுவன்-நடுவில்; அனகன்-குற்றமற்றவன் (இராமன்); அளவில்-அளவற்ற; ஊதை-காற்று; கனகம்-பொன்.]

என்பதில் வந்துள்ள செய்தி. 'அரக்கர்களாகிய கரிகளின் நடுவில் சீதை என்ற நெருப்பு இருக்கின்றது. இராமனுடைய கை அம்பாகிய காற்று செலுத்தப்படும்போது பொன்னுலாகிய இலங்கை உருகுவதை விரைவில் காண்பாய்' என்று அனுமன் சீதையிடம் கூறுகின்ருன். சூர்ப்பணகையாகிய கரித் துண்டு ஒன்று சீதையாகிய நெருப்பைப்பற்றி இராவணனுகிய மற்ருெரு கரித் துண்டில் பற்றவைத்து விடுகின்றது. பின்னுல் அந் நெருப்பு, இலங்கையும் அங்குள்ள அரக்கர்களும் அழியக் காரணமாகின்றது.

சூர்ப்பணகை இராமன்மீது கொண்ட காதலின் விளைவுதான் இராமாயணக் கதையின் முடிவு. இக் காதல் ஒரு தொத்து நோய்போல் வேலை செய்கின்றது. இந் நோய் இராவணனைப் பற்ற அவன் சீதையின்மேல் காதல் கொள்ளுகின்ருன். எவ்வளவோ ஆண்மைகளைப் பெற்றிருந்-

34. சுந்தர-சூளாமணி - 59

தும், 'பிறன் மனை நோக்காத பேராண்மை' இராவணனிடம் இல்லாததால் அவன் அழிகின்றான்; அமரர் கூற்றாக இருந்தவன் அசுரர்களின் பிரளயமாகின்றான்; இவன் கொண்ட காதல் தன் குலத்தையே அழித்துவிடுகின்றது. சூர்ப்பணகையின் காதல் முதன் முதலாக அவளுக்கு அங்கபங்கம் விளைவிப்பதுடன் தேவரும் மற்றை யாவரும் கண்டு வெருவத்தக்க ஒரு பெரிய அரக்க ஏகாதிபத்தியத்துக்கே அவமானத்தை (Nose-cut) ஏற்படுத்தி விடுகின்றது. சூர்ப்பணகையின் மூக்கும் வெட்டப்படுகின்றது! இந்த அவமானத்தைத் தெளிவாக நமக்கு உணர்த்த விரும்பிய கம்பன்,

'கொலைது மித்துயர் கொடுங்கதிர்
வாளின் அக் கொடியாள்
முலைது மித்துயர் மூக்கினை
நீக்கிய முறைமை
மலைது மித்தென இராவணன்
மணியுடை மகுடத்
தலைது மிந்தற்கு நாட்கொண்ட
தொத்ததோர் தன்மை'[35]

[கொலைதுமித்து-(சூர்ப்பணகையைக்)கொல்லுதலை ஒழித்து; உயர்-சிறந்த; முலைதுமித்து-கொங்கைகளை அறுத்து; முறைமை-செய்கை; நாள்கொண்டது-நல்ல நாளாகக்கொண்டு] என்று கூறுகின்றான். நாள் கொள்ளுதலாவது—ஒரு காரியத்தைச் செய்தற்கு ஏற்ற நாளையும் கோளையும் அமைத்துக் கொண்டவர் யாதாயினும் ஒரு காரணத்தால் அப்போது அக் காரியத்தைச் செய்ய இயலாதாயின் அதற்கு அங்கமானதொரு காரியத்தை அம் முகூர்த்தம் தவறாமல் செய்வது. சூர்ப்பணகையைக் கொல்லாமல் உறுப்பறுத்து விட்டது அவள் போய் இராவணனைக் கொண்டுவந்து மடித்தற்குக் காரணமாகட்டும் என்று கருதித்தான் என்பதை நம்மை எண்ணும்படி

35. சூர்ப்பணகை - 96

செய்கின்றது என்று கவிஞன் கூறுவதைக் காண்க. இதிலுள்ள உவமை தாடகை படியிடையற்று வீழ்ந்தபோதுள்ள நிலை, இராமனுக்கு மகுடஞ் சூட்ட நிச்சயித்த நாளன்று நகர் அணி செய்யப் படும்போது கூனி தோன்றிய காட்சி ஆகியவற்றை விளக்க வந்த பெருங்காப்பிய உவமைகளைப்போலவே (Epic similes) கதை முழுவதையும் மனத் திரையில் அமைத்துப் பார்ப்பதற்குத் துணை புரிகின்றது.

'மருந்தனைய தங்கையின் மணி நாசியை வாளால் அரிந்தவர் மானிடர்' என்ற செய்தியைக் கேட்கும் இராவணன் துடிதுடிக்கின்றான். 'அரிந்தவர் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள்! நானும் சிறிதும் வெட்கமின்றி வாளாயுதத்தை வைத்துக்கொண்டு உயிரோடு இருக்கின்றேன்'! என்று பேசுகின்றான்.

> 'கொற்றமது முற்றிவலி யாலரசு கொண்டேன்
> உற்றபயன் மற்றிது கொல்?'[36]

என்று ஏங்குகின்றான். பிறகு சூர்ப்பணகை சீதையைக் குறிப்பிட்டு அவள் அழகை வருணித்ததும் இராவணன் செயலாற்றத் தொடங்குகின்றான். கதையும் விரைவாக வளரத் தொடங்குகின்றது.

சூர்ப்பணகை இராமனைச் சந்தித்து இலக்குவனால் அங்க பங்கப்பட்ட பிறகு மாரீச வதம், பிராட்டி சிறைப்படுதல், சடாயு திருநாடு அலங்கரித்தல், இராம சுக்கிரீவ நட்பு, 'வாலி வரனுக்கப்புறத் துலகனுதல்', கடலில் அணையிடல், ஆகிய நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக விரைவாகத் தொடர்கின்றன. இவ்வாறே இராவணனது அரசாட்சியிலும் சில குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன. வீடணன் அண்ணனைவிட்டுப் பிரிந்து இராமனிடம் அடைக்கலமாதல், அநுமன் தூது சென்ற போது பஞ்ச சேனாதிபதிகள் அட்சய

36. மாரீசன்வதை - 59

குமரன் முதலியோர் அழிந்து படலம் ஆகியவை சிறந்தவை. சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பஞ்சவடியில் அமைதியாக வாழ்ந்த இராமனைச் சூர்ப்பணகை கண்டபிறகு அவள் அவன்மீது கொண்ட காதல் இவ்வாறு கதையை வளர்த்து விடுகின்றது, சூர்ப்பணகை மட்டிலும் இராமனைச் சந்தித்திராவிட்டால், இராமனுடைய பதினான்கு ஆண்டு தவ வாழ்க்கை பஞ்சவடியிலேயே கழிந்துவிடும். இராவண வதம் முதலிய முக்கிய செயல்கள் நடைபெறா. 'இராமன் பரக்கும் தொல்புகழ் அமுதாகிய' இராமகாதை தோன்ற வாய்ப்பே இராது போய்விடும்.

இரண்டாவது : சூர்ப்பணகை தான் இராமனைப் பற்றிய பல செய்திகளை இலங்கை வேந்தனுக்கு உணர்த்துகின்றாள். கரன் முதலியோர் மாண்ட செய்திகளால் இராவணன் இராமனுடைய ஆற்றல்களை ஓரளவு அறிய முடிகின்றது. மூக்கு முதலிய உறுப்புகளை இழந்தும் சிறிதும் வெட்கமின்றி இராம இலக்குமணர்களை நாடித் தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு பலவாறாக இறைஞ்சி நிற்கும்போது இராமன் அவளுக்கு,

'நாடறியாத் துயரிழைத்த நவையரக்கி!
    நின்அன்னை தன்னை நல்கும்
தாடகையை உயிர்கவர்ந்த சரமிருந்த(து);
    அன்றியுநான் தவமேற் கொண்டு
தோடகைய துறுமலர்த்தார் இகலரக்கர்
    குலந்தொலைப்பான் தோன்றி நின்றேன்'[37]

[நாடு அறியாத்துயர் - உலகிலுள்ள எல்லாப், பிராணிகளுக்கும் இதுவரையிலும் பட்டிராத துன்பம்; இழைத்த — செய்த; நவையரக்கி-கொடிய அரக்கியே (விளி); நல்கும் - பெற்ற; உயிர் கவர்ந்த - உயிரைப் பறித்த; தோடகை — (தோள் தகை) தோள் வலிமையுள்ளவர்களான; துறுமலர்

---

37. சூர்ப்பணகை-135

தார்-நெருங்கிய பூமாலை; இகல் அரக்கர்-பகைமைக் குண முடைய அரக்கர்கள்.]

என்று உணர்த்திய செய்தியையும்,

'தரையளித்த தனிநேமித் தயரதன்றன்
புதல்வர்யாம்; தாய்சொல் தாங்கி
விரையளித்த கான்புகுந்தேம்; வேதியரும்
மாதவரும் வேண்ட, நீண்டு
கரையளித்தற் கரியபடைக் கடலரக்கர்
குலந்தொலைத்துக் கண்டாய் பண்டை
வரையளித்த குலமாட நகர் புகுவோம்'[38]

[அளித்த-காத்த; தாய்-கைகேயி; விரையளித்த-மணம் வீசுகின்ற; கரை அளித்தற்கு அரிய-எல்லை அமைத்தற்கு அருமையான; வரை அளித்த-மலைகளை ஒப்பாகக் கொண்ட.] என்ற தன் வரலாற்றுச் செய்தியையும் நினைவில் வைத்திருந்து இராவணனிடம் கூறுகின்றான். அங்கபங்கப்பட்ட வரலாற்றை விவரமாகக் கேட்ட அண்ணனிடம்,

'ஆறுபுலன் அஞ்சினம் அரக்கரை எனச்சென்று
ஏறுநெறி அந்தணர் இயம்ப உலகெல்லாம்
வேறுமெனும் நுங்கள்குலம் வேரோடும் அடக்க
கோறுமென முந்தையொடு சூளுறவு கொண்டார்'[39]

[ஆறுபுலன்-தவ ஒழுக்கத்தால் தணிந்துள்ள புலன்கள்; ஏறும்நெறி-உயர்ந்த ஒழுக்கத்தையுடைய; வேறும்-வென்றிடுவோம்; முந்தை-முன்பு; சூளுறவு-சபதம்.]

என்று முனிவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இராம இலக்குமணர் மேற்கொண்டுள்ள சபதத்தைக் கூறுகின்றாள். அவ்வாறு சபதம் செய்தவர்கள் யாவர் என்பதையும்,

---

38. சூர்ப்பணகை -136
39. மாரீசன்வதை-55

'தராவலய நேமியுழ வலிதயர தப்பேர்
பராவரு நலந்தொருவன் மைந்தர்;பழி யில்லார்'[40]

[தராவலயநேமி-பூமண்டலம்; பராவு அரு-புகழ்தற்கரிய.] என்று அவனிடம் உரைக்கின்ருள்.

இராம லட்சுமணர்களின் ஆற்றலே இவள்தான் அரக்கர்களுக்கு உணர்த்திஞள் என்று கூறலாம். தவிர, இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை அங்கபங்கப் படுத்தப்பட்டாள் என்பது சாதாரணமானதொரு செய்தியல்ல. இலங்கையின் வடதிசை வாயிலில் வந்து தோன்றிய இவளைக் குறித்து இலங்கை மக்கள் பேசிக்கொண்ட பேச்சுகளே காவியத்தில் மற்ருெரு தலைவஞன இராவணனின் சிறப்பை நன்கு உணர்த்தும் ஓரிடத்தில் மக்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதைக் கம்பன்,

'என்னையே இராவணன் தங்கை என்றன்பின்
அன்னையே என்றடி வணங்கல் அன்றியே
உன்னவே ஒண்ணுமோ ஒருவ ரால்இவள்
தன்னையே அரிந்தனள் தான்என் ருர்சிலர்'[41]

[என்னை-என்ன ஆச்சரியம்; உன்னவே ஒண்ணுமோ-நினைக்கக் கூடுமோ]

என்று கூறுகின்ருன். வேருெருவர் இங்ஙனம் செய்யக்கூடுமா? செய்வதற்குத் துணிச்சல்கூட இருக்கின்றதா என்பதை மக்கள் நம்ப முடியவில்லை. இவளாகத்தான் தன்னை இவ்வாறு செய்து கொண்டிருக்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுகின்றனர். மற்றும் கவிஞன்,

40. மாரீசன்வதை-57
41. ,, - 30

'...என்றும் இல்லதோர்
அழுதரல் பிறந்த(து) அவ்
இலங்கைக்(கு) அன்(று)அரோ'[42]

என்று கூறும்போதுதான் இராவணப் பேரரசின் சிறப்பை நாம் உணர்கின்ருேம்.

இவள் காரணமாகத்தான் இவளுக்குக் காவலாக இருந்த கரன் முதலியோர் போரில் பட்டொழிகின்றனர். இவளுக்கு நேரிட்ட அவமானத்தைக் கண்டு கரன் முதலாயினேர் இவளுக்குத் துணை செய்திலரோ என்று இராவணன் இவளைக் கேட்டதற்கு இவள்,

'சொல்லென்றன் வாயிற் கேட்டார்;
தொடர்ந்தெழு சேனை யோடும்
கல்லென்ற ஒலியிற் சென்ருர்
கரன்முதற் காளை வீரர்;
எல்லொன்று கமலச் செங்கண்
இராமனென் றிசைத்த ஏந்தல்
வில்லொன்றில் கடிகை மூன்றில்
ஏறினர் விண்ணில் என்ருள்'[43]

[எல்-சூரியகிரணம்; கமலம்-தாமரைமலர்; ஏந்தல்-பெருமையில் சிறந்தவன்; கடிகை-நாழிகை.]

இதனல் காவியத் தலைவனை இராமனது பேராற்றலை அவனேடு ஒப்பாக வைத்தெண்ணக்கூடிய இராவணனுக்கு உணர்த்துகின்ருள் சூர்ப்பணகை.

பொதுவாகக் காம இச்சை சரியாகப் பூர்த்தி செய்யப் பெருதவர்களின் மனம் எப்படி எப்படியோ வேலை செய்யும் என்பதை வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் காணலாம்.

---

42. மாரீசன்வதை - 36
43. மாரீசன்வதை - 64

பிராய்டு (Freud.) ஹேவ்லக் எல்லிஸ் (Havelock Ellis) போன்ற உளநூல் நிபுணர்கள் இத்துறையை நன்கு ஆராய்ந்து பல அரிய கருத்துகளை வெளியிட்டுள்ளனர்; இளமையிலேயே கணவனை இழந்த சூர்ப்பணகையின் பாலுணர்ச்சி (Sex instinct) நசுக்கப்பட்டதால் (repressed) அவள் மனம் மிகவும் கெட்டுவிட்டது. எனினும் இராவணன் தனது ஒரே 'மருந்தனைய தங்கை'யை ஜனஸ்தான மென்னும் இடத்தில் வசிக்கவும் விருப்பப்படி திரிந்து இன்பம் நுகரவும் அவளுக்குத் துணையாகத் தன் தாயுடன் பிறந்தவள் மகனான கரனைப் பெருஞ் சேனையுடன் இருக்கும்படியும் ஏற்பாடுகள் செய்தான். என்னதான் சமாதானம் செய்தாலும் தன் கணவனைக் கொன்ற அண்ணன்மீது சூர்ப்பணகைக்கு வெறுப்பு இருந்துகொண்டுதான் இருந்தது; மேல்மனத்தில் அது வெளிப்படையாகப் புலனாகவில்லையென்றாலும் அடி மனத்தில் அது ஓரிடத்தில் இருந்துகொண்டுதான் இருந்தது. இதை வீடணன் எப்படியோ அறிந்திருந்தான்.

உயர்ந்த குறிக்கோளாகக் கொண்ட கருத்துகளும் மறையாக வைத்துள்ள எண்ணங்களும் ஒரு நெருக்கடியான கட்டம் நேரிடும்போது வெளிப்பட்டுவிடும். பொதுவாக இவை வஞ்சினம் உரைக்கும்போதோ நெருங்கிய உறவினர் இறந்தபோது புலம்பும்போதோ வெளிப்படுதலைக் காணலாம். தமிழர்களின் தலைசிறந்த பண்பாட்டைப் பளிங்குபோல் காட்டவல்ல புறநானூற்றில், 'நகுதக் கனரே' (புறம்-72), 'மெல்லவந்தென்' (புறம்-73) என்ற பாடல்களில் முறையே வஞ்சினம் உரைக்கும் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் நலங்கிள்ளி ஆகியோரின் சிறந்த குறிக்கோள்கள்-அடிமனத்தில் உறைந்த கருத்துக்கள்-வெளிப்படலைக் காணலாம். அதுபோலவே இராவணன் இறந்த பிறகு சகோதர வாஞ்சையால் புலம்பும் வீடணன் வாயிலிருந்து,

'கொல்லாத மைத்துனனைக் கொன்றாய்
என்றதுகுறித்துக் கொடுமை சூழ்ந்து

பல்லாலே இதழுதுக்கும் கொடும்பாவி
நெடும்பாரில் பழிதீர்ந் தாளோ?''[44]

என்று வெளிப்படும் சொற்களில் சூர்ப்பணகையின் அடி-மனத்தில் கொண்டுள்ள கருத்தைத் தான் தெரிந்திருத்தல் நன்கு வெளிப்படையாகின்றது. நாமும் சூர்ப்பணகை தன் அண்ணன் குடும்பத்தையே அழித்துத் தன் பழியைத் தீர்த்-துக் கொண்டிருக்கக் கூடும் என்று எண்ணுகின்றோம். வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்தவர்களின் அடி மனத்தி-லிருப்பவற்றை யார்தான் தெளிவாக அறிய முடியும்?

44. யுத்த. இராவணன்வதை - 225

8

மாரீசன்*

இராம காதையில் வரும் மாரீசனையும் ஒரு சிறு பாத்திரமாகத்தான் கொள்ள வேண்டும். சிறு பாத்திரங்களுக்குரிய இலக்கணங்களை அமைத்துப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு புலனாகும்.

> 'திருமகள் நாயகன் தெய்வ வாளிதான்
> வெருவரு தாடகை பயந்த வீரர்கள்
> இருவரில் ஒருவனைக் கடலில் இட்டதங்(கு)
> ஒருவனை அந்தகன் புரத்தில் உய்த்ததே'[1]

[திருமகள் நாயகன்-இராமன்; வாளி-அம்பு; வெருவரு-அஞ்சுவதற்குக் காரணமான; தாடகை பயந்த வீரர்கள்-சுபாகு, மாரீசன்; அந்தகன்-யமன்; உய்த்தது-சேர்த்தது.]

என்று பாலகாண்டத்தில் கம்பன் காட்டும் மாரீசனைக் காண்கின்றோம். சுபாகு மாள்கின்றான்; மாரீசன் தப்பி உய்கிறான். இதற்கு முன்னதாகவே,

---

* குமரிமலரில் (மார்ச்சு 1954) வெளிவந்தது.

1. பால. வேள்வி-52

'பொற்பினுள் வயிற்றிடைப் புவனம் ஏங்கிட
வெற்பணி புயத்துமா ரீச னும்விறல்
மற்பொரு சுவாகுவும் வந்து தோன்றினர்'[2]

[புவனம்-உலகிலுள்ள பிராணிகள்; வெற்பு அணி-மலைகளை யொத்த; விறல்-மற்போரில் வல்ல.]

என்று சுபாகுவும் மாரீசனும் தாடகையின் குமாரர்கள் என்பதை நமக்கு அறிமுகம் செய்துள்ளான் கவிஞன். இராமன் தன் தாயையும் தம்பியையும் கொன்று தன்னையும் அம்பு செலுத்திக் கடலில் தள்ளிய காரத்தால் மாரீசன் இராமனிடம் கறுக்கொண்டு அவனைக் கொல்லச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்றான். இராமன் பஞ்சவடியில் இருக்கும்போது ஒரு நாள் மாரீசன் வேறு இரண்டு அரக்கர்களுடன் மானுருக் கொண்டு தவக்கோலம் கொண்டுள்ள இராமனருகில் வந்து அவனை முட்டிக் கொல்ல முயலுகையில் இராமன் அம்புகளை ஏவ, இவனுடன் வந்த இரண்டு அரக்கர்களும் மடிந்து வீழ்கின்றனர்; இவன் மட்டிலும் தப்பி உய்கின்றான். தப்பி யோடியவன் அன்றிலிருந்து தவவேடம் பூண்டு தவஞ்செய்யத் தொடங்குகின்றான். இந்த நிலையிலிருக்கும் மாரீசனைக் கவிஞன், "இந்தியம் அடக்கி நின்ற மாரீசன்"[3] என்று குறிப்பிடுகின்றான். அது கிடக்க,

மாரீசன் பிறப்பால் அரக்கனல்ல. சுகேதுஎன்ற இயக்கன் (யட்சன்) மகளாகிய தாடகைக்கும் சுந்தனனென்ற மற்றொரு இயக்கனுக்கும் பிறந்தவன். இவன் தம்பி சுபாகு என்பவன். இவர்கள் 'மாயமும் வஞ்சமும் வரம்பிலாற்றலும் தாயினும் பழகி'[4] வளர்ந்து வருகையில் ஒருநாள் சுந்தன் அகத்தியன் ஆச்சிரமத்தை அணுகி மரங்களை யெல்லாம் பறித்து வீச,

2. தாடகைவதை-28
3. மாரீசன் வதை-169
4. தாடகை வதை-29

மாதவன் தழல் விழியால் சாம்பராகின்முன். இச் செய்தி கேட்ட தாடகையும் அவள் குமாரர்களும் அகத்தியனை அழிக்க வருகையில் 'தமிழெனும் அளப்பரும் சலதி தந்தவன், உமிழ் கனல் விழி வழியொழுக'[5] அரக்கர்களாகும்படி அவர்கட்குச் சாபம் தருகின்முன். மாரீசனும் சுபாகுவும் இராவணனின் தாயைப் பெற்ற பாட்டனுன சுமாலி பாதலத்திலிருக்கையில் அவனை அணுகி அவனுக்கு அபிமான புத்திரர்களாகி நீண்ட காலம் பாதலத்திலேயே வாழ்ந்து வருகின்றனர். பின்னுல் சுமாலியின் பேரனுன இராவணன் பிறந்து தவம் புரிந்து மலரவன் வரங்களால் வரம்பிலாற்றல்களைப் பெற்று இலங்கையைக் குபேரனிடமிருந்து மீட்டு சுமாலி முதலியோருடன் வாழ்ந்துவருகையில் இராவணன் இச் சுபாகு மாரீசர்களைத் தன் மாமன்மார் என்று பாராட்டி உறவுகொள்ள, இவர்களும் உலகமெல்லாம் திரிந்து பல தீய செயல்களைச் செய்து வருகின்றனர். இந்நிலையில் விசுவாமித்திரர் வேள்வி செய்த போது அதனை அழிக்க வருகையில் இராமன் சுபாகுவைக் கொன்று மாரீசனைக் கடலில் தள்ளுகின்முன்.

கம்பன் காவியத்தையும் வான்மீகியின் இராமாயணத்தையும் ஒப்பிட்டுப் பயிலும்போது இம் மாரீசனின் படைப்பு இரண்டிலும் எவ்வாறு உளது என்பது தெரியவரும். வான்மீகி தாடகைக்கு மாரீசன் என்று ஒரே புதல்வன் இருந்தான் என்று கூற, கம்பன் அவளுக்கு சுபாகு மாரீசன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர் என்று குறிப்பிடுகின்முன். ஆனுல் வான்மீகத்தில் சுபாகு மாரீசன் என்ற இரண்டு அரக்கர்களின் பெயர்கள் வருகின்றன. தான் செய்யும் வேள்வி காத்தற் பொருட்டு விசுவாமித்திரர் தசரதனிடம் இராம லட்சுமணர்களைக் கேட்டபோது, தசரதன் கூறும் மறுமொழியில் இந்த இரண்டு அரக்கர்களைப் பற்றி அறிகின்ருேம். ஆனுல் சுபாகு யார் என்ற விவரம் இல்லை. தாடகையின் கணவனுகிய சுந்தன் மாரீசனைப் பெற்ற பிறகு இயல்பாக இறந்ததாகக் குறிப்-

5. தாடகைவதை-24

பிடுகிறுர் வான்மீகி. மற்றும் அவர் கூற்றுப்படி தாடகை தனக்கு ஆயிரம் யானை பலம் இருக்கின்றது என்ற செருக்கால் ஒரு நாள் தன் குமாரன் மாரீசனுடன் அகத்தியன் ஆச்சிரமத்தையடைந்து அவனைத் தின்ன முயல்கையில் அம் முனிவன் சாபத்தால் தாடகை பிணங்களைத் தின்னும் கோர உருவமுள்ள பூதமாகின்றுள்; மாரீசன் ஓர் இராக்கதனுகின்றுன். கம்பன் கூற்றுப்படி சுந்தன் அகத்திய முனிவன் தழல் விழியால் சாம்பலாகின்றுன். கணவன் இறந்த செய்தி கேட்டுத் தாடகை தன் குமாரர்களுடன் முனிவனை அழிக்க வருகையில் அவன் அவர்களை அரக்கர்களாகும்படி சபிக்கின்றுன்.

இராம லக்குமணர்கள் வேள்வி காத்து நிற்கையில் சுபாகு மாரீசன் முதலிய அரக்கர்கள் வருகையை வான்மீகியும் குறிப்பிடுகின்றுர்; கம்பனும் கூறுகின்றுன். இரண்டிலும் சுபாகுவைக் கொன்றதாகவும் மாரீசனைக் கடலில் தள்ளியதாகவும் கூறப்பட்டுள்ளது. சுபாகுவின் தாய் தந்தையரைப்பற்றி வான்மீகி கூருதிருக்க, கம்பன் அவனைத் தாடகையின் இரண்டாவது குமாரன் என்று கூறிச் செல்லுகின்றுன்.

தற்செயலாக ஜநஸ்தானம் வந்திருந்த இராவணனுடைய ஒற்றனுகிய அகம்பனன் கர-இராமனின் போரைக் கண்டு அதன் முழு விவரங்களையும் இராவணனிடம் கூறியதாக வான்மீகி குறிப்பிடுகின்றுர். சீதையைப் பற்றி அவனிடம் கூறி அவளை எவ்விதத்திலாவது அபகரித்து வஞ்சந் தீர்க்குமாறு கூறுகின்றுன் அகம்பனன். இராவணனும் உடனே தேரின்மீதேறி மாரீசன் இருக்கையை அடைகின்றுன். கரன் முதலாயினேர் இராமனுல் கொலை செய்யப்பட்டதை அவனிடம் கூறி இராமன் மனைவியாகிய சீதையைத் தான் அபகரித்துவர எண்ணியிருக்கும் தனது திட்டத்தைக் கூறுகின்றுன். இதைக் கேட்ட மாரீசன் இராவணனுக்கு இந்த ஆலோசனை கூறியவன் துரோகி என்றும் அவன் குலத்துடன் அழிவதற்குத் தக்க வழியறிந்து உரைத்திருக்கின்றுன் என்றும் கூறி இத் தகாத

செயலில் இறங்காது இலங்கைக்குத் திரும்பி விடும்படி புத்திமதிகள் கூறுகின்றான் இராவணனும் அவற்றை ஏற்றுத் திரும்பிவிடுகின்றான். பிறகுதான் சூர்ப்பணகை வந்து தனக்கு இராம லக்குமணர்கள் கேடு விளைவித்ததைத் தெரிவித்து சீதையை எடுத்துவர முயன்றபோது இக் காரியம் நேரிட்டது என்பதையும் கூறுகின்றாள். உடனே தண்ட காரண்யத்திற்குச் சென்று இராமலட்சுமணர்களைக் கொன்று சீதையைக் கவர்ந்து வரும்படி கூறுகின்றாள்; இவ்வாறு செய்தால் நாளடைவில் சீதையும் இராவணனை இச்சிக்கக் கூடும் என்பதையும் தெரிவிக்கின்றாள். உடனே இராவணன் மீண்டும் மாரீசனிடம் வந்து வஞ்சகமாகச் சீதையைக் கவர்வதற்குத் துணை புரியுமாறு அவனை வேண்டுகின்றான். வான்மீகி இவ்வாறு கூற, கம்பன் இதனைச் சற்று மாற்றி வேறு விதமாகக் கூறுகின்றான். அகம்பனனைப் பற்றிய செய்தியே கம்பன் கூறவில்லை. சூர்ப்பணகையின் சொல்லை மட்டிலும் கேட்டு இராவணன் மாரீசனிடம் வந்ததாகவே கம்பன் காவியத்தில் கூறப்பட்டுள்ளது. இரண்டிலும் தவ வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த மாரீசனை இராவணன் சந்தித்ததாகவே உரைக்கப்பட்டுள்ளது.

சூர்ப்பணகையின் உரைகளைக் கேட்ட பிறகு இராவணன் மீண்டும் மாரீசனிடம் வருகின்றான். தண்டக வனத்திலிருந்த கரன் முதலியோரை இராமன் கொலை செய்தனன் என்றும் வேறு பகையின்மையால் தன் தங்கையின் செவி நாசிகளை அரிந்துவிட்டனன் என்றும் கூறி அதற்குப்பதிலாகத் தான் இராமன் மனையாளாகிய அழகிய சீதையை எடுத்துக்கொண்டு வரப்போவதாகத் தெரிவித்து அதற்கு மாரீசன் துணை செய்ய வேண்டும் என்று கேட்கின்றான். அவன் வெள்ளிமயமான புள்ளிகளையுடைய பொன்மான் உருக் கொண்டு சீதையின் முன் உலவினால் சீதை அம்மானைப் பிடித்துத் தர வேண்டும் என்று இராம லக்குமணர்களைக் கேட்பாள் என்றும், இராம லக்குமணர்கள் மானைப் பிடிக்கச் செல்லும்போது தான் அவளைத் தடையொன்று மின்றி எடுத்துவர முடியும் என்றும் கூறுகின்றான். மனைவியைப் பறிகொடுத்த இராமன் வருந்தி

இளைத்துத் துயருற்றிருக்கும்போது அவனை எளிதில் கொன்று விடலாம் என்றும் சொல்லுகின்றான். இவ்வாறு வான்மீகி கூற, கம்பனும் கிட்டத்தட்ட அம்மாதிரியே கூறுகின்றான். இரண்டிலும் தந்திரத்தால் சீதையைக் கவர வேண்டும் என்று இராவணன் உரைப்பதாகவே கூறப்பட்டுள்ளது.

சீதையைக் கவர்வதால் இராவணனுக்குப் பெருந்தீங்கு விளையுமென்றும், இராமனை எவ்விதத்தாலும் வெல்ல முடியா தென்றும் மாரீசன் உரைக்கும் பகுதியும், தான் விசுவாமித்திரர் செய்த வேள்வியின்போதும், காட்டில் இரண்டு அரக்கர்களுடன் மானுருக்கொண்டு வந்தபோதும் தன் அநுபவத்தைக் கூறும் பகுதியும் வான்மீகியாலும் கம்பனாலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே உரைக்கப்பட்டுள்ளன. மாரீசன் இராவண-னுக்கு அறவுரை கூறுவதும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத் தான் உள்ளது.

பர்ணசாலையின் அருகில் உலவிய அழகிய மானைப் பிடித்துத் தர வேண்டும் என்று சீதை இராமனைக் கேட்ட போது இலக்குவன் தன் அண்ணனிடம் முன்பு மானுருக் கொண்டுவந்து தப்பிப் பிழைத்த மாரீசனே மீண்டும் வந்-திருப்பதாகக் கூறுகின்றான். வான்மீகியில் இவ்வாறு காணப்-படுகின்றது. கம்பனில் இலக்குவன் அம்மான் உண்மையான மான் அல்லவென்றும் அது அரக்கர்களின் மாயம் என்றும் இயம்பினதாகக் கூறப்பட்டுள்ளது.

கம்பனில் மாரீசனின் படைப்பு மிக நன்றாக அமைந்-துள்ளது. தாடகையின் வயிற்றில் 'புவனம் ஏங்கிட, வெற்பணி புயத்து மாரீசன்' தோன்றியதையும் அவன் 'மாயமும் வஞ்சமும் வரம்பிலாற்றலும்' தாயைவிட அதிகமாகப் பயின்-றதையும் திருமகள் நாயகனின் தெய்வ வாளி மாரீசனைக் கடலில் தள்ளியதையும் குறிப்பாகக் கூறிச் செல்லும் கம்பன், மாரீசன் வதைப் படலத்தில் அவனைப் பற்றி அதிக செய்திகளைத் தருகின்றான். அங்கு நாம் மாரீசனுடைய குணங்கள், அநுபவ

அறிவு, மாயம் செய்யும் திறமை முதலியவற்றை நன்கு அறிய முடிகின்றது.

சீதையின் மீது கொண்ட காம நோயால் பலவாறு வருந்திய இராவணன் அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்து விமானத்திலேறித் தனிமையாக 'இந்தியம் அடக்கி நின்ற மாரீசன் இருக்கை'யை அடைகின்றான். சூடு கண்ட பூனையல்லவா மாரீசன்? இரண்டு முறை இராமன் ஆற்றலைச் சோதித்தவன்; நேரில் நல்ல அநுபவமும் பெற்றவன்.

முதலாவதாக : விசுவாமித்திரர் செய்த வேள்வியை அழிப்பதற்குப் பல அரக்கர்களுடன் வந்தபோது இராமனுடைய அம்பின் ஆற்றலை நன்றாக அறிந்திருந்தான்; தன்னைக் கடலில் கொண்டுவந்து தள்ளிய கணையின் வலியை அவன் மறக்க முடியுமா ? இதை நினைவில் வைத்திருந்த மாரீசன் தன்னிடம் உதவியை நாடி வந்த இராவணனிடம்,

'எம்பிக்கும் என் அன்னை தனக்கும் இறுதிக்கோர்
அம்புய்க்கும் போர்வில்லி தனக்கும் அயல்நிற்கும்
தம்பிக்கும் என் ஆண்மை தவிர்ந்தேன்; தளர்
வுற்றேன்;
கம்பிக்கும் என்நெஞ்சும்'[6]

[அம்பு உய்க்கும்-அம்பு செலுத்தும்; போர்வில்லி-இராமன்; கம்பிக்கும்-நடுங்குகிறது.]

என்று கூறுகின்றான்.

இரண்டாவதாக: தன் தாயையும் தம்பியையும் கொன்று தன்னையும் கடலில் தள்ளிய இராமன்மீது பகை கொண்டிருந்த மாரீசன் தானும் வேறு இரண்டு அரக்கர்களும் மானுருக் கொண்டு தண்டகவனம் சென்று முனிவர்கள் வேள்வி செய்யும்

---

6. மாரீசன்வதை - 186

இடங்களையும் நீராடும் இடங்களையும் அடைந்து அவர்களை வருத்திக் கொன்று தின்று வருகையில் தவக் கோலங் கொண்டுள்ள இராமனைக் காண்கின்றான். தவவேடம் தாங்கியிருக்கும் இராமன் தன்னைக் கொல்லான் என்று கருதி அவனருகில் ஓடிவந்து கொம்புகளால் முட்டிக்கொல்ல முயல்கையில் இராமன் சினங்கொண்டு கணைகளை ஏவுகின்றான். இரண்டு அரக்கர்கள் இறந்து வீழ மாரீசன் மட்டிலும் தப்பி உய்கின்றான். இந்த அநுபவத்தையும் அவன் மறக்கவில்லை. 'தென்றலைப் பகையைச் செய்த சீதை' யைத் தனக்குத் தரவேண்டும்' என்று கேட்ட இராவணனிடம்,

'...அரக்கரோர் இருவ ரோடும்
பூண்டஎன் மானந் தீரத்,
தவவனம் புக்க போழ்தில்
தூண்டிய சரங்கள் பாயத்
துணைவர்பட் டுருள அஞ்சி
மீண்டயான் சென்று செய்யும்
வினையென் கொல்? விளம்புக'[7]

[என்மானந்தீர-என் வைரம் ஒழியும்பொருட்டு; சரங்கள்-அம்புகள்; பட்டுஉருள-இறந்து விழுந்து புரள; வினை-காரியம்.] என்று கேட்கின்றான். அன்றிருந்து அவன் தவக் கோலங்கொண்டு தவம் செய்து வருதலால் கம்பன் அவனை, "இந்தியம் அடக்கி நின்ற மாரீசன்" என்று குறிப்பிடுகின்றான்.

இலங்கைவேந்தன் தன் இருக்கை எய்தியது கண்ட மாரீசன் அவனைப் பயபக்தியுடன் எதிர்கொண்டு வரவேற்று செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்து,

'இந்த வனத்தென் இன்னல்
இருக்கைக் கெளியோரின்
வந்த கருத்தென்? சொல்லுதி;'[8]

---

7. மாரீசன்வதை - 204
8. மாரீசன்வதை- 171

[இன்னல் இருக்கை-துன்பந்தரும் தழைக் குடிசை (பர்ணசாலை).]

என்று கேட்கின்ருன். இராவணன் தனக்கு நேர்ந்துள்ள அவமானம் சொல்லமுடியாதது என்ற பீடிகையுடன்,

'வன்மை தரித்தோர் மானுடர்;
மற்றங் கவர்வாளால்
நின்மரு கிக்கு நாசி
இழக்குநிலை நேர்ந்தார்
என்மரபுக்கு நின்மர
புக்கு இதன்மேலோர்
புன்மை தெரிப்பின் வேறினி
யெற்றே புகல்வேலோய்!'[9]

[வன்மை தரித்தோர்-வலிமை பூண்டோர்; மருகி-மருமகள் (சூர்ப்பணகை); நாசி-மூக்கு; புன்மை-இழிவு; தெரிப்பின்-ஆராயுமிடத்து.]

என்று கூறுகின்ருன். அதனுல் கொதிப்புத் தணியாமல் தான் அழிந்ததாகவும், மனிதர்கள் தனக்கு ஈடு இல்லாததால் அவர்களுடன் போர் செய்ய மனம் இல்லை யென்றும் கூறி,

'துப்பழி செவ்வாய் வஞ்சியை
வெளவத் துணைகொண் டிட்டு
இப்பழி நின்னுல் தீரிய
வந்தேன் இவண்'[10]

[துப்பு அழி-பவளமும் ஒப்பாகாமற் கெடும்படியான; வெளவ - எடுத்துக்கொண்டு வர; தீரிய - தீர்த்துக்கொள்ள; இவண்-இங்கு.]

என்று உரைக்கின்ருன்.

---

9. மாரீசன்வதை-173
10. ,, -175

இதனைக் கேட்ட மாரீசன் இராவணனுக்குப் பல நீதிகளைச் சொல்லி இராமனுடைய ஆற்றல்களையும் கூறுகின்றான்; இராமன் போர் தொடங்கினால் பகைவர் உயிர்கள் மிகுதியாகக் கவரப்படும் என்று குறிப்பிட்டு,

'பேதைமதி யாலிஃதோர், பெண்ணுருவம் என்றாய்;
சீதையுரு வோ?நிருதவர் தீவினைய தன்றோ?'[11]

[பேதைமதி-மூடபுத்தி; தீவினையது அன்றோ-அரக்கர்கள் செய்த பாவத்தின் வடிவமானதன்றோ?]

என்று அவனது அறியாமையையும் ஆராச்சியின்மையையும் எடுத்துக் காட்டுகின்றான். பிறகு இராமனிடம் கோசிகன் அளித்த அளவிறந்த கடவுட் படைகள் இருப்பதையும் கார்த்த வீரியனைக் கொன்ற பரசுராமனின் வலியழித்தமையையும் கூறுகின்றான். மற்றும் காம வேதனையால் அவன் வாட்டமுற்று இங்ஙனம் கூறியதாகவும் அச்செய்கை அவன் அழிவுக்குக் காரணமாகும் என்றும் எடுத்துக் காட்டி,

'மாதுலனு மாய்மரபின் முந்தையுற வந்தேன்
ஈதுரைசெய் தேன்;இதனை எந்தைதவிர்(க)'[12]

[மாதுலனுமாய்-மாமன் முறை பூண்டவனாய்; ஈதுஉரை; இந்த உறுதி மொழியை; எந்தை!- அப்பா (மரபு வழுவமைதி); தவிர்க-விட்டிடுவாயாக.]

என்றும் வேண்டுகின்றான்.

இராவணனுக்குக் கோபம் வருகின்றது; அஃது உச்ச நிலையையும் அடைகின்றது. தான் திக்கு யானைகளை வென்றதையும் தேவர்கள் நிலையழியும்படி செய்து அவர்கள் இருப்பிடங்களைக் கொளுத்தியதையும் கூறி எல்லா உலகங்களையும்

---

11. மாரீசன்வதை - 192
12. ,, - 196

வென்று ஆணை செலுத்தும் தன்னை தசரதன் மக்கள் எவ்வாறு வருத்த முடியும்? என்று கேட்கின்றான். மூன்று உலகங்களிலும் தனியாட்சி செலுத்தும் தனக்குப் பகைவர்கள் கிடைத்தால் அது மகிழ்ச்சியை அல்லவா தரும் என்று குறிப்பிட்டு,

'ஏவல்செய கிற்றிஎன(து)
ஆணைவழி எண்ணிக்;
காவல்செய் அமைச்சர்கடன்
நீகடவ(து) உண்டோ?'[13]

[எனது ஆணைவழி எண்ணி-என் கட்டளையின் தன்மையை ஆலோசித்து; ஏவல் செயகிற்றி-ஏவிய தொழிலைச் செய்யக் கடவாய்; கடன்-கடமையை; நீகடவது உண்டோ?-நீ கடக்க லாமோ?]

என்று கேட்கின்றான். மாரீசன் இராவணனுக்கு ஒரு வெளி நாட்டு மந்திரியாகச் (Foreign Minister) சேவை புரிந்து வருகின்றவனாதலால், தனது ஆணைப்படி மந்திரிகள் நடக்க வேண்டிய கடமையையும் எடுத்துக் காட்டுகின்றான்.

மாரீசன் இராவணன் ஆணைக்கு அஞ்சி, 'யான் செய்-யும் வினை என்கொல்?' என்று வினவுகின்றான். அதற்கு இராவணன் மாரீசனின் தாயைக் கொன்ற இராமனைக் கொல்லத் தான் எப்பொழுதும் சித்தமாயிருப்பதாகவும், ஆனால் சீதையை மாயையால் வஞ்சித்து அவளைக் கவர வேண்டும் என்றும் தெரிவிக்கின்றான். உடனே மாரீசன்,

'என்னமா மாயம் யான்இங்(கு)
இயற்றுவ(து)? இயம்புக;'[14]

என்று வினவ அதற்கு இராவணன்,

---

13. மாரீசன் வதை-199
14. ,, -209

'பொன்னின்மா னாகிப் புக்குப்
பொன்னைமால் புணர்த்துக'[15]

[பொன்னை-சீதைக்கு; மால்-ஆசை.]

என்று மறுமொழி கூறுகின்றான். உடனே மாரீசனும் அவ்வாறு செய்வதாகக் கூறிச் செல்லுகின்றான். இராவணனும் தான் செய்ய வேண்டியதை எண்ணியவனாய் வேறொரு பக்கமாகச் செல்லுகின்றான்.

மாயமானாகச் சீதை முன் செல்லுவதாக ஒப்புக்கொண்டு சென்ற மாரீசன் மனம் சொல்லொணாத வேதனையடைகின்றது; தான் இறக்கப்போவது நிச்சயம் என்பது அவனுக்கு நன்கு தெரியுமாதலால் அவன் மனம் உறவினர்களை எண்ணி வருந்துகின்றது; இராமலட்சுமணர்கள் தன்னைக் கட்டாயம் கொன்றிடுவர் என்று வருந்துகின்றது. ஆழ்ந்ததோர் பள்ளத்திலுள்ள நீர் நச்சுத்தன்மையை அடையும்போது அதில் உள்ள மீன் ஒன்று தான் இறப்பது திண்ணம் என்று நடுங்குவதுபோல மாரீசன் மனம் நடுங்குகின்றது. இந்த மன நிலையில் மாரீசன் இராமனிருக்கும் இடத்தை அடைகின்றான்.

'தன்மா னமிலா ததயங் கொளிசால்
மின்வா னமுமண் ணும்விளங் குவதோர்
பொன்மா னுருவங் கொடுபோ யினனால்
நன்மா னனையாள் தனைநா டுறுவான்'[16]

[மானம் இலாத-ஒப்பு இலாத; தயங்கு-விளங்குகின்ற; மான் அனையாள்-மான்போன்ற சீதை.]

இவ்வாறு சீதை விரும்பத்தக்க ஒரு பொன்மான் உருக் கொண்டு அவள்முன் தோன்றுகின்றான்.

---

15. மாரீசன் வதை-209
16. ,, -213

மானைக் கண்ட சீதை அதனிடத்தில் தன் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றாள். அதைப் பிடித்துத் தருமாறு இராமனை வேண்டுகின்றாள். இலக்குவன் அது மாயமான் என்று கூறியும் அதை உணராது மானைப் பிடிப்பதற்காக இராமன் கிளம்புகின்றான்; இலக்குவனும் அவனைப் பின் தொடர்கின்றான்.

'...கடக்க ஒண்ணா
வினையென வந்து நின்ற
மான்எதிர் விழித்த தன்றே'[17]

'எண்ணித் துணிக கருமம்' என்பதை அண்ணனுக்கு எடுத்துக் காட்டி தன்னை அதைப் பிடிக்க அனுப்புமாறு வேண்டுகின்றான். உண்மையாகவே அது ஒரு மாயமானாக இருந்து அதன் பின்னால் தொடரும் பகைவர் பலர் உளரேனும் அவர்களைக் கொல்வதாகவும் அது உண்மையான மானானால் அதனைப் பிடித்து வருவதாகவும் கூறுகின்றான் இலக்குவன்.

சீதை மனம் வருந்துகின்றாள். 'நாயக! நீயே பற்றி நல்கலை போலும்!' என்று சொல்லிக் கண்களில் நீர்த் துளிகளை உதிர்த்துக் கொண்டு செல்லுகின்றாள். அவளது ஊடலைத் தணிக்க விரும்புகின்றான் இராமன். உடனே இலக்குவனை நோக்கி,

'மானிது நானே பற்றி
வல்லையின் வருவெ னன்றே
கானியல் மயிலன் னாளைக்
காத்தனை இருத்தி!'[18]

[கான் இயல்மயில்-வனத்திற் பொருந்திய மயில் (சீதை)]

என்று சொல்லி வில்லையும் அம்புகளையும் எடுத்துக் கொண்டு விரைந்து செல்லுகின்றான். மான் மெல்ல மெல்ல அடிகளை வைத்து நடந்து செல்லுகின்றது. பிறகு பயந்து ஆவேசங்

17. மாரீசன் வதை-226
18. ,, -238

கொண்டாற்போல் காதுகளை நெறிப்புற நீட்டிக் கொண்டு குளம்புகள் மார்பில் பொருந்தும்படியாக ஓட்டம் பிடிக்கின்றது. கதி வேறுபாட்டிற்கேற்ப அம்மானின் செலவு ஒவ்வொரு வகையிலும் புதிதாய்த் தோன்றுகின்றது. இராமனும் விடாது பின் தொடர்கின்றான்.

'குன்றிடை இவரும்; மேகக்
    குழுவிடைக் குதிக்கும்; கூடச்
சென்றிடின் அகலும்; தாழின்
    தீண்டலாந் தகைமைத் தாகும்;
நின்றதே போல நீங்கும்
    நிதிவழி நேய நீட்டும்
மன்றலங் கோதை மாதர்
    மனமெனப் போய தம்மான்'[19]

[இவரும்-ஏறும்; குழு-கூட்டம்; கூடச் சென்றிடின்-விடாது உடன் தொடர்ந்து சென்றால்; அகலும் -விலகிஓடும்; தாழின்-தாமதித்தால்; தீண்டலாந் தன்மை-தொடக்கூடிய தன்மை; நிதி-பொருள்; நேயம்-ஆசை; மன்றல்-மணம்.]

மான் சென்ற கதி இவ்வாறு வருணிக்கப்படுகின்றது.

இப்போதுதான் இராமன் அதை ஒரு மாயமான் என்று கருதுகின்றான். மானாக வந்தவனும் இராமன் தன்னை,

'பற்று வானினி யல்லன்; பகழியால்
செற்று வானிற் செலுத்தலுற் றான்'[20]

[பகழி-அம்பு; செற்று-கொன்று.]

என்று எண்ணுகின்றான்; உடனே உயிருக்கு அஞ்சி விண்ணில் எழும்புகின்றான். இராமனும் தாமதமின்றி அதன் உயிரை வாங்கி வருமாறு அம்பொன்றைச் செலுத்தி விடுகின்றான்.

19. மாரீசன்வதை - 243
20. ,, - 245

'நெட்டிலைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட (து); அப்பொழு தேபகு வாயினால்
அட்ட திக்கினும் அப்புற மும்புக
விட்ட ழைத்(து)ஒரு குன்றென வீழ்ந்தனன்'[21]

[சரம்-அம்பு; பட்டது-தைத்தது; பகுவாய் - பிளவுபட்ட வாய்; அட்டதிக்கு-எட்டுத் திக்குகள்; அப்புறம்-அப்பாலும்; புக-செல்லும்படி; விட்டு அழைத்து-உரக்கக் கூப்பிட்டு.]

மாரீசன் இராமன் குரல்போன்ற குரலை எழுப்பிக்கொண்டு மண்ணில் ஒரு மலைபோல் வீழ்கின்றான். கதறி வீழ்ந்த மானின் உடலை நோக்கின இராமன்,

'மாசின் மாதவன் வேள்வியின் வந்தமா
ரீச னேயிவன் என்பதும் தேறினான்' [22]

[மாசு இல் மாதவன்-விசுவாமித்திரன்; வேள்வி-யாகம் தேறினான்-தெரிந்துகொண்டான்.]

மாயையினால் தன் குரல்போல் எழுப்பிய மாரீசன் செயல் இராமனைச் சிந்திக்கும்படி செய்கின்றது. சீதை வருந்துவாளே என்று எண்ணி ஏங்குகின்றான். மானைக்கண்ட அளவில் மாரீசன் என்று அறிவித்த அறிவுடைத் தம்பி சீதை வருந்தாதபடி தேற்றுவான் என்று ஒருவாறு மனத்தைத் தேற்றிக் கொள்ளுகின்றான். என்றாலும்,

'மாள்வ தேபொரு ளாகவந் தானலன்
சூழ்வ தோர்பொருள் உண்(டு)இவன் சொல்லினால்
மூள்வ(து) ஏதம்; அதுமுடி யாமுனம்
மீள்வ தேநலன்'[23]

21. மாரீசன் வதை-247
22. மாரீசன் வதை-249
23. மாரீசன் வதை-252

[மாள்வதே-இறந்து போவதே; சூழ்வது-(வஞ்சனையாக) ஆலோசித்து; மூள்வது-உண்டாகக் கூடும்; ஏதம்-தீமை.]

என்று சொல்லிக்கொண்டு பர்ணசாலையை நோக்கி வேகமாக வருகின்றான்.

காவியங்களில் வரும் சிறு பாத்திரங்கள் காவியத்தைப் பல கூறுகளில் சிறப்படையச் செய்கின்றனர். கதையை விரைவாகவோ மெதுவாகவோ நடத்திச் செல்வதற்கும் காவியத் தலைவனின் குண நலன்களை வெளிப்படுத்துவதற்கும் இவர்கள் துணை செய்கின்றனர். இவர்களைத் துணைகொண்டு-தான் கவிஞன் காவியக் கோவிலை மிக வனப்புடையதாகச் சமைக்கின்றான். சிறு பாத்திரங்களை மங்கையர் தீட்டும் கோலங்களிலுள்ள புள்ளிகளுக்கு ஒப்பிடலாம். புள்ளிகளைச் சுற்றிக்-கோலத்தை அவர்கள் எவ்வாறு வனப்புடையதாகச் செய-கிறார்களோ அதைப்போலவே கவிஞர்கள் சிறு பாத்திரங்களைச் சுற்றிக் கதையைப் புனைந்து கொண்டு காவியத்தைக் கவின் பெறச் செய்கின்றனர். இந்தக் கூறுகளில் இராமகாதையில் வரும் மாரீசனைக் குறித்து ஆராய்வோம்.

முதலாவது : அயோத்தியிலிருக்கும் இராமனை வனத்-திற்கு அனுப்பக் காரணமாக இருந்த மந்தரை இராம-காதையின் முதல் திருப்பு மையமாக இருப்பதுபோல, தண்ட-காரண்யத்தில் பஞ்சவடியில் அமைதியாக தவவாழ்வு வாழும் இராமனை இலங்கைக்கு அனுப்புவதற்குக் காரணமாக இருக்-கும் மாரீசன் இரண்டாவது திருப்புமையமாக இருக்கின்றான். கிட்டத்தட்ட பத்து ஆண்டுகட்குமேல் பஞ்சவடியில் அமைதி-யாக வாழ்ந்த இராமனைக் கிளப்புவதற்கு இவன் துணை-புரிகின்றான்.

'கொல்லாத மைத்துனனைக் கொன்றாய்என்
றதுகுறித்துக் கொடுமை சூழ்ந்து

பல்லாலே இதழதுக்கும் கொடும்பாவி
நெடும்பாரில் பழிதீர்ந் தாளோ?'[24]

என்று வீடணன் புலம்பலில் விமர்சனம் செய்யப்படும் சூர்ப்பணகையின் 'சூழ்ச்சி' செயற்படுவதற்கு இந்த மாரீசன் தான் காரணமாகின்றான். ஆரண்யகாண்டத்தில் மெல்லச் செல்லும் கதையை விரைவாகச் செலுத்துவதற்கு இவன் துணைபுரிகின்றான் என்றே சொல்ல வேண்டும். மாரீசன்,

'... பகு வாயினால்
அட்ட திக்கினும் அப்புற மும்புக
விட்ட ழைத்தொரு குன்றென'[25]

வீழ்ந்த பிறகு கதை விரைவாக நடைபெறுகின்றது. பல முக்கியமான நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக விரைவாகத் தொடர்கின்றன.

மாரீசன் மாண்ட பிறகு சீதாப்பிராட்டி சிறைப்படுதல், சடாயு-இராவணப் போர், இராம-சுக்கிரீவ நட்பு, வாலி பரமபதம் அடைதல், அநுமன் தூது, இலங்கை அழிதல், வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுதல், கடலில் அணையிடல் முதலிய நிகழ்ச்சிகள் இராவண வதத்திற்கு ஆயத்தம் செய்பவைபோல் நடை பெறுகின்றன. காவியத்தில் இவன் ஒருபெருவிசைபோல் (Main Spring) இருந்து கதையை முடுக்கிவிட்டுத் தான் இறந்துவிடுகின்றான். இறந்து விழும்போது இராமன் குரலில், 'சீதா! இலட்சுமணா!!' என்று அலறிக் கூப்பிட்ட ஒலிதான் இராக்கதர்களின் சாவு மணி. அந்த ஒலியைக் கேட்ட பிறகுதான் அரக்கர்கோனும் 'உண்ணாதே உயிருண்ணும் சனகி எனும் பெருநஞ்சை'[26] எடுத்துச் செல்ல வருகின்றான். கெடுமதி கண்ணுக்குத் தோன்றாததுபோல சீதை 'அரக்கர் என்னும் கான்சுட முளைத்த

24. யுத்த. இராவணன் வதை-225
25. மாரீசன் வதை-247
26. யுத்த. இராவணன் வதை-220

கற்பின் கனலி' என்பதை இராவணன் அப்போது அறியவில்லை. நெருப்பை மடியில் வைத்துக் கட்டிக் கொள்ளத் துணிகின்ருன்.

இரண்டாவது : சூர்ப்பணகையைப் போலவே இவனும் இராவணனுக்கு இராமனைப்பற்றிய பல செய்திகளைத் தருகின்ருன். இராம பக்தர்கள் இராமனுடைய வீரச்செயல்களையும் அற்புதச் செயல்களையும் நேரில் பார்த்தோ பிறர் சொல்லக் கேட்டோ அறிந்தவர்கள். மாரீசனே அவற்றை நேரில் அநுபவித்து உணர்ந்தவன்; சூடுகண்ட பூனை.

'எம்பிக் கும்மென் அன்னை தனக்கும் இறுதிக்கோர்
அம்புய்க் கும்போர் வில்லி தனக்கும் அயல்நிற்கும்
தம்பிக் கும்என் ஆண்மை தவிர்த்தேன்'[27]

என்று தன் அநுபவத்தை எடுத்துக்காட்டி இராமலக்குமணர்களின் ஆற்றலை விளக்குகின்ருன்.

இராமனிடம் விசுவாமித்திரர் அளித்த கடவுட்படைகள் இருப்பதையும் அவன் பரசுராமனின் வலியையடக்கின பெருமையையும் இராவணனுக்கு எடுத்துக் கூறுகின்ருன் மாரீசன். இவன்தான் தாடகையை இராமன் கொன்ற செய்தி, விசுவாமித்திரர் செய்த வேள்வியின்போது சுபாகு மாண்டமை, தான் கடலில் தள்ளப்பட்டமை ஆகிய விவரங்களை இராவணனுக்கு எடுத்துக் காட்டி இராமன் ஆற்றலை உணரும்படி செய்கின்ருன். தன் அநுபவத்தை யெல்லாம் விரிவாகக் கூறி,

'மாதுலனு மாய்மரபின் முந்தையுற வந்தேன்;
ஈதுரை செய்தேன்; இதனை எந்தை! தவிர்க!'[28]

என்று சீதையைக் கவரும் எண்ணத்தை விட்டு விடும்படி வேண்டுகின்ருன். அங்ஙனம் கவர்ந்தால் பாவமும் பழியும்

---

27. மாரீசன்வதை-186
28. மாரீசன்வதை - 196

இராவணனை வந்தடைவது உறுதி என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றான். அன்றியும் இராமன் தன் வாளிகளால் அரக்கர் குலத்தையே அழித்து விடுவான் என்று எச்சரிக்கையும் செய்கின்றான்.

இவ்வளவு மன உறுதியும் அநுபவமும் உடைய மாரீசன் இராமன் கணையால் இறக்கும்போது இராமன் குரலால், 'சீதா! இலட்சுமணா!!' என்று அலறி விழக் காரணம் என்ன? இராவணனுக்கு இவ்வளவு தூரம் அறவுரை கூறிய மாரீசன் தான் இறக்கும்போதுகூட ஒரு குழப்பத்தை உண்டாக்கிவிட்டு இறக்கக் காரணம் என்ன? என்பவற்றை எண்ணிப் பார்த்தல் வேண்டும். பிறப்பினால் இயக்கனாக இருந்த இவன் 'அரக்கனாகி இழிக!' என்ற 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்ட' அகத்தியன் சாபத்தால் இழிவான நிலையை அடைய வேண்டியவன். விராதன்' கவந்தன் போன்றவர்கள் முனிவர்களால் சாபம் பெற்று அரக்கர்களாக வாழ்ந்த போதிலும் அதற்கு அம் முனிவர்களே கழுவாயையும் குறித்துச் சென்றனர். ஆனால் இவனுக்கு 'உமிழ்கனல் விழிவழி யொழுக' சாபம் ஈந்த அகத்தியன் இவனுக்குக் கழுவாய் குறிக்கவில்லை. தவிர, 'விதியது வலியினாலும் மேலுள வினைவினாலும்' இவன் அவ்வாறு உரைத்து உயிரிழக்கின்றான் என்பதையும் ஈண்டு நாம் அறிதல் வேண்டும். இவன் இறந்த பிறகுகூட இவனுக்குப் பெருமை இல்லை; அறிஞர்கள் இவனைப் பாராட்டவில்லை. என்றாலும், சுக்கிரீவன் இவனை 'ஒட்டிய கனகமான் உருவம் ஆகிய சிட்டனும்',[29] என்று குறிப்பிடுவதால் ஏனைய அரக்கர்களைக் கருதினதுபோல் இவனை அக்காலத்தவர் கருதவில்லை என்று எண்ண வேண்டியிருக்கின்றது. 'அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்' காரணமாகப் பிறந்த இராமன் நிறைவேற்ற வேண்டிய காரியத்தைச் சிந்தையில் கொண்டால் இவன்மீது குற்றம் சுமத்த முடியாது.

---

29. சிட்டன் - பெரியோன்.

இவ்விடத்தில் உயர் திருவாளர் தி. சுந்தராச்சாரியார் அவர்கள் மாரீசனைப் பற்றிக் கூறியுள்ள கருத்துகள் சிந்தித்தற்குரியவை: "இராமாயண பாத்திரங்களில் புத்திடம் பேசுந் திறமும் தத்துவ உணர்வும் ராக்ஷஸர் சிலரிடத்தில் பார்க்கப்படுவனபோல் மகரிஷிகளிடத்திலும் காணக்கிடையா. அவ்விதம் சிறப்பு வாய்ந்தவர்களில் ஒப்புயர்வற்றவன் மாரீசன். அவன் பிறப்பால் அரக்கனல்லன்; அகஸ்தியருடைய சாபத்தால் கேடுற்று அரக்கத் தன்மையை அடையலானான். அற்பர்களுடைய அனுக்கிரகத்தைக் காட்டிலும் மகான்களுடைய நிக்ரஹமே நன்மை பயக்க ஏதுவாகும். என்பார்கள். ஸீதாபஹாரத்தைத் தடுத்துக் கூறியவர்களில் விபீஷணருக்கும் முற்பட்டவன் மாரீசன். அவனே தேவ காரியம் நிறைவேறுவதற்குக் களப் பலியாகவும் திகழ்ந்தான். பக்தர் இராமருடைய திவ்விய பராக்கிரமத்தைப் பார்த்தோ கேட்டோ அறிந்தவர். அதை அநுபவித்து உணர்ந்தவன் மாரீசன்"[30] என்று கூறியிருக்கிறார்கள்.

இராவண வதம் முடிவதற்குத் துணைபுரிந்தவர்களில் தலையாயவர்கள் சூர்ப்பணகையும் மாரீசனும் என்று கூறினால் பொருந்தும். இவ்விருவரும் இல்லாவிட்டால் கதை விரைவாக வளர முடியாது. ஆரண்ய காண்டத்திலிருந்து கதை வளருவதற்கு இவர்கள்தாம் பெருந் துணை புரிந்தவர்கள். சிவ பூசையில் கரடி புகுந்தமாதிரி மாரீசன் கொண்டிருந்த தவ வாழ்க்கையைக் குலைத்து இவனுக்கும் தனக்கும் இறுதியைத் தேடிக் கொள்ளுகின்றான் இராவணன். விதியின் வலியை யாவர்தாம் வெல்ல வல்லார்?

30. தி சுந்தராச்சாரியார் ஆரண்யகாண்ட விமர்சனம்; பக்கம்-107.

9

சடாயு*

இராம காதையில் வரும் சடாயுவையும் ஒரு சிறு பாத்திரமாகக் கொள்ளலாம். இவன் தண்டகாரண்யத்தில் வசித்து வந்த ஒரு கழுகின் வேந்தன். அகத்தியரிடமிருந்து விடைபெற்று வந்த இராமலக்குமணர் தண்ட காரண்யத்தை நோக்கி வரும்போது 'கண்டனர் கழுகின் வேந்தை' என்று கம்பன் கூறுகின்றுன். சடாயு அருணனது குமாரன்; சம்பாதியின் தம்பி; தசரத சக்கரவர்த்தியின் இன்னுயிர்த் தோழன். இராமனுல் தந்தை முறையில் வைத்தெண்ணப்படுபவன். வாலிக்குச் சமாதானம் கூறும் முறையில்,

'சிந்தை நல்லறத் தின்வழிச் சேறலாற்
பைந்தொ டித்திரு வின்பரி வாற்றுவான்
வெந்தொ ழிற்றுறை வீடுபெற் றெய்திய
எந்தை யும்எரு வைக்கர சல்லனே?'[1]

[பைந்தொடித்திரு-சீதை; பரிவு-துன்பம்; வெந்தொழில் துறை-போர்த்துறை; வீடு-மோட்சம்; எருவை-கழுகு.]

என்ற இராமன் வாக்கில் இத்தந்தை முறை வழங்கி வருவதைக் காண்க. இராவணன் 'தவத்து அரன் தந்த வாளால்'

---

* குமரிமலரில் (ஏப்ரல்-1954) வெளிவந்தது.

1. கிட்கிந்தை-வாலிவதை

வீழ்த்தப்பட்ட சடாயுவுக்கு ஈமக்கடன்களைச் செய்ய வேண்டும் என்று இராமன் இலக்குவனிடம் கூறும்போது,

'...வீளிந்த தாதை
செவ்வழி உரிமை யாவும்
தீருவம் சிறுவ!'[2]

என்று இராமன் வாக்கிலும், அதற்கு முன்னதாக 'உந்தையை உயிர்கொண்டானை' என்ற இலக்குவன் வாக்கிலும் இத்தந்தை முறையைக் காண்கின்றோம். தசரதனை விட வயது முதிர்ந்த சடாயுவை இராமலக்குமணர் தம் பெரிய தந்தையாகவே பாவித்து வருகின்றனர்.

வான்மீகத்தையும் கம்பன் காவியத்தையும் ஒப்பிட்டுப் பயிலும்போது இச்சடாயுவின் படைப்பிலுள்ள ஒற்றுமையை அறிய முடிகின்றது. இராமலக்குமணர் பிராட்டியாருடன் பஞ்சவடிக்கு வந்து கொண்டிருக்கையில் வழியில் ஒரு பெரிய ஆலமரத்தில் சடாயு உட்கார்ந்திருந்ததாகவும், ஓர் அரக்கன்தான் அவ்வுருவங் கொண்டிருப்பதாக அவர்கள் எண்ணினர் என்றும் வான்மீகி கூறுகின்றார். ஆனால் கம்பன்,

'ஓங்குயர் நெடுவரை ஒன்றின் நின்றது
தாங்கல(து) இருநிலம் தாழ்ந்து தாழ்வுற
வீங்கிய வலியினில் இருந்த வீரனை'[3]

[நெடுவரை-பெரியமலை; தாழ்வுற - கீழ்மையடையும்படி; வீங்கிய வலி - மிகுந்தபலம்.]

என்று சடாயுவை ஒரு மலையின் மீது தங்கியிருந்த நிலையில் கண்டதாகக் கூறுகின்றான். இராமலக்குமணரைச் சடாயு பார்த்ததும் அவர்களைத் தசரதன் மைந்தர்கள் என்று தெரிந்து கொண்டதாகவும், இராமலக்குமணர் தன்னை

---

2. ஆரணிய சடாயு உயிர் நீத்த-220
3. ஆரணிய. சடாயு காண்-9

யாரென்று வினவியபோதுதான் அவர்கள் தந்தையின் தோழன் என்று குறிப்பிட்டதாகவும் பின்னர் சடாயு தன் குலத்தையும் பெயரையும் விரிவாகக் கூறியதாகவும் வான்மீகி காட்டுகின்றார். கம்பனில் இச்செய்தி மாற்றிக் கூறப் படுகின்றது. கம்பனில் இராமலக்குமணர் சடாயுவைக் கண்ணுறும்போது அவனை அரக்கனோ அல்லது கருடனோ என்று ஐயுறுகின்றனர். சடாயுவும் இராமலக்குமணரைக் குறித்துப் பலவாறு ஐயுற்றுக் கடைசியில்,

'கனப்படை வரிசிலைக் காளை யீர்கள்யார்
மனப்பட எனக்குரை வழங்கு வீர்'[4]

என்று கேட்கின்றான். இங்கு சடாயுதான் இராம லக்குமணரை முதலில் யாவர் என்று வினவுகின்றான்.

இராமலக்குமணர் சடாயுவிடம் தம் தந்தை இறந்த செய்தியைக் கூறியதாக வான்மீகத்தில் இல்லை. அதை முன்னதாகவே சடாயு அறிந்திருப்பதாக எண்ணி விட்டனர் போலும். கம்பனில் இக்கட்டம் நன்கு சித்திரிக்கப்படுகின்றது.

'மறக்கமுற் றதன வாய்மை காத்தவன்
துறக்கமுற் றனென இராமன் சொல்லலும்'[5]

[மறக்க முற்றதன—மறக்கக்கூடாதன வ; துறக்கம்—சுவர்க்கம்.]

அதனைக் கேட்கும் சடாயு மிகவும் ஏங்கி உணர்வு அற்ற நிலையை அடைகின்றான். இராமலக்குமணர் உணர்வு நீங்கிய சடாயுவைத் தழுவ எடுத்து, கண்ணீர் கொண்டு நீராட்ட மூர்ச்சை தெளிந்த சடாயு தசரதனைக் குறித்துப் பலவாறு புலம்புகின்றான். பின்னர், தான் நெருப்பில் விழ்ந்து இறந்து

4. ஆரணிய. சடாயு காண் - 15
5. ஆரணிய. சடாயு காண் - 19

தன் துயரைப் போக்கிக் கொள்ளப் போவதாகக் கூறு-கின்றான்; இராமலக்குமணர் சடாயுவைத் தேற்றி அங்ஙனம் செய்யக் கூடாது என்று வேண்ட சடாயுவும் அவர்கள் அயோத்தி சென்ற பிறகு தான் இறப்பதாகக் கூறி அமைகின்றான்.[6]

தன் குல வரலாற்றைக் கூறிய பிறகு சடாயு விலங்கு-களும் அரக்கர்களும் திரிகின்ற அவ்வனத்தில் தான் இராம லக்குமணருக்குத் துணையாக இருப்பதாகவும் சீதையைப் பாதுகாப்பதாகவும் கூறுகின்றான். பிறகு நால்வரும் பஞ்ச வடிக்குச் செல்லுகின்றனர், இது வான்மீகத்தில் காணப்படும் செய்தி. கம்பன்,

'...நீவிரும் நன்னுதல் தானும்இக்
காட்டில் வைகுதிர்; காக்குவென் யான்'[7]

என்று சடாயு கூறியதாகவும், அதற்கு அவர்கள் அகத்தியன் ஆலோசித்துச் சொல்லியருளிய கோதாவரி நதிக் கரையி-லுள்ள ஓர் இடத்தில் வசிப்பதாகக் கூறினதாகவும் குறிப்பிடு-கின்றான். பிறகு சடாயு அவர்கட்கு அவ்விடத்தைக் காட்டு-வதாகக் கூறி தன் சிறகின் நிழலில் அவர்கள் வரும்படி அழைத்துச் செல்லுகின்றான்.

சீதையை இராவணன் தூக்கிச் சென்றபோது சடாயு இராவணனை எதிர்த்து அவனுடன் போர் செய்ததாக வான்-மீகியும் கம்பனும் கூறுகின்றனர். கம்பனில் இராவண-சடாயுப் போர் மிகவும் கலைத்திறனுடன் சித்திரிக்கப் பட்டுள்ளது. இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடி வருகையில் சடாயுவின் உடலைக் கண்டு இப்பறவைதான் சீதையை உண்டிருக்கவேண்டும் என்றும் ஒரு அரக்கன்தான் அவ்வித உருவில் படுத்திருக்க வேண்டும் என்றும் இராமன் இலக்குவனிடம் உரைத்ததாகவும் இருவரும்

6. ஆரணிய, சடாயு காண் - 36
7. ஆரணிய, சடாயு காண்-46

அவ்வுருவத்தை நெருங்கி வருகையில் சடாயு அவர்களைக் கூவியழைத்து, சீதை இராவணனால் கவரப்பட்டமையையும், தடுத்துப் போர் செய்த தனக்கு ஏற்பட்டிருக்கும் நிலையினையும் விவரமாகக் கூறி, தன்னை மீண்டும் கொல்ல வேண்டாமென்றும் வேண்டியதாக வான்மீகி உரைக்கின்றார். கம்பன் இக்கட்டத்தை மிக அழகாகச் சித்திரித்துள்ளான். இராம-இலக்குமணர் சீதையைத் தேடி வந்து கொண்டிருக்கும் போது வீணைக் கொடி, முறிந்து கிடந்த வில், சூலம், அம்பருத் தூணிகள், கவசம் முதலியனவற்றை முறையே வழி நெடுகக் கண்டு சடாயுதான் பலருடன் போர் செய்திருக்க வேண்டும் என்று உய்த்துணர்ந்ததாகக் கம்பன் கூறுகின்றான்.

சடாயுவின் நிலையினைக் கண்ட இராமன் சடாயுவைத்-தழுவிக் கொண்டு புலம்பினதாகவும் தம்பி இலக்குவனிடம் தன் தீவினையின் கொடுமையினைக் கூறினதாகவும் வான்-மீகத்தில் காணப்படுகின்றது. கம்பன் இக்கட்டத்தைக் கலையுணர்வுடன் கையாண்டுள்ளான். இராம இலக்குமணரைக்-காணும் சடாயுவின் மனநிலையும் அவர்களைத் 'தாக்கி அரக்-கன் மகுடத்தலை துமித்த, மூக்கினால் உச்சி முறைமுறையே மோக்கின்ற"[8] செயலும், சடாயுவின் தேறுதல் மொழியும், இராமனது சினமும் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளன. சடா-யுவுக்கு இறுதிக்கடன் செய்தமை இரண்டிலும் கூறப்பட்-டுள்ளது.

கம்பன் சடாயுவை உயர்ந்த உணர்வுகளைக் கொண்ட-வனாகப் படைத்துள்ளான். பிறப்பாலும் உருவத்தாலும் புள்ளின் வேந்தனாக இருப்பினும், மனிதனைப் போன்று பேசும் ஆற்றலையும் மனித உணர்வுகளையும் பெற்றிருத்தல் அவனைச் சிறந்த பாத்திரமாக எண்ணும்படி செய்கின்றது. கம்பன் இவன் அகத்தோற்றத்தை,

---

8. சடாயுஉயிர் நீத்த-189

'தூய்மையன்; இருங்கலை துணிந்த கேள்வியன்;
வாய்மையன்; மறுவிலன்; மதியின் கூர்மையன்;
ஆய்மையின் மந்திரத் தறிஞ னெனச்
சேய்மையின் நோக்குறு சிறுகணன்'[9]

[இருங்கலை-மிக்க கல்வி; துணிந்த-தெளிந்த; மறு-குற்றம்; மதி-அறிவு; ஆய்மையின்-ஆராய்ச்சியையுடைய; மந்திரத்து-ஆலோசனையால்.]

என்று தன் அழகிய சொல்லோவியத்தால் நமக்குக் காட்டுகின்றான். குரங்கு வடிவம்பெற்ற வாலி உயர்ந்த எண்ணங்களாலும் பண்புகளாலும் 'வானுக்கப் புறத்துலகனை' தைப்போலவே சடாயுவும் 'பஞ்ச பூதங்கள் விளியு நாளும் போக்கிலா உலகம்'[10] அடைகின்றான். குரங்கரசனும் புள்ளரசனும் மானிட அரசரும் அடையமுடியாத வீடு பேறு அடைகின்றனர்.

அகத்தியனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு இராமலக்குமணர் பஞ்சவடியை நோக்கி வந்து கொண்டிருக்கும் போது கழுகின் வேந்தாகிய சடாயுவைக் காண்கின்றனர். இச் சடாயுவின் புறத் தோற்றம்,

'முந்தொரு கருமலை முகட்டு முன்றிலிற்
சந்திரன் ஒளியொடு தழுவச் சார்த்திய
அந்தமில் கனைகடல் அமரர் நாட்டிய
மந்தர கிரியென வயங்கு வான்'[11]

[முந்து-(தமக்கு)முன்னே; கருமலை-பெரியமலை; முகட்டு முன்றிலின்-உச்சியில்; தழுவ-பொருந்தும்படி; அந்தம் இல்-முடிவு இல்லாத; கனைகடல்-ஒலிக்கும் திருப்பாற் கடல்.]

---

9 சடாயுகாண்-5
10. சடாயு உயிர் நீத்த - 215
11. சடாயுகாண் - 3

என்று காட்டுகின்ருன் கம்பன். பின்னல் மீண்டும் இவனே,

'சிந்துரக் கால்சிரஞ் செக்கர் சூடிய
கந்தரக் கைலையை நிகர்க்கும் காட்சியான்'[12]

[சிந்துரம்-சிவப்பு நிறமான பொருள்; செக்கர் சூடிய கந்தரம்-செவ்வானத்தின் நிறத்தைக் கொண்ட கழுத்து; நிகர்க்கும்-ஒக்கின்ற.]

என்று காட்டுகின்ருன். இந்த அருணன் செம்மலே ஓங்குயர் நெடுவரை ஒன்றினில் உட்கார்ந்திருக்கும் நிலேயில் காண்கின்றனர் இராமலக்குமணர்.

தமக்கு அழிவைத் தருவதற்காகவே ஓர் அரக்கன் இங்ஙனம் பறவை வடிவங் கொண்டிருக்க வேண்டும் அல்லது இவ்வுருவம் கருடனுக இருக்கக் கூடும் என்று எண்ணுகின்றனர் இராமலக்குமணர். அங்ஙனமே சடாயுவும் இவர்களே முனிவர்களோ என்று முதலில் அயிர்த்து, பிறகு வில்லேயுடைமையால் அவர் அல்லர் எனத் தெளிகின்ருன்.

'உலகொரு மூன்றும்தம் உடைமை ஆக்குறும்
அலகறு இலக்கணம் அமைந்த மெய்யினர்;
மலர்மகட் குவமையா ளோடும் வந்தஇச்
சிலேவலி வீரைத் தெரிகி லேன்'[13]

[ஆக்குறும் - செய்ய வல்ல; அலகு அறும்-அளவில்லாத; அமைந்த - பொருந்திய; மெய்யினர்-மேனியர்; சிலே-வில்.]

என்று தனக்குள் எண்ணுகின்ருன். பின்னர் அவர்களே யாவர் என்று வினவ அவர்கள், தாம் தயரதன் புதல்வர் என்று கூறுகின்றனர். பின்னர்,

'மறக்கமுற் ருதன வாய்மை காத்தவன்
துறக்கமுற் ருனென இராமன் சொல்லலும்'[14]

---

12. சடாயு உயிர் நீத்த - 92
13. சடாயு காண்-14
14. ,, -19

[மறக்க முற்றுதன-மறக்கக்கூடாதவை.]

அதனைக் கேட்ட சடாயு, 'உறக்க முற்றான் என உணர்வு' நீங்குகின்றான். இராமலக்குமணர் தம் கண்ணீரினால் நீராட்ட, அவ்வுபசரிப்பால் மூர்ச்சை தெளிந்து அறிவுவரப் பெறுகின்றான் சடாயு. பின்னர் தசரதனது பிரிவாற்றாமையினால் புலம்புதல் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றது. பின்னர் இராமலக்குமணர் அவன் வரலாற்றை அவன் மூலமே தெரிந்து கொள்ளுகின்றனர்.

பின்னர் சடாயு இராமலக்குமணரைக் காட்டிற்கு வந்த காரணம் யாது என்று வினவுகின்றான்.

'தேவர் தானவர் திண்டிறல் நாகர்வேறு
ஏவ ராக இடர்இழைத் தாரெனின்
பூவ ராவு பொலங்கழை வேலினீர்!
சாவ ராக்கித் தருவென் அரசு'[15]

[தானவர்-அசுரர்; திண்திறல் - மிக்கவலிமையையுடைய; வேறு ஏவர் ஆக-வேறு எவராக இருந்தாலும்; இடர்-துன்பம்; சாவர் ஆக்கி-இறந்தவர்களாகச் செய்து.]

என்று அவர்களுக்கு உறுதியும் கூறுகின்றான். இலக்குவன் இராமன் குறிப்பையறிந்து 'சிற்றவை, மாதரால் வந்த செய்கை வரம்பிலா, ஓதவேலை ஒழி வின்று' உணர்த்து கின்றான். பின்னர் சடாயுவழி காட்ட, மூவரும் பஞ்சவடிக்குச் செல்லுகின்றனர்.

பஞ்சவடியில் இராமன் வாழ்ந்து வருகையில் சூர்ப்ப-ணகைக்கு இலக்குவனால் நடைபெற்ற அங்கபங்கமும் மாய மானாகி வந்த மாரீசன் மாண்டதும், சடாயு அறியாத செய்திகள். அவற்றை அறிந்திராத வான்மீகியும் கூற-

15. சடாயு காண்-38

வில்லை; கம்பனும் உணர்த்தவில்லை. இவற்றையெல்லாம் சடாயு தெரிந்திருந்தால் கதையின் புணர்ப்பு (Plot) வளர்ந்திருக்க முடியாது. 'மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட, எயிலுடை இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தலோ,'[16] மாயமானை நாடி இராமன் செல்லுதலோ, இராமன் குரலில் மாரீசனின் அபயக் குரலைக் கேட்டு இலக்குவன் சீதையைத் தனியாக விட்டுச் செல்லுதலோ நடைபெற்றிருக்க முடியாது. இவை நடை-பெறு விட்டால் சீதையை இராவணன் இலங்கைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இதைக் கருதித்தான் சடாயுவுக்கு இந்நிகழ்ச்சிகள் தெரிந்ததாக இரண்டு கவிஞர்களும் குறிப்பிடவில்லை போலும். அன்றியும், 'அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்'[17] அவனை அறியாதிருக்கச் செய்திருக்கவும் கூடும் என்றும் கருதலாம்.

கிட்டத்தட்ட பத்தாண்டுகள் இராமன் பஞ்சவடியில் வசித்தாலும் சடாயுவைப் பற்றிய வேறு செய்திகளை நாம் அறியக்கூடவில்லை. அவனுடன் இராமலக்குமணர் சந்தித்துப் பழக எத்தனையோ வாய்ப்புகள் நேர்ந்திருக்கக் கூடும். எனினும், காவியத்தின் சிறப்புக்கு அவை தேவையிராததால், அவற்றைக் கவிஞன் குறிப்பிடவில்லை. இராவணன் சீதை-யைப் பர்ணசாலையுடன் பெயர்த்தெடுத்துத் தேரில் வைத்துக்-கொண்டு செல்லும்போதுதான் சடாயு வந்து குறுக்கிடு-கின்றான். அவன் வந்த காட்சியைக் கம்பன்,

'நில்நில் என்(று) இடித்த சொல்லன்;
நெருப்பிடைப் பரப்பும் கண்ணன்;
மின்னென விளங்கும் வீரத்
துண்டத்தன்; மேரு என்னும்

16 மாரீசன்வதை-85
17. மந்தரை சூழ்ச்சி - 78

பொன்னெடுங் குன்றம் வானின்
வருவதே போலும் மெய்யான்'[18]

[இடித்த-இடி முழக்கம் செய்ய; வீரத்துண்டத்தன்-வலிய மூக்கையுடையவன்; மெய்யான்-உடலை யுடையவன்.]

என்று காட்டுகின்றான். முதன் முதலாக நாமும் கோபக் கனலுடன் வரும் சடாயுவைக் காண்கின்றோம். சடாயுவின் வீரத்தைக் காட்டும் செயல்கள் இப்போதுதான் நடைபெறுகின்றன.

சடாயு சீதைக்கு அபயம் கூறி இராவணனை நோக்கிக் கோபச் சொற்களைப் பேசுகின்றான், 'கெட்டாய் கிளையொடு நின்வாழ்வை யெலாம். சுட்டாய்'[19] என்று எடுத்துக் காட்டி, சீதையின் பெருமையையும் இராமனது ஆற்றல்களையும் அவனுக்கு எடுத்துரைக்கின்றான். இராவணன் அவ்வுரைகளை ஏற்கவில்லை; அவளை விட முடியாது என்று மறுத்துரைக்கின்றான். இராவணனுக்கும் சடாயுவுக்கும் கடும்போர் நடைபெறுகின்றது. முதலில் அவனது வீணைக் கொடியை மூக்கினால் கடித்து வீசி எறிகின்றான் சடாயு. இராவணன் பொழியும் அம்புமாரியைப் பொருட்படுத்தாது, அவன் கவசத்தை ஒடித்து, அவன் வில்லையும் பிடுங்கித் தன் தாளால் முறித்துவிடுகின்றான். இராவணன் ஏவிய முத்தலைச் சூலத்தை மார்பில் ஏற்றுக் கொண்டு, அவன் வேறு படைகளை எடுப்பதற்கு முன்னதாக அவன் தேர்ப்பாகனின் தலையைப் பறித்து இராவணனுடைய முகத்தில் எறிகின்றான். இராவணன் சடாயுவின் நெஞ்சுறுதியைக் கண்டு வியந்து கோபங்கொண்டு ஒரு கதாயுதத்தால் அவனைத் தாக்க, சடாயுவும் ஒரு பெரிய மலை வீழ்ந்தது போல் தரையில் வீழ்கின்றான். இராவணனும் தன் தேரை விரைவாகச் செலுத்திக் கொண்டு விண்ணில் எழுகின்றான்.

---

18. சடாயு உயிர் நீத்த - 87
19. „ - 94

சடாயு துடித்து நிற்கும் சீதையை அஞ்ச வேண்டாம் என்று கூறி, இராவணன் தேரின்மீது பாய்கின்றான். அவனுடைய தண்டாயுதத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு, தேரில் பூட்டியிருந்த பதினாறு குதிரைகளையும் கொன்று வீழ்த்துகின்றான். பிறகு 'திண்பறஞ் சேர்ந்த தூணியை'யும் பறித்து எறிகின்றான். உடனே கோபங்கொண்ட இராவணன் அரன் கொடுத்த வாளை உருவி வீசுகின்றான்.

'வலியின் தலைதோற்றிலன் மாற்றரும்
 தெய்வ வாளால்
நலியும் தலைஎன்றது அன்றியும்
 வாழ்க்கை நாளும்
மெலியும் கடைசென்றுள தாகலின்
 விண்ணின் வேந்தன்
குலிசம் எறியச் சிறையற்றதோர்
 குன்றின் வீழ்ந்தான்'[20]

[வலியின்தலை தோற்றிலன்–வலிமையில் தோல்வியடையாத சடாயு; மாற்று அரு-எவராலும் தடுக்க முடியாத; தலைநலியும்-யாவர் தலையும் தவறாது அழியும்; என்றது அன்றியும்-என்ற அதன் சிறப்பும் அல்லாமலும்; வாழ்க்கை நாள்-ஆயுட்காலம்; மெலியும் கடை சென்றுளது-குறைவுபடுகிற முடிவை அடைந்துளது; விண்ணின் வேந்தன்–தேவேந்திரன்; குலிசம்-வச்சிராயுதம்; சிறை–சிறகு.]

சடாயுவை மந்தரமலை, கைலாய மலை, மேருமலை ஆகிய மூன்று மலைகளுக்கு ஒப்பாகக் கூறியதைக் கவிஞன் நினைவில் வைத்துக்கொண்டு, அவன் இராவணனுடைய வாளால் பட்டு வீழ்ந்தபோதும் சிறகற்று வீழ்ந்த மலை போல் வீழ்ந்தான் என்று கூறுவது எண்ணி எண்ணி மகிழ்வதற்குரியது.

---

20. சடாயு உயிர் நீத்த- 128

சீதையின் துணையற்ற நிலையையும் இறகு இழந்த சடாயுவின் நிலையையும் எண்ணிய இராவணன்,

'வாங்கினன் தேரிடை வைத்த மண்ணொடும்
வீங்குதோள் மீக்கொடு விண்ணின் ஏகினன்'[21]

[தோள்மீக்கொடு-தோளின் மீது வைத்துக்கொண்டு]

இந்த நிலையைக் கண்ட 'நீள் நிலை அறநெறி நின்றுளோர்க் கெலாம் ஆணி' யாகிய சடாயு மிகவும் இரங்குகின்றான்.

'வெந்திலர் மைந்தர்; நம்மருகிக் கெய்திய
வெந்துயர் துடைத்தனன் என்னும் மெய்ப்புகழ்
தந்திலா விதியினர் தரும வேலியைச்
சிந்தினர்'[22]

என்று எண்ணி இனிமேல் என்ன செய்ய முடியும் என்று ஏங்குகின்றான். திருப்பாற் கடலிலிருக்கும் அஞ்சனவண்ணனே இராமனாக வந்துள்ளதால் இராவணன் மாயை இழைத்து சீதையைக் கவர்ந்தனன் என்றும், நான்முகன் சாபத்தால் அரக்கன் சீதையைத் தீண்டான் என்றும், ஆகவே சீதையின் கற்பு கெடாது என்றும் எண்ணி,

'அஞ்சிறை குருதியால் அழிந்து சோர்வுற
வஞ்சியை மீட்கிலேன் என்னும் மானமும்
செஞ்செவே மக்கள்பாற் சென்ற காதலும்
நெஞ்சுறத் துயில்றனன் உணர்வு நீங்கலான்'[23]

[அம்சிறை-அழகிய சிறகுகள்; குருதி-இரத்தம்; வஞ்சி-வஞ்சிக்கொடி போன்ற சீதை; மானமும்-வெட்கமும்; செம் செவே சென்ற-செவ்விதாகப் போய்ப் பொருந்திய; நெஞ்சஉற-மனத்தில் நிறைந்து நிற்க.]

---

21. சடாயு உயிர் நீத்த-137
22. ,, - 140
23. ,, -145

இலக்குமணனும் இராமனும் மிக்கக் கவலையுடன் விரைவாகப் பர்ணசாலையை நோக்கி வருகின்றனர். சீதை அங்கு காணப்படவில்லை. தென் திசையை நோக்கிச் செல்லும் தேர்ச் சக்கரத்தின் சுவடு கண்டு அதன் வழியைப் பற்றிச் செல்லுகின்றனர். வழியில் வீணைக் கொடி, முறிந்த வில், சூலம், அம்பறுத் தூணி, கவசம், சாரதியின் உடல், குதிரையின் உடலங்கள், குண்டலங்கள் முதலியவற்றை முறையே காண்கின்றனர். இறுதியில் இராமன்,

'உடலுள் நாட்டிய குருதியாம்
பரவையின் உம்பர்க்
கடலுள் நாட்டிய வரையெனத்
தாதையைக் கண்டான்'[24]

[உடலுள் நாட்டிய-உடம்பினின்று வெளிப்பட்ட; குருதியம் பரவையின் உப்பர்-இரத்தக் கடலின் மேல்; கடலுள் காட்டிய வரை-மந்திரமலை; தாதை-சடாயு.]

உடனே வெள்ளி மலையின்மீது மைம்மலையொன்று படிந்தாற்போல சடாயு உடலின்மீது இராமன் வீழ்ந்து மூர்ச்சையடைகின்றான். பின்னர் இலக்குவன் செய்த உபசாரத்தால் மூர்ச்சை தெளிந்து,

'தந்தா தையரைத் தனயர் கொலைநேர்ந்தார்
முந்தாரே உள்ளார்? முடிந்தான் முனையொருவன்;
எந்தாயோ எற்காக நீயும் இறந்தனையோ?
அந்தோ! வினையேன் அருங்கூற்றம் ஆனேனே!'[25]

[தாதையர்-தகப்பன்மார்; தனயர்-மைந்தர்; முந்து-எனக்கு முன்; ஒருவன்-தசரதன்; எற்காக-என் பொருட்டு; வினையேன்-பாவியாகிய யான்; கூற்றம்-யமன்.]

---

24. சடாயு உயிர் நீத்த-179
25. ,, -182

என்று புலம்புகின்றான். தன் தாதையைக் கொன்றவனைத் தான் இன்னும் கொல்லாது வில்லைச் சுமந்து நிற்க நேர்ந்ததே என்று ஏங்குகின்றான்.

இராமலக்குமணரைக் கண்ட சடாயுவின் உள்ளம் குளிர்கிறது. இற்ற இரு சிறகும் ஏழுலகும் பெற்றவன் போல் மகிழ்ச்சியடைகிறான். பழிதீர்ந்துவிட்டது என்று அவன் உள்ளம் பொங்குகிறது. அவர்களை அருகில் அழைத்து 'தாக்கி அரக்கன் மகுடத் தலை துமித்த, மூக்கினால் உச்சி முறைமுறையே மோக்கின்றான்'.[26] பின்னர் பலவாறு அவர்களுக்குத் தேறுதல் கூறுகிறான். விதியின் வலியை எடுத்துக் காட்டுகிறான். 'வடிக்கண்வார் கூந்தலாளை இராவணன் மண்ணினோடு' எடுத்துச் சென்றதையும், அவனை எதிர்த்துத் தடுத்த தனக்கு அரன் அளித்த வாளால் நேர்ந்துள்ளமையையும் கூறுகிறான். உடனே இராமன் உலகத்தை அழிப்பதாகக் கோபங்கொள்ளுகிறான். சடாயு அவன் சினத்தைத் தணிவித்து அறவுரை பகர்கின்றான். பிறகு இராமன்,

'போயதவ் அரக்கன் எங்கே
புகலெனப், புள்ளின் வேந்தன்
ஓய்வினன் உணர்வுந் தேய
உரைத்திலன்; உயிருந் தீர்ந்தான்'[27]

சடாயுவுக்குக் கிடைத்தற்கரிய பரமபதம் கிடைக்கின்றது. இதனைக் கம்பன்,

'சீதங்கொள் மலரு ளோனும்
தேவரும் என்ப தென்னே!
வேதங்கள் காண்கி லாமே
வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணிற் பார்த்தான்;
படிவங்கொள் நெடிய பஞ்ச

26. சடாயு உயிர்நீத்த -189
27. சடாயு உயிர் நீத்த - 214

பூதங்கள் விளியு நாளும்
போக்கிலா உலகம் புக்கான்'[28]

[சீதம்-குளிர்ச்சி; மலருளோன்-நான்முகன்; வீரன் திரு மால்; நொடிய படிவம்கொள்-பெரிய வடிவத்தைக் கொள்ளும்; விளியுநாள்-அழியும் கற்பாந்த காலம்; போக்கிலா உலகம்-வைகுண்டம்.]

என்று கூறுகிறுன். குலசேகராழ்வார் இதனை ''சடாயுவை வைகுந்தத் தேற்றி''[29] என்று பேசுகின்றுர். பின்னர் இராம லக்குமணர் சடாயுவுக்கு இறுதிக் கடன்கள் யாவும் சிறிதும் குறைவின்றிச் செய்கின்றனர்.

இராமகாதையில் வரும் சடாயு என்ற சிறுபாத்திரத்தால் காவியம் ஒரு சில கூறுகளில் சிறப்படைகின்றது.

முதலாவது : சடாயு கதை வளர்ச்சிக்குத் துணை செய்கின்றுன். எவ்வாறு என்பதைக் காண்போம். சூர்ப்பணகையும் மாரீசனும் இராமனிடமிருந்து சீதையைப் பிரித்து இராவணன் அவளை இலங்கைக்குக் கொண்டுபோகத் துணை-புரிந்தாலும் சீதையை எடுத்துச் சென்றவன் எவன் என்பதை சடாயுவால்தான் இராமன் அறிகின்றுன்.

'வடுக்கண்வார் கூந்தலாளை
இராவணன் மண்ணி னேடும்
எடுத்தனன்'[30]

என்ற செய்தி சடாயுவால்தான் இராமனுக்கு உணர்த்தப்படுகின்றது. இதைக் கேட்கும் இராமனுக்குக் கோபம் உச்ச நிலையை யடைகின்றது. சடாயு அவனுக்குச் சமாதானம் கூறி, 'வம்பிழை கொங்கை வஞ்சியை வனத்திடைத் தமியள் வைக்க, கொம்பிழை மானின் பின்போய்க் குலம்பழிக்

28. சடாயு உயிர் நீத்த - 215
29. பெருமாள் திருமொழி - 10:6
30. சடாயு உயிர் நீத்த - 200

கூட்டிக்'[31] கொன்டது அவர்கள் குற்றமே என்பதை எடுத்-துக் காட்டுகின்றான். ஆதலால் கோபத்தைவிட்டு, அருந்ததி யனைய சீதையின் துயரத்தைத் துடைத்து, தேவர்தம் கருத்தை முற்றுவித்து, ஏனைய தீமைகளையும் நீக்குவதே அவர்கள் கடமை என்பதையும் உணர்த்துகின்றான். அரக்கர்களைக் கொன்று அழியாப் புகழ் பெறுவதே அவர்கள் கடன் என்பதை எடுத்துப் பேசுகின்றான்.[32] இராமனும் அமைதியடைந்து, 'அவ்வரக்கன் எங்கே சென்றான்?' என்று கேட்கின்றான். பதில் கூறுமுன் சடாயுவின் உயிர் நீங்குகின்றது.

இராவணனைப் பற்றிய முழு விவரங்கள் தருவதற்கு-முன் சடாயுவின் ஆவி நீங்கிப்போவதால் இராமன் என்ன-செய்ய வேண்டும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆகவே இராமலக்குமணர் ஒருவித நோக்கமுமின்றித் தெற்கு நோக்கி வருகின்றனர். கவந்தனைக் கண்ணுற்று அவன்-மூலம் அவர்கள் சுக்கிரீவன் நட்பைப் பெற்றால் எளிதில் சீதையின் இருப்பிடத்தை அறியலாம் என்றும், அச் சுக்-கிரீவன் இருப்பிடத்தைச் சவரி கூறும் வழிசென்று அடையலாம் என்றும் அறிகின்றனர். சடாயுமட்டிலும் இராவணனைப்-பற்றிய முழு விவரங்களைத் தந்திருந்தால் இராம-சுக்கிரீவ நட்பு, வாலி வீடுபேறு அடைதல், அநுமன் தூது செல்லல், வீடணன் அடைக்கலம் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்-றிருக்க முடியாது. இராமனும் இராவணனைப்பற்றிய செய்-திகளை அறிவதற்கு முன் அவனுடன் போர் தொடுத்துப் பலவித இன்னல்களை அடைந்திருப்பான். அல்லது, அவன் இருப்பிடத்தை அறிய முடியாமலும், அப்படி அறிந்தாலும் அங்கு செல்ல முடியாமலும் திண்டாடி இருக்கக் கூடும். இச் சடாயுவின் படைப்பு இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துகின்றது; காவியமும் இனிய முறையில் வளர்ச்சி பெறத் துணை செய்கின்றது.

---

31. சடாயு உயிர் நீத்த - 211
32. சடாயு உயிர் நீத்த - 212

இரண்டாவது: இராவணனும் இராம காதையின் மற்றொரு காவியத் தலைவன்; இராமனுடன் சமமாக வைத்து எண்ணப்படக் கூடியவன். அவனது ஆற்றல்களைப் பற்றி ஓரளவு இராமன் 'மச்சமாக' அறிவதற்கு இச் சடாயு துணை புரிகின்றான் என்றே சொல்ல வேண்டும். சடாயு இராவணனுடன் செய்த போரிலிருந்து இராமன் இராவணனுடைய ஆற்றல்களை ஒரு சிறிதாவது அறிந்து கொண்டிருக்க வேண்டும். சீதையைத் தேடிவரும் இராமலக்குமணர் வழியில் பல தோள் வளையங்களையும் பல குண்டலங்களையும் பல மணிமுடிகளையும் கண்ணுற்றபோது இராமன் இலக்குவனிடம்,

'நாளனைத்தையும் கடந்தனன்
 தமியன்தம் தாதை
யாளி போல்பவர் பலருளர்
 பொருதனர் இளையோய்'![33]

என்று கூறினபோது, அச் சுமித்திரைச் சிங்கம்,

'தருவி னிளிய தோள்பல
 தலைபல என்றால்
பொருது தாதையை இத்தனை
 நெறிக்கொடு போனன்
ஒருவ னேயவன் இராவணன்
 ஆமென உரைத்தான்'[34]

எனவே இராவணனைக் குறித்து கொஞ்சமாயினும் அறிந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது. அவனது இருப்பிடத்தைக் குறித்தும் அவன் சீதையை வைத்திருக்கும் இடத்தைக் குறித்தும் சரியாக அறுதியிட முடியாததால் சுக்கிரீவன் நான்கு திக்குகளிலும், சீதையைத் தேடுவதற்கு வீரர்களை அனுப்பினன் என்பதை அறிய வேண்டும். சடாயு-இராவணப் போரால்

33. சடாயு உயிர் நீகக - 177
34. சடாயு உயிர் நீத்த -178

இராவணன் ஆற்றலைப் பற்றி இராமலக்குமணர் இன்னும் கொஞ்சம் நன்றாக அறிகின்றனர்.

மூன்றாவது : இச் சடாயுவால்தான் இராமலக்குமணர் தம் தந்தை தசரதனைக் குறித்து ஒரு சில செய்திகளை அறிகின்றனர். அவற்றுள் சடாயு தசரதனின் சிறந்த நண்பன் என்பது ஒன்று. தசரதன் சம்பராசுரனுடன் போர் செய்தபோது சடாயு அவனுக்குத் துணை செய்தது மற்றொன்று, சடாயுவின் படைப்பு தசரதனின் ஒரு சில குணங்கள் வெளிப்படத் துணை செய்கின்றது என்றும் சொல்லவேண்டும். இராமலக்குமணர் தம் தந்தையின் அரிய குணங்களில் ஒரு சிலவற்றை அறிந்துகொள்ளுகின்றனர். இவ்விடத்தில் சிறு பாத்திரங்கள் கலைவிய மாளிகையின் பலகணிகளாகும் என்ற கருத்தை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நான்காவது : காவியத் தலைவனாகிய இராமனின் அருங் குணங்கள் வெளிப்படவும் சடாயு துணை செய்கின்றான். சடாயு தன் தந்தையின் நெருங்கிய நண்பன் என்று தெரிந்ததும், தன் தந்தையைவிட மூத்தவனான அவனை இராமன் தன் பெரிய தந்தையாகவே கருதுகின்றான்.

'வெந்தொ ழிற்றுறை வீடுபெற் றெய்திய
எந்தை யும்எரு வைக்கர சல்லனோ?'[35]

என்று இராமன் வாலியிடம் கூறுமாற்றால் இதனை அறிகின்றோம். இராவணனால் அடிபட்டு வீழ்ந்த சடாயுவைக் குறித்து இராமன் புலம்பும்போது,

'எந்தையோ! எற்காக நீயும் இறந்தனையோ?'[36]

என்று கூறுகின்றான். மற்றும் இலக்குவன் 'உந்தையை உயிர்கொண்டானை' என்று குறிப்பிடும் சொற்றொடரிலும் இத் தந்தை முறை வருதலைக் காண்க.

35. கிட்கிந். வாலி வதை-110
36. சடாயு உயிர் நீத்த-182

இராமனைத் தசரதன் உயிராகப் பாவித்தான். இராமன் தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக் கானடைந்தான் என்று கேள்வியுற்றதும் தசரதன் வானுலகம் அடைகின்றான். அத்தகைய அன்புள்ள தந்தைக்குத் தான் அருகிருந்து ஈமக்கடன் செய்வதற்கில்லையே என்ற பெருங் குறையுடனிருந்தான் இராமன். அக்குறையைத் தீர்ப்பதற்காகவே சடாயு பிறந்தான் என்றுகூடக் கருத இடமுண்டு. உலக நியதியை நாம் எவ்வாறு நிச்சயிக்க முடியும்? பறவை இனத்தில் பிறந்த சடாயுவுக்கு இராமன் மானிடர்க்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்ததுமன்றி அவனுக்கு வைகுண்ட பதவியையும் அளித்தது, இராமனுடைய பெருந்தகைமையைக் காட்டுகின்றது.

சிறு பாத்திரங்களைப் படைத்துக் காவியத்தில் அவர்களை நடமாடவிடுதலில் கவிஞனின் கலைத்திறம் வெளிப்படுதல்போலவே, அவர்களுக்குக் கதையிலிருந்து விடைகொடுத்தலிலும் அத்திறமையைக் காணலாம் செகப்பிரியர் (Shakespeare) போன்ற பெருங் கவிஞர்கள் படைத்துக் காட்டும் சிறு பாத்திரங்களுக்கு விடை கொடுத்தல் (disposal) கலைத் திறனுடன் மிளிர்வதை ஆங்கில இலக்கியங்களைப் பயின்றோர் நன்கு அறிவர். இராமாயணத்தில் வரும் சிறு பாத்திரங்கள் விடைபெறுதலில் இக் கலைத்திறம் நன்கு விளங்கும். தாடகை இராமன் கணையால் இறத்தல், விசுவாமித்திரர் தவம் செய்யச் செல்லல், மந்தரை, சூர்ப்பணகையைப் பற்றி ஒன்றும் சொல்லாது விடப்படல், மாரீசன் காகுத்தன் கணையால் மாளுதல் ஆகியவற்றை எண்ணிப் பார்த்தால் இவ்வுண்மை ஓரளவு விளங்கும்.

10

தாரை*

கம்பன் படைத்த சிறு பாத்திரங்களில் தாரை ஒரு அற்புதப்படைப்பு என்றே சொல்ல வேண்டும். வான்மீகத்தில் வரும் தாரையையும் கம்பன் படைத்த தாரையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வுண்மை மிக நன்ருக விளங்கும். வான்மீகத்தில் வரும் தாரையை அறிந்தால்தான் கம்பனின் மாற்றியமைக்குந் திறன் (Power of Transmutation) நமக்கு நன்ருகப் புலனுகும். இம்மாதிரி மூல நூல்களில் காணப்படும் பாத்திரங்களை மாற்றியமைப்பதில் உலகப் பெரும்புகழ் பெற்ற செகப்பிரியரும் கம்பனுக்கு அடுத்தபடிதான் என்று சொல்ல வேண்டும். வான்மீகி காட்டும் தாரை வாலியின் இல்லக் கிழத்தியாக இருந்தாலும் வாலி, சுக்கிரீவன் ஆகிய இருவருக்குமே சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு காதலியாக இருப்பவள்; சுக்கிரீவனுடன் கலவி இன்பம் துய்த்துக் கொண்டிருந்தவள், சீற்றத்துடன் வரும் இலக்குவனைப் போகம் துய்த்த தோற்றத்துடன் சந்திக்கின்ருள். கம்பன் காட்டும் தாரையோ தமிழர் கொண்டுள்ள உயர்ந்த கற்புக்கு எடுத்துக் காட்டாக இருப்பவள்; வாலியின் உத்-

* காரைக்குடியில் நடைபெற்ற கம்பன் திருநாளில் 29-3-53 அன்று நடைபெற்ற 'பட்டி மண்டபத்தில்' கம்பன படைத்த சிறு பாத்திரங்கள் என்ற தலைப்பில் பேசிய ஆராய்ச்சி உரையின் பெருக்கம் இது. குமரிமலரில் (மே 1953) வெளிவந்தது.

தம பத்தினியாக விளங்குகின்றாள். கணவன் இறந்த பிறகு கைப்பெண் கோலத்தில் ஒரு தெய்வ நங்கையாகக் காட்சியளிக்கின்றாள்; நாம் சிறிதும் மாசு மறுவற்ற ஒருகற்புடைய பெண்மணியைக் காண்கின்றோம்.

கம்பன் தாரையை நமக்கு மூன்று இடங்களில் காட்டுகின்றான். முதலாவது: இராமன் கூறிய யோசனைப்படி பேராரவாரத்துடன் சுக்கிரீவன் வாலியை வலியப் போருக்கு அழைக்கின்றான். அந்த ஆர்ப்பொலியைக் கேட்ட வாலி 'கட கட'வென்று சிரிக்கின்றான். கோபக் கனல் கொழுந்து விட்டெரியக் கைத்தலங் கையொடு புடைத்துக்கொண்டு 'வந்தேன் வந்தேன்' என்று எட்டுத் திசையும் கேட்கும்படிக் கூறிப் புறப்படுகின்றான் வாலி. இச் சமயத்தில் 'அமிழ்தில் தோன்றிய வேயிடைத் தோளினாள் இடைவிளக்கும் தாரை'யைக் காண்கின்றோம். இரண்டாவது: இராமன் ஏவிய கணையால் 'வானுக்கப்புறத்துலகனான வாலி'யின் உடலின் மீது, தன் கணவன் இறந்த செய்தி கேட்டு, 'வேல் விழித் தாரை' வந்து வீழ்ந்து புலம்பும் நிலையில் தாரையை நமக்குக் காட்டுகின்றான் கவிஞன். மூன்றாவது: கார்காலம் கழிந்தபின் சொன்ன சொற்படி வாராத 'அஞ்சில் ஐம்பதில் ஒன்றறியாத' சுக்கிரீவனிடம் இலக்குவனை அனுப்புகின்றான் இராமன். அவ்வாணையை ஏற்று கோபக் கனலுடன் சுக்கிரீவன் அரண்மனையை நோக்கிவரும் இலக்குவனை மகளிர் குழாத்துடன் வழி மறித்து நிற்கும் 'விரைசெய் வார்குழல் தாரை'யை மீண்டும் நாம் காண்கின்றோம்.

இப்பொழுதுள்ள ஒரு சில கம்பராமாயணப் பிரதிகளில் இன்னொரு இடத்தில் தாரை காட்டப்படுகின்றாள். இராவண வதம் முடிந்து எல்லோரும் புட்பக விமானத்தில் அயோத்திக்குத் திரும்பும் போது கிட்கிந்தைக்கு அருகில் விமானம் வருங்கால் இராமன் சீதைக்குச் சுக்கிரீவன் நகரைக் காட்டுகின்றான். வானர மகளிரையும் உடன் அழைத்துப் போக வேண்டுமென்று சீதை கூறுகின்றாள். இராமன் கட்டளையிட சுக்கிரீவன்

ஆணைப்படி அநுமன் வானர மகளிரைக் கூட்டி வருகின்றான். தாரையும் சுக்கிரீவன் மனைவி ருமையும் சீதையுடன் வருகின்றனர். அப்போது,

‘தன்னுடன் பிறந்த முத்து
மாலையைத் தரையில் தோன்றி
மின்னென நின்ற சீதைக்(கு)
அளித்தனள் விரைவில் தாரை’[1]

ருமையும் பலை நாள் விரிஞ்சனிடமிருந்து சூரியன் பெற்று அவன் மூலம் தன் கணவன் பெற்ற கடகம் ஒன்றை, சீதைக்கு அளிக்கின்றாள். ஆனால் இந்நிகழ்ச்சிகள் திரு. வை. மு, கோ. அவர்கள் பதிப்பித்த இராமாயணத்தில். அவர்கள் செருகு பாடல்களாக இருக்கலாம் என்று விலக்கியிருக்கும் பாடல்களின்தான் காணப்படுகின்றன. அவை எவ்வாறாயினும் அவை நமக்குத் தாரையின் குண நலன்கள் ஒன்றையும் காட்டாததால் அவற்றை விட்டு முதல் மூன்று சந்திப்புகளை மட்டிலும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டு, தாரையின் குண நலன்களையும் பிறவற்றையும் இராமாயணத்தில் இப்பாத்திரம் ஒரு திருப்பு மையமாக இருப்பதையும் சற்று விளக்க முயல்வோம்.

வான்மீகத்தைப் பார்த்த பிறகு கம்பனைப் பார்த்தால் தாரையின் அற்புதப் படைப்பை நாம் நன்றாக உணர முடியும். புறத்தோற்றத்திலும் சரி, அகத்தோற்றத்திலும் சரி, கம்பன் தாரையை ஒரு மானிடப் பெண்போலவே காட்டுகின்றான். கம்பராமாயணத்தை மேம்போக்கில் படித்தாலும் வாலி, சுக்கிரீவன், அநுமன் முதலிய வானரர்கள் முகத்திலும் வாலிலும் குரங்கு வடிவமும், மற்றைய உறுப்புகளில் பெரும்பாலும் மனித வடிவமும் அமைந்திருப்பதை அறிகின்றோம. ஆனால் தாரையைக் குறித்து வரும் செய்யுட்களை

---

1. மிட்சி 178க்கு அடுத்து வரும் செருகு பாடல் - 2

ஆழ்ந்து படித்தாலும் அவ்வித எண்ணம் நம் மனத்தில் எழுவதில்லை; வானரப் பெண் வடிவம் நம் சிந்தையில் தோன்றுவதில்லை. கணவன் இறப்பதற்கு முன் அவளை ஒரு சுமங்கலியாகக் காணும் போதும், கணவன் இறந்த பிறகு கைம்பெண் கோலத்தில் அவளைப் பார்க்கும்போதும் அவள் ஒரு மானிடப் பெண் என்ற எண்ணமே நமது மனத்தில் தோன்றுகின்றது.

சுமங்கலியாக இருக்கும்போது, "தாரையென் றமிழ்-திற் றேன்றிய வேயிடைத் தோளினுள்" என்பதில் அவளுடைய தோள் அழகைக் காண்கின்றோம்.

'வாயிடைப் புகைவர வாலி கண்ணுவரு
தீயிடைத் தன்னெடுங் கூந்தல் தீகின்றுள்'[2]

என்பதில் அவளுடைய நீண்ட கூந்தல் காட்டப் பெறுகின்றது. சுக்கிரீவனுடைய ஆர்ப்பொலியைக் கேட்ட வாலி பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டு கண்களிலும் வாயிலும் கோபக்கனல் தெறிக்கும்படி போருக்குக் கிளம்பு-கிறான். இப்போது தாரை வந்து இடை மறித்துத் தடுத்து நிற்கிறாள். அப்போது அவனுடைய கோபக் கனல் அவளுடைய கூந்தலைத் தீய்க்கிறது, குரங்குக்கு நீளமான கூந்தல் ஏது? மானிடப் பெண்ணுக்குத்தானே 'நெடுங் கூந்தல்' இருக்க முடியும்?

"விரைகுழல் பின்னுரை விளம்ப அஞ்சினுள்" என்பதில் மீண்டும் கூந்தல் அழகைக் காண்கின்றோம்.

'மலைக்குல மயில்'

என்பதில் அவளுடைய சாயல் காணப்படுகின்றது.

---

2. கிட்கிந்தா, வாலி 13

"வேல்விழித் தாரை"[3] "நெடுங்கண் தாரை"[4] என்பவற்றில் அவள் கண்ணழகைப் பார்க்கிறோம். வாலியின் உடலின்மீது விழுந்து புரளும் நிலையில் அவளுடைய முழு வடிவமும் காட்டப் பெறுகின்றது. வாலியின் மார்பிலிருந்து கிளம்பும் வெப்பமுள்ள குருதிப் பெருக்கு அவளது நுனி குவிந்த மலைச் சிகரம் போன்ற கொங்கைகளில் பரவுகின்றது. அக்காட்சி தனங்களின் பொலிவுக்கு ஏற்ற குங்குமக் குழம்பு அப்பியதுபோலிருக்கின்றது. அவளது நுனி சுருண்ட கூந்தலில் இரத்தம் பரவி அதைச் செந்நிறமடையச் செய்கின்றது. 'பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையானாகிய' வாலியின் அகன்ற மார்பு இரத்தப் பெருக்கினால் அந்திப்பொழுதில் சூரியக்கிரணம் படிதலால் சிவந்த மேகங்கள் பரவிய வானம் போல் இருக்கின்றது. அம்மார்பில் விழுந்து புரளும் மெல்லிதாய் விளங்கும் வடிவமுள்ள தாரை அச் செவ்வானத்தில் துவண்டு விளங்கும் மின்னற்கொடிபோல் காட்சியளிக்கின்றாள்.

'குங்குமம் கொட்டியன்ன
　　குவிமுலைக் குவட்டிற் கொத்த
பொங்குவெங் குருதி போர்ப்பப்
　　புரிகுழல் சிவப்பப் பொற்றோள்
அங்கவன் அலங்கல் மார்பில்
　　புரண்டனள்; அகன்ற செக்கர்
வெங்கதிர் விசும்பில் தோன்றும்
　　மின்னெனத் திகழும் மெய்யாள்'[5]

[குவிமுலைக் குவடு-நுனி குவிந்த மலைச் சிகரம் போன்ற கொங்கைகள்; குங்குமம்-குங்குமப் பூவின் குழம்பு; கொட்டியன்ன-சொரிந்தாற் போன்ற; குருதி-இரத்தம்; புரி குழல்-

---

3. கிட்கிந்தா. தாரை 1
4. „ கிட்கிந்தை. 48
5. „ தாரை -2

நுனி சுருண்ட கூந்தல்; அலங்கல்-மாலை; செக்கர்-செவ்வானம்; விசும்பு-வானம்; மின்-மின்னற் கொடி.}

என்பது கம்பன் காட்டும் சொல்லோவியம்.

அங்ஙனம் புலம்பும் தாரையின் குரல் எப்படியிருந்தது? கம்பனையே கேட்போம். புல்லாங் குழலின் ஓசையும், யாழின் இசையும், வீணையின் ஒலியும் வெள்கும்படி இருந்ததாம்.

''வேய்குழல் விளிகொள் நல்யாழ்
வீணையென் றிவைய நாண
ஏங்கினள்; இரங்கி விம்மி
உருகினள் ; ......
ஓங்கிய குரலாற் பன்னி
இனையன வுரைக்க லுற்றாள்''[6]

[வேய்ங்குழல்-மூங்கிலினாலாகிய ஊதுகுழல்; விளிகொள்-இசையமைதியைக் கொண்ட; நாண-வெள்கும்படி; ஓங்கிய-உரத்த; பன்னி-அடுத்தடுத்து.]

என்று கம்பன் தாரையின் குரலைக் காட்டுகின்றான். மற்றும் 'இசையினும் இனிய சொல்லாள்' என்பதிலும் அவளுடைய இனிய குரலின் ஓசை காட்டப் பெறுகின்றது.

கைம்பெண் கோலத்தில் தாரையை நாம் காணும் போதுதான் அவளுடைய மானிட உருவம் நன்கு வலியுறுகின்றது. சீற்றத்துடன் சுக்கிரீவன் அரண்மனையை நோக்கி-வரும் இலக்குவனைத் தாரை மகளிர் கூட்டத்துடன் வழி மறிக்கும்போது, இலக்குவன் மகளிரைப் பார்க்க நாணி, 'தாமரை வதனஞ் சாய்த்துத் தனுநெடுந் தரையில் ஊன்றி' நிற்கின்றான். பணிவு கலந்த சில நயமான சொற்களைக் கூறியபின் தாரை,

---

6. கிட்கிந்தா, தாரை 3

''ஐய! நீ ஆழி வேந்தன்
அடியிணை பிரிக லாதாய்
எய்திய(து) என்னை?''[7]

என்று வினவும்போதும் இலக்குவனிடம் கருணை தோன்றி, சீற்றம் தணிந்து சிறிது நிமிர்ந்து,

'பார்குலம் முழுவெண் திங்கள்
பகல் வந்த படிவம் போலும்
ஏர்குலா முகத்தி னாளைக்'[8]

காண்கின்றான். வெண்மையான முழுமதியம் பகற்காலத்தில் பூமிக்கு வந்து விட்டதோ என்று ஒளிமழுங்கிய அழகிய முகத்தினாள் அவனுக்குக் காட்சியளிக்கின்றாள். முகத்தினைப் பார்க்கும் இலக்குவனுக்கு அவளது முழுவடிவமும் காட்சியளிக்கின்றது. அவன் கண்ணுக்குத் தாரை எப்படிக் காணப்படுகின்றாள்? மணவினையன்று கணவன் சூட்டிய தாலி அவள் கழுத்தில் இல்லை; இரத்தின மயமான வேறு ஆபரணங்களும் காணப்படவில்லை. நறுமணமுள்ள மலர்மாலையையும் அவள் அணியவில்லை. மகளிர் வழக்கமாகப் பூசும் சந்தனக் குழம்பும் அவள் கொங்கைகளில் பூசப்படவில்லை. கொங்கைகளும் பாக்குமரம் போன்ற கழுத்தும் மறையும்படி வெண்மையான ஆடையைப் போர்த்திக் கொண்டு நிற்கும்ஒரு நங்கையைத் தான் இலக்குவன் காண்கின்றான்.

'மங்கல அணியை நீக்கி
மணி அணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக்
குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூகக்
கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கை''[9]

7. ,, கிட்கிந்தை 50
8. கிட்சித்தா. கிட்கிந்தை - 51
9. ,, ,, - 52

[மங்கல அணி-திருமங்கிலியம்; மணி அணி-இரத்தின மயமான வேறு ஆபரணங்கள்; துறந்து—நீக்கி; வாசம்-நறுமணமுள்ள கொங்கு தேன்; கோதை-மாலை; பூகம்-பாக்கு-மரம்]

என்பது கம்பன் காட்டும் தாரையின் கைம்பெண் கோலம். அக்காட்சி தன் தாயரை நினைவு படுத்தி விடுகின்றது. அவன் கோபமெல்லாம் கண்ணில் பனிக்கும் நீரில் கரைந்து போய்விடுகின்றது.

குரங்குப் பெண்ணாக இருந்தால், தாலி இருக்குமா? வேறு ஆபரணங்கள்தாம் இருக்குமா? சந்தனக் குழம்பைத்-தான் இப்பெண் பூசிக்கொள்வாளா? மனிதர்கள் கைக்-கொள்ளும் கைம்பெண் கோலம் எல்லாம் குரங்குப் பெண்ணுக்கு ஏது? இவையனைத்தும் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் ஒரு விதவைப் பெண் குரங்கின் தோற்றம் இலக்குவனுக்குத் தன் தாயரை நினைவுபடுத்த முடியுமா? ஆகவே, நூறு சத-விகிதம் தாரை மானிடப் பெண்ணாகவே காட்சியளித்தாள் என்றே கொள்ள வேண்டும். தாரையைக் குறித்து வரும் பாக்களைப் படிக்கும்போது அவள் ஒரு மானிடப் பெண்ணாகத்-தான் நமக்குக் காட்சியளிக்கின்றாள். வான்மீகி காட்டும் தாரைக்கும் கம்பன் காட்டும் தாரைக்கும் எவ்வளவு இடை-வெளி இருக்கின்றது பாருங்கள்!

தாரையின் பேச்சிலிருந்து ஒரு சிறந்த இல்லக் கிழத்தியின் அருங்குணங்களையும் அரசனுக்கு யோசனை கூறும் அநுபவம் நிறைந்த ஓர் அமைச்சனின் அறிவுத் திறனையும் காண முடிகின்றது. முதலாவதாக, இல்லக் கிழத்தியின் குணங்களை ஆராய்வோம். வலிய வந்து போருக்கழைத்த சுக்கிரீவனுடன் போர் தொடுப்பதற்கு வாலி கிளம்பும்போது தாரை அவனை இடைமறித்து நிறுத்துகின்றாள். இருவரிடையே பல சொற்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. என்ன சொல்லியும் வாலி தாரையின் சொற்களைக் கேட்பதாக இல்லை.

'இருத்திநீ இறைஇவண் இமைப்பில் காலையில்
உருத்தவன் உயிர்குடித்(து) உடன்வந் தாரையும்
கருத்தழித்(து) எய்துவென் கலங்கல்'[10]

[இறை-சிறிது நேரம்; இவண்-இங்கு; இமைப்பில்-ஒரு மாத்திரை நேரம்; உருத்தவன்-கோபித்த சுக்கிரீவன்; கருத் தழித்து மனமழியச் செய்து: கலங்கல்-கவலை கொள்ளாதே.]

என்று கூறிச் செல்லும்போது, அதற்குமேல் அவள் அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. பெண்மையின் எல்லை அவ்வளவுதான் என்று அஞ்சி அடங்கி விடுகின்ருள்.

வாலி இறந்த பிறகு, தாரை அவன் உடலின் மீது விழுந்து புலம்பும்போது சிறந்த ஒரு வாழ்க்கைத்துணைவி யின் அன்பு முதலிய அருங்குணங்கள் யாவும் வெளிப் படுகின்றன. 'ஆருயிரே! என் உள்ளமே!' என்று குரலெடுத்-தவள்,

'துயரா லேதொலை யாத என்னையும்
பயிரா யோ?'[11]

[தொலையாத-உயிர் நீங்காத; பயிராயோ-அருவருக்க மாட்டாயோ.]

என்று கூறிப் புலப்புகின்ருள். 'ஐயா, நீ எனது ஆருயிர் என்றதும் பொய்யோ?' என்று கேட்கின்ருள். இவ்வுலகில் ஒருவனும் ஒருத்தியும் வாழ்க்கைப்படும்போது 'இவன் அவள் உயிர்; அவன் இவள் உயிர்' என்று சொல்லிக் கொள்வது மரபு. அவ்வாறு உயிரொன்றும் உடலிரண்டுமாய்ப் பிணைந்து வாழ்க்கை நடத்த வேண்டு மென்பது ஆன்ரேர் வகுத்த முறை. உண்மையிலேயே, வாலியும் தாரையும் ஆகிய

---

10. கிட்கிந்தா-வாலி-27
11. .. தாரை-5

'இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தி' இணைந்துதான் வாழ்ந்தனர்; பிணைந்துதான் இல்வாழ்க்கை நடத்தினர். இப்போது வாலி மட்டிலும் மறைந்துவிட, தாரை அவனுடலின் மீது விழுந்து அழுது கொண்டிருக்கின்றாள். அவள் கேட்கின்றாள்: "போர்த் தொழிலில் வல்ல பெருமானே, உண்மையாக நான் உன் இதயத்துள் இருந்திருப்பின், பகைவரின் வெஞ்சரம் என் உயிரை உண்டு இருக்கும்; அம்மாதிரியே நீ என் இதயத்தில் இருந்திருப்பின், பகைவரின் அம்பு என் இதயத்தை வௌவாதலால், நீ பிழைத்திருப்பாய். ஆக, யான் பகைவர் சரத்தால் வௌவப் படுதல் நீ வெஞ்சரத்தால் வௌவப்படாது உயிர்த்திருத்தல் என்ற இரண்டும் நிகழாமையால், இருவேமுள்ளும் இருவேமும் இருந்திலேம் என்பது அநுமானப் பிரமாணத்தால் பெறப்படுகின்றது.' இதைக் கம்பன்,

'செருவார் தோளநின் சிந்தை யுளெனெனின்
மருவார் வெஞ்சரம் என்னையும் வவ்வுமால்;
ஒருவேன் உள்உளை யாகில் உய்தியால்;
இருவேமும் இருவே முள் இருந்திலேம்'[12]

[செரு ஆர்-போர்த் தொழில் நிரம்பிய; மருவார்-பகைவர்; வெம் சரம்-கொடிய அம்பு; வவ்வுல்-உயிர் வாங்கும்; ஆல் - அசை; ஒருவேன்-தனிப்பட்டவளாகிய நான்; உள் உளையாகில்-நெஞ்சில் இருந்தால்; உய்திஆல்-பிழைத்திருப்பாய்.]

என்று காட்டுகின்றான். பாட்டை மீண்டும் மீண்டும் படித்து வாலியுடலின் மீது விழுந்து கிடந்து புலம்பும் தாரையை நமது மனக்கண்முன் நிறுத்தினால், சிறந்த ஒரு கற்புடைய மங்கையின் இதயத்துடிப்பை நன்கு உணரலாம்; உணர முடியும்.

தாரையின் கற்புக் குணத்தை இன்னோர் இடத்திலும் நாம் காண்கின்றோம். இலக்குவனைச் சந்திக்கும்போது கம்பன் தாரையை,

12. கிட்கிந்தா, தாரை-10

'பூமியில் அணங்க ஞர்தம்
பொதுவிடைப் புகுந்து பொற்றேள்
தூமன நெடுங்கண் தாரை
நடுங்குவாள் இனைய சொன்னுள்'[13]

என்று கூறுகின்ருன். இதில் 'நடுங்குவாள்' என்ற சொல் பிற ஆடவன் எதிரில் வந்து நிற்பதற்குக் கூசுவதால், உள்ளமும் உடலும் நடுங்குகின்ருள் கற்பு நலஞ் சிறந்த தாரை என்பதைக் காட்டுகின்றது.

கம்பன் படைத்த பெண் பாத்திரங்களிலேயே அறிவுத் திறனில் கைகேயிக்கு அடுத்தபடியாக இச்சிறு பாத்திரமாகிய தாரைதான் சிறந்து விளங்குகின்ருள் என்று சொல்ல வேண்டும். ஒரு சிறந்த அரசியல் வாதியாகவும் (Politician) அரச தந்திரியாகவும் (statesman) 'தெரிதலும் தேர்ந்து செயலும்' வல்ல அமைச்சன் போலவும் இருத்தலை இவளிடம் காணலாம். இவற்றை மூன்று இடங்களில் நாம் பார்க்கின்ரேம்.

முதலாவது: வாலியைப் போர் செய்யச் செல்லாது தடுத்து நிறுத்தும்போது இவளுடைய ஆராய்ச்சித்திறனும் மதியில்வல்ல மந்திரியின் குணமும் வெளிப்படுகின்றன. அறிவு, பக்தி, அரசியல் திறன், வீரம் முதலிய யாவும் பொருந்திய வாலிக்கு, கிட்கிந்தையைப் பல ஆண்டுகள் அரசாட்சி செய்து அரசியல் அநுபவம் நிறைந்தவனுக்கு, சுக்ரீவனுக்கு இராமன் துணையாக அமைந்த செய்தி தெரியவில்லை. ஓடியொளிந்த தம்பி மீண்டும் போருக்கு வந்திருப்பது ஏன்? என்று எண்ணிப் பார்த்திருந்திருக்கலாம். அதைக் கூடச் செய்யவில்லை. இதைத் தாரை மிக நயமாகக் கூறி நிலைமையை உணர்த்துகின்ருள்; ஆனால் அவன் உரை பயன்படாது போகின்றது. தாரை,

---

13. கிட்கிந்தா. கிட்கிந்தை. 48

'கொற்றவ நின்பெருங் குவவுத் தோள்வலிக்கு
இற்றையன் அல்லனல்; ஈடுஉண்(டு) ஏகுவான்
பெற்றிலன்; பிறந்திலன்; பெயர்த்தும் போர்செயற்கு
உற்றது நெடுந்துணை உடைமை யால்'[14]

[குவவுத்தோள் – பெரியதிரண்டதோள்; இற்றையன்– இத்தனை நாள் இருந்தவன்; ஈடு உண்டு-குழைவு கொண்டு; பெயர்த்தும் - மீண்டும்; நெடுந்துணை – பெரிய உதவி.]

என்று சுக்ரீவன் பெற்றுள்ள துணையைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்ருள். இதைக் கேட்ட வாலி தன் உடல் வலியைக் குறித்து ஒரு சொற்பொழிவு நிகழ்த்துகின்ருன். அதைக் கேட்ட தாரை வெளிப்படையாகவே,

'... அரச! ஆய்வற்கு
இன்னுயிர் (நட்பு) அமைந்(து) இராமன் என்பவன்
உன்னுயிர் கோடலுக்(கு) உடனவந் தான் எனத்
துன்னிய அன்பினர் சொல்லினர்'[15]

[ஆயவற்கு - அந்த சுக்ரீவனுக்கு; கோடலுக்கு - கவர் வதற்கு; துன்னிய-நம்மிடத்துப் பொருந்திய.]

என்று தான் கேட்டறிந்த செய்தியைக் கூறுகின்ருள். இதிலிருந்து தாரை அரசியல் விவகாரங்களில் எவ்வளவு மதிநுட்பம் பெற்றுள்ளாள் என்று தெரியவில்லையா?

இரண்டாவது : சீற்றத்துடன் வரும் இலக்குவனை எவ்வாறு தடுத்து நிறுத்துவது என்பது ஒருவருக்கும் புலப்படவில்லை. சுக்ரீவனிடம் அங்கதன் உரைத்த சொற்கள் அவன் செவியில் ஏறவில்லை; அவ்வளவு தூரம் மதுவுண்ட போதையால் மயங்கிக் கிடக்கின்ருன் அவன். ஆகவே, அவன் கோதில் சிந்தை அநுமனிடம் வருகின்ருன். மதிநலம் சான்ற மாரு–

---

14. கிட்கிந்தா- வாலி-15
15. „ „ -21

திக்கும் நிலைமையைச் சமாளிக்க வழி தோன்றவில்லை. இருவரும் தாரையிடம் வருகின்றனர், ஓர் ஆபத்தான அரசியல் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, அமைச்சன் பதவியை வகிக்கும் அநுமனும் அந்தப்புரத்திலிருக்கும் தாரையிடம் வந்தான் என்றால் தாரை அவர்கள் எண்ணத்தில் எந்த நிலையை வகித்திருக்க வேண்டும்? தாரை அவர்களைப் பலபடியாகப் பழித்துப் பேசுகின்றாள். அப்பேச்சு அவளுடைய கூர்த்த அறிவையும் சீர்த்த அநுபவத்தையும் காட்டுகின்றன. இலக்குவன் வருகையைத் தடுப்பதற்குக் குரங்குகள் கோட்டை வாயிலை அடைந்து மலை முதலியவைகளைக் கொண்டுவந்து அடுக்குகின்றன. அக் கதவை இலக்குவன் தன் தாமரைத்தாளினால் அலட்சியமாகத் தள்ளுகின்றான்.

'தேவு சேவடி தீண்டலும் தீண்டரும்
பாவம் ஆமெனப் பற்றழிந்(து) இற்றவால்'[16]

[தேவுசேவடி-தெய்வத் தன்மையுள்ள இலக்குவன் திருவடி; தீண்டரும்-தொடவும் ஒண்ணாத (கொடிய) பாவம் ஆம் என-தீவினைகள் போல; பற்று அற-தொடர்ச்சியின்றி]

இதைக் கண்டு குரங்குகள் சிதறியோடுகின்றன. இதற்குள் இலக்குவனும் நகரத்திலுள்ள வீதிக்கு வந்து விடுகின்றான். தாரையின் கண்டனப் பேச்சைக் கேட்டுக் கொண்டு நின்ற அங்கதன் முதலியோர்!

'என்ன செய்குவது? எய்தினன்'[17]

என்று அச்சமும் நடுக்கமும் கொண்டு கூறுகின்றனர். உடனே தாரை 'தார் குழலாரொடு' நிலைமையைச் சமாளிக்கின்றாள். இவள் இங்ஙனம் சமாளித்திரா விட்டால் இராமாயணம் எந்த நிலைக்குப் போயிருக்கும் என்பது இலக்குவன்

16. கிட்கிந்தா. கிட்கிந்தை - 36
17. ,, ,, - 41

கோபத்தை யறிந்த நமக்கு நன்றாகத் தெரியும். 'மூட்டாத காலக் கடைத்தீயென மூண்டெழும்' இலக்குவன் கிட்கிந்தை-யையே அழித்து, வானரப் பூண்டு ஒன்று கூட இல்லாமல் வானுலகத்துக்கு அனுப்பியிருப்பான். இராமகாதையும் கிட்-கிந்தையுடன் நின்று போயிருக்கும். கற்றோர் இதயத்தைக் களிப்பிக்கும் கம்ப நாடன் கவிதையும் தோன்றியிராது.

மூன்றாவது : தாரை மகளிர் கூட்டத்துடன் சென்று இலக்குவன் சுக்கிரீவன் அரண்மனையில் புகாதவாறு வழி மறித்து நிறுத்துகின்றாள். முதலில் விநயமாகச் சொல்-லெடுக்கும் தாரையின் அறிவுத்திறன் மிகவும் மெச்சுவதற்-குரியது. அளவற்ற காலம் தவம் செய்தாலன்றி இந்திரன் முதலிய தேவர்களாலும் இலக்குவன் காலால் நடந்து தம் வீட்டிற்கு வரப் பெறுதல் என்பது இயலாத காரியம் என்று கூறியவள்,

'மைந்த !நின் பாதங் கொண்(டு) எம்
மனைவரப் பெற்று வாழ்ந்தோம்;
உய்ந்தனம்; வினையும் தீர்ந்தோம்;
உறுதிவே(று) இதனின் உண்டோ?'[18]

என்று கேட்கின்றாள். மற்று, இலக்குவனிடம் பேசிய பேச்சுகள் ஒரு சாதாரணப் பெண்ணின் வாயினின்று வெளிவரும் சொற்களல்ல.

'சீறுவாய் அல்லை ஐய!
சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய்; நீய லான்மற்(று)
ஆருளர்'?[19]

என்ற சொற்களைச் சொல்லுவதற்கு, அதுவும் கோபத்-துடன் வரும் இலக்குவனைப் பார்த்துச் சொல்லுவதற்கு

18. கிட்கிந்தா. கிட்கிந்தை - 49
19. .. .. - 55

எவ்வளவு அறிவுத்திறன் வேண்டும்? சாதுர்யம் வேண்டும்? அது மட்டுமா? அவர்கள் தங்கட்குச் செய்த பேருதவியை யும் எடுத்துக் காட்டுகின்ருள். அந்தச் செய்ந் நன்றியை மறந்து உதவி செய்தவர்களேயும் உதாசீனம் செய்தால் என்ன நேரிடும் என்பதை,

'உம்மையே இகழ்வர் என்னின்
எளிமையாய் ஒழிவ(து) ஒன்ருே?
இம்மையே வறுமை எய்தி
இருமையும் இழப்பர் அன்றே?'[20]

என்பதை மிக நயமாக எடுத்துக் காட்டுகின்ருள்.

சிறுபாத்திரத்தைக் காவியத்தின் பலகணி என்று மேலே குறிப்பிட்டேன். சிறுபாத்திரங்களுடன் நாம் பழகும் போது தான் காவியத் தலைவனின் குணங்களை தாம் நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது. அநுமன் நட்பு இராம-லட்சுமணர் களுக்கு ஏற்படுவதற்கு முன் வாலியைப் பற்றி இராமனுக்கு ஒன்றுந் தெரியாது. ஆனல் இராமனைப்பற்றி வாலி நன்கு அறிந்திருக்கின்ருன். இராமன் சுக்கிரீவனுக்கு 'இன்னுயிர் நட்பமைந்து......உன்னுயிர் கோடலுக்கு உடல்வந்தானெனத்' தாரை கூறும்போது. வாலி அதை, மறுத்து, இராமனை, 'உலகினுக்கு அறத்தின் ஆறு எலாம் இழைத்துக் காட்டுபவன்' என்று கூறுகின்ருன். இராமனுடைய வில்லாண்மை, சகோதர வாஞ்சை, 'ஏற்ற பேருலகெலாம் எய்தி ஈன்றவள், 'மாற்றவள் ஏவமற்று அவள்தன் மைந்தனுக்கு ஆற்றரும் உவகையால் அளித்த ஐய'னுடைய தியாகம் முதலியவற்றை யெல்லாம் தாரைக்கு எடுத்துக் காட்டுகின்ருன் வாலி. இவற்றைப் படிக்-கும் நாம் காவியத் தலைவனுகிய இராமனுடைய பரக்கும் தொல்புகழ் அவனறியாத இடங்களிலெல்லாம் கூட எவ்வளவு தூரம் பரவியிருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்ளு-

20. கிட்கிந்தா- கிட்கிந்தை - 58

கின்றோம். இவ்வாறு தாரை காவியத் தலைவனாகிய இராமன் குணங்களை நாம் அறிவதற்குத் துணை செய்கின்றாள்.

வாலியின் சிறந்த இல்லக் கிழத்தியாக விளங்கின தாரை அவனுடைய வாழ்விலும் தாழ்விலும் அவனுக்குப் பொன்றுத் துணையாக இருந்து வருகின்றாள். ஓருயிரும் ஈருடம்புமாகத்-தான் அவள் கணவனுடன் வாழ்க்கையை நடத்தி வருகின்றாள். புறநானூற்றில் வரும் பூதப் பாண்டியன் இறக்கும் போது அவனுடைய ஈமப் பள்ளியில் விழுந்து உயிர் துறக்கும் கோப்-பெண்டு போல, தாரை கணவனுடன் தன் உயிரை மாய்த்துக் கொள்ள வில்லை. அல்லது சயங்கொண்டார் காட்டும் கற்புடைய தமிழ் நாட்டுப் பெண் போல, தரைமகள் தன் கொழுநன் உடலைத் தீண்டாதவாறு வீழ்ந்து கிடந்த வாலியைத் தன் கரத்தால் தாங்கவும் இல்லை. விண்ணாட்டு அர மகளிர் அவ் வுயிரைப் புணரா முன்னம் தன் கணவனுடன் ஆவியை ஒக்க விடவும் இல்லை. பின்னால் இலக்குவனுடைய சீற்றத்தைத் தணிப்பதற்காகவே, கம்பன் அவளைக் கைம் பெண் கோலத்-துடன் உயிர் வாழ வைத்திருக்கின்றான்.

ஆகவே, 'இராமன் பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுவதற்கு'த் 'தூ மொழி மடமான்' கேகய மாதின் இரக்க மின்மை மட்டிலும் போதாது. 'இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்னருங் கொடுமனக் கூனியின் சூழ்ச்சியும் போதாது. 'தன் கிளைக்கு இறுதி காட்டும்' 'நீல மாமணி நிருதர் வேந்தனை, மூல நாசம் பெற முடிக்கும் மொய்ம்-பினையுடைய' வஞ்சமகள் சூர்ப்பணகையும் போதாது. கிட்-கிந்தையில் இலக்குவன் சீற்றத்தைத் தணிப்பதற்கு 'விரைசெய் வார்குழல் தாரை'யாகிய ஒரு சிறு பாத்திரத்தின் துணையும் வேண்டும். இதனால்தான் இராமாயணத்தில் தாரை ஒரு திருப்பு மையமாக இலங்குகின்றாள் என்று சொன்னேன். இத்தகைய நிலையைத்தான் கம்பன் தாரைக்கு அளித்துள்ளான்.

11

அங்கதன்*

அங்கதன் 'மந்தரப் பொருப்பால் வேலை கலக்கினான் மைந்தன்;' தாரைக்குப் பிறந்தவன். சிறுவனாக இருப்பினும் பலத்திற்கும் அறிவுக் கூர்மைக்கும் எடுத்துக் காட்டாகத் திகழ்பவன். இவனை பாரதத்தில் வரும் அபிமன்யுவிற்கு நிகரானவன் என்று சொல்லலாம், வாலி இவனை இராமனிடம் அடைக்கலப் பொருளாகத் தருங்கால் இவன் வீரத்தைப் பற்றி,

நெய்யடை நெடுவேல் தானை
நீனிற நிருதர் என்னும்
துய்யிடைக் கனலி அன்ன
தோளினன்; தொழிலும் தூயன்;[1]

என்று கூறுகின்றான். அத்துடன் தூய்மையான செயல்களை-யுடையவன் என்றும் குறிப்பாற் புலப்படுத்துகிறான். இராம காதையில் வரும் இவனையும் ஒரு சிறு பாத்திரமாகவே கொள்ளுதல் வேண்டும்.

---

* குமரிமலரில் (பிப்ரவரி 1956) வெளிவந்தது.

1. கிட்கிந்தை. வாலிவதை-151

வான்மீகி-கம்பன் படைப்பு: வேற்றுமை :

கம்பன் படைத்துக் காட்டும் அங்கதனுக்கும் வான்மீகி காட்டும் அங்கதனுக்கும் சில வேற்றுமைகள் உள. அவற்றை ஈண்டு நோக்குவோம். கிட்கிந்தையிலும் இலங்கையிலும் இவனைக் காண்கின்றோம். வாலி இராமன் அம்பால் வீழ்ந்த செய்தியைக் கேட்டு, தாரை கோவென்று கதறிக் கொண்டு தன் மைந்தன் அங்கதனுடன் வாலி அடிபட்டுக்கிடந்த இடத்திற்கு ஓடி வந்ததாக வான்மீகி தெரிவிக்கின்றார். கம்பனில் சுக்கிரீவனை வாலி இராமன் கையில் ஒப்படைத்த பிறகு அவன் சுக்கிரீவனை அனுப்பி அங்கதனைக் கொணர்வித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இராம பாணத்தால் அடிபட்டு மூர்ச்சை தெளிந்த பிறகு வாலி, சுக்கிரீவன் அங்கதன் ஆகியோரிடம் பேசுவதாக வான்மிகத்தில் கூறப்பட்டுள்ளது. அங்கதன் புலம்புவதாக வான்மீகி கூறவில்லை. கம்பனில், 'உதிரவாரிக், கடலிடைக் கிடந்த காதல் தாதையைக் கண்ணிற் கண்டு' பலவாறு சொல்லிப் புலம்பும் அங்கதனைக் காண்கின்றோம்; தந்தையால் அவன் தேற்றப்படுவதையும் பார்க்கின்றோம். தந்தையால் அங்கதனுக்குக் கூறப்படும் அறவுரைகளிலும் சிறிது வேறுபாடு காணப்படாமல் இல்லை. வான்மிகத்தில் வாலி 'இன்பமுறின் மகிழாமலும், துன்பமுறின் வருந்தாமலுமிருந்து சிறிய தாதை சொற்படி நடக்க வேண்டும்' என்று கூறியதாகக் கேள்வியுறுகின்றோம். கம்பனில் வாலி, 'பாலமை தவிர்ந்து இராமனை வணங்கி வாழ்க' என்று உரைப்பதைப் பார்க்கின்றோம். உயிர் பிரியும் தருணத்தில் வாலியால் அங்கதன் அடைக்கலப் பொருளாக ஒப்படைக்கப்படும் செய்தி வான்மிகத்தில் இல்லை; கம்பனில் அவ்வாறு செய்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் காணும் அங்கதனிடமும் சில மாறுபாடுகள் காணப்படத்தான் செய்கின்றன. வான்மீகி தூது செல்லும் அங்கதனைச் சாதாரணமாகவே காட்டுகின்றார். இராமன் சொல்லியனுப்பிய செய்திகளை அப்படியே இராவணனிடம்

அங்கதன் சொல்லுவதையும் அவனுக்கு ஏற்படும் ஆபத்திலிருந்து வீரத்துடன் தப்பித்து வருவதையும் காண்கின்றோம். கம்பன் இக்கட்டத்தைச் சிறந்த கலைத் திறனுடனும் உயர்ந்த நாடகத் தன்மையுடனும் காட்டுகின்றான். நிகழ்ச்சிகள் யாவும் நாடகப் பாணியில் நடைபெறுகின்றன. வள்ளுவன் கூறும் தூதனுடைய இலக்கணங்களை யெல்லாம் அங்கதனிடம் காண்கின்றோம். சிறப்பாக,

இறுதி பயப்பினும் அஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது[2]

என்ற குறளுக்கு இலக்கணமாக அங்கதன் திகழ்கிறான்.

கம்பன் காட்டும் அங்கதன் :

இனி, கம்பன் காட்டும் அங்கதனைச் சற்று விரிவாகக் காண்போம். தந்தையிடத்துப் பேரன்பு கொண்டவனாகவும், இராமனிடத்துப் பக்தி மிக்கவனாகவும், வீரத்தில் தலைசிறந்தவனாகவும், சிறந்த தூதனாகவும் இலங்குகின்றான் கம்பன் காட்டும் அங்கதன். தன் சிறிய தாதையின் மூலம் தந்தை விழுந்து கிடக்கும் இடத்திற்குக் கொண்டுவரப் பெறும்போதுதான் இவனை முதன் முதலாகச் சந்திக்கின்றோம். மண்ணுலகில் கிடக்கும் விண்மதியம் போன்றிருந்த வாலியின் மீது வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் விழுவதைப் போல் விழுகின்றான். விழுந்தவன்,

'எந்தையே எந்தை யேஇவ்
எழுதிரை வளாகத் தியார்க்கும்
சிந்தையால் செய்கை யாலோர்
தீவினை செய்தி லாதாய்[3]

என்று சொல்லிப் புலம்பத் தொடங்குகின்றான். வாலியையும் கூற்றம் நோக்கி வந்ததே என்றும், வாலியின் வாலை

2. குறள் - 690
3. வாலி வதை - 142

நினைந்து அஞ்சும் இராவணன் அச்சம் தவிர்ந்தனன் என்றும், இனி தேவர்க்கு அமிர்தம் கடைந்து கொடுக்க ஒருவரும் இலரே என்றும் சொல்லி அழுகின்றான்.

'பஞ்சின்மெல் அடியாள் பாகன்
பாதுக மல்ல யாவும்
அஞ்சலித் தறியாச் செங்கை
ஆணையாய்! அமரர் யாரும்
எஞ்சலர் இருந்தார்; உன்னால்
இன்னமு தீந்த நீயோ,
துஞ்சினை; வள்ளி யோர்கள்
நின்னின்யார் சொல்லற் பாலார்?[4]

என்ற பாடலில் உணர்ச்சியின் கொடுமுடியைக் காண்கின்றோம். பொதுவாக அங்கதன் புலம்பலில் தனயன் அன்பும் வீர உணர்ச்சியும் கலந்து காணப்பெறுகின்றன. அங்கதன்-வாலி சந்திப்பும் அவர்கள் பேசிய பேச்சும் கனிந்த நாடகத் தன்மையுடன் மிளிர்கின்றன.

வாலி வதத்திற்குப் பிறகு நாம் அங்கதனை அதிகமாகச் சந்திக்கும் வாய்ப்பு இல்லை. சீதையைத் தேடிக்கொண்டு தெற்குத் திக்கை நோக்கி வந்தவர்களில் அங்கதனும் ஒருவன். மகேந்திர மலையில் ஒவ்வொருவரும் கடலைக் கடக்கத் தம்மாலாகாது என்று கூறும் போது, அங்கதனும் தன் வலிமையைக் குறித்துப் பேசுகின்றான்.

'வேலை கடப்பன் மீள மிடுக்கின் றெனவிட்டான்
வாலி யளிக்கும் வீர வயப்போர் வசையில்லான்'[5]

என்பது தன் வலியைக் குறித்து அங்கதன் கூறுவது. இதன் பிறகு இலங்கையில்தான் இவனைச் சந்திக்கின்றோம். இலங்-

4. வாலி வதை - 145
5. மயேந்திரப்பட - 4

கையை அடைந்த பிறகு இராமன் மீட்டும் ஒருவனை இராவணனிடம் தூதாகப் போக்க எண்ணும் போது அங்கதனுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கின்றது. அங்கதன் சிறந்த வீரன் என்பது இராமன் மனத்தில் படுகின்றது; அநுமனுக்கு அடுத்தபடியாக அங்கதன் இராமனிடம் மதிப்புப் பெற்றிருக்கின்றான். எனவே இராமன்,

மாருதி பின்னும் செல்லின்
மற்றிவன் அன்றி வந்து
சாருநர் வலியோர் இல்லை
என்பது சாரும் அன்றே;
யாரினி ஏகத் தக்கார்?
அங்கதன் அமையும்; ஒன்னார்
வீரமே விளைப்ப ரேனும்
தீதின்றி மீள வல்லான்.[6]

என்று இராமன் எண்ணுவதில் வியப்பொன்றும் இல்லை. பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எண்ணும்போது இராமன் கருதியது சரி என்பதை நாமும் அறிகின்றோம். தன்னுடைய வீரத்தைக் குறித்து இராமனே திறனாய்ந்ததைக்கண்டு அங்கதனும் பேருவகையுறுகின்றான். இதனைக் கம்பன்,

'மாருதி அல்ல னாகில்
நீஎனும் மாற்றம் பெற்றேன்;
யாரினி என்னோ டொப்பார்'
என்பதோர் இன்பம் உற்றான்[7]

என்று காட்டுகின்றான். பின்னர் போர்க்களத்தில் இவன் பேராற்றலுடன் போர் புரியும் போதும் இளைய பெருமாள் இவன் தோளின் மீது இவர்ந்து போர் செய்யும் போதும், இவனுடைய வீரத்தையும் அடலாண்மையையும் காண்கின்றோம். இராவணனுடைய மூலபலத்தைக் கண்டு குரங்குச்

---

6. அங்கதன் தூது-9
7. அங். தூது-13

சேனை பயந்தோட மூவர் மட்டிலும் பயப்படாது நின்றார்களாம்; அவர்களில் ஒருவன் அங்கதன்.

அரியின் வேந்தனும் அநுமனும்
அங்கத னவனும்
பிரியா கிற்றிலர் இறைவனை
நின்றனர் பின்னால்[8]

குப்பகருணனுடனும் இந்திரசித்தனுடனும் அங்கதன் போர் செய்த நிகழ்ச்சிகள் குறிப்பிடற்குரியனவை. அப்போதும் இந்திரசித்து ஏவிய நாகபாசத்தால் பலர் சோர்வடைந்தும் அங்கதன் சோர்வுறவில்லை என்பதனாலும், அவனது பேராற்றலைக் காண்கிறோம். அவன் போர் செய்யும் திறம் 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்று எண்ணும்படி செய்து நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது,

இராமனிடம் அங்கதன் மிகவும் பக்தியுள்ளவன், தன் தந்தை இறந்தபோது,

பாலமை தவிர்நீ என்சொல்
பற்றுதி யாயில் தன்னின்
மேலொரு பொருளும் இல்லா
மெய்ப்பொருள் வில்லுந் தாங்கிக்
கால்தரை தோய நின்று
கட்புலக் குற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த[9]

என்றும்,

என்னுயிர்க் கிறுதி செய்தான்
என்பதை இறையும் எண்ணாது

8. மூலபல வதை-30.
9. வாலி வதை-148

உன்னுயிர்க் குறுதி செய்தி;
இவர்க்கமர் உற்றது உண்டேல்
பொன்னுயிர்த் தொளிரும் பூணாய்!
போதுதி; நிலைமை நோக்கி
மன்னுயிர்க் குறுதி செய்வான்
மலரடி சுமந்து வாழ்தி[10]

என்றும் கூறியதை எப்போதும் நினைவில் வைத்து வாழ்ந்தவன். இராவணனிடம் சென்று தன்னை இராமதூதன் என்று தெரிவிப்பதில் இவனுடைய இராமபக்தியைக் காணலாம்.

பூதநா யகனீர் சூழ்ந்த
புவிக்குநா யகனைப் பூமேற்
சீதைநா யகன்வே றுள்ள
தெய்வநா யகன்நீ செப்பும்
வேதநா யகன்மே னின்ற
விதிக்குநா யகன்றான் விட்ட
தூதன்யான்; பணித்த மாற்றம்
சொல்லிய வந்தேன் என்றான்[11]

என்ற வாக்கில் இராம பக்தியைக் காண்க. போரில் ஒரு சமயம் இராவணன், தன் தம்பி வீடணன்மீது மயன்தந்த வேலை எய்தபோது அதனை இவன் தன் மார்பில் ஏற்கத் துணிகின்றான்; அடைக்கலம் தந்த இராமன் வாக்கைக் காக்க நினைக்கின்றான்.

தூதனைப் பணியாற்றுவதிலும் இவன் திறத்தினை அறியலாம். 'யாரினி ஏகத் தக்கார்? அங்கதன் அமையும்' என்று இராமன் தூது செல்ல அங்கதனைத் தேர்ந்தெடுத்தது சரி என்று எல்லோரும் எண்ணும்படி செய்துவிடுகின்றான்.

---

10. ,, -149
11. அங்கதன் தூது -21

கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து
எண்ணி உரைப்பான் தலை[12]

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்காகத் திகழ்கின்றான். தூய்மை, துணைமை, துணிவுடைமை ஆகிய மூன்றுடன் வாய்மையும் இவனிடம் நல்ல பண்புகளாக அமைந்திருந்தன. தன்னை இராம தூதன் என்று உணர்த்துவதில் தூய்மையும், தன்னை வாலி மைந்தன் என்று கூறுவதில் துணிவுடைமையும் வெளிப்படுகின்றன. இராவணன் முன்பு போய் நின்ற அங்கதனை அவன் 'நெருப் பெழநிமிரப் பார்த்து, இன்று இவண் வந்த நீ யார்? எய்திய கருமம் ஏது? கொன்று இவர் தின்னு முன்னம் கூறுதி தெரிய' என்று கேட்கின்றான். அதற்கு அங்கதன் உரைக்கும் மாற்றம் இது:

இந்திரன் செம்மல் பண்டோர்
இராவணன் என்பான் தன்னைச்
சுந்தரத் தோள்க ளோடும்
வாலிடைத் தூங்கச் சுற்றிச்
சிந்துரக் கிரிகள் தாவித்
திரிந்தவன் தேவர் உண்ண
மந்தரப் பொருப்பால் வேலை
கலக்கினான் மைந்தன் என்றான்[13]

இவ்வாறு இராவணன் முன்பு சிறுவனான அங்கதன் சொல்லுவதற்கு எவ்வளவு அஞ்சா நெஞ்சம் வேண்டும்! அதுமட்டுமா! தன்னை மைந்தனாகப் பாவித்து 'தாதையைக் கொன்றான் பின்னே தலை சுமந்து இருகை நாற்றி, வாழ்வது பேதையர் வாழ்வு' என்றும், வானர அரசை அவனுக்குத் தந்து தானே முடிசூட்டி வைப்பதாகவும் பிரிக்கும் சூழ்ச்சியால் இராவணன் கூறியபோது இவன் கைகொட்டி இலங்கையே அதிரும்படி சிரித்து,

---

12. குறள்-687.
13. அங்கதன் தூது-24

'இங்குநின் றூர்கட் கெல்லாம்
இறுதியே என்ப துன்னி
உங்கள்பா னின்றும் எம்பாற்
போந்தனன் உம்பி'[14]

என்றும்,

வாய்தரத் தக்க சொல்லி
என்னையுன் வசஞ்செய் வாயேல்
ஆய்தரத் தக்க தன்றோ
தூதுவந் தரச தாள்கை
நீதரக் கொள்வேனோ யானே
இதற்கினி நிகர்வே றெண்ணில்
நாய்தரக் கொள்ளும் சீயம்
நல்லரசு[15]

என்று கூறுகின்றான். போர்க்களத்தில் கும்பகருணன் இவனை நெருப் பெழ நிமிர நோக்கி,

பொன்றவந் தடைந்த தானைப்
புரவலன் ஒருவன் தானோ?
அன்று அவன் மகனோ? எம்மூர்
அனல்மடுத்து அரக்கர் தம்மை
வென்றவன் தானோ? யாரோ?
விளம்புதி விரைவின்[16]

என்று கேட்கின்றான். அவன் உருவத்தையும் கோபக்கனல் வீசும் முகத்தையும் கண்டு சிறிதும் அஞ்சாது அங்கதன் உரைக்கும் மறுமொழி இது :

நும்முனை வாலிற் சுற்றி
நோன்றிசை நான்குந் தாவி

---

14. அங்கதன் தூது-28
15. ,, -29
16. கும்பகருணன் வதை - 191

மும்மையை நெடுவேல் அண்ணல்
முளரியஞ் சரணம் தாழ்ந்த
வெம்மையை வீரன் மைந்தன்
நின்னையென் வாலின் வீக்கித்
தெம்மையை இராமன் பாதம்
வணங்கிடச் செல்வன் என்றான்[17]

இவற்றில் துணிவும் தூய்மையும் வாய்மையும் கலந்து திகழ்வது எண்ணி உணர்தற்குரியது. இதன் பிறகும் தன் உயிர்க்கு இறுதி பயப்பதாக இருப்பினும் இராமன் கூறியதை அப்படியே உரைப்பதில் இவன் கலங்கா நெஞ்சுடையவன் என்பது புலனாகின்றது. இந்தக் கட்டத்தில் அங்கதன் வாய் மொழியாக வரும் ஆறு பாடல்களும் பன்முறை படித்து மகிழ்வதற்குரியவை.

அங்கதன் : சிறு பாத்திரம். அங்கதன் என்ற பாத்திரமே இல்லாது கவிஞன் கதையை இயக்கி யிருக்கலாமே; அவனை ஏன் படைக்க வேண்டும்?' என்பதை ஒரு சிறிது ஆராய்வோம். அங்கதன் வாலியின் படைப்பிலிருந்து கிளைத்த ஒரு சிறு பாத்திரம். இராமனுடைய அருங்குணங்களையும் பேராற்றலையும் படை பலத்தையும் இராவணனுக்கு மீண்டும் மீண்டும் உணர்த்துவதற்குப் பலர் வேண்டும். இவற்றை அங்கதனும் நிறைவேற்றுகின்றான். இலங்கையை எய்திய பிறகும் இராவணன் சமாதானத்துக்கு வருவானா என்று எண்ணிப் பார்க்கும் இராமனது கருணை உள்ளத்தை வெளிப்படுத்தவும், இராவணனுக்கு 'சிம்ம சொப்பனமாக' இருந்த வாலி இறந்த செய்தியைத் தெரிவித்தாவது இராமனது பேராற்றலை எதிரி அறியச் செய்யவும், அநுமனைப் போன்ற எண்ணற்ற வீரர்கள் இன்னும் இராமனிடம் உளர் என்பதைப் பெற வைக்கவும் அங்கதன் உதவுகின்றான். கதையின் நீட்டத்திற்கு அதிகம் துணை புரியாவிடினும், கதையின் இறுதி வரை-

17. கும்பகருணன் வதை - 192

யிலும் இப்பாத்திரம் உயிருடன் வாழ்கின்றது; ‘அங்கதன் உடைவாள் ஏந்த’ இராமன் முடிசூட்டிக் கொள்கின்ருன். ஆனல் நாடகப் பண்புடன் கதையை நடத்தக் கம்பன் இப்பாத்திரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுகின்ருன். அங்கதன் தூது சென்றபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளால் இதனை நன்கு அறியலாம். இராவணன் அங்கதன் பேச்சுகள் நாடகபாணியில் சித்திரிக்கப்பெற்றுள்ளன.

12

சத்துருக்கன்*

இராம காதையில் காணும் சத்துருக்கனையும் ஒரு சிறு பாத்திரமாகத்தான் கொள்ள வேண்டும். இவன் இராம காதையிலேயே ஒரு பேசாத பாத்திரமாகவே காணப்படுகின்றான். ஏதாவது ஓரிரண்டு தடவை பேச வேண்டிய சந்தர்ப்பங்களில் இவன் பேசும்போது ஆணித்தரமாகப் பேசுவதையும் பார்க்கின்றோம். இவன் காவிய நாயகனாகிய இராமனின் மூன்றாவது தம்பி; சுமித்திரையின் குமாரன்; இலக்குவனுக்குப்பின் பிறந்தவன்.

'...செம்பொற்
பருவரையும் நெடுவெள்ளிப்
பருப்பதமும் போல்வார்கள்
இருவரையும் இவ்விருவர்க்
கிளையாளும் ஈன்றெடுத்தாள்'[1]

என்ற கம்பநாடன் கூற்றினால் இதை அறிகின்றோம். 'இராமன் பின்புப் பிறந்தானும் உளன் என்னப் பிரியாத இலக்குவனைப்'

---

* குமரிமலரில் (ஆகஸ்டு 1954) வெளிவந்தது.

1. பாலகாண்டம்-குலமுறை-22

போலவே இவனும் பரதனை விட்டுப் பிரியாதிருப்பவன்; பரதன் எங்கு சென்றாலும் அவனை நிழல்போலத் தொடர்ந்துசெல்பவன்.

சத்துருக்கன் என்பதற்குப் பகைவரைக் கொல்பவன் என்பது பொருள். உட்பகையாகிய துர்க்குணங்களையும் லவணாசுரனாதியோரையும் இவன் ஒழிக்கும் தன்மையன் என்பது பற்றி இவனுக்கு இப் பெயரை வசிட்டன் சூட்டினன் என்று அறிகின்றோம்.

முத்துருக் கொண்டுசெம் முளரி அலர்ந்தால்
ஒத்திருக் கும்மெழில் உடைய விவ் வொளியால்
எத்திருக் குங்கெடும் என்பதை எண்ணாச்
சத்துருக் கன்எனச் சாற்றினன் நாமம்[2]

[உரு-வடிவம்; முளரி-தாமரை; எத்திருக்கும்-எல்லாப் பகைகளும்; சாற்றினன்-பெயரிட்டான்.]

என்ற கம்பன் பாடல் இதற்குச் சான்றாகும்.

கம்பனும் வான்மீகியும்; சத்துருக்கனைப் பற்றி வான்மீகியும் கம்பனும் யாது கூறுகின்றனர் என்பதை ஒப்பு நோக்குவோம். அப்போதுதான் இருவர் படைப்புகளைப் பற்றியும் ஒருவாறு நன்கு அறிய முடியும். வான்மீகி கூறும் செய்திகளைக் கம்பன் எவ்வெவ்வாறு மாற்றிப் படைத்துக் காட்டுகின்றான் என்பதையும் தெளிவாக உணர முடியும். மாற்றிக் கூறுவதன் நோக்கத்தை: கலை நுட்பத்தை உணர்ந்து அநுபவிக்க முடியும்.

இராமலக்குமணர் சீதாதேவியுடன் காடேகினபோது பரதனும் சத்துருக்கனும் அயோத்தியில் இல்லை; அவர்கள் இருவரும் கேகய நாட்டில் தம் மாதாமகன் மாளிகை-யிலிருப்பதாகக் கம்பனும் வான்மீகியும் கூறுகின்றனர். அவர்களைக் கூட்டி வரும்படி வசிட்டன் தூதனுப்பியதாக

2. பால. திருவவதாரம்-122

இருவரும் உரைக்கின்றனர். தசரதன் இறந்த பிறகுதான் பரதனுக்குத் தூது அனுப்பப் பெற்றதாக இரண்டிலும் சொல்லப் பெற்றுள்ளது.

வான்மீகத்தில் இலக்குமணர் காடேகியதையும் தசரதன் வானேகியதையும் பரதனுக்கு அறிவித்தல் வேண்டா என்று வசிட்டன் கூறியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பனில் வசிட்டன் அவ்வாறு உரைத்ததாகக் கூறப்படவில்லை. என்றாலும், தூது சென்றவரைப் பரதன் 'தீதிலன்கொல் திருமுடியோன்?' என்று வினவியதற்கு அவர்கள் 'வலியன் என்று உரைத்ததாகவே கம்பன் கூறுகின்றான். பிறகு, பரதன் சத்துருக்கனுடன் அயோதிக்கு வத்ததாக இரண்டிலும் கூறப் பெற்றுள்ளது.

மாதாமகன் வீட்டிலிருந்து வந்த பரத சத்துருக்கனர் பொலிவிழந்த நகரைக் கண்டதாக இரண்டிலும் கூறப்படுகின்றது. பொலிவிழந்த நகரைப் பற்றி பரதனும் சத்துருக்கனும் பேசிக்கொள்கிறதாகக் கம்பன் ஓரிடம் காட்டுகிறான். வான்மீகத்தில் இத்தகைய கட்டம் ஒன்று கூட இல்லை. தந்தைக்கு ஈமக் கடன்களைப் பரதன் செய்ததாக வான்மீகி கூறுகின்றார்; கம்பன் அதைச் சற்று மாற்றிக் கூறுகின்றான்.

'அன்னை தீமையால் அரசன் நின்னையும்
துன்னு துன்பத்தால் துறந்து போயினான்[3]

என்று வசிட்டன் கூற அறிந்து, தாங்கொணா வருத்தத்தை அடைகின்றான் பரதன். பிறகு சத்துருக்கனைக் கொண்டு வசிட்டன் மன்னவனுக்கு இறுதிக் கடன்களைச் செய்விக்கின்றான்.

ஈமக் கடன்களை முடித்தபின்னர் பரதன் கானேகிய இராமனை நாட்டுக்கு அழைத்து வரவேண்டும் என்று எண்ணியதாக வான்மீகி உரைக்கின்றார். அப்போது சத்துருக்கன்

3. பள்ளியடைப் - 132

பரதனிடம் ஒரு பெண்ணினால் இத்தகைய துன்பம் நேரிட்டதே என்று புலம்பியும் பலமும் வீரமும் உடைய இளைய பெருமாளாயினும் தந்தையை நிராகரித்து அண்ணனைத் துன்பத்தினின்று நீக்கியிருக்கலாமே என்று உரைத்துக் கொண்டிருக்கையில் அரண்மனையின் கீழ் வாயிலில் மந்தரை பல கலனும் அணிந்து, சிறந்த செஞ்சாந்தம் பூசி, அரச ஆடைகளை உடுத்து, மற்றும் சிறந்த பூஷணங்களைப் பூண்டு, ஒட்டியாணம் அரைஞாண் இவைகளால் கட்டிக்கொண்டு கயிற்றினால் கட்டப் பெற்ற ஒரு பெண் குரங்கு போல் வருகின்றாள். அப்போது சில வாயிற் காப்போர் அவளைப் பிடித்துக்கொண்டு வந்து சத்துருக்கனிடம் காட்டி 'இவளே அல்லல் அனைத்திற்கும் காரணம்' எனக் கூறுகின்றனர். சத்துருக்கன் கடுஞ் சினங் கொண்டு அவளைத் தரையில் புரட்டியிழுத்துத் தனது திருத்தாள்களால் உதைத்து நிற்கையில் கூட இருந்த தோழியர் பயந்து அரசகுமாரன் தன்மையும் அவ்வாறு வருத்தக் கூடுமென்று அஞ்சி கோசலையிடம் சரண் அடையச் சொல்லுகின்றனர். இதனைக் கண்ணுற்ற கைகேயி அதைத் தடுத்து நிற்க முன் வருகையில் சத்துருக்கன் வன்மொழி பேசி அவளை இகழ்ந்துரைக்கின்றான். கைகேயியும் தன்னையும் இங்ஙனம் வருத்துவானோ என்று அஞ்சி பரதனைத் தஞ்சமடைய, பரதன் தம்பியைத் தேற்றி இதை இராமன் அறிந்தால் திருவுளம் கலங்குவான் என்று சமாதானம் செய்கின்றான். இது வான்மீகத்தில் காணப்படும் செய்தி. கம்பனில் இச் செய்தி வேறு இடத்தில் கூறப்படுகின்றது. பரதன் இராமனை அழைத்து வருவதற்காகக் காட்டிற்குப் புறப்படுகின்றான். தாய்மார் முதலியவரோடு அரண்மனை வாயிலுக்கு வருகையில் கூனி காணப்படுகின்றாள். சத்துருக்கன் ஓடி ஆர்த்து அவளைப்பற்றி அந்தரத்தேற்ற எண்ணுகின்றான். பரதன் அவனைத்தேற்றிச் சமாதானப்படுத்துகின்றான்.

பரதன் இராமனை அழைத்து வருவதற்குக் காடு சென்ற செய்தி இரண்டிலும் கூறப்படுகின்றது. சத்துருக்கனைக் கொண்டு முரசறைவித்து முறைமை வேந்தனைத்தருதும் ஈண்டு

என்பதைச் சாற்றச் செய்கின்றான் பரதன். நகர மக்கள் சூழ பெருஞ் சேனையுடன் இராமனைக் காணப் புறப்படுகின்றான். இவ்வாறு சென்றமை இரண்டிலும் கூறப்படுகின்றது.

இராமன் பதினான்கு ஆண்டுகள் கழித்து நாட்டிற்குத்-திரும்பும் செய்தியை அநுமன் மூலம் அறிந்த பரதன் சத்-துருக்கனிடம் நகரை அலங்கரிக்குமாறு கட்டளையிட்டதாக வான்மீகத்தில் காணப்படுகின்றது. கம்பன் இக்கட்டத்தை மிக நன்றாகச் சிந்திரிக்கின்றான். இராமன் வரவேண்டி நாளன்று வராததால் பரதன் சத்துருக்கனை வரவழைத்து அவனிடம்,

"சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்;
மின்னு தீயிடை யான் இனி வீடுவன்;
மன்னன் ஆதிஎன் சொல்லை மறுது"[4]

என்று கூறும் காட்சி காட்டப்படுகின்றது. அப்போது கொ-ழுந்து விட்டெரியும் சினத்துடன் சத்துருக்கன் கூறும் சொற்கள் மனிதப் பண்பை ஒருங்கே உருக்கிக் காட்டும் தன்மையவாய் இருக்கின்றன.

கம்பன் காட்டும் சத்துருக்கன்: சிறு பாத்திரப் படைப்பில் கருத்தைச் செலுத்திய கம்பன், சத்துருக்கனைப் படைக்கும்-போதுதான் தன்கவனத்தையெல்லாம் செலுத்தியிருக்கின்றான் என்று சொன்னால் அது மிகையாகாது. பாத்திரங்களைப் படைத்தபிறகு சிறுபாத்திரங்களாக இருந்தாலும் அவர்களை அடிக்கடி பல நிகழ்ச்சிகளில் தலையிடும்படி செய்தும், அவர்-களுக்கு அடிக்கடிப் பேசும் வாய்ப்புக்களை அளித்தும் கதை-யினை முடுக்கிச் செல்வதையோ, கதாநாயகனின் சிறப்பியல்-புகளை வெளிப்படச் செய்வதையோ நோக்கமாகக் கொள்-வான் இலக்கிய ஆசிரியன். ஆனால் சத்துருக்கனைப்படைத்த

4. யுத்த. மீட்சிப். 220

கம்பன் இந்த முறையில் படைக்கவில்லை. காவிய மாளிகையில் அவனை ஒரு சில இடங்களில்தான் காண்கின்றோம்; அவ்விடங்களிலும் அதிகமாகப் பேசாத ஒரு பாத்திரமாகத்தான் காட்டப் பெறுகின்றான். பேசும் வாய்ப்புகள் வரும் போது அணைகளினால் தேக்கப் பெற்ற நீர், அணை உடையுங்கால் வெளிப்படும்போதோ அல்லது அணை நிறைந்து நிற்கும்போது, அணையின் ஒரு கண் திறக்கப்படும்போதோ நீர் விரைவாகவும் பலமாகவும் வெளிப்படுதல் போல், உணர்ச்சி வெள்ளம் கொந்தளித்துக்கொண்டு வெளிப்படுவதைக் காணலாம்.

கம்பன் கலைக்கோயிலில் சத்துருக்கனை ஆறு இடங்களில் சந்திக்கின்றோம்.

முதலாவது: சத்துருக்கன் பிறப்பு வளர்ப்பு கூறப்படும் கட்டத்தில், அவனை சிறு குழந்தையாகக் காட்டப் பெறுகின்றான். இலக்குவன் இராமன் எங்குச் சென்றாலும் அவனைத் தொடர்ந்து செல்வதைப் போலவே சத்துருக்கன் பரதனை எப்போதும் பிரியாதிருப்பவனாகக் காண்கின்றோம். இராமன் முடிசூட்டு விழாவிற்குச் சில நாட்கள் முன்னர் பரதன் கேகய நாடு சென்றிருந்தபோது சத்துருக்கனும் உடன் சென்றிருந்தமை இதற்குச் சான்றாகும்.

இரண்டாவது: கேகய நாட்டிலிருந்தபோது வசிட்டன் அனுப்பிய திருமுகத்தைக் கண்டவுடன், 'தம்முனைக் காணலாம் எனும் ஆசை கடாவ' பரதன் சத்துருக்கனோடு உடனே புறப்படுகின்றான். அயோத்திக்கு வந்தவுடன் திருவிழந்த நகர் அவன் கண்முன் தோன்றுகின்றது. இந்நிலையைச் சத்துருக்கனுக்குக் காட்டுகின்றான் பரதன். அதனைக் கண்ட அரசிளங் கோளரியாகிய சத்துருக்கன்,

"...எய்தியது
ஒருவனைத்தன் முறுதுயர் ஊழிவாழ்
திருநகர்த்திரு தீர்ந்தனளாம்என்றான்"[5]

5. பள்ளியடைப்-38

நகரில் நேரிட்டுள்ள துயரந்தரும் நிகழ்ச்சிகள் பலவாக இருக்கக் கூடும் என்று சத்துருக்கன் அண்ணனுக்குக் கூறு-கின்றான்.

மூன்றாவது : தந்தைக்கு நேர்ந்த கதியைக் கேட்ட பரதன் தன் தாயின் தாயின் மீது சீற்றங் கொள்கின்றான்; அவளைப் பலவாறு கடிகின்றான்; பிறகு பல சூளுரைகள் கூறுகின்றான், அவற்றைக் கேட்ட கோசலை பரதனைத்-தழுவிக் கொள்கின்றாள்.

நான்காவது: தந்தைக்கு ஈமக் கடன் செய்யும் சத்து-ருக்கனைப் பார்க்கிறோம். இங்கும் வசிட்டன் சத்துருக்கனைக் கொண்டு ஈமக் கடன்களைச் செய்விக்கின்றான் என்று கேட்-கிறோமேயன்றி, செய்யும் காட்சியைக் காணவில்லை. கவிஞன் அந்நிலையைச் சித்திரிக்கவில்லை.

ஐந்தாவது : இராமனை மீட்டு வர, பரதன் பயணமா-வதைச் சத்துருக்கனைக் கொண்டுமுரசறைவித்த நகர மாந்-தருக்கு அறிவிக்கின்றான். பரதன் தன் தாய்மார் முதலிய-வரோடு நகரவாயிலை யடையும் போது மந்தரையைக் காண்-கின்றான் சத்துருக்கன். அவளை அந்தரத் தேற்றும் எண்ணத்-துடன் சத்துருக்கன் சுழன்று பற்றும்போது, பரதன் சத்துருக்-கனைச் சமாதானப்படுத்தி ஆற்றுவிக்கின்றான். இலன் பிறகு சத்துருக்கனை நாம் பார்ப்பதே இல்லை; கதையும் இராமனைப் பற்றியே செல்லுகின்றது.

ஆறாவது : பதினான்கு ஆண்டுகள் கழித்து இராமன் பரத்துவாசர் ஆசிரமத்திலிருந்துகொண்டு தன் வருகையை அநுமன் மூலம் பரதனுக்குச் சொல்லியனுப்புகின்றான். குறிப்-பிட்ட நாளில் இராமன் திரும்பி வாராததால் பரதன் தான் சூளுரைத்தவாறு எரியுள் புகுந்து உயிர்விடத் தயாராகின்றான்; தன் தம்பி சத்துருக்கனை வரவழைத்து அவனை இறுகப் புல்லிக்கொண்டு,

"சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்;
மின்னு தீயிடை யான்இனி வீடுவன்;
மன்னன் ஆதிஎன் சொல்லை மருது"[6]

[வீடுவன்-வீழ்வன்; மருது-மறுக்காமல்]

என்று வேண்டும் காட்சியைக் காண்கின்றோம். இச் செய்தியைக் கேட்கும் சத்துருக்கன் வருந்தித் தாபங்கொள்ளுகின்றான். அச் செய்தி தன் காதில் விழக்கூடாது என்று செவிகளைப் பொத்திக்கொள்ளுகின்றான்.; நஞ்சை யுண்டவன் போலாகினான்; கீழே சோர்ந்து விழுந்து விடுகின்றான். பிறகு எழுந்து பரதனை நோக்கி,

'நான் உனக்கென்ன பிழைத்துளேன்?'

என்று கேட்கிறான். இதனை அடுத்து அவன் பேசும் சொற்கள் கல் நெஞ்சத்தையும் கரைக்குந் தன்மையவாய் இருக்கின்றன. என்றுமே; அதிகம் பேசாத சத்துருக்கன் பேசும் போது அவனிடம் உணர்ச்சி வெள்ளம் பொங்கி வழிவதைக் காண்கிறோம். உணர்ச்சிப் பெருக்கிலும் கோபத்திம்லு நேர்மையிலும் எள்ளளவும் இலக்குவனுக்குக் குறைந்தவன் அல்லன் சத்துருக்கன் என்பதைக் காண்கின்றோம். தியாகச் சுடரான சுமித்திரை ஈன்ற இரண்டு மணிகளும் ஒப்பற்றவர்களாகத் திகழ்வதைக் காண முடிகிறது. பேசுகிறான் சத்துருக்கன்;

"காளை நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி; போனவர்கள்
வரும் அவதி போயிற்று என்ன
ஆனாக உயிர்விடஎன்(று) அமைவானும்
ஒருதம்பி; அயலே நாணாது

---

6. யுத்த. மீட்சிப் - 220

யானும் இவ் அரசாள்வென்; என்னே இவ்
அரசாட்சி இனிதே அம்மா!'' [7]

[அவதி-கால எல்லை]

தனக்கு நேர்ந்த கொடுமையினை வியக்கின்றான். தான் மட்டிலும் நெறி திறம்பாத் தன் மெய்யை நிற்பதாக்கி இறந்தான்-தன் பரம்பரையில் வரவில்லையா என்று அவன் மனம் துடித்து நிற்கின்றது.

காவியத்தில் சிறு பாத்திரங்கள்: சிறு பாத்திரங்களாக இருந்தாலும் காவியத்தின் கதை கருக்கொண்டு பேருருவாக வளர்வதற்கும் காவியத் தலைவனின் குண நலன்கள் வெளிப்படுவதற்கும் இவர்கள்தாம் பெருந்துணையாக இருப்பார்கள். காவியத்தின் சிறப்புக்கு இவர்கள்தாம் முதற் காரணம் என்று சொன்னாலும் அது மிகையாகாது. இந்த நோக்கத்தைக் கொண்டு காவியங்களில் வரும் சிறு பாத்திரங்களை ஆராய்ந்-தால் காவியங்களை நன்கு சுவைக்கலாம்; பாத்திரப் படைப்-பின் சிறப்பை நன்கு உணரலாம். இந்தா கூறுகளில் சத்துருக்கனைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

முதலாவது: காவியத்தில் கதையின் வளர்ச்சிக்குச் சத்துருக்கன் அதிகமாகத் துணை செய்யவில்லை; இவன் உதவியால் கதையின் வளர்ச்சி நடைபெறவில்லை என்று கூடக் கூறிவிடலாம். இராமாயணக் கதை முழுவதும் இராமனைப் பற்றியே விரிந்துகொண்டு செல்வதாலும், இப்பாத்திரம் பரதனைச் சுற்றி இயங்குவதாலும் சத்துருக்கனுக்குக் கதையில் அதிக இடம் இல்லை.

கானுள நிலமகளைக் கைவிட்டுச் சென்ற இராமனிடம் பாதுகைகளைப் பெற்று பரதன் நந்திக் கிராமத்திற்கு வரும் வரையில் சத்துருக்கனைப் பற்றிச்சிறிது கேள்விப்படுகின்றோம்-

7. யுத்த. மீட்சிப் - 223

கதையின் வளர்ச்சிக்கு அச்சந்தர்ப்பங்கள் எவ்வகையிலும் துணை புரியவில்லை. குறித்த காலத்தில் இராமன் வாராத-தால் பரதன் தழல் மூட்டி அதில் விழுந்து ஆவி நீத்தற்கு ஆயத்தம் செய்வதற்கு முன்பு, சத்துருக்கனிடம் அரசாட்சியை ஒப்புவிக்க எண்ணும்போது சத்துருக்கனைக் காண்கின்றோம். இதுவும் கதையின் வளர்ச்சிக்கு அவ்வளவாகத் துணைசெய்ய-வில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இரண்டாவது: கதையில் சத்துருக்கன் பேசுவதற்கு அதிகமான சந்தர்ப்பங்கள் இல்லை; இராமனுடன் பழகும் வாய்ப்புகளும் இல்லை. எனவே, காவிய நாயகனின் குண-நலன்களைப் புலப்படுத்த இப்பாத்திரம் துணை செய்யவே இல்லை என்றாலும், பரதன் குணம் இப்பாத்திரத்தால் சிறிது விளக்கம் அடைகின்றது. துடிதுடிப்புள்ள இலக்குவனைப் பல சந்தர்ப்பங்களில் இராமன் அடக்கிச் சமாதானப் படுத்து-வதைப் போலவே, இலக்குவனுடன் பிறந்த சத்துருக்கனும் துடிதுடிப்புடனிருக்கும்போது பரதன் அமைதி பெறும்படி செய்கின்றான். மந்தரையை அந்தரத்திலேற்ற எண்ணும் சத்-துருக்கனைச் சாந்தப்படுத்தியமை இதற்கு ஒரு சான்றாகும்.

எனவே, சத்துருக்கனைச் சம்பந்தப்படுத்தி வரும் ஒரு சில சந்தர்ப்பங்களும் 'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' என்ற பழமொழிக்கு இலக்காக இருக்கின்றன. உயர்ந்த பரம்பரையில் பிறந்த இப்பாத்திரமும் தான் பிறந்தமரபின் பெருமையை மேலும் உயர்த்துவதற்குத்தான் துணையாக இருக்கின்றான். நான்கு சகோதரர்களும் குண நலன்களில் ஒரு-வருக்கொருவர் தாழ்ந்தவர்கள் அல்லர் என்ற உண்மையைச்-சத்துருக்கனும் நினைவு கூர்கின்றான். அதிகம் பேசாத பாத்திர-மாக இருந்துகொண்டே இவ்வுண்மையை மிகவும் அழுத்த-மாக உணர்த்துவது நம்மை மிகவும் மகிழ்விக்கின்றது.